# மெல்ல... மெல்ல...

என். சீதாலெட்சுமி



# மெல்ல... மெல்ல...

## 1

"ஓம் முருகா! ஓம் முருகா! ஓம் முருகா!"

- கடவுளைத் துதிபாட, அவளுக்கு வேறெந்த ஸ்லோகமும் தெரியவில்லை.

உளமார முருகக் கடவுளை வேண்டிக்கெண்டு, படுக்கையில் நிமிர்ந்து அமர்ந்தாள்.

மனதிற்குள் ஓர் கணினி அலுவலகத்தின் நேர்முகத் தேர்வறை நிழலாடியது!

மனதிற்கு நேர்முகத் தேர்வாளர் பதவியைக் கொடுத்து, அதைக் கேள்வி கேட்கத் தயார் படுத்தினாள்.

சட்டென பதட்டம் சூழ்ந்து கொண்டது அவளுக்கு! விடுதியில் தன் அறையில், தன் படுக்கையில்தான் இருக்கிறோம் என்ற எண்ணம் மறந்துபோக, மூன்று

தேர்வாளர்களுக்கு எதிரே அமர்ந்திருக்கும் படபடப்பு தொற்றிக் கொண்டது!

வழியாத வேர்வையை வழிந்தது போல் துடைத்துக் கொண்டு, அவள் மீண்டும் நிமிர்ந்து அமர,

மனம், தன் வேலையைச் செவ்வனே செய்யும் பொருட்டு ''உங்களைப் பற்றி சொல்லுங்கள்?'' என்று கேட்டது!

''ம்ஹ்ம். ம்ஹ்ம்'' என்று இருமுறை செருமியவள்,

''எ... எ... எ... எ... என் பேர் விதுபாலா!'' என்றாள்.

''ப்ச்!'' என்று மனம் சலித்தது!

முதல் வாக்கியமே ஒழுங்காக வரவில்லையே!

''சரி... சரி... இன்னொரு முறை முயன்று பாரேன், பாலா!'' என்று தந்தை சொல்வது போல், மனமும் சொல்ல,

திடத்தைத் திரட்டிக் கொண்டு ''எ... எ... எ... என் பேர் வி... வி....துபாலா!'' என்றாள்.

''சே! அதைவிட மோசம்!''

மீண்டும் ''எ... எ... எ............. என் பேர் விதுபாலா!''

இது கொஞ்சம் பரவாயில்லை. ஆனால், ''என்'' என்ற வார்த்தை வருவதற்குள், எதிரே இருப்பவன் ஒரு கொட்டாவியை விட்டு விடுவான்.

மீண்டும் முயற்சி செய்தாள் ''எ... எ... என் பேர் விதுபாலா.''

ம்ஹூம்!

தொடர்ந்து பத்து முறை, பெயரையே சொல்லிக் கொண்டிருந்ததில், உதடும் நாக்கும் ஒரு பக்கமாய் வலிப்பது போலிருந்தது!



அந்த நேரம் பார்த்து, கதவு திறக்கப்பட, முன்பைவிட வேர்த்தது அவளுக்கு!

ஏற்கனவே, அவள் உடன் தங்கியிருக்கும் ரூபாவிற்கு அவளைப் பார்த்தால் ஓர் ஏளனம்! இப்போது, பேர் சொல்வதற்கே இந்தத் திணறு திணறினால், பார்வையாலேயே தலைகுனிய வைத்து விடுவாள்!

இவள் மட்டுமல்ல! எத்தனையோ பேர்!

''பாலா! சோர்ந்து போகக்கூடாது! இப்ப என்ன உனக்கு... வாய் திக்கத்தானே செய்யுது? ஊமையாகிடலையே! தைரியமா இருக்கணும், கண்ணம்மா!'' என்று அப்பாவின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலிக்க, கையில் கிடைத்த உடையை எடுத்துக் கொண்டு, குளியலறை நோக்கி விரைந்தாள், விதுபாலா!

விதுபாலா - இருபத்தியொரு வயது யுவதி!

பொறியியல் பட்டம் பெற்று ஆறு மாதங்கள் ஆகி விட்டன. சொந்த ஊரான விருதுநகரை விட்டு, வேலை தேடிச் சென்னை மாநகருக்கு வந்து மாதங்கள், ஐந்தாகி விட்டன!

வேலை - ???? இன்னும் கிடைக்கவில்லை.

தேடுகிறாள்... தேடுகிறாள்... தேடிக்கொண்டே இருக்கிறாள்!

சற்றுமுன் நடந்த சம்பாஷணை கூட, வேலை கிடைப்பதற்கான ஒத்திகைதான்!

நாம் அவளது அறிமுகத்தைக்கூட முடிக்கவில்லை. விதுபாலா, குளியலறைக்குள் நுழைந்து, குளிக்கவும் ஆரம்பித்து விட்டாள்!

ஹ்ம்ம்! ஆம், வேகம்! நிதானமான வேகம்!

குளியலில் வேகம்! உண்பதில் வேகம்! நடையில் வேகம்! படிப்பில் வேகம்! பேச்சில் இல்லா வேகம் அனைத்திலும் அள்ளித் தெளிக்கப்பட்டிருந்தது!

அவள் குளித்துவிட்டு வந்தபோது, ரூபா கைப்பேசியில் ஆழ்ந்திருந்தாள். ஓர் தனி உலகத்தில், தன்னை மறந்து, தன்னைச் சுற்றியிருக்கும் உலகத்தை மறந்து, ஊன் மறந்து, உறக்கம் மறந்து, தலையணையுடன் தலையணையாக ஒன்றி, அவள் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதும் பாலாவிற்குச் சிரிப்பு வந்தது!

நேற்றிரவு இவள் ஆடிய ஆட்டமென்ன?!

ஏதோ வேலையின் காரணமாக அவளைச் சந்திக்காமல் விட்ட காதலனைக் கொலைக் குற்றவாளியாக்கி, ஊரே அதிரும்படி கத்திக் கொண்டிருந்தவளா இவள் என்றிருந்தது!

புன்னகை மாறாமலே, தன்னைத் தயார் செய்து கொண்டவள், கைப்பேசியை எடுத்து தந்தையின் கைப்பேசிக்கு அழைத்தாள்.

இரண்டே மணியில் அது எடுக்கப்பட, ''பாலாம்மா! எப்படிடா இருக்கே?'' என்றார் தந்தை.

''ந... ந...ல்ல்லா இருக்கேன்பா!'' என்றவளுக்கு,

எப்போதடா அவரைப் பார்ப்போம் என்று ஏக்கமாய் இருந்தது!

வேலை கிடைத்ததும்தான் வீட்டிற்கு வருவேன் என்று வசனம் பேசியிருக்கக் கூடாதோ என்று தோன்றியது!

''இன்னைக்கு இன்டர்வியூ இருக்கா பாலா?''

''அ... அஅஅ.... ஆமா! ஆனா, ர... ரே... ரொம்பப் பெரிய கம்பெனி... இ...இ...ல்லப்பா.''



''அதனால என்னடா... சின்ன கம்பெனியா இருந்தாலும், நாம கத்துக்கிறதிலதானே இருக்கு! நல்லா வேலை தெரிஞ்சதும், பெரிய கம்பெனிக்குப் போய்டலாம்!''

''ப....ப... ப்ச்... இப்படித் திக்கினா எங்கேயுமே எடுக்க மாட்டாங்க.''

''என்னடா இது?''

''இல்... இல்... இல்லப்பா... எத்தனை கம்பெனி போனேன்! டெஸ்ட் எல்லாமே நான்தான் ... ஃப.. ஃப... ஃபர்ஸ்ட் வருவேன்... ஆனா... உள்ள போ... போய்... ரெண்டு நிமிஷம் பேசினதுமே, ஒரு வாரம் கழிச்சுசோ... ச.....ச.. சொல்றோம்னு சொல்லிடுவாங்க... ப்ச்!''

''நடந்து முடிஞ்சதை நினைச்சுக் கவலைப்படக்கூடாது, பாலாம்மா!''

''ம்ம்...ம்ம்ம்... ஆ... ஆனா... ப...பயமா...''

''உன்னோட திறமைக்கு நல்ல வேலையா கிடைக்கும்மா!''

''ம்... ம்... என்னோட படிச்ச எல்லாருக்குமே வ...வ... வேலை கிடைச்சிடுச்சு... எனக்குத்தான்...'' - அழுகை அருவியாய் எட்டிப் பார்த்தது.

''ஷ்! அழக்கூடாது பாலா! பாலா... நல்ல பொண்ணுதானே? அப்பாவோட செல்லப் பொண்ணுதானே? அழக்கூடாதுமா!'' - தந்தையே நேரில் வந்து, அவளது தாடை தொட்டுக் கொஞ்சுவது போலிருந்தது விதுபாலாவிற்கு. மனம் லேசாக, கண்கள் கலக்கத்தை மறைத்துப், பாசத்திற்கு இடம் பெயர்ந்தது!

மகளது அழுகை லேசாய் குறையவும், ''தைரியமா போய்ட்டுவா, பாலா! கண்டிப்பா வேலை கிடைக்கும்!'' என்றார் தந்தை.

"ம்... ம்..." என்று அவரிடம் விடைபெற்றவள், அத்துடன் அழைப்பை வைத்திருக்கலாம்!

ஆனால், "அம்மா எங்கப்பா?" என்றாள் தந்தையிடம். ஏனோ, அவளுக்கு "அம்மா" என்ற வார்த்தை மட்டும் திக்குவதே இல்லை! வாக்கியத்தின் முதலில் என்றாலும் சரி, நடுவே என்றாலும் சரி, ஒரே சொல்லாய் உதிர்ந்து விடும்!

"எதுக்கும்மா... அவகிட்ட பேசிக்கிட்டு? ஏற்கனவே அழுது வடிஞ்சிட்டு இருக்கே! இதில, அவளோட பேசினா... நாளே நாசமா போய்டும்!" என்ற தந்தையின் எச்சரிக்கையையும் மீறி,

"இல்...இல்லபா... ப...பெ... பேசுறேன்..." என்றாள் பெண்.

பாலா "ஹலோ" சொல்வதற்குள்,

"ஹல்லோவ்! எப்படிடி இருக்கே?" என்றது ஓர் கட்டைக்குரல்.

"ந...ந...நல்லா இருக்கேன்மா..."

"ஏன் இருக்கமாட்டே? நா அஞ்சு பைசாவும் பத்து பைசாவுமா சேர்த்து வச்ச எல்லாத்தையும் அங்க உட்கார்ந்து கரைச்சுக்கிட்டு இல்ல இருக்கே? நீ நல்லாதான் இருப்பே?"

"........"

"சரளமா சகட்டுமேனிக்கு பேசுற பொண்ணுங்களையே இது நொள்ளை... அது நொட்டை... இம்புட்டை குடு... அம்புட்டைதான்னு கேட்டு அலைக்கழிக்கிறாய்ங்க! நீயே ஒரு திக்கு வாய் சனியன்... காலா காலத்தில கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்த் தொலைய வேண்டியது தானே?



வேலைக்குப் போறேன்... சேலைக்குப் போறேன்னு... எங்க உசிர வாங்குது! மூதேவி!"

அதற்கு மேலும், தாய் என்ன பேசியிருப்பாளோ, பாலாவால் கேட்க முடியும் என்று தோன்றவில்லை!

எப்போதும்போல், மனைவியின் சுடு சொற்கள் பெண்ணைப் பொசுக்கிவிடாமலிருக்க, கைப்பேசியை வாங்கி, அதை அணைத்து விட்டிருந்தார் பாலாவின் தந்தை.

பாலாவின் தந்தை, எவ்வளவு தூரம் அவளைத் தாங்குகிறாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு தாய் அவளை வஞ்சிப்பார்!

பாலாவிற்குக்கூடத் தோன்றும், தாயின் கோபத்தால் பிள்ளை வாடிவிடக் கூடாது என்பதற்காகவே, தந்தை கூடுதல் பாசத்தைப் பொழிகிறாரோ என்று!

ஹ்ம்ம். அவளது தாய் - ஓர் சராசரி இந்தியக் குடிமகள்!

"அவனிடம் அது இருக்கிறது!"

"பக்கத்து வீட்டில புதுசா வாஷிங் மெஷின் வாங்கி இருக்காங்க!"

"இவ... அஞ்சு காசுக்குப் பிரயோஜனம் இல்லாம வந்தவ... இப்ப என்ன மினுக்கு மினுக்குறா! புதுசா தங்க அட்டிகை வாங்கியிருக்காங்களாம்!"

"ப்ச்! என் தங்கச்சியைப் பாரு! நா குடிச்ச எச்சி பாலைக் குடிச்சு வளர்ந்தவ... மெட்ராஸ்ல வீடு வாங்கிட்டா! நா இந்த கிராமத்திலேயே கிடந்து இசிபடறேன்!"

பிறரைப் பார்த்துப் பொறாமைப்பட்டு, பொறாமைப் பட்டே தன் வாழ்நாளின் பாதியைக் கழித்தவர்! அதுமட்டுமில்லாமல், கணவனின் வாழ்நாளையும் நரகமாக்கியவர்!

அவரது புலம்பல்களுக்கான தண்டனையா இல்லை கடவுளின் வினோதமா? பத்து வருடங்கள் கழித்துப்

பிறந்த, விதுபாலா பேசுவதற்கு சற்றே சிரமப்பட்டுப் போனாள்!

ஏற்கனவே, ''அவளுக்கு ரெண்டு புள்ள!''

''இவ... என்னைவிட பத்து வயசு இளம... ரெண்டைப் பெத்துட்டா! அதுவும் ரெண்டும் அரசு!'' என்று வெந்து செத்தவருக்கு,

பிறந்தது பெண் என்றதுமே, எரிச்சல் மண்டியது!

குழந்தை என்பது கடவுளின் வரம் என்பதை மறந்தவராய், தனது கௌரவத்திற்கான காட்சிப் பொருளாய் அவளைப் பார்த்தார்.

அதுவும், விதுபாலா பேச ஆரம்பித்ததும் அவளது வாய் குழறியதைக் கண்டவர், அன்றாடம் அந்தப் பச்சை மண்ணை வைதே தீர்த்தார்! இன்றுவரை! இந்த நொடி வரை!

இந்த வெறுப்புக்கெல்லாம் சேர்த்து, தன் வாழ்வின் விடியலாய், தன் சந்தோஷத்தின் திறவுகோலாய், தன் சிரிப்பின் நாதமாய், தன் கண்ணின் மணியாய் பாலாவைப் போற்றி வளர்த்தார், தந்தை!

தந்தையையும் தாயையும் ஒத்துப் பார்த்த விதுபாலா, கண்களில் கண்ணீர் வழிந்தோட, கைப்பேசியையே வெறித்திருந்தாள்!

அவளை மேலும் வேதனைக்கு ஆழ்த்தவென, மீண்டும் ஒலித்தது அக்கைப்பேசி!

வீட்டு எண்!

''அப்பாவோ?

அம்மாவின் பேச்சால் அழுது கொண்டிருப்பேன் என்றெண்ணி அழைத்தாரோ?'' என்ற சிந்தனையுடன் கைப்பேசியை எடுத்துக் காதில் வைத்தாள் பாலா.



''ஏய்! நாதான்டி.... உன்னைப் பெத்தவ பேசுறேன்!'' என்ற கோபக்குரலைக் கேட்டதும், நிற்கத் துவங்கிய கண்ணீர் மீண்டும் பொங்கியது.

''ஏன்டி! அழுகுறே? உன்னைப் பெத்த தெண்டத்துக்கு நான் தான் அழுவணும்! சனியன்! சனியன்!'' என்று பொருமிவிட்டு,

''ஏதாவது வேலை கிடைச்சுதா இல்லையா?'' என்றார் அவர் அதிகாரமாய்.

''இல்... இல்... இ... இல்லமா...'' - பயத்தில் வெகுவாக திக்கியது, பாலாவிற்கு.

''எப்படி கிடைக்கும்? இல்லைன்னு சொல்றதுக்கே உனக்கு ஒரு மணி நேரமாவுது! இதில, எவன் உனக்கு ஆமான்னு சொல்லுவான்! பீடை!''

''உன்னோட படிச்சதே பரிமளா... உன்கிட்ட சந்தேகம் கேட்க வருமே... நீ கூட உன்னோட கோணவாயை வச்சுக்கிட்டு, அவளோட மரமண்டைல பாடத்தைப் புகுத்துவியே!

அதுக்குக்கூட வேலை கிடைச்சிடுச்சாம்!

உங்க காலேஜ்லேயே... வாத்தியாரா சேர்ந்திருச்சுன்னு அவுக ஆத்தாக்காரி பீத்திக்கிட்டுத் திரியுறா! நீயும் இருக்கியே?'' என்றவர்,

நடுவே புகுந்த கணவரை, ''யோவ்... இருய்யா! ஓம் பொண்ணைக் கடிச்சுத் தின்னுற மாட்டேன்!'' என அடக்கிவிட்டு,

''இப்பத்தான் அவ ஆத்தாக்காரி வந்தா... ஒம்பொண்ணுக்குத்தான் திக்குமே... அது எப்படி வாத்தியார் வேலை பார்க்கும்... இல்லைன்னா எம் பொண்ணுட்ட சொல்லி, அங்கனேயே வேலைக்கு ஏற்பாடு பண்ணு

வேன்னு பீத்துறா... அந்தப் பரதேசி நாயி! யோவ்... நீ சும்மா இரும்யா! சும்மா இருங்கிறேன்!'' - கைப்பேசி அத்துடன் வைக்கப்பட்டது!

முன்பைவிட மனம் இப்போது அதிகமாய் வலித்தது, பாலாவிற்கு!

தாயின் பேச்சு நாகரீகம் அற்றது என்றாலும், அதி லிருந்த உண்மை அவளைச் சுட்டது!

அவளது தாய் கூறும் பரிமளா, மிகவும் சுமாராய் படிப் பவள்! வகுப்பில் முதல்வரும் பாலாவிடம் ''பாலா... எனக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடுப்பா! ப்ளீஸ்பா! பைல் ஆகிடுவேனோன்னு பயமா இருக்குப்பா!'' என்று எத்தனை முறை கெஞ்சி இருப்பாள் தெரியுமா?!

அப்படியிருக்கும்போது, அவளுக்கு வேலை கிடைத்து, பாலாவிற்கு வேலை கிடைக்கவில்லையென் றால், மிகமிக அவமானமாய் இருந்தது!

அந்த அவமானம் தந்த வெறியோ என்னவோ, ஓர் தீர்மானத்துடன் அன்றைய நேர்முகத்தேர்விற்குச் சென் றாள் பாலா.



# 2

எல்லா நிறுவனங்களைப் போலவும், அங்கேயும் மூன்று சுற்றுகள்!

முதல் சுற்று! - எழுத்துத்தேர்வு! பாலா எதிர்பார்த்தது போலவே, அதில் அவள் வெற்றி அடைந்தாள்!

இரண்டாம் சுற்று - தொழில் நுட்ப நேர்காணல்! பாலாவின் பயத்தைப் போக்குவது போல், மூன்றாம்



நிமிடத்திலேயே அவளை வெளியே போகச் சொல்ல வில்லை. மாறாக, இரண்டு கேள்விகளுக்கான அவளது பதிலைப் பெற்றுக் கொண்டு ''மனித வள மேலாளரைப் பாருங்கள்'' என்றார்கள்.

ஏற்பட்ட அதிர்ச்சியை சமாளித்துக் கொண்டு, அடுத்த அறைக்குள் சென்றாள் விதுபாலா.

அறையிலிருந்த முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மனிதர், ''உட்காருங்கள்'' என்றார் தன்மையுடன்.

அவள் அமர்ந்ததும், சான்றிதழ்களை வாங்கிப் பார்த் தார்.

''இந்த வேலையை உங்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்கள், மிஸ்.விதுபாலா?'' என்றார் ஆங்கிலத்தில்.

சிறிது யோசித்தவள், ''எ... எ... எ... என்... படிப்பைப் பூர்த்தி செய்யக்கூடிய ச...ச... சக்... சக்திவேலைகுத் தான் இருக்கிறது! அ...அ...அதனால், இந்த வேலையை சிரத்தையாகச் செய்வேன்... எ...எ... என் திறமைகளை வளர்த்துக் கொள்வதோடும்... ம்... மட்டுமில்...லா...மல்... நிறுவனத்தின் தரத்தையும் உயர்த்துவேன்'' என்றாள்.

அவர் அவளைக் கூர்ந்து கவனிக்கவும், ''மமமம... ம்... ம...ன்னிக்கவும். எனக்குப் பேச்சு லேசாக திக்கும்'' என்றாள் சிறு கூச்சம், அவமானம், வருத்தம் எல்லாம் கலந்து.

''இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது, மிஸ். விதுபாலா! யாருக்குத்தான் குறை இல்லை... உங்களது குறை பேச்சில் தெரிகிறது, அவ்வளவே! பலருக்கு மன திற்குள் வக்கிரமாய் புதைந்து போயிருக்கிறது! அதனால், இந்தத் தாழ்வு மனப்பான்மையை விட்டுத் தள்ளுங்கள்!''

என்று கூறிய அந்நிறுவன மேலாளர், பாலாவிற்குத் 'தெய்வமாய்' தெரிந்தார்!

இதற்கே ''தெய்வம்'' என்ற அதீதஸ்தானம் என்றால், ''வாழ்த்துக்கள் விதுபாலா! எங்களது நிறுவனம் உங்களை ''மென்பொறியாளர் - பயிற்சியர்'' பதவிக்காக தேர்வு செய்திருக்கிறது. இங்கே பயிற்சி முடித்த பிறகு, எங்களுக்குத் தொடர்புடைய நிறுவனங்களில் உங்களை வேலைக்கு அமர்த்தி விடுவோம்'' என்று உடனுக்குடன் முடிவு சொன்னதும், பாலாவின் நிலையை என்னவென்று யோசித்துக் கொள்ளுங்கள்!

பரவசம்! பரவசம்! பரவசம்!

அதைவிட பரவசம் - மாதம் இருபதாயிரம் சம்பளம்! பிடித்தம்போக, கையில் பதினேழு முதல் பதினெட்டு இருக்குமாம்!

வானில் பறக்காத குறைதான்!

ஆனால், உயர உயர பறந்து கொண்டிருந்தவளை, சட்டென தரை இறக்கவென ''முதல் மூன்று மாதத் திற்கு, உங்களுக்குத் தொழில் நுட்பப் பயிற்சி கொடுக் கப்படும். அதற்கான பணத்தை நீங்கள்தான் கட்ட வேண்டும்'' என்றனர்.

உற்சாகம் முழுதும் வடிய, ''எ...எஎஎ...எவ்வளவு?'' என்றாள் பாலா.

''அதிகமில்லை! மூன்று மாதத்திற்கும் பதினைந்தாயிரம் மட்டுமே!''

''மட்டுமே! மட்டுமே! மட்டுமே!'' - இந்த வார்த்தை மட்டுமே அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது!

தங்கும் விடுதிக்குக் கொடுக்கும் இரண்டாயிரத்திற்கே, தாயிடம் இல்லாத பேச்செல்லாம் வாங்க வேண்டியிருக்



கிறது! இதில், பதினைந்தாயிரம்!? கடவுளே! - மலைத்து நின்றாள் விதுபாலா.

''யோசித்துச் சொல்லுங்கள். உங்களுக்கு... இன்று மாலை வரை நேரம் இருக்கிறது'' எனக் கூறவும்,

''எவ்வளவு தாராளம்!'' என்று சலித்துக் கொள்ளத்தான் முடிந்தது, பாலாவால்.

மெல்ல அலுவலக வளாகத்தை விட்டு வெளியே வந்து, தந்தைக்கு அழைத்தாள்.

விவரம் சொன்னதும், அவருமே சற்று யோசித்தார்.

''உன்னோட பிரண்ட்ஸ்கிட்ட விசாரிச்சுப்பாரு, பாலாம்மா!''

''அவங்க நம்பகமா சொன்னா... இன்னைக்கு மதியத்துக் குள்ள பணத்தை உன் அக்கௌண்ட்ல போட்டுடுறேன். என்னடா பாலா?'' என்றார் தந்தை.

ஓரிடத்தில் கணக்கெழுதி சம்பாதிக்கும் தந்தையை, மென்மேலும் கஷ்டப்படுத்துகிறேமே என்ற எண்ணம் வருத்தம் கொடுத்தபோதும், முதன் முதலாய் கிடைத்த வேலையை விட வேண்டுமா என்ற எண்ணமும் வலுப் பெற்றது.

குழப்பமான மனோபாவத்துடனே, தன் தோழிகள் சிலருக்கு அழைத்தாள்.

பாலா நிறுவனத்தின் பெயரைச் சொன்னதும், ''கேள் விப்பட்ட மாதிரியே இல்லையேடி, பாலா'' என்றனர் இருவர்.

கூடவே,

''ஆனா... பெரிய கம்பெனிஸ் எல்லாம் நேரடியா ஆள் எடுக்கிறதில்லையாம்... இந்த மாதிரி ட்ரைனிங் கொடுக் கிற கம்பெனிஸ்ல ட்ரைன் ஆகுற ஆளுங்களை

அப்படியே எடுத்துப்பாங்க. என்னோட பிரண்டோட பிரண்ட்கூட இப்படித்தான் சேர்ந்தான்'' என்றாள் ஒருத்தி.

இன்னொருத்தியோ ''ஏய், எங்க கம்பெனிலகூட் என்ன தெரியுமா செய்தாங்க? வேலைக்கு எடுத்ததும்,

ஒரு ட்ரைனிங் இன்ஸ்டிடியூட்ல போய் டெக்னிகல் ட்ரைனிங் எடுத்திட்டு வரச் சொன்னாங்க. அதுக்கான பணத்தை நாங்கதான்டி கொடுத்தோம்... உனக்காவது பரவாயில்ல... பதினஞ்சாயிரம்! நான் எல்லாம் இருபத் தஞ்சாயிரம் கட்டினேன்!'' என்று அலுத்துக் கொண்டாள்.

''ஆ..ஆ..னா..வ...வ... வேலை கிடைச்சிடும்தானேடி?'' என்று பாலா மறுகவும்,

''வேலை உறுதிடி! இப்போ... எனக்கு பதினஞ்சாயிரம் கையில வருதுடி'' என்றாள் அவள்.

''பதினஞ்சாயிரமா? ஆகா! நமக்கு அதைவிட கூடுதல் அல்லவா?'' என்று சிறுகர்வம்கூட, பாலாவின் மனதில் தலைதூக்கியது.

ஆனாலும், மனம் சமாதானம் அடையாமல், இன்னும் சிலருக்கு அழைப்பு விடுக்கச் செய்தது.

''இப்போ இருக்க டிரன்டில இது சகஜமாகிடுச்சு. இருந் தாலும், ஒரு தடவைக்கு ரெண்டு தடவை, நல்லா விசா ரிச்சுக்கோ!'' என்றனர் அவர்கள், விதவிதமான பாணியில்.

''ஒத்துக்கொள்வதா? வேண்டாமா?'' என்ற குழப்பத் துடனே, அலுவலகத்திற்குள் சென்றவளின் கண்களில், ஒருவர் பணம் செலுத்திவிட்டு வருவதும், மேலும் மூவர் பணத்துடன் காத்திருப்பதும் பட்டது.

மேலும், அங்கிருந்த ஒரு பணியாளர் தொலைபேசி யில் ''உங்களது பயிற்சிக் காலம் முடிந்து விட்டமையால்,



நாளையிலிருந்து இந்த நிறுவனத்தில் வேலைக்குச் செல்லலாம்'' என்று ஒரு பெரிய நிறுவனத்தின் பெயரைக் கூறிக் கொண்டிருந்தார்.

இதிலேயே, ''ஒத்துக் கொள்ளலாம்'' என்ற எண்ணத் திற்கு அவள் எழுபது சாய்ந்து விட்டிருந்தாள்.

மீதமிருந்த முப்பது சதவீதத்திற்காக, மேலாளரிடம் சென்றவள்,

''ட்ட்... ட்...ட்...ட்ர... ரைனிங் முடிஞ்சதும் கண்டிப்பா வேலை கிடைக்குமா? எ... எ... என்... எந்த கம்பெனி கிடைக்கும்?'' என்றாள் முதல் கேள்வியாய்.

சில நிறுவனங்களின் பெயர்களைப் பட்டியலிட்டவர், ஒரு சில காகிதங்களையும் எடுத்து நீட்டினார்.

''இந்த நிறுவனங்களுடன் எங்களுக்கான உடன் படிக்கை இது. படித்துப் பாருங்கள்'' என்றார்.

மேலோட்டமாய்ப் பார்த்தவளுக்கும் திருப்தியே!

''இ...இ...இ... இங்க ட்ரைனிங் கொடுக்கிற மாதிரி ரூமே இல்லையே? எங்க நடக்கும்... ட்ட்...ட்... ட்...ட்ர... ட்ரைனிங்?'' என அவள் கேட்டதும், அந்த மேலாளர் முறைத்தது போலிருந்தது பாலாவிற்கு.

'அய்யயோ! அவரைக் கோபப்படுத்தி விட்டோமோ? வேலை இல்லை என்று விடுவாரோ?' என்ற பயமே மேலோங்க, வெள்ளந்தியாய் ''இ...இ...இல்ல... அப்பா கேட்கச் சொன்னாங்க'' என்றாள் சமாளிப்பாக.

''அதனால் என்ன? உங்களது சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதுதானே எங்களது குறிக்கோளே! பயிற்சி இங்கு தரப்பட மாட்டாது. அதற்கென்று எங்களுக்கு வேறொரு கிளை இருக்கிறது. நீங்கள் பணம் செலுத்தியதும், அங்கே அனுப்பி விடுவோம்'' என்றார் அவர், உயர்தர ஆங் கிலத்தில்.

அங்கே விழுந்தாள் விதுபாலா!

அவள் சம்மதம் சொன்ன நிமிட நேரங்களில், நியமன உத்தரவை அச்சிலேற்றிக் கையில் கொடுத்தனர்.

முகமெல்லாம் மலர்ந்து விரிய, ''நா... நாளைக்கு பணத்தைக் கட்டி விடுகிறேன்'' என அவள் கூறியதும்,

''நா... நாளைக்கா? நாளை முதல், தொழில் நுட்பப் பயிற்சியின் ஒரு பகுதி தொடங்குவதாக இருக்கிறதே? இன்று கட்டினால், நாளை வகுப்பில் சேர்ந்து கொள்ள லாம். நாளைக்கு என்றால்... இன்னமும் பத்து நாள் கழித் துத்தான் சேர முடியும்!'' என அவர்கள் உதடு பிதுக்க, விதுபாலா விழித்தாள்.

''என்ன? நாளைக்கு வகுப்பில் சேர்ந்து விடுகிறீர் களா?'' என்ற அவர்களது தூண்டுதலில்,

''ம்ம்...'' என்றவள்,

''எ... எ... என... எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்க. உ.... உ..... ஊர்ல இருந்து பணம் வரணும்'' என்றாள் கெஞ்சுதலாக.

''மதியம் மூன்று மணிக்குள் கட்டி விடுங்கள்'' என்றனர் அவர்கள்.

தந்தைக்கு மீண்டும் அழைத்தவள், ''அப்பா'' என்றாள் மெதுவாக.

''என்ன பாலாம்மா? என்ன விஷயம்? பணம் கூடுதலா கட்டணுமாடா? தயங்காம சொல்லுப்பா. அப்பா பார்த் துக்கிறேன்'' என்றார் பெண்ணின் தயக்கத்தைப் படித்தவ ராய்.

''இ... இ... இஇ.. இல்ல! மூணு மணிக்குள்ள பணம் கட்டணுமாம்!'' என அவள் கூறவும்,



''அவ்வளவுதானா? இன்னும் அரை மணி நேரத்தில பணத்தைப் போட்டுடுறேன்'' என்றார் அவர், நிம்மதி தொனித்த குரலில்.

''ப...ப...ப..ணம் இருக்காப்பா?'' என்று பாலா தயங்கித் தயங்கி கேட்கவும்,

''வேலைக்குப் போற பொண்ணு... மெலிசாவாவது ஒரு செயின் போட்டுக்கணுமேன்னு கொஞ்சம் பணம் சேர்த்து வச்சிருந்தேன். அதில இருந்து எடுத்து அனுப்பு றேன் பாலாம்மா. நீ சம்பாரிக்க ஆரம்பிச்சதும், மெலிசா என்ன? பெருசாவே ஒரு செயின் வாங்கிடுவோம்!'' என்றார் அவர் சந்தோஷமாய்.

கூடவே, ''அப்பாக்கும் ஒண்ணு வாங்கித் தருவியா கண்ணு?'' என அவர், சிரிப்பும் எதிர்பார்ப்புமாய் வினவ.

''கக்... கண்டிப்பா!'' என்றாள் மகள் உறுதியுடன்.

தானியங்கி வங்கி இயந்திரத்தில் பணம் எடுத்து வந்த விதுபாலா, நல்ல நேரம் பார்த்து அதைச் செலுத்தினாள்! மறக்காமல், ரசீதும் வாங்கிக் கொண்டாள்!

பின்னர், அந்த நிறுவனத்தார் அங்கிருந்த பதினைந்து பேரிடமும் அவர்களைப் பற்றிய விவரங்களை சேகரித் துக் கொண்டனர். முக்கியமாக, மின்னஞ்சல் முகவரியை! பயிற்சி நடக்கும் இடத்தின் முகவரி, மின்னஞ்சலில் அனுப்பப்படும் எனக் கூறினர்.

அதன் பின்னர், ''நிறுவனத்தைப் பற்றிய முன்னுரை'' என்ற பெயரில், ஒரு மணி நேரம் அனைவரையும் நன் றாக தூங்க வைத்து அனுப்பினர்.

மனம் முழுக்கப் பூரிப்புடன், விடுதி வந்து சேர்ந் தவர்களுக்கு, விடியல் வந்துவிட்டது என்ற சந்தோஷத் தில் நிம்மதியான உறக்கம் கைகூடியது!

அங்கே விழுந்தாள் விதுபாலா!

அவள் சம்மதம் சொன்ன நிமிட நேரங்களில், நியமன உத்தரவை அச்சிலேற்றிக் கையில் கொடுத்தனர்.

முகமெல்லாம் மலர்ந்து விரிய, ''நா... நாளைக்கு பணத்தைக் கட்டி விடுகிறேன்'' என அவள் கூறியதும்,

''நா... நாளைக்கா? நாளை முதல், தொழில் நுட்பப் பயிற்சியின் ஒரு பகுதி தொடங்குவதாக இருக்கிறதே? இன்று கட்டினால், நாளை வகுப்பில் சேர்ந்து கொள்ள லாம். நாளைக்கு என்றால்... இன்னமும் பத்து நாள் கழித் துத்தான் சேர முடியும்!'' என அவர்கள் உதடு பிதுக்க, விதுபாலா விழித்தாள்.

''என்ன? நாளைக்கு வகுப்பில் சேர்ந்து விடுகிறீர் களா?'' என்ற அவர்களது தூண்டுதலில்,

''ம்ம்...'' என்றவள்,

''எ... எ... எஎ... எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்க. ஊ.... ஊ..... ஊர்ல இருந்து பணம் வரணும்'' என்றாள் கெஞ்சுதலாக.

''மதியம் மூன்று மணிக்குள் கட்டி விடுங்கள்'' என்றனர் அவர்கள்.

தந்தைக்கு மீண்டும் அழைத்தவள், ''அப்பா'' என்றாள் மெதுவாக.

''என்ன பாலாம்மா? என்ன விஷயம்? பணம் கூடுதலா கட்டணுமாடா? தயங்காம சொல்லுப்பா. அப்பா பார்த் துக்கிறேன்'' என்றார் பெண்ணின் தயக்கத்தைப் படித்தவ ராய்.

''இ... இ... இஇ.. இல்ல! மூணு மணிக்குள்ள பணம் கட்டணுமாம்!'' என அவள் கூறவும்,



''அவ்வளவுதானா? இன்னும் அரை மணி நேரத்தில பணத்தைப் போட்டுடுறேன்'' என்றார் அவர், நிம்மதி தொனித்த குரலில்.

''ப...ப...ப..ணம் இருக்காப்பா?'' என்று பாலா தயங்கித் தயங்கி கேட்கவும்,

''வேலைக்குப் போற பொண்ணு... மெலிசாவாவது ஒரு செயின் போட்டுக்கணுமேன்னு கொஞ்சம் பணம் சேர்த்து வச்சிருந்தேன். அதில இருந்து எடுத்து அனுப்பு றேன் பாலாம்மா. நீ சம்பாரிக்க ஆரம்பிச்சதும், மெலிசா என்ன? பெருசாவே ஒரு செயின் வாங்கிடுவோம்!'' என்றார் அவர் சந்தோஷமாய்.

கூடவே, ''அப்பாக்கும் ஒண்ணு வாங்கித் தருவியா கண்ணு?'' என அவர், சிரிப்பும் எதிர்பார்ப்புமாய் வினவ.

''கக்... கண்டிப்பா!'' என்றாள் மகள் உறுதியுடன்.

தானியங்கி வங்கி இயந்திரத்தில் பணம் எடுத்து வந்த விதுபாலா, நல்ல நேரம் பார்த்து அதைச் செலுத்தினாள்! மறக்காமல், ரசீதும் வாங்கிக் கொண்டாள்!

பின்னர், அந்த நிறுவனத்தார் அங்கிருந்த பதினைந்து பேரிடமும் அவர்களைப் பற்றிய விவரங்களை சேகரித் துக் கொண்டனர். முக்கியமாக, மின்னஞ்சல் முகவரியை! பயிற்சி நடக்கும் இடத்தின் முகவரி, மின்னஞ்சலில் அனுப்பப்படும் எனக் கூறினர்.

அதன் பின்னர், ''நிறுவனத்தைப் பற்றிய முன்னுரை'' என்ற பெயரில், ஒரு மணி நேரம் அனைவரையும் நன் றாக தூங்க வைத்து அனுப்பினர்.

மனம் முழுக்கப் பூரிப்புடன், விடுதி வந்து சேர்ந் தவர்களுக்கு, விடியல் வந்துவிட்டது என்ற சந்தோஷத் தில் நிம்மதியான உறக்கம் கைகூடியது!

ஆனால், அந்த உறக்கத்தின் காலம் - ஒரு நாள் இரவாய் மட்டும் போனது, அவளது தப்பா? இல்லை ''ஏமாறுபவர் இருக்கும் வரை ஏமாற்றுபவர் உதயமாகிக் கொண்டேதான் இருப்பார்கள்'' என்ற உலக நியதியின் பின்பற்றலா!

ஆம், விதுபாலா ஏமாற்றப்பட்டாள்!

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக, அருகே இருக்கும் இணைய தளமையத்திற்குச் சென்றவள், கர்மசிரத்தையாக அவர்கள் கொடுத்திருந்த முகவரியைக் குறித்துக் கொண்டாள்.

என்ன கர்மசிரத்தையாக குறித்து என்ன பயன்? அப்படியொரு முகவரி இருந்தால் அல்லவோ அதைக் கண்டு பிடிக்க முடியும்?!

ஆம், பரந்து விரிந்த சிங்காரச் சென்னையில், அப்படியொரு இடமே இல்லை!

அதிர்ந்து போனாள், விதுபாலா!

''கடவுளே! என்ன சோதனை இது?'' - அவளுக்கு மயக்கம் வரும் போலிருந்தது.

நேற்றிரவு தாய் கேட்ட, "இருபதாயிரமா? எந்த இளிச்ச வாயன்டி அம்புட்டு சம்பளம் தரேன்னு சொன்னான்? அதுவும் திக்குவாய்க்கு?" என்ற கேள்வி, காதுக்குள் ரீங்காரமிட கண் முன்னே பூச்சி பறந்தது அவளுக்கு.

நல்லவேளை, பதினைந்தாயிரம் பணம் கட்டியதை தாயிடம் கூறவில்லை! கூறியிருந்தால்... இப்போது ஏமாந்து நிற்பதற்கு... ரோட்டில் நிற்க வைத்து, நாறடித்து இருப்பார்கள்!?

தன் எண்ணம் போகும் போக்கில், சுதாரித்து எழுந்தாள் விதுபாலா.



அப்பா பதினான்கு மணி நேரம் உழைத்து சம்பாதிக்கும் ரூபாயை, எவனிடமோ கொடுத்து ஏமாந்துவிட்டு, தாயின் வசவை எண்ணி மயங்குவது ஈனத்தனமாய்பட்டது!

அவளைப் போலவே, அங்கு நிறைய பேர் இருந்தனர்! கிட்டத்தட்ட ஐம்பது பேர்!

ஏழாயிரம், பத்தாயிரம், பதினைந்தாயிரம் என்று வித விதமாய் ஏமாந்து இருந்தனர்!

சிலர் அழுதனர்!

சிலர் காட்டுக் கூச்சலாய் கத்தினர்!

சிலர் கதறினர்!

சிலர் காவல்துறையில் புகார் கொடுக்க வீராவேசமாய் கிளம்பினர்!

சிலர் ஏமாந்த அவமானத்தை முகத்தில் காட்டாமல், அங்கிருந்து வெளியேறினர்!

சிலர் மோசடி நிறுவன எண்ணிற்கு அழைத்தனர்!

விதுபாலாவோ, அந்த நிறுவனத்திற்கு நேரடியாகவே சென்றாள்!



# 3

ஏமாற்றுபவன், கடையைத் திறந்து வைத்துக் கொண்டு, வா வந்து குத்து என்று முகத்தைக் காட்டிக் கொண்டா உட்கார்ந்திருப்பான்?

இரு பெரிய பூட்டுக்களுடன், நிறுவனம் மூடப்பட்டிருந்தது.

முட்டிக்கொண்டு வந்த அழுகையை அடக்கியவாறே, நிறுவன வாசலிலேயே அமர்ந்து விட்டாள் பாலா.

''எப்படியும் வரத்தானே வேண்டும்? உள்ளிருக்கும், கணினி, தொலைபேசி மற்ற பிற பொருட்களை எடுத்துப் போகவேணும் வருவார்கள் அல்லவா? வரட்டும்!'' என்ற எண்ணத்துடன், சோறு தண்ணி இல்லாமல் உட்கார்ந்திருந்ததுதான் மிச்சம்!

பசியை விடவும்,

தந்தையிடம் இதை எப்படிச் சொல்வது என்ற பரிதவிப்பே அவளைக் கொன்றது!

அதை விடவும் மேலாய், ''தனக்கு வேலையே கிடைக்காது'' என்ற அவநம்பிக்கை அவளுள் ஆழப் பொதிந்தது!

தாய் சொல்வதுபோல், ஊருக்குப்போய், அவர்கள் சொல்படி கேட்க வேண்டியதுதான்! சென்னைக்கு வந்ததும் போதும், வேலை தேடியதும் போதும், பணத்தைத் தொலைத்ததும் போதும்!

தொலைத்த பணத்தை மட்டும் எப்படியாவது வாங்கிக் கொண்டு, ஊருக்கு ரயிலேற வேண்டியதுதான்!

அந்த நிறுவனம் இருந்தது, முதல் மாடியில். வராண்டா போலிருந்த நடைபாதையில், அமர்ந்திருந்தவளை சிலர் கீழிருந்து வெறிக்கத்தான் செய்தனர். ஆனால், அதையெல்லாம் மதிக்கும் நிலையில் அவள் இருக்கவில்லை.

அவளைப் போலவே பணத்தை இழந்த சிலர், அங்கே வந்தனர். ஆனால், வந்தவர்கள் பார்த்த பார்வையில் தான் விதுபாலா குறுகிப் போனாள்!

என்னவோ,



நிறுவனத்தின் வாயிலில் அமர்ந்திருந்ததாலேயே, அவளுக்கும் அந்த மோசடி கும்பலுக்கும் தொடர்பு இருப்பது போல் அவர்கள் பார்க்க,

வேகமாய், நிறுவனத்தாரிடம் முன்தினம் வாங்கிய ரசீதைப் பையிலிருந்து உருவியவள், ஒன்றும் பேசாமல் அவர்கள் முன்னே விரித்து நீட்டிவிட்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

இதற்காக வேனும் பயன்பட்டதே என்று அக்காகிதத்தைப் பார்த்து விரக்திப் புன்னகை வந்தது பாலாவிற்கு.

மணி ஆறரையை நெருங்கிய பின்னர், மனமில்லாமல் அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்.

அன்றிரவு அழைத்த தந்தையிடம் உண்மையைச் சொல்ல, ஏனோ நா கூசியது!

எப்படியும் பணத்தைப் பெற்றுக் கொண்டுதான், தந்தையிடம் விவரம் சொல்ல வேண்டும் என்ற வைராக்கியத்துடன், தந்தைக்கு அழைக்காமலே படுக்கையில் விழுந்தாள் விது.

அவர் அழைத்தபோதும், ''தூக்கம் வருகிறது'' என்று பொய் சொல்லிவிட்டு, அழைப்பை வேகமாய் வைத்தாள்.

''தொலைத்த பணத்தை எப்படிப் பெறுவது?'' என்பதிலேயே, சிந்தனை உழல, அவளால் சிறிதும் கண் மூட முடியவில்லை!

''காவல்துறையில் புகார் கொடுக்கக் கிளம்பிய குழுவுடன் கிளம்பி இருக்கலாமோ?'' என்ற எண்ணம் வலுக்க,

அடுத்த நாள் காலை எழுந்ததும், முதல் வேலையாக காவல் நிலையம் சென்றால், ''ஓ, அந்தக் கம்பெனியா? எப்படிம்மா எல்லாரும் இப்படி போய் ஏமாந்தீங்க?'' என்றனர் அவர்கள் முதல் கேள்வியாக.

ஒன்றும் சொல்லாமல் விதுபாலா தலைகுனிய,

''எவ்வளவு ஏமாந்த?''

''ப...பப்...ப...பப்...'' - ஏனோ காக்கி உடையும், அலட்சியக் குரலும், அவமானக் குன்றலுமாய் அவள் ஏகத்திற்குத் திக்க,

''சரிசரிவிடு! பத்தாயிரமோ! பதினஞ்சாயிரமோ! உன் பெயரையும் ஏற்கனவே இருக்க கம்ப்ளைன்ட்ல சேர்த்துக்கிறேன். போயிட்டு வா!'' என்றதோடு முடித்துக் கொண்டது காவல்துறை.

''ப...ப...பப்...ப... பணம்...''

அவளை முடிக்கவே விடவில்லை.

''அதான் சொல்லிட்டியே? போம்மா!'' என அவர்கள் எரிந்துவிழ,

''இ... இ... இல்ல கிடைச்சிடுமா?''

''அவனவன்... லட்ச லட்சமா ஏமாந்திட்டு உட்கார்ந்திருக்கான். இது... பத்தாயிரத்திற்கு கூப்பாடு போடுது! போம்மா!''

இவர்களுக்கு வேண்டுமென்றால் பத்தாயிரம் சாதாரணமாய் இருக்கலாம்... அவளுக்கு? அவளுக்கு மட்டுமில்லை... நடுத்தர வர்க்கத்தில் பலருக்கு அந்தப் பணம், பெரும்பணம் அல்லவா?!

''ப...பப்... பப்ப... பத்தாயிரம் இல். பதினஞ்சாயிரம்...''

''ஏதோ ஒண்ணு! போம்மா! கிடைச்சா சொல்லிவிடுறோம்!'' என்றவர்கள், அதற்கு மேல் அவளொருத்தி அங்கு நிற்பது போலவே காட்டிக் கொள்ளவில்லை.

பத்து நிமிடத்திற்கு மேல் நின்றவள், அங்கே கூட்டமாய் வந்த கட்சிக்காரர்களை கண்டதும் ஒரு கணம் மிரண்டு, வேகமாய் அங்கிருந்து வெளியேறினாள்.



அதற்கு மேல் என்ன செய்வதென்று விதுபாலாவிற்குப் புரியவில்லை! முந்தைய தினம் போலவே, அந்த நிறுவனம் இருந்த தெருவிற்கு சென்று, தவமிருப்பதைத் தவிர!

இந்தத் தவம், அடுத்த ஒரு வார காலமும் தொடர்ந்து நடந்தது!

காலை முதல் மாலை வரை அங்கே தான் தவமே!

ஒரு மணி நேரம், அந்த நிறுவன வாயிலின் முன்பு!

அடுத்த ஒரு மணி நேரம், அந்தக் கட்டிடத்தின் வாசல் படியில்!

பின்னர், அந்த தெருவை ஒரு முறை வலம் வருவது!

கொஞ்ச நேரத்திற்கு, எதிர் வீட்டிலிருந்து ரோட்டில் விழும் மாமர நிழலில் நிற்பது!

அப்படி நின்றபோது, அந்த மாமர நிழலில், இஸ்திரி வண்டி வைத்திருந்த ஒருவரிடம், லேசாக பேச்சு கொடுத்தாள், விதுபாலா.

''சா... சா... சார்... சார்... எதிர்ல இருக்க கம்பெனி...''

''அட நீ வேறமா... ஆயிரம் பேருக்கும் மேலா இந்தக் கேள்வியைக் கேட்டுட்டானுங்க! நீ வேற தொல்ல பண்ணாம போம்மா! நிம்மதியா தொழிலைப் பார்க்க விட மாட்ரானுங்க! சை!'' என்று எரிந்து விழுந்தார் அவர்.

இப்படியே ஐந்து நாட்கள் கரைய, ஆறாம் நாளின் மதிய நேரத்தில், மாமர நிழலில் அமர்ந்து, விடுதியிலிருந்து எடுத்து வந்த புளியோதரையை ஸ்பூனால் அளந்து கொண்டிருந்தவளின் அருகே, ஓர் இருபது... இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி வந்து நின்றாள்.

என்னவோ ஏதோ என்று பதறி அடித்துக் கொண்டு, வேகமாய் விதுபாலா எழுந்ததில், அவள் மடியிலிருந்த கைப்பை, கையிலிருந்த உணவு டப்பா என்று அனைத்தும் மண்ணில் விழுந்தன.

''ஐயோ!'' எனக் கூவிய பாலாவுடன்,

''ஐயோ! சாப்பாடு எல்லாம் கொட்டிடுச்சே? என்னால தான்!'' என்று வருந்தியது அப்பெண்ணின் குரல்.

''ப...ப...பர... பரவாயில்ல'' என்றவாறே கீழே குனிந்து, தன் உடைமைகளை பாலா சேகரிக்க,

அவளுக்கு உதவி செய்துகொண்டு, ''என்னைப் பார்த்தா பேய் மாதிரி இருக்கா என்ன? ஏன் அப்படி பயந்தே?'' என வினவ,

''அ... அ... அது... அதுவந்து... தி... தீ... தீ... திடீர்ன்னு...'' என்று இழுத்த விதுபாலா, ''சச...சா...சா... சாரி! எனக்குத் திக்கும்!'' என்றாள் கூச்சத்துடன்.

''தட்ஸ் ஓகே! இப்போ சாப்பாடு கொட்டிடுச்சே?'' என மற்றவள் சொல்லும்போதே,

''நி...நீ...நீ... நீங்க என்கிட்டே ஏதோ கேட்க வந் தீங்களே?

இங்க உ...உ...உட்... உட்கார்ந்து சாப்பிடக்கூடாதா?

ந...ந...நாநாள்.. நாளையில இருந்து வேற எங்கே யாவது போய்டுறேன்'' என்றுபாலா, அங்கிருந்து நகர முற்பட்டாள்.

''ஏய்! ஏய்!

அதுக்காக நான் இங்க வரலை... இது எங்க வீடுதான்... ஆனா வீட்டுக்குள்ள இருக்க இடம்தான் எங்களுக்கு சொந்தம்... வீட்டுக்கு வெளியில யார் வேணும்னாலும் வரலாம்... உட்காரலாம்... சாப்பிடலாம்...'' என அவளைத் தடுத்த மற்றவள்,

''நான் வந்தது வேற விஷயத்துக்காக'' என்றாள் பீடிகை யுடன்.

''என்ன?'' என்பது போல் ஏறிட்ட பாலாவிடம்,

''வா உள்ள போலாம்! எங்க ரமணிம்மாதான்... உன் னைப் பார்க்க ஆவலா இருக்காங்க! ரமணிப்பா சொன்ன ஒரு வார்த்தைக்காக, இங்க வர முடியாம தவிச்சுக்கிட்டு உள்ளேயே இருக்காங்க! வரியா?''

அவள் கூறிய எல்லாவற்றையும்விட ''ரமணிம்மா'' / ''ரமணிப்பா'' என்ற அழைப்பு பாலாவிடம் எதிர் பார்ப்பைக் கூட்டியது.

ஆனாலும், அன்னியரின் வீட்டிற்குள் நுழையத் தயங்கி, ''எ...எ... என்ன விஷயம்?'' என்றாள் பாலா கேள்வியுடன்.

''ஹே! பயப்படாத... நீ பயப்படுற அளவுக்கு ஒண்ணு மில்ல. சும்மாவா... ஒரு பிரண்ட்லி டாக்தான்! ஜஸ்ட் ஒரு பத்து நிமிஷம்!'' என்று அவள் வற்புறுத்தியபோது, போகாமலிருக்க முடியவில்லை விதுபாலாவால்.

அங்கிருந்த பெரிய இரும்பு கேட்டைத் திறந்து கொண்டு முன்னவள் நடக்க, அவளைப் பின் தொடர்ந்த பாலாவிற்குக் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன!

எங்கெங்கு காணினும் பச்சை நிறம்!

பச்சை நிறத்தை உருக்கி விட்டது போன்ற புல்வெளி!

அதன் நடுவே, மா... பலா... வாழை என்று முக் கனிகளின் ராஜ்ஜியம்!

கொய்யா... மாதுளை... எலுமிச்சை... ஆரஞ்சு என்று துணைக்குப் பலமரங்கள்!

ஒரோர் மரத்தைச் சுற்றியும், பலவகைச் செடிகள்!

ரோஜாவிலேயே ஒரு இருபது வகை! செம்பருத்தியில் ஒரு பத்து! நந்தியாவட்டை, பவளமல்லி, சங்குப்பூ என்று பற்பல!

முல்லை, பிச்சி என்று கொடிவகைகள்!

அவை மட்டுமல்ல, தோட்டத்தின் ஒரு பக்கத்தில் காய்கனிகள்!

ஹப்பப்பா! பரவசமாய் இருந்தது விதுபாலாவிற்கு!

சென்னையின் மையப் பகுதியில், இப்படியொரு தோட்டமா?! ம்ஹூம், தோட்டம் மட்டுமல்ல தோட்டத்துடன் கூடிய பெரிய வீடு!

அந்தக் கால பாணியில் கட்டப்பட்ட அழகிய வீடு! அதன் பாரம்பரியம் குறையாமல், அதே சமயம் அதை சிதைக்கவும் இல்லாமல், கவனம் கொண்டு பேணப் படும் ஓர் வீடு!

பாலா பார்த்திருக்கிறாள் - அந்தத் தெரு முழுதுமே அடுக்கு மாடி குடியிருப்புகள்தான்! நடுநடுவே, அலுவலகக் கட்டிடங்கள்!

நவீன மயமாய் மாறிக் கொண்டிருக்கும் உலகின் நடுவே, பசுமையின் அடையாளமாய், பழமையின் சாயலுடன் நின்ற அந்த வீடு, அவளை வெகுவாக ஈர்த்தது!

அகத்தின் பிரமிப்பு முகத்தில் பிரதிபலிக்க, ஓர் மென்னகையுடன் அவளை வீட்டினுள் இட்டுச் சென்ற மற்றவள்,

''ரமணிம்மா! எங்க போனீங்க? பாருங்க அந்தப் பொண்ணு வந்திருக்கா!'' என்றாள் உள்நோக்கிக் குரல் கொடுத்து.



ஐம்பது வயது மதிக்கத்தக்க ஓர் பெண்மணி உள்ளிருந்து வேகமாய் வெளிப்பட்டார்.

ஓர் குழந்தையின் ஆர்வத்தை உள்ளடக்கிய முகம், தேகம் முழுதும் சுறுசுறுப்பு, ஒல்லி என்றும் ஓரம் கட்ட முடியாமல் குண்டு என்றும் முத்திரை குத்த முடியாமல் இடைப்பட்ட உடல்வாகு. அவருக்கு ஐம்பது வயதாய் இருக்கலாம் என்று சுட்டிக் காட்டியதே, அங்கங்கே அள்ளித் தெளிக்கப்பட்டிருந்த நரை முடிகள்தாம்!

விதுபாலா கணக்கிட்ட அந்த ஒரு சில வினாடிகளில், வராண்டாவிற்கு வந்திருந்த அவர்,

''உன்னைப் பார்க்கணும்னு ஒரு வாரமா தவிச்சிட்டு இருந்தேன், இப்போதான் முடிஞ்சது!'' என்ற பீடிகையுடன், பாலாவின் கைபிடித்து, அங்கிருந்த வாசல் படியில் அமர வைத்தார்.

புரியாத பார்வையுடன் ஏறிட்ட பாலாவிடம், ''ஒரு வாரமா இந்த தெருவே கதின்னு நீ கிடக்கிறது எனக்குத் தெரியும்! நீயும்... அந்த எதிர்கம்பெனில பணம் கட்டி ஏமாந்துட்டியாம்மா?'' என்றார் படாரென.

பதில் சொல்லாமல் பாலா தலைகுனிய, ''ஹய்யோ! தப்பா எடுத்துக்காதேம்மா! உன்னைக் கேலி பண்றதுக்கோ... ஏளனம் பண்றதுக்கோ நா பார்க்கணும்னு சொல்லலை. இவனுங்ககிட்ட பல பேர் ஏமாந்து இருந்தாலும், யாருமே இப்படி வாரக்கணக்கா இங்க வந்து காத்துக் கிடக்கல. கொஞ்ச பேர்... வந்து பூட்டின கம்பெனி முன்னாடி ஆர்ப்பாட்டம் பண்ணினாங்க... கல்லெடுத்து அடிச்சாங்க! பல பேர் வந்து... அக்கம் பக்கம் விசாரிச்சாங்க! ஆனா, நீ! ஏன்மா, இப்படி நேரம் காலம் பார்க்காம இப்படி அலையுறே? எனக்கே உன்னைப் பார்க்கப் பாவமா இருந்துச்சு!

அதான்... உன்னைப் பார்க்கலாம்ன்னு!'' என்று நீளமாய் பேசி முடித்தபோது, விதுவின் தலை நிமிர்ந்திருந்தது.

''உ...உ....உன்.. உங்களுக்கு எப்படி நா தினமும் வரது தெரியும்?

உ...உ...உங்களை நா வெளிய ப...ப...பா...பாத்ததே இல்லையே?''

''வெளிய நின்னாதான் தெரியுமா என்ன? இதோ இவ இருக்காளே... ஒரு தோட்டப் பைத்தியம்! ஒரு நாளைக்கு முப்பது மணி நேரம் இருந்தாலும்,

அது முழுசையும் தோட்டத்திலேயே கழிச்சிடுவா! அவதான் நீ தினம் வரதைக் கவனிச்சிட்டு சொன்னா... அவ... சொல்லச் சொல்ல... நானும் இங்க இருந்து கவனிச்சுட்டே இருப்பேன்...'' என்றவர்,

''அன்னைக்கே உன்னைக் கூப்பிட்டு இருப்போம். ஆனா... ரமணிப்பாதான்! மத்தவங்க விஷயத்தில மூக்கை நுழைக்கக்கூடாது... வம்புக்கு அலையுறதா தப்பா எடுத்துப்பாங்கன்னு எங்களை அடக்கி வச்சுட்டார்!'' என்றார் மெதுகுரலில்.

''இப்போ மட்டும் எப்படி?'' என்ற கேள்வி, பாலாவின் கண்களில் தேங்கி நிற்க,

''கண்ணாலேயே பேசுறா பாரேன்!'' என்று அங்கிருந்தவளிடம் அங்கலாய்த்தவர்,

''அவரைத்தான்... இ.பி. பில் கட்ட, தண்ணி பில் கட்ட, இன்சூரன்ஸ் கட்டன்னு பாக் பண்ணி அனுப்பிட்டோமே!'' என்றார் குதூகலத்துடன்.

புதிதாய் ஓர் புன்னகை, பாலாவின் உதடுகளில் மலர்ந்து விரிய,



''ஏன்மா? தினம் தினம் இங்க வர? எங்களுக்கே உன்னைப் பார்க்க பாவமா இருக்கும்மா அவனுங்க வந்தா... நாங்க்ளே உனக்குத் தகவல் கொடுக்கவா? வயசு பொண்ணு... இந்தக் கலிகாலத்தில இப்படி அலையுறது தப்பில்லையா?'' என்றார் அறிவுரையைக் காட்டிலும் அக்கறை மேலிட்ட குரலில்.

''அ... அ... அது... ர...ரே... ரொம்ப ரூவா ஏமாந்துட்டேன்!'' என்றபோது, விதுபாலாவின் குரல் அழுகைக்கு இடம் பெயரவா என்று கேள்வி கேட்டுக் கொண்டிருந்தது.

அவமானத்தில் குனிந்த அவளது தலையை நிமிர்த்தி, ரமணிம்மா பேசுவதற்குள்,

''அவளோட சாப்பாடு எல்லாம் கீழ கொட்டிடுச்சு. அவளையும் கூட்டிட்டு வாங்க... சாப்பிட்டுட்டே பேசலாம்'' என்றாள் மற்றவள்.

''ஐயோ! அப்படியா?! எப்படி கொட்டுச்சு?'' என்று கேள்வி கேட்டவர், உடனேயே ''அதை சாப்பிட்டுட்டே சொல்லு! உள்ள வாம்மா!'' என்றார் அன்பாய்.

''இ... இ... இல்ல... வேணாம்! நா... ஹாஸ்டெல்ல போய் சாப்பிட்டுக்கிறேன்'' என்று விது தயங்கவும்,

''எங்களைப் பார்த்தா ஏதாவது கடத்தல் கும்பல் மாதிரி தெரியுதா?'' என்றார் அவர் வருத்தத்துடன்.

அவரது வாடிய முகம் ஏதோ செய்த போதும், பாலா உள்ளே வர சம்மதிக்கவில்லை. தயக்கத்தை அவள் முகத்தில் காட்டிக் கொண்டு விலகி நிற்க,

அந்த இள வயதுப் பெண், விதுவின் அருகே வந்து, அவளது கைகளை அழுத்தமாய் பிடித்து, ''வேணும்னா, நாங்க இந்த வீட்டில தான் இருக்கோமான்னு அந்த

இஸ்திரிக் கடைக்காரர் கிட்ட கேளு... இல்ல... எதிர் பக்கம் இருக்க் கடையில கூட விசாரிச்சுப் பாரு! எங்க ளால உனக்கு எந்தக் கெடுதலும் இருக்காது!'' என்றாள்.

அவளது வார்த்தைகளை விடவும் கைகளின் அழுத்தம் ஓர் நம்பிக்கையை விதுவினுள் விதைத்தது.

அதற்கு மேல் மறுக்க மாட்டாமல், விதுபாலா உள்ளே நுழைய, மற்றவள் வாசல் பக்கமாய் நகர்ந்தாள்.

''ஏய்... பத்மா! அவளைச் சாப்பிடச் சொல்லிட்டு, நீ எங்க போறே? வா உள்ள!'' என்று ரமணிம்மா அதட்ட,

''நந்தியாவட்டைல இருந்து கொடி முல்லைக்கு தண் ணியைத் திருப்பி விட்டுட்டு வந்துடுறேன், ரமணிம்மா! ப்ளீஸ்!''

''சாப்பாடு... தூக்கம் இல்லாம தோட்டமே கதின்னு கிடக்கிறது! அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். நீ முதல்லவா! தண்ணிப் பைப்பை முதல்ல அடை!'' என்று ரமணிம்மா அதட்ட,

ஏக்கமாய் உதடு பிதுக்கியபோதும், அவர்களுடன் உள்ளே நுழைந்தாள் பத்மா!

தலைவாழை இலை போட்டு, அவர்கள் பரிமாறிய அதிக ஆடம்பரமில்லாத உணவுகூட, விதுபாலாவுக்குப் பிடித்தது!

அதிலும், அவள் உணவு உண்ணும்வரை, பணம் பறிபோன கதையைப் பற்றி அவர்கள் பேசவில்லை.

அவளாக ஆரம்பித்தபோதும் ''சாப்பிட்டதுக்கு அப்புறம் சொல்லும்மா! சாப்பிடும்போது, வருத்தப்படு றதோ... கோபப்படுறதோ நல்லதில்லை!'' என்று அடக்கி விட்டார் ரமணிம்மா.



உணவு முடிந்ததும், மிதமான சூட்டிலிருந்த தண் ணீரை அவளிடம் கொடுத்தாள் பத்மா.

''எப்பவுமே, சாப்பாட்டுக்கு அப்புறம் கொஞ்சம் சுடு தண்ணி குடிச்சா, சீக்கிரம் ஜீரணம் ஆகிடும்'' என்றாள் புன்னகையுடன்.

அவள் குடித்து முடித்தபோது, ''பாரேன்... உன் பேரைக் கேட்கவே இல்லை!'' என்று தலையில் அடித்துக் கொண்டவரிடம்,

''எ...எ...எ... என் பேரு விதுபாலா!'' என்ற பாலா,

''ப...ப...பே... பேரே தெரியாம எப்படிம்மா வீட்டுக் குள்ள வி...விவிவிட்டீங்க?'' என்றாள் ஆச்சரியம் மிகவுற.

''எல்லாம் ஒரு நம்பிக்கைதான்! ஏமாளின்னு நெத்தி யில ஒட்டாத குறையா பணத்தைத் தொலைச்சுட்டு வந்து நிக்கிறநீ. எங்களை ஏமாத்திட மாட்டேன்னு ஒரு நம்பிக்கைதான்!'' என பத்மா கூறவும்,

பாலாவிற்கு முகம் கூம்பிப் போயிற்று.

கசந்தாலும் உண்மை அல்லவோ!?

அதனாலேயே ''எப்படிம்மா ஏமாந்தே?'' என்று அவர்கள் கேட்டதும், நடந்தது முழுதையும் சொல்லி முடித்தாள்.

''எ... என்... எங்க கிளாஸ்ல எல்லாரையும் நல்லவிட நல்ல... ம்... மம... மார்க் அக்கா, நானு! அரியர்வ.. வ...ச்சவங்களுக்குக்கூட வேலை கிடைச்சிடுச்சு... எனக்குத்தான்க்கா! இந்தத் திக்குவாயி... இதால யாருமே எ...எ... எடுத்துக்கல! அதான்.. இவங்க... வ...வவெ... வேலை தரேன்னு சொன்னதும்...'' என்று இழுத்து நிறுத்தியபோது, தன்னிரக்கம் மேலோங்கி நின்றது.

''வீட்டில சொல்லிட்டியா?''

"அ... அ.. அப்பாட்ட சொல்ல ஒரு மாதிரி இருக்கும்மா. க...க...க.. கஷ்டப்பட்டு சேர்த்த பணம்! ப..ப்ப..ப்ப.. பாவம்!"

"அம்மாகிட்ட சொல்லிட்டியா?"

"அம்மாவா?!!" என்றபோது முகத்தில் ஏற்பட்ட ஏகப்பட்ட அதிர்ச்சியை உடனே மறைத்து,

"அம்மா ரொம்ப வைவாங்க! ப..ப்ப..ப்ப..பயமா இருக்குது!" என்றாள் மறைக்க முடியாத பயத்துடன்.

அந்த இளம் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியும் பயமும், பத்மாவுக்குப் பரிச்சயமானது!

அவளது முகமும் இதைத்தாண்டி வந்ததுதானே!

அம்மாவிடம் பெண் கொண்ட பயத்தை முழுதாய் உணர்ந்தவள் அன்றோ, அவள்! அம்மா! அம்மாவா அவள்? அம்மா என்று அழைக்க வேண்டும் என்று கட்டளையிட்ட சித்தி!

ஒரு பேனா வேண்டுமென்றாலும், அவளிடம் கேட்கப் பயந்த நாட்கள், இப்போது விதுபாலாவால் நினைவு படுத்தப்பட்டது!

விதுவின் பயத்தை சரியாய் படித்த அந்தப் புண்பட்ட உள்ளம், மெல்ல அவள் முடி கோதவும், அங்கே ஓர் அசாதாரண அமைதி நிலவியது!

அந்த மௌனம் பறைசாற்றிய உணர்ச்சிதான் என்ன? அன்பா? அக்கறையா? உன்னைப்போல் தான் நானும் என்ற தோழமை உணர்வா? துன்பம் போக்கும் அணைப்பா? - எதுவாய் இருந்தாலும், விதுபாலாவிற்கு பத்மாவிடம் ஓர் நெருக்கம் ஏற்பட்டது! மனதால்!

அந்த நேரம் பார்த்து, கதவு திறக்கும் ஒலி கேட்க, வராண்டாவில் அமர்ந்திருந்த மூன்று பெண்களும் ஓர் கலவரத்துடன் அங்கே பார்த்திருந்தனர்.



வந்தவனின் முகம் வெளிப்பட்டதும், வீட்டுப் பெண்கள் இருவருக்கும் முகத்தில் நிம்மதி படர்ந்து விட, விதுபாலா மட்டும் அதே கலவரத்துடன் இருந்தாள்.

"யாரோ? எவரோ? இந்த வீட்டு ஆளாய் இருந்து, ஊர் பேர் தெரியாத இந்தப் பெண்ணை எதற்கு உள்ளே விட்டீர்கள் என்று அலட்சியப்படுத்தி விட்டால்?" என்று பாலா பயந்து கொண்டிருக்கும்போதே, ஒரு புல்லட் - ராயல் என்ஃபீல்ட் உள்ளே வந்தது!

இப்படியொரு வாகனத்தை, பாலா சினிமாக்களில் தான் கண்டிருக்கிறாள்!

வெளிநாட்டு வீதிகளில், கதாநாயகன் இதிலேறி, உல்லாசமாய் வளம் வருவான்! கதாநாயகி, அதன் பின்புறத்தில், நின்று கொண்டே நடமாடுவாள்!

இப்போது உள்ளே வந்தவனும், கதாநாயகன் போல் தான் இருந்தான்!

அடர்ந்த சிகை, மிடுக்கான உடற்கட்டு, உயர்ரக ஆடைகள், கூலிங்கிளாஸ், பாலாவின் ஒரு மாத வாடகையின் அளவில் ஷூ, அவளது இரண்டு மாத வாடகையில் கைகடிகாரம் - ஹப்பா! இவனைக் கடத்தினால் ஒரு லட்சம் வரை தேறும் போலவே!

தன் எண்ணம் போகும் போக்கை எண்ணி, விதுபாலாவிற்குச் சிரிப்பு வந்தது! பணத்தைத் தொலைத்த வேதனையில், கண்ட குறுக்கு வழியெல்லாம் யோசிக்கத் தோன்றுகிறது! சை!

பிறர் அறியாமல், நெற்றியில் லேசாய் தட்டிக் கொண்டு அவள் நிமிரும்போது,

"நீ என்னம்மா படிச்சிருக்கே?" என வினவினார் ரமணிம்மா.

அவள் பதில் சொல்வதற்குள், பத்மா "பி.இ.! பி.இ... கம்ப்யூட்டர் சயின்ஸ்! கரெக்ட்டா விது?" எனவும்,

"ஆம்!" என்பதுபோல் தலையாட்டுவது மட்டுமே விதுபாலாவின் வேலையாகிப் போனது.

"அப்போ நல்லதாப் போச்சு!" என்றவர்,

"பாலா!" என்றார் சத்தமாக.

விதுபாலாவும் திரும்பிப் பார்க்க,

கொய்யா மரத்துக்குள் ஏதோ குடைந்து கொண்டிருந்த பாலமுருகனும் திரும்பிப் பார்க்க, இருவருமே "என்னம்மா?" என்றனர் ஒரே சமயத்தில்.



# 4

ஒரு நிமிடம், அனைவருமே திகைத்து விழித்தனர்!

"ஹோ! உன்னையும் பாலான்னுதான் கூப்பிடுவாங்களா?" என்ற ரமணிம்மா,

"என் பையனையும் அப்படித்தான் கூப்பிடுவோம்! பாலா - பாலமுருகன்!" என்றார் திகைப்பு நிரம்பிய சிரிப்புடன்.

கூடவே,

பத்மாவும் ரமணிம்மாவும் கண்ணாலேயே ஏதோ பேசியது போலிருந்தது விதுபாலாவிற்கு.

ஆனால், அது பொய்யோ என்பதுபோல், சட்டென இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டிருந்தனர் இருவரும்.

பாலா என்றழைக்கப்படும் பாலமுருகன், தோட்டத்திலிருந்து வீட்டு முற்றத்திற்கு வருவதற்குள், விதுபாலாவின் மூளை வேகமாய் வேலை செய்தது.



"உ...உ...உங்... உங்க...ளுக்கு மூணு பசங்களா, ஆன்ட்டி?" என அவள் வினவ,

"இல்லையே? ஏன் கேட்கிறே?" என்று வியந்தார் அவர்.

"இல்... இல்... இல்ல. உங்களை ரமணிம்மான்னு கூப்பிடுறாங்க இல்ல! ஒ...ஒஒரு பொண்ணு பத்மாக்கா... அது அ... அஅஅவருபாலா!

அதான்...ர...ர..மணின்னு இன்னொரு பையனோ பொண்ணோ..." - பாலா முடிக்கவில்லை.

அங்கே சிரிப்பலை மிகுந்து பரவியது! பெண்களின் மென்சிரிப்புடன், ஆண்மைச் சிரிப்பு ஒன்றும் கலக்க, கலக்கத்துடன் கண் நிமிர்த்திப் பார்த்தாள் விதுபாலா.

அந்தப் புதியவன்... அவளையே கூர்ந்து பார்த்தான்! சிறு குழந்தையின் குறும்பை ரசிக்கும் பாணியில், அவன் முகத்தில் விஷமம் பரவியிருக்க, அவளையும் அறியாமல் பாலாவின் தலை கவிழ்ந்தது!

"எ...எ...ஏ... ஏன் சிரிக்கிறீங்க?" என்று பாலா பரிதாபமாய் கேட்கவும்,

"முதல்ல, நா அவங்க பொண்ணு இல்ல! மருமக!" என்ற பத்மா, பாலாவின் முகத்தில் ஒன்றும் ஒன்றும் இரண்டு என்ற கணக்கு பரவுவதைக் கண்டு,

"வெயிட்! வெயிட்! நீயே எதுவும் கற்பனை பண்ணிடாத. நானே சொல்லிடுறேன்!" என அவளது விபரீதக் கற்பனைக்குத் தடை விதித்துவிட்டு, மேலே பேசினாள்.

"இவரு... ரமணிம்மாவோட இரண்டாவது பிள்ளை. நான் இவங்களோட மூத்த மருமக! சரியா? ரமணிம்மாவுக்கு ரெண்டு பிள்ளைங்க மட்டும் தான். மூணாவது பொண்ணு வேணும் ரொம்ப ட்ரை பண்ணி இருக்காங்க... ஆனா கடவுள் நோ சொல்லிட்டார்... சோ, மருமகளை

மகளா பார்த்துக்கிறாங்க! முதல் மருமக மூணாவது மக! ரெண்டாவது மருமக நாலாவது மக!'' என்றாள் தேர்ந்த கணக்கு ஆசிரியை போல். பிறந்த வீட்டில் கிடைக்காத பாசம், புகுந்த வீட்டில் கிடைத்தமையால், ''அத்தை'' என்ற அழைப்பை விடுத்து, கணவனையும் கொழுந் தனையும் போல் ''ரமணிம்மா'' என்றே மாமியாரை அழைக்கத் தொடங்கி இருந்தாள் பத்மா.

''ஷப்பா! பாவம் அவங்க! ஏண்ணி இப்படிக் குழப்பு றீங்க?'' என்று சிரித்த பாலமுருகன்,

''ஒரு கப் காபி தாங்க, மிசஸ். ரமணி!'' என்றான் தாயிடம்.

''அ.. அ... அ... அப்போ ரமணி யாரு?'' என்று பாலா இப்போதும் குழம்ப,

''இவங்கதான்!'' என்று பத்மாவும்,

''இவங்க இல்ல. எங்கப்பாதான்!'' என்று பாலமுரு கனும் பதில் சொல்ல, நிஜமாகவே தலையைப் பிடித்துக் கொண்டாள் பாலா.

''ரிலாக்ஸ்! ரெண்டு பேர் சொல்றதும் கரெக்ட்தான்!'' என்று அவளைத் தன் பங்கிற்கு ஒரு குழப்பு குழப்பிய ரமணிம்மா,

''என் பேரு... விமலாரமணி! அவங்க அப்பா பேரு... ரமணிதரன்!'' என்றார் விளக்கமாக.

''ஹப்பாடா! ஒரு பேர்ல எத்தனை குழப்பம்!?'' என்று மனதினுள் எண்ணிய விதுபாலா, ஆசுவாசப் பெருமூச்சு விடவும்,

அங்கு மீண்டும் ஓர் சிரிப்பலை எழுந்து அடங்க,

''ரமணி... காபிதாங்க!'' என்று அதட்டினான் பாலா.



''இருடா. ஒரு முக்கியமான விஷயம்! இந்தப் பொண் ணும் பி.இ. தான் படிச்சிருக்கு. உங்க கம்பெனில வேலை வாங்கிக் கொடுடா!'' என்றார் மகனிடம்.

''வேலையா? என்னமோ கத்திரிக்காய்... வாழக்காய் வாங்குற மாதிரி பேசுறீங்க? யாருக்கு வேலை? யாரு இவங்க?'' என்றான் அவன், சூடாக.

அவனது அந்த வாக்கியத்திலேயே, விதுபாலாவின் தன்னிரக்கம் தன்மயமாய் உருமாறி,

''ந...நா...நா..விதுபாலா. பி.இ. படிச்சிருக்கேன்... இன்... இன்... இந்த வருஷம்தான்முடிச்சேன். நாதா எங்க காலேஜ்ல ஃபர்ஸ்ட்! ந...ந...ந...நெ... நெறைய இன் டர்வியூ அட்டெண்ட் பண்ணினேன்... ஆ..ஆ...ஆனா... திக்குறேன்னு வேலை தரலை...'' என்று அவளைப் பேச வைத்தது.

குறுக்கிடாமல் கேட்டிருந்தவன், ''இன்னமும் ஏனோ இருக்க மாதிரி இருக்கே? உங்களை எப்படி எங்க வீட்ல தெரியும்?'' என்று வினவியவன்,

விதுபாலாவின் திகைப்பு நிரம்பிய முகத்தில், குன்ற லின் சாயல் விழவும்,

''ஹோ!

எதிர்ல இருந்த டுபாக்கூர் கம்பெனில பணம் கொடுத்து ஏமாந்த பொண்ணு நீங்கதானா? ஆமா... சும்மா இந்த வீதியை ஒரு வாரமா நடந்தே தேய்ச்சா மட்டும் பணம் கிடைச்சிடுமா? இதென்ன... மேஜிக்கா? உருப்படியா எதுவும் செய்யாம உடம்பை வருத்தி, வெயில்ல நின்னா, சாமி வந்து வரம் கொடுப்பாரா என்ன? சாமி... எப்பவுமே சாமர்த்தியசாலிக்குதான் துணை இருப்பார்... ஏமாளிக்கு இல்ல!'' என்றான் சூடாக.

''ஷ்! என்ன பாலா இது? புதுசா பார்க்கிற ஒருத்தங்க கிட்ட இப்படித்தான் பேசுறதா?'' என்று பத்மா கடிந்து கொள்ள,

''கொஞ்சம்கூட காமன்சென்ஸ் இல்லாம, யாரோ ஒருத்தன் வேலை வாங்கித் தரேன்னு சொன்னா, அங்கே போய் காசை ஏமாந்துட்டு நிக்கிறவங்க யாரா இருந் தாலும் எனக்குக் கோபம்தான் வரும்! ஈமுகோழி... அதிக வட்டி... தங்கக்காசு... பினான்ஸ் கம்பெனி... எம்.எல். எம்.ன்னு எத்தனையோ வந்தாலும், இப்படித்தானே போய் ஏமாறுறாங்க!'' என்றவனுக்குப் பதிலாய்,

''ந...ந...நா... ஒ...ஒண்...ஒண்ணும் ட...ட...டக்குன்னு ஏமாறல... மத்த கம்பெனியோட அவங்க ப...ப... போட்டிருந்த அக்ரீமெண்ட் பார்த்தேன்...'' - கோபத்தில் அதிவேகமாகவே திக்கியது அவளுக்கு.

''பெரிய அக்ரீமெண்ட்! ஒரு போலி பேப்பர் தயா ரிக்க.. ஜஸ்ட் பத்து நிமிஷம் போதும்!'' என அலட்சிய மாய் கூறியவன்,

''இவங்ககிட்ட பணத்தைக் கொடுத்து ஏமாந்து நிக்கிறதைவிட, நேரடியா அந்தக் கம்பெனிலேயே வேலை தேடியிருக்கலாமே! சும்மா... மக் அடிச்சு... மார்க் வாங்கினா, அந்த மாதிரி பெரிய கம்பெனில எப்படி வேலை கிடைக் கும்?!'' என்றான் ஏளனம் அள்ளித் தெளிக்கப்பட்டக் குரலில்.

முதன் முதலாக பார்க்கும் ஒருவரிடம் அளவுக்கு அதிகமாக பேசுகிறோம் என்று அவனுக்குமே புரிய வில்லை! ஆனால், ''ஏமாற்று.'' என்ற வேலைக்கு இரு வர் தேவை... ஒருவர் ஏமாறுபவர்... ஒருவர் ஏமாற்றுபவர். ஏமாறுபவர் இருக்கும் வரை ஏமாற்றுபவன் உருவாகிக்



கொண்டேதான் இருப்பான்... புதுபுது உத்தியுடன்! ஆதலால், அவனுக்கு எப்போதுமே ஏமாறும் வர்க்கத்தின் மீது கோபம் உண்டு! அதற்கு வடிகாலாய் விதுபாலா உருமாறிப் போனாள்!

விதுபாலாவுக்கும் ஏனோ கோபமாய் வந்தது! தன் நிலையை அவனுக்கு எடுத்துக் காட்டி விடும் வேகத் துடன்,

''ந...ந...நாநா... என்ன பண்ணுவேன்? நல்ல கம் பெனி..எ...எ...எல்லாத்திலையும் டெஸ்ட் நல்லா பண்ணாலும் இன்டர்வியூ லவ...வவ.. வேணாம்ன்னு சொல்லிடுறாங்க.

எனக்கு,த் திக்குவாய்தான்... ஆனா... ஊஊஊம்... ஊமை இல்லையே.. கால் சரியா நடக்க வராதவங்களுக்கு வேலை கொடுக்கிறாங்க... எனக்கும்... மம... மட்டும்!

நீ வேணாம்... நீவே.... வேவே... வேணாம்ன்னு நா பேச ஆமர்பிச்ச ரெண்டாவது நிமிஷமே ப...ப.. போன்னு சொல்றாங்க... நாஎன்ன ப..பபபண்றது?'' - குமுறலும் கேவலுமாய் வெடித்து விட்டாள் விதுபாலா.

அதிகமாய் பேசியதும், கூடவே உணர்ச்சிப் பெருக்கு மாய், வாய் மிதமிஞ்சி திக்க, அதன் விளைவாய் ஒரு பக்கமாய் நரம்பு சுருண்டு இழுப்பது போல் வலித்தது!

பாலமுருகனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது! இந்தக் கதறல் அவனுக்குப் புதிது! கூடவே, பேசி முடித்ததும், அவள் இடது பக்கமாய் கன்னத்தைத் தேய்த்து விடவும், உள்ளம் உருகவே தொடங்கி விட்டது அவனுக்கு!

என்ன பதில் சொல்வது என்று புரியாமல், ''உங்க ளோட மார்க் ஷீட் காட்டுங்க!'' என்று அவளிடம் கை நீட்டினான்.

அவள் ஒன்றும் பொய் புகலவில்லை! உண்மைதான்! எழுபது சதவீதத்தையே நல்ல மதிப்பெண் என்று பீற்றிக் கொள்ளும் மாணவர்களுக்கு மத்தியில் தொண்ணூறு சதவீதத்தை அவள் பீற்றியதில் தப்பேதுமில்லை!

அவனது பார்வை, மதிப்பெண் பட்டியலின் முடிவிற்குப் பயணிக்கவும்,

''இ..இஇ...இது... நா பண்ண கோர்ஸ் டீடைல்ஸ்!'' என்று சில சான்றிதழ்களை நீட்டினாள், விதுபாலா.

''ஹ்ம்ம்'' என்ற சிறு ஆமோதிப்போடு வாங்கியவனின் கண்கள் விரிந்தன.

வருடக்கணக்காய் வேலை பார்த்தவர்களையே பதம் பார்க்கும் பல தேர்வுகளை எழுதி, அவற்றில் நல்ல நிலையில் தேர்ச்சியும் பெற்றிருந்தாள் அவள்.

இவளது குறைபாட்டை சுட்டிக்காட்டி, வேலை தராமல் இருப்பது என்றால் அபத்தமாகப்பட்டது!

ஒரு முடிவுக்கு வந்தவனாய், ''என்னோட ஈமெயில்-ஐடி தரேன்... உங்க ரெஸ்யூம் அனுப்பி வைங்க! எங்க கம்பெனில ரெஃபர் பண்றேன்!'' என்று வாக்குக் கொடுத்தவன்,

அவளது முகம் பிரகாசிக்கவும் ''ஆனா... ஒண்ணு!'' என்று பீடிகையுடன் நிறுத்தினான்.



# 5

விதுபாலாவை விடவும் பத்மாவும் ரமணிம்மாவும் ''என்ன? என்ன?'' என்று பறந்துவிட்டார்.



தாயின் புறம் ஓர் முறைப்பை உதிர்த்துவிட்டு ''எங்க கம்பெனி மத்த கம்பெனி மாதிரி கிடையாது. ஆட்டு மந்தை மாதிரி ஆள் எடுக்க மாட்டாங்க! ரொம்பவே எக்ஸ்ட்ரா - ஓர்டினரியா இருக்கணும்! எல்லா கம்பெனிலையும் மூணு லெவல் இன்டர்வியூன்னா, எங்கதில எட்டு ரவுண்டு இருக்கும். டெஸ்ட்டே நாலு ரவுண்டு வைப்பாங்க... என்ன புரியுதா? இதில, தேறி வந்திடுவோம்ன்னு தைரியம் இருந்தா... ரெஸ்யூம் அனுப்புங்க!'' என்றான் விட்டேறியாக.

ஒரு கணம் கூட யோசிக்காமல், ''உ...உஉ... உங்க ஈமெயில் ஐடி தாங்க'' என்றாள் விதுபாலா.

அங்கே அவள் மட்டும் உறுதியாய் இருக்கவில்லை! மற்றொரு ஜீவனும் அதே உறுதியுடன் இருந்தது! அந்த ஜீவன் - ரமணிம்மா!

அதை அவர் வெளிப்படுத்திய விதம் தான், அங்கிருந்த அனைவரையும் இறுக்கம் தளர்ந்து சிரிக்க வைத்தது!

அப்படி என்னதான் சொன்னார் என்றால், ''உனக்கே அந்தக் கம்பெனில வேலை கொடுத்திருக்காங்க. அதுவும் நாலு வருஷம் வெளிநாட்டுக்கு வேற அனுப்பி வச்சிருக்காங்க... அப்படியிருக்கும்போது விதுவுக்கு இல்லைன்னா சொல்லிடுவாங்க?! அதெல்லாம் கண்டிப்பா கிடைக்கும்! எனக்கு நம்பிக்கை இருக்கு!'' என்று அவர் கூறவும்,

பத்மா வாய்விட்டுச் சிரிக்க!

பாலா முறைக்க!

விதுவின் கருத்திருந்த கன்னங்கள் கூட, சிரிப்பில் சிவந்தன!

நாக்கைக் கடித்துக் கொண்டு, சிறு பிள்ளையாய் உள்ளே விரைந்தவாறே ''உனக்குக் காபி எடுத்திட்டு வரேன்டா, பாலா!'' என்றார்.

''பேசுறதைப் பேசிட்டு, ஐஸைப் பாரு ஐஸை!'' என்று முணுமுணுத்த பாலாவைக் கண்ட விதுபாலாவிற்கு, சிரிப்பும் மேலும் விரிந்தது.

கண்ணுக்குக் குளிர்ச்சியாய் இருந்த அச்சிரிப்பைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது, பால முருகனுக்கு.

சட்டென நெற்றியில் தட்டித் தன்னை ஒரு நிலைக்கு இட்டு வந்தவன், ''இதான் என்னோட ஈமெயில் ஐடி... நோட் பண்ணிக்கோங்க'' எனக் கூறி, ஓர் மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்தான்.

''ர...ர...ரர.. ரெ.. ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ்! க...க...க்க.. கண்டிப்பா நல்லா பண்ணுவேன்... இவளைப் போய் ரெஃபர் பண்ணோமேன்னு ந..நநி.. நி.. நினைக்க மாதிரி நடந்துக்க மாட்டேன். தேங்க்ஸ்!'' என்று மனதார நன்றி கூறியவள்,

''அ.. அஅ.. அக்கா! தேங்க்ஸ்க்கா! உங்களால தான்.. எனக்கு இந்த வவ... வாவாய்ப்புக் கிடைச்சிருக்கு. இதை நல்லபடியா யூஸ் பப...ப... பண்ணிப்பேன்! வரேன்க்கா!'' என்று பத்மாவின் கைப்பற்றி, தன் உண்மையான நன்றியைக் குரலில் கொண்டு வந்து நெகிழ்ந்தாள்.

கையில் காபியுடன் வந்த ரமணிம்மாவிடம் விடை பெற்றவள், காபி குடித்துவிட்டுப் போ எனக் கூறியவரிடம், ''வ...வவ... வேலை கிடைச்சதும், ஸ்வீட் வாங்கிட்டு வந்து, ஸ்பெஷல் க...கக...காபி சாப்பிடுறேன்'' எனக் கூறி, சிட்டாய் பறந்தவள், வாசலில் சுணங்கி நின்று, ''த்...த்த்... திரும்பவும் தேங்க்ஸ் பாலா சார்!'' என்றுவிட்டு மறந்தாள்.

அவள் தலை மறைந்ததும், ''ஏன் பாலா, இப்படிப் பேசுறே? எனக்கே அந்தப் பொண்ணைப் பார்த்த



பாவமா இருந்துச்சு!'' என்று ரமணிம்மா ஆதங்கப் படவும்.

''சும்மா இருங்கம்மா! பணத்தைப் பறிகொடுத்திட்டு வரவங்ககிட்ட, ''ஐயோ! ஏமாந்திட்டியா? பாவமே!''ன்னு பரிதாபப்படறதால என்ன புண்ணியம்? கொஞ்சம் ஹார்ஷா பேசினா தான், ஏமாத்தினவன் மட்டும் தப்பு பண்ணலை, ஏமாந்த நாமளும் தப்பு பண்ணியிருக்கோம். இனிமேல் ஏமாறக்கூடாதுன்னு புத்தி வரும்!'' என்றான் அவன் சூடாக.

கூடவே, கையிலிருந்த காபியை ஒரு வாய் குடித்தவன் ''ஹய்யோ! கடவுளே! ஏன்மா? எதுனாலும் பேசித் தீர்த்துக்க வேண்டியது தானே? எதுக்கு இப்படி என்னை ஹாஸ்பிடல்ல கொண்டு போய் விட முயற்சி பண்றீங்க?'' என்றான் முகத்தை அஷ்டகோணலாக வைத்துக் கொண்டு.

''உங்க மேல இருந்த கடுப்பில, நானா இருந்தா... சக்கரைக்குப் பதிலா உப்பைக் கொட்டி, காபி கலந்திருப்பேன்! ரமணிம்மா என் அளவுக்கு மோசமில்லை! என்ன கலந்தாங்க?'' என்றாள் பத்மா சிரிப்புடன்.

''ஆனாலும், உங்க ரெண்டு பேருக்கும் அந்தப் புது பொண்ணு மேல ஏகப்பட்ட லவ்வு!'' என்று சலித்துக் கொண்டவன்,

''உப்புமில்லை... சக்கரையுமில்லை... ஏதோ கூழ் மாதிரி இருக்கு! உவ்வே! உவ்வே!'' என்று நாக்கைத் துடைத்துக் கொண்டே, உள்ளே செல்ல,

மகன் கொடுத்த காபிக் கோப்பையை உற்றுப் பார்த்த விமலாரமணி, ''அய்யயோ! துளசிக்குக் கோலம் போடுற பச்சரிசி மாவை எடுத்துக் கலந்துட்டேன் போல!'' என்று தலையில் அடித்துக் கொண்டார், ரமணிம்மா.

''நல்லவேளை! இன்னும் ரெண்டு வாய் குடிச்சிருந்தா... தம்பி ரெண்டு நாளைக்கு பாத்ரூமை விட்டு வெளியவே வந்திருக்காது!'' என்று பத்மா அடக்கமாட்டாமல் சிரிக்க,

மாடிப் படி ஏறிக் கொண்டிருந்த பாலா, தடதடவென கீழே இறங்கி வந்தான். வந்த அதே வேகத்தில், தாயின் காலில் நீள விழுந்தவன் ''தாய்க்குலமே! எங்கம்மா சமையல் மாதிரி வராதுன்னு சொல்லி, இந்த வாரம் என்னோட ரெண்டு பிரண்ட்சை லஞ்ச்சுக்கு வரச் சொல்லி யிருக்கேன். அப்போ மட்டும் நீங்க சமைச்சீடாதீங்க! நா... சரவணபவன்ல வாங்கிட்டு வந்து, எங்கம்மா பண்ண துன்னு லேபிள் ஒட்டி வச்சுக்கிறேன். தெய்வமே! வேணாம்! அவனுங்க எல்லாம்... அவனுங்க வீட்டுக்கு ஒரே புள்ள.. நாம ஏன் அவங்க வாழ்க்கையைப் பந் தாடணும்!?!'' என்றான் சிரியாமல். பத்மா, வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க, ரமணிம்மாவின் நிலையோ அந்தோப் பரிதாபமாய் இருந்தது!

கூம்பிய முகத்துடன் ''ஏதோ தெரியாம போட்டுட் டேன்டா பாலா! அதுக்குப் போய்... என்னடா நீ?! டேய்... டேய்... நா நல்லா சமைப்பேன்டா! ப்ளீஸ்டா... ஹோட்டல்ல எல்லாம் வாங்கதடா! போன வாரம் கூட, செல்வாவோட பிரண்ட்ஸ் வந்தாங்களே... சிக்கன் பிரியாணி பண்ணியிருந்தேனே! சூப்பர்ரா இருக்கு ஆன்ட்டின்னு சொன்னாங்கடா! ஏய் ப்ளீஸ்டா!'' என்று கெஞ்சினார் தாயார்.

இப்போது, பத்மாவுடன் சேர்த்து பாலாவும் சிரித்தான்! பலமாக!

ரமணிம்மாவின் உலகமே சமையற்கட்டுத் தான்! அவரது சமையலைக் குறை சொல்லி விட்டால், மூன்று நாட்களுக்கு மூக்கால் அழுது விடுவார்! அதுவே,



பாராட்டிவிட்டால் போதும்... நோபெல் பரிசு வாங்கியவர் போல் ஓர் பிரகாசத்துடனே வலம் வருவார்!

பெரியவன், செல்வகணேஷ் தாயின் சமையல் அந் தோப் பரிதாபமாய் இருந்தாலும் ''சூப்பர்மா!'', ''செமையா இருக்கும்மா சிக்கன்!'', ''வெளுத்து வாங்கிட்ட போ!'' என்று பாராட்டிக் கொண்டே இருப்பான்.

ஆனால், சின்னவன் பாலா!? உணவு நன்றாக இல்லை யென்றாலும் ஒன்றும் சொல்லாமல் உண்பவன், அண் ணன்காரன் அதைப் பாராட்டிவிட்டால் ''சும்மா! பொய் சொல்லாதடா செல்வா! இது சூப்பராவா இருக்கு? பழைய மொளகாப் பொடியைத் தீர்த்துட்டு, புது மொளகாப் பொடி அரைக்கணும்ன்னுட்டு, இருக்கிற எல்லாத்தை யும் கொட்டி வச்சிருக்காங்க! மனுஷன்... ஒரு வாய் சோறு சாப்பிட்டா... ரெண்டு வாய் தண்ணி குடிக்க வேண்டி யிருக்கு! இவன் ஒருத்தன்!'' என்று உண்மையை மறை யாமல் சொல்லி விடுவான்.

''உண்மை சுட்டாலும், அடுத்து அந்தத் தவறு நேரா தல்லவா!'' என்ற எண்ணம் அவனுக்கு!

உணவு விஷயத்தில் மட்டுமல்ல! எல்லாவற்றிலும் அவன் அப்படித் தான்! பிடிக்கிறது என்றால் பிடிக்கிறது! பிடிக்கவில்லை என்றால் பிடிக்கவில்லை! மற்றவர் மனம் கோணும் என்பதற்காக, உண்மையைப் பூசி மொழு கும் பழக்கமற்றவன்! அதற்காக! முசுடும் இல்லை!

அவனைப் போல், தாயைக் கிண்டல் செய்பவனும் இல்லை! அதே போல... அதைவிடவும் மேலாய் தாயைச் சிரிக்க வைப்பவனும் இல்லை!

அந்தப் பழக்கத்தின் எதிரொலியாய், இப்போது முகம் வாடி நின்ற தாயின் தாடை தொட்டு, இடக் கன்னத்தில் நச்சென்று ஓர் முத்தம் வைத்தவன்,

''கடைசி ரேங்க் வாங்கின பையன்... அப்பாக்கிட்ட ரிப்போர்ட் கார்ட் நீட்டுற மாதிரியே நிப்பீங்களே?!'' என்று சிரித்துவிட்டு,

வலக்கன்னத்திலும் ஓர் முத்தம் வைத்தான்.

''ச்சு... விடுடா! உங்கப்பா வந்திடப் போறாங்க!''

''ஆமாமா! உன் பொண்டாட்டியை கிஸ் பண்றதுக்கான ஏகபோக உரிமை என் கையில இருக்கும்போது, நீ யாருடான்னு என்னை அடிக்க வந்திடப் போறார்!''

''ச்சீ! வெட்கம் கெட்டவன்!'' என்று தன் கழுத்தைக் கட்டிக் கொண்டிருந்த மகனின் கையை விளக்கியவரின் கன்னங்களில், இந்த வயதிலும் செம்மையின் மிச்ச சொச்சங்கள்!

''அய்யோ! அப்பாவி... ரமணி நீங்க!''

''டேய்... பேர் சொல்லாதடா!''

''எங்கம்மா பேரு... நான் சொல்லுவேன்! உங்களுக்கு என்ன?''

''என் புருஷன் பேரைச் சொல்லாதடா!''

''அடடா! இதென்ன வம்பு? நா எங்கம்மா பேரைச் சொல்றேன்... எங்கப்பா பேரைச் சொல்லலையே!''

''வேணாம்! அப்பா வந்தா... டென்ஷன் ஆகிடுவாங்க!''

''ஆமா, இல்லைன்னாப்பல உங்க வீட்டுக்காரர் அப்படியே பல்பொடி விளம்பரக்காரர் மாதிரி சிரிச்சிட்டே இருப்பாராக்கும்! வரட்டும்... எங்க அவரு? வேர் இஸ் யுவர்... வீட்டுக்காரர்?''

அந்த நேரம் பார்த்து, வாசற்கதவு திறக்கவும் ''அய்யோ! ரமணிப்பா!'' என்று பத்மா அலற,



''அய்யயோ! நா எஸ்கேப்!'' என்று காற்றை விடவும் வேகமாய் பறந்தே போனான், சின்னவன்.

ஒரே தாவலில் நான்கு படிகளைக் கடந்தவன், ''சித்தாள் சார்... வந்ததும் வராததுமா இவன் ஏன் இன்னைக்கு சீக்கிரம் வந்திருக்கான்? கொடுக்கிற சம்பளத்துக்கு ஒழுங்கா வேலை பார்க்காம எதுக்கு வந்தான்? இப்படி ஒரொருத்தனும் வந்தா.. கம்பெனி என்னாகும் - அப்படி இப்படின்னு எங்க எம்.டி.க்குக் கடன் கொடுத்த பேங்க் மேனேஜர் கணக்கா பேசுவார்! சோ... ப்ளீஸ்! எனக்கே ஒரே தலைவலி... உங்க காபியால... அது வயித்து வலியா வேற மாறிப் போச்சு... தயவு செஞ்சு.. அவரை என் ரூம்க்கு முன்னாடி வந்து, கத்தச் சொல்லாதீங்க!'' என்றான் தாயிடம்.

அவன் வாக்கியத்தை முடிப்பதற்கும், ''பாலா வந்துட்டானா? ஏன் இவ்வளவு சீக்கிரம்?'' என்ற கேள்வியுடன் ரமணிதரன் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

கண்ணை உருட்டிவிட்டு, விருட்டென தன் அறைக்குள் சென்று மறைந்தான் மைந்தன்.

சுருக்கமாய் சொல்லப்போனால் - ரமணிதரன் ஒரு ஸ்ட்ரிக்ட் ஆபிசர்!

ரமணிம்மா தொடங்கி, செல்வா... பாலா... பத்மா என்று அவருக்கு பயப்படுவோரின் பட்டியல் நீளும்!

ரமணிம்மாவும் செல்வாவும், அவரது திட்டிற்குப் பயந்து பல செயல்களைச் செய்யாமலே இருந்தால், பாலா இருக்கிறானே!?

செய்துவிட்டு, அவரது திட்டிலிருந்து எப்படித் தப்பிக்கலாம் என்ற திட்டத்திலேயே இருப்பான்!

இன்றைய செயலே ஒரு உதாரணம் தான்! செல்வாவாக இருந்தால், தலை வலித்தாலும் அப்பா கேள்வி

கேட்பாரே என்பதற்காக வீட்டிற்கு வராமலிருப்பான். ஆனால் பாலா! வந்துவிட்டான் அல்லவா?! இன்னும் இரண்டு நாட்களுக்கு... ரமணிதரன் இந்த விஷயத்தை மறக்கும் வரையிலும் கண்ணாம்பூச்சி தான்! அப்படியே மாட்டினாலும், "நல்ல கேள்வி, மிஸ்டர். ரமணி! அடுத்தக் கேள்வியைக் கேளும்!" என்ற ரீதியில், கண்டும் காணா மல் நடமாடுவான்.

என்றும் போல் இன்றும், ரமணிதரன், தன் போக்கில் மகனைத் திட்டிக் கொண்டே இருக்க, அவனோ காதில் ஒரு ஹெட்போனை மாட்டிக்கொண்டு, கதவை இறுக அடைத்துத் தூங்கியே போனான்!

மூன்று மணி நேர நிம்மதியான உறக்கத்திற்குப் பின்னர், கணினியை உயிர்ப்பித்து, அவனது அலுவலக மின்னஞ்சல் பெட்டியைத் திறந்தால், முதல் மின்னஞ்சல் - "விதுபாலா முத்துவேல்" என்ற பெயரைத் தாங்கி நின்றது!

ஒரு நிமிடம் யாரென்று குழம்பியவனின் முகத்தில், கொடேன புன்னகை!

நேரத்தைப் பார்த்தால், அவள் வீட்டிலிருந்து கிளம்பி, சுமார் பதினைந்து நிமிடங்களில் அனுப்பப் பட்டிருந்தது!

கணக்கிட்டுப் பார்த்ததில், அருகே இருக்கும் இணைய தள மையம் பத்து நிமிட நடையில் இருந்தது! வேகம் தான் என்று மெச்சிக் கொண்டான், பாலா!

மின்னஞ்சலைத் திறந்ததும், அவனது உதட்டிலிருந்த புன்னகை விரிந்த சிரிப்பாய் மாறிப் போனது!

மதிப்பிற்குரிய அய்யா ('Respected sir') என்று தொடங்கிய மின்னஞ்சலைக் கண்டவன், "ரொம்பப் பயந்து போய்ட்டா போல!" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.



சொல் மாறாதவனாய், விதுபாலாவின் தற்குறிப்பை (Resume) அவன் வேலை பார்க்கும் பன்னாட்டு நிறு வனத்தில், பதிவு செய்தான்.

ஏனோ, நெஞ்சம் விதுவிற்கு வேலை கிடைத்துவிட வேண்டும் என்று பிரார்த்தனை செய்தது!

அவளைப் பயமுறுத்துவதற்காக, பாலா அப்படிச் சொல்லவில்லை! உண்மையிலேயே, அப்பன்னாட்டு நிறுவனம் இருப்பதிலேயே உயர்ரக பணியாளர்களைத் தான் தேர்வு செய்யும்!

இந்தியாவிலேயே இரண்டாம் நிலை கல்லூரியில் எம்.பி.ஏ. படித்த அவனையே, பத்துக்கும் மேற்பட்டோர் சலித்த பின்னர் தான், வர்த்தக ஆலோசகராக நியமித்தனர்!

"இவளைப் பார்த்தால், படிப்ஸ் போல் தான் இருக் கிறது! ஆனாலும்..." என்று மனம் கிடந்து, தவித்தது!

"நான் ஜெயித்துக் காட்டுகிறேன்" என்று சவால் வேறு விட்டிருக்கிறாள்!

ஒருவேளை... ஒருவேளை... இந்த வேலை கிடைக்க வில்லை என்றால், மேலும் துவண்டு விடுவாளோ? இன்றே, கண்ணில் கண்ணீர் நர்த்தனமாடியது! பணத்தைத் தொலைத்தது ஒரு புறம் என்றால், இந்த வேலை கிடைக் காமல் மேலும் மேலும் நைந்து விடுவாளோ!? பாவம்! சும்மா இருக்க முடியாமல் உசுப்பேத்தி விட்டிருக்கக் கூடாதோ?! சின்னப் பெண்! மனம் உடைந்து விட்டால் என்ன செய்வது! லூசுடா பாலா நீ! - என்று எண்ணம் அவளையே சுற்றிச் சுற்றி வந்தது!

"கடவுளே, இந்த வேலை அவளுக்குக் கிடைக்கும்படி அவளது தகுதியை வளர்த்துவிடு!" என்று வேண்டினான் பாலா.

இதுதான் அவன்! எதையுமே குறுக்கு வழியில் அடைய முற்பட மாட்டான்! அவன் நினைத்தால், இந்த வேலை இல்லையென்றாலும் வேறொரு கம்பெனியில் அவளுக்கு வேலை வாங்கிக் கொடுக்க முடியும்! ஆனால், ''வேலை என்பது தகுதிக்கேற்ற சன்மானம்! அதை சிபாரிசில் பெறக்கூடாது!'' என உறுதியாய், இறுதியாய் நம்புபவன் அவன்!

விதுபாலாவை விடவும் பாலா, அடுத்த வார இறுதிக்காக வெகுவாகக் காத்திருக்க ஆரம்பித்தான்! ஏனென்றால், அன்றைய தினம் தான், விதுவின் நேர்முகத்தேர்வு!

பாலமுருகனின் பதட்டத்திற்கு சற்றும் குறைவில்லாமல், விதுபாலாவும் மந்திரித்து விட்டவள் போல் நடமாடிக் கொண்டிருந்தாள்.

எந்நேரமும், ஏதாவது புத்தகம் தான்!

அது போதாது என்று இணைய தளத்தில், அந்த நிறுவனம் என்ன மாதிரியான கேள்விகள் கேட்கக் கூடும் என்று ஆராய்ந்து, அதற்கான பதில்களைப் புரட்டினாள்.

எந்நேரமும், அதே சிந்தனை தான்!

ஊரிலிருந்து அழைத்த அபபாவிடம்கூட, ''அ... அ... அப்பா! எனக்கு ஒரு வாரம் ட்..ட..டைம் கொடுங்க. ஒரு நல்ல செய்தியோட ந...ந... நநானே கூப்பிடுறேன்...'' எனக் கூறி, அழைப்பை வைத்தாள். அவளுக்காக இல்லையென்றாலும் அவனுக்காக... தன் மகனை விடவும் அவள் மீது நம்பிக்கை வைத்த ரமணிம்மாவுக்காக... இந்த வேலையை வாங்கியே ஆகவேண்டும்! அந்த வெறி கொடுத்த நம்பிக்கையில், தொலைத்த பணத்தைக் கூட, இந்த வேலையின் மூலமாக மீட்டு விடலாம் என்ற துணிவு உண்டானது!



அதற்காக, விதுபாலா அந்த மோசடி நிறுவனத்தைக் கண்காணிப்பதையும் நிறுத்தவில்லை!

எப்போதும்போல், அந்தத் தெருவே கதியென்று கிடந்தாள்! ஆனால், இப்போது புத்தகத்தில் ஐந்து நிமிடம் பார்வை பதிந்தால், அடுத்த இரண்டு நிமிடம் நிறுவனத்தை நோட்டம் விட்டாள்!

ஆனால், இன்றைய தினம் பத்மாவோ ரமணிம்மாவோ அவளை வந்து பார்க்கவுமில்லை! வீட்டினுள் அழைக்கவுமில்லை!

தனது யூகமாய், ''ரமணிப்பா'' வீட்டினுள் இருப்பதாய் எடுத்துக் கொண்டாள், விது! அதனால், அவளுக்கு எந்தவிதமான வருத்தமோ கோபமோ ஏற்படவில்லை! மாறாக, தனக்கு நல்ல வழியைக் காட்டிக் கொடுத்ததற்காக, அந்தக் குடும்பத்தின் மீது ஓர் மரியாதை தான் உண்டானது!

அவளது மரியாதையை மேலும் கூட்டவென, அடுத்த நாளே பாலமுருகன் வேலை செய்யும் நிறுவனத்திலிருந்து, நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு வந்திருந்தது!

அதைக் கண்டு அவள் களித்திருந்த அதே வேளையில், பாலமுருகனின் வீட்டில் பாலா அவனது தந்தை உணவுண்ணும் நேரத்தில் அங்கே பிரவேசித்தான்.

அவனது அப்பிரவேசம், குடும்பத்தில் அனைவருக்குமே அதிசயமூட்டியது! ரமணிதரன் உட்பட!

ஏனென்றால், ரமணிதரனிடம் பாடம் கேட்கும்படி ஏதாவது செய்திருந்தால், இரண்டு நாட்களுக்கு சார் பின்வாசல் என்ட்ரி / எக்ஸிட் தான்! அப்படியிருக்கும் போது, நேருக்கு நேராய்! ஹ்ம்ம்!

வாயைப் பிளந்து கொண்டு, அனைவரும் பார்த்திருக்க,

''அப்பா...'' சோழவந்தான்ல ஏதோ இடம் விலைக்கு வரதா சொன்னீங்களே? எப்படிப்பா அது? விசாரிச்சீங்களா?'' என்று நேரடியாக விஷயத்திற்கு வந்தான் மகன்.

''இல்ல பாலா! ரெண்டு மூணு இடம் இருக்கிறதா குணசேகரன் போன்ல சொன்னான். நீங்க... சரின்னா போய் பார்ப்போம்!''

''ஹ்ம்ம்... என்னடா செல்வா சொல்றே? ஊர்ல நமக்குன்னு ஒரு இடம் இருக்கிறது நல்லது தானே?'' என்றான் பாலா, தமையனை நோக்கி.

''அங்க எதுக்குடா? சென்னை அவுட்டர்லேயே ஏதாவது பார்ப்போமே?''

''நமக்கு பூர்வீக வீடுன்னு ஒரு ஓட்டு வீடு தான் இருக்கு... அதுவும், சித்தப்பா இருக்கிற வீடு... அதைக் கேட்க முடியாது... கேட்டாலும் அசிங்கம்! அப்படியிருக்கும் போது, அங்க ஒரு இடம் வாங்கி... போனா வந்தா தங்கிக்கிற மாதிரி சின்னதா ஒரு வீடு கட்டிடலாம், செல்வா!''

''நாம எங்கடா அங்க போறோம்? சென்னை தானேடா எல்லாமே!''

''இல்லடா! நம்மளோட சொந்த ஊர்... சோழவந்தான்னு சும்மா பேர்ல மட்டும் தான்டா இருக்கும்... நம்மளுக்கு அப்புறம், ஜஸ்ட் ஒரு நினைப்புக்குக் கூட அடுத்த ஜெனரேஷனுக்கு ஞாபகம் வராது!'' என்றவன்,

தமையன் ஏதோ சொல்லவும், ''உன்னோட கல்யாணம் முடிஞ்சு பொங்கல் வைக்கப் போனப்போ, அந்த ஓட்டு வீட்டில ஒழுகி, நாம எல்லாரும் மதுரையில ரூம் எடுத்துத் தங்கினோமே? ஞாபகம் இருக்கா? உன்னோட நிலைமை... எனக்கும் என் பொண்டாட்டிக்கும் வர வேண்டாம் சாமி!'' என்று அவனைப் பார்த்து லேசாய் கண்ணடித்தான் பாலமுருகன்.



''அய்யோ! இவன் ஒருத்தன்...'' என்று செல்வகணேஷ் அசடு வழிய,

பத்மா தோசை எடுத்து வரும் சாக்கில், சிவந்த முகத்தைத் தோசைக் கரண்டியால் மறைத்துக் கொண்டு விரைய,

''வெட்கம் கெட்டவன்!'' என்று ரமணிம்மா முனங்க,

''ம்க்கும்!'' என்று கனைத்தார் ரமணிதரன்.

''சரி! சரி! நா முதல்ல போய்... அந்த இடத்தைப் பார்த்திட்டு வந்துடுறேன். அப்புறமா, ஏதாவது முடிவு பண்ணிக்கலாம்!''

''இல்லப்பா! நீங்களே முடிவு பண்ணிடுங்க! இவ்வளவு பெரிய மெட்ராஸ்ல, உங்க சொந்த உழைப்பால எவ்வளவு பெரிய இடம் வாங்கிப் போட்டிருக்கீங்க? அதே மாதிரி, இதையும் நீங்களே முடிச்சிடுங்க! ரேட் பேசிட்டு, எனக்கு போன் பண்ணுங்க... எப்படி பணம் அனுப்புறதுன்னு பேசிக்கலாம்'' என்றான் சின்னவன். அவன் சொல்வதும் உண்மை தான். முதலில் சின்னதாய் ஒரு இடம் வாங்கிய ரமணிதரன், அடுத்தடுத்து இருந்த இடங்கள் விலைக்கு வரவும், கையை ஊன்றி கர்ணம் பாய்ந்து எப்படியோ அவ்விடங்களையும் வாங்கி, பெரிய வீடும் பூந்தோட்டமுமாய் மாற்றினார்!

''என்னடா செல்வா? உனக்கு சரியா?'' என்று தந்தை, பெரியவனிடம் அபிப்ராயம் கேட்க, அவனோ தட்டிலிருந்த தோசையை விட, அதை வைத்த மனைவியிடம்

பார்வையைப் பதித்திருந்ததில், ''சரிப்பா... சரிப்பா'' என்று ஏகமாய் மண்டையாட்டி வைத்தான்.

''இப்ப நீங்க... கொஞ்சமா களி வைக்கவாடான்னு கேட்டா கூட, சரின்னு தான் சொல்லுவான் அவன்!'' என்று கிண்டலடித்த பாலா,

''உங்களுக்கு நாளைக்குக் காலையில ட்ரைன்ல டிக்கெட் இருக்கு! போட்டுறவா?'' என்றான்.

''ஹ்ம்ம். சரி!'' என்று ஆமோதித்த ரமணிதரன் உட்பட, யாரும் பாலாவை சந்தேகப்படவில்லை!

சந்தேகமா? ஏன் சந்தேகப்பட வேண்டும்?

ஏனென்றால், இடத்தைப் பற்றிய பேச்சு வார்த்தைக்கான மூல காரணி - விதுபாலா!



# 6

சில மணி நேரங்களுக்கு முன்னர்...

அன்றும், பாலமுருகனுக்கு வேலை சீக்கிரம் முடிந்து விட்டது. அலுவலகத்தில் கேள்வி கேட்போர் யாருமில்லாததால், தனது மடிகணினியை மடித்து வைத்துக் கொண்டு, வீட்டிற்குக் கிளம்பிய பாலாவின் கண்களில், தினம் கால்களை மடித்து வைத்து, வடித்து வைத்துப் பாவையாய் அமர்ந்திருந்த விதுபாலாவே நிலைத்திருந்தாள்!

''இன்றைய தினம் நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு அவளுக்குச் சென்றுவிடும்'' என்ற எண்ணத்துடனே, வீடிருக்கும் தெருவில் நுழைந்தால்,



அவனது எண்ணங்களின் நாயகியே, வீட்டின் எதிரே (மோசடி நிறுவன வாயிலில்) பிரவேசிக்கவும், நெஞ்சம் பரபரப்புற்றது!

அந்த நேரம், ரமணிதரனின் மதியத் தூக்க நேரம்! ஆதலால், தைரியமாக முன்வாசல் வழியாகவே வண்டியை விட்டவன், மரநிழலில் நின்று அவளைக் கவனித்தான்!

அவன் பார்த்தானே ஒழிய, அவள் பார்க்கவில்லை! மும்முரமாக, தண்ணீர் பாட்டிலிலிருந்த கடைசி சொட்டுத் தண்ணீரை நாக்கில் பிரவேசிக்க விட்டுக் கொண்டிருந்தாள்.

பாட்டிலை ஆட்டி ஆட்டி, துளி நீர் கூட மிச்சம் விடாமல் குடித்த போதும், தாகம் அடங்கவில்லை போலும்!

''ப்ச்...'' என்ற உதடு பிதுக்கலுடன், தலை நிமிர்த்தியவள், எதிர் வீட்டை ஓர் ஆசையுடன் பார்த்துவிட்டு ''ம்ஹூம்!'' என்று தனக்குத் தானே மறுத்துவிட்டு, மடியிலிருந்த புத்தகத்தின் மீது பார்வையைப் பதித்தாள்!

ஏனோ, பாவமாய் இருந்தது பாலமுருகனுக்கு!

யோசனையுடனே, வீட்டினுள் நுழைந்தால் ''ரமணிம்மா... நா போய் விதுகிட்ட பேசிட்டு வரட்டுமா?'' என்ற பத்மாவின் கெஞ்சல், காதில் விழுந்தது.

சில வினாடிகளில்,

''ப்ச், என்ன ரமணிம்மா!'' என்ற சலிப்பு, ரமணிம்மா மறுத்து விட்டதை எடுத்துக் காட்டியது.

ஆனால், அவரும் ''பாலா தான்... வேலைக்கு ஏற்பாடு பண்றேன்னு சொன்னான் இல்ல?! அப்புறம் ஏன் இந்தப் பொண்ணு... வேகாத வெயில்ல இங்க வந்து உட்கார்ந்திருக்கு!'' என்று அங்கலாய்க்க,

''ரமணிப்பா தான் தூங்குறாங்களே! ஓடிப் போய் பார்த்துட்டு, உடனே வந்துடுறேன்'' என மீண்டும் ஒரு முறை கெஞ்சினாள் பத்மா.

''ம்ஹூம்! அவரு எந்திருச்சா.. அவ்வளவு தான்! இன்னைக்கு முழுசுக்கும் நை... நைன்னு நொச்சுப் பண்ணிடுவார்! வேண்டாம்!'' - இப்போது ரமணிம்மாவின் குரலில் கண்டிப்பு தெரிந்தது!

இதுதான்! விதுபாலாவின் ஏக்கப் பார்வையும், அன்னை மற்றும் அண்ணியின் அங்கலாய்ப்பும் தான், பாலாவின் ''இடம்'' பற்றிய பேச்சு வார்த்தைக்கும், தந்தையைத் தற்காலிகமாக இடம் பெயர வைத்ததற்கும் காரணம்!

இனம் புரியாத நிம்மதி ஒன்று மனதில் குடியேற, மாடிப்படி பக்கம் திரும்பியவனிடம் ''டேய் பாலா! வாங்குற சம்பளத்துக்கு... ஒழுங்கா வேலை பார்க்கணும்...'' எனத் தொடங்கி, ரமணிதரன் கொடுக்கத் தொடங்கிய அட்வைஸ் கூட, பொருளாதாரம் பயிலும் மாணவனை வேதியல் வகுப்பில் அமர வைத்தது போல் செம தூக்கமாக வந்தது!

வேறு உலகத்தில் சஞ்சரிப்பவனாய், ஓர் புன்னகையுடனே தந்தையின் பேச்சுக்களைக் கேட்டிருந்த பாலமுருகன், லேசாய் தலையாட்டிவிட்டு மேலே செல்லவும், குடும்பத்தினர் அனைவரும் திகைத்துப் போயினர்!

அதிலும், ''அப்பாவோட வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாம போறான்? பேய் ஏதுவும் அடிச்சிருச்சா?!'' என்று வாய்விட்டே வியந்தான் செல்வா!

பாலா எதிர்பார்த்தது போல், அடுத்த நாள் அவன் வரும்போது, விதுபாலா அவனது வீட்டினுள் தான் இருந்தாள்! ஒரே வித்தியாசம், பவளமல்லி செடியின் கீழிருந்த பெஞ்சில் அமர்ந்து, நுணுக்கமாய் ஏதோ படித்துக் கொண்டிருந்தாள்.



முகத்தில் ஒன்றையும் காட்டிக் கொள்ளாமல் உள்ளே சென்றவன், ''என்னம்மா? அந்தப் பொண்ணு... இன்னைக்கும் வந்திருக்கா, போல? சனிக்கிழமை, இன்டர்வியூ... ப்ரிபேர் பண்ணலையா?'' என்று தாயிடம் கொக்கிப் போட்டாள்.

''ஆமாடா பாலா! நா கூட கேட்டேன்... இன்டர்வியூக்கு ஒழுங்கா ப்ரிபேர் பண்ணாம, இங்க என்னம்மா பண்றேன்னு! அதுக்கு என்ன சொன்னா தெரியுமா?''

''என்ன சொன்னா? பெரிய மர்ம நாவல் எழுத்தாளர் மாதிரி... கொக்கி போடுவீங்களே? சொல்லுங்க!''

''ச்சு! போடா...!'' என்று மகனின் தோளில் ஒரு தட்டு தட்டியவர்,

''இந்த வேலை கிடைச்சாலும், பணம் போனது போனது தானே ஆன்ட்டி! நா... இங்க வந்து உட்கார்ந்திருக்கிறதில நூத்தில ஒரு வாய்ப்பா அந்த பிராடுங்க மாட்டினாலும், கொஞ்ச பணமாவது கிடைக்கும்ல! அப்பா... கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பணம் ஆன்ட்டி... எப்படியாவது மீட்டுக் கொடுத்திடணும்... தொண்ணூறு சதவீதம் எனக்கு வேலை கிடைச்சிடும் ஆன்ட்டி! உங்க பையன் தான்... டெஸ்ட் க்ளியர் பண்ணிட்டா... கண்டிப்பா வேலை வாங்கித் தரேன்னு சொல்லியிருக்காங்களே... நா கண்டிப்பா க்ளியர் பண்ணிடுவேன்! மீதியிருக்க, பத்து சதவீதத்திற்காக தான் இங்க வந்து உட்கார்ந்திருக்கேன்னு சொல்லுதுடா!'' என்று விதுபாலாவின் உரையை வார்த்தை மாறாமல் உச்சரித்தார்.

''ஹ்ம்ம். சரி... சரி..'' என்றவன், முகத்தில் மெச்சுதலை மறைத்துக் கொண்டு மேலே ஏற முற்பட்டான்.

அப்போது பார்த்து, பத்மா கையில் ஏதோ பானத்துடன் வர ''என்ன அண்ணி அது? உங்க உடன்பிறப்புக்கு... பூஸ்ட்டா?'' என்றான் கண்ணடித்து.

''ஹுக்கும்! தண்ணியைத் தவிர ஒண்ணுமே சாப்பிட மாட்டேங்குது, அந்தப் பொண்ணு!'' என்று நொடித்தார், ரமணிம்மா.

''எப்படித் தான் அன்னைக்கு நம்ம வீட்டில சாப்பிட் டாளோ?'' என பத்மா அங்கலாய்க்க,

''அதைக் கேட்டா... அன்னைக்கு என்னோட சாப்பாடு கொட்டிப் போச்சு... நீங்க கொடுத்தீங்க! அது சரி! இப்போ எதுக்கு? உங்க ஆசைக்காக இந்த ஜூஸை வாங்கிக் குடிச்சிட்டேன்னு வைங்க... அப்புறம் நாளைக்கும் இந்த நேரத்துக்கு நாக்கு ஜூஸ் கேட்கும்! இது தேவையான்னு கேட்குது!'' என்று வருத்தம் கொண்டார் தாயார்.

அந்த ஒரு வாரம், விதுபாலா எந்தவிதமான தங்கு தடையுமின்றி வந்து போக, ரமணிதரன் சென்னை திரும்பவும் அவளது வருகை நின்று போனது!

''சரியான பயந்தாங்கோலிங்க! எல்லா நேரமும், ஏதா வது ஆகாத போகாத வேலையை இழுத்துக்கிட்டு நானே வர முடியுமா?'' என்று சலித்துக் கொண்ட (மனதினுள்) பாலா,

அடுத்த வாரம் முழுதும், தந்தையை இடத்தை முடிப் பதற்காக அனுப்பி வைத்தான். கூடவே, ஒரு குத்தகை தாரரைப் பார்த்து, வீடு கட்ட பேசிவிட்டும் வரச் சொன்னான்.

அவரது தலை மறைந்ததும், விதுபாலாவின் பிரவேசம் மீண்டும் நடந்தேறியது!



இந்தக் கூத்துகளுக்கு அப்பாற்பட்டு, விதுபாலாவின் தேர்வு நாளும் வந்து சேர்ந்தது!

அதற்கு முந்தைய தினம் மாலையில், பாலமுருகன் தனது நண்பன் சத்யாவின் கைப்பேசிக்கு அழைத்தான்.

''டேய் சத்யா! நாளைக்கு உனக்குத் தலைவலி!'' என்றான் எடுத்ததும்.

''ஏன் மச்சான், உனக்கு இந்த காண்டு? நல்லா தானேடா இருக்கேன்!''

''நாளைக்கு நீ நல்லா இல்ல...''

''டேய்! நாளைக்கு உன்னோட வேலையை நான் ஏதா வது பார்க்கணுமா? அப்படின்னா... உனக்குத் தான்டா தலைவலி வரணும்! எனக்கில்ல!''

''நா சரியா தான் சொல்றேன்... உனக்குத் தான் நாளைக்குத் தலைவலி! நீ ஆபீஸ்க்கு வராத! உன்னோட வேலையை நான் பார்த்துக்கிறேன்!''

''என்னடா... நீயா வந்து வலையில சிக்கிற? என்ன மேட்டர்?''

''என்னமோ மேட்டர்! நாளைக்கு நீ வேலைக்கு வந்தேன்னு வையேன்... வராத தலைவலியை நானே உண்டாக்கிடுவேன்!''

''சும்மா உதார் விடாதடா! என் தலைக்குள்ள புகுந்தா உண்டாக்குவே?! நான் வருவேன்... வந்து என்ன மேட்டர்ன்னு கண்டுபிடிப்பேன்!''

''நீ மட்டும் வந்தேன்னு வையேன்... உன்னோட ஈமெயில்ல இருந்து ''எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி டுச்சு, நாளைக்கு தாஜ் ஹோட்டல்ல முழு டீம்க்கும் ட்ரீட் தரேன்'' அப்படின்னு எல்லாருக்கும் ஈமெயில் அனுப்பிடு

வேண்டா... விநோதினிக்கும் சேர்த்து!'' என்று பாலா, மிரட்டலாய் அல்லாமல் நக்கலாய் முடிக்க,

"அப்பா சாமி! நல்லவனே! நா நாளைக்கு என்ன... அடுத்த வாரத்துக்கு ஆபீஸ் பக்கமே வரலைடாப்பா! நீ ஏதும் திருகுதாளம் பண்ணிடாத!'' என்றான் சத்யா, பரிதாபமாய்.

''நாளைக்கு மட்டும் தான் உனக்குத் தலைவலி வர ணும். அப்புறம் எல்லாம் வந்துச்சுன்னா... கல்யாணமே முடிஞ்சிடுச்சுன்னு ஈமெயில் அனுப்பிடுவேன்!'' என்று அடுத்த ஆப்பை அலுங்காமல் வைத்துவிட்டு, அழைப் பைத் துண்டித்தவன், ஓர் பரபரப்புடனே அலுவலகம் கிளம்பிச் சென்றான்.

அவன் சென்றபோது, நியமனத் தேர்வு ஆரம்பித்து விட்டிருந்தது. ஆரம்ப நிலையில் அவனுக்கு அங்கே வேலை இல்லை என்பதால், அங்கிருந்து மெல்ல நழுவி னான். ஓரக்கண்ணால், விதுபாலாவைப் பார்த்தவாறே!

ஏனோ, அவன் தேர்வு எழுதுவது போன்ற படபடப்பு அவனுக்கு!

இவனுக்குரிய இடத்திற்குச் சென்ற பின்னரும், வேலை ஓடுவேனா என்றது!?

என்னவாகிற்றோ? என்னவாகிற்றோ? என்று நெஞ்சம் பதைக்க, கஷ்டப்பட்டு அரை மணி நேரத்தைக் கடத்தி விட்டு, தேர்வு நடந்த இடத்திற்குச் சென்றான்.

அவன் எதிர்பார்த்தது போலவே, முதல் தேர்வு முடிந்து, முடிவும் வெளியாகி, வந்திருந்த நூறு பேரில் பாதிக்கும் மேலாக இடத்தைக் காலி செய்திருந்தனர்!

கண்களைச் சுழல விட்டால், விதுபாலா அமர்ந்திருந் தாள்! ''ஹப்பா'' என்று ஓர் ஆழ்ந்த நெடுமூச்சு வெளி யேறியது!



நெஞ்சினுள் நிம்மதி குடியேற, இருக்கைக்குச் சென்ற வன், மூன்று நிலை தேர்வுகளை முடியும் நேரத்தைக் கணக்கிட்டு, வெளியே வந்தான்!

அவனது எதிர்பார்ப்பைப் பொய்யாக்காமல், அனைத்துப் படிகளையும் கடந்து, விதுபாலா நேர்முகத் தேர்வு நிலைக்கு வந்திருந்தாள்!

அடுத்த மூன்று நிலைகள், தொழில் நுட்ப நேர்முகம்! அதில் பாலா செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதனால், கடைசி நிலை நேர்முகத் தேர்விற்குக் காத்திருந்தான்.

அவள் எப்படியும் வந்துவிடுவாள் என்ற நம்பிக்கை அவனுக்கு!

அதே போல், விதுபாலா வந்தாள்! கண்ணில் எதிர் பார்ப்புடன் தேர்வறைக்குள் நுழைந்தாள்!

கதவைத் தள்ளிக்கொண்டு வந்தவளின் பார்வை, அறைக்குள் அமர்ந்திருந்த நபர்களிடம் பாய, ஓர் ஏமாற்றம் ஓடி மறைந்தது அவளுள்!

''டெஸ்ட்டைக் க்ளியர் பண்ணிவிட்டால், வேலை நிச் சயம்!'' என்று உறுதி கொடுத்தானே? எங்கே அவன்? வந்தது முதல் அவனைப் பார்க்கவே இல்லையே? கடைசி நிலை தேர்வுக்காவது வருவான் என்று பார்த்தால்... ப்ச்... என்று சஞ்சலமடைந்த மனதை அடக்கிக் கொண்டு,

''கு... கு... குகுட் ஈவினிங் சார்!'' என்று விதுபாலா ஆரம்பிக்கும்போது,

பாலமுருகன் அறையினுள் பிரவேசித்தான், ஓர் ''எக்ஸ்யூஸ் மீ!''யுடன்.

மின்னலாய் ஓர் பார்வையை, விதுவிடம் விட்டுச் சென்றவனை, ஓர் வினாடிக்கும் மேலாய் இமைக்க மறந்து பார்த்திருந்தாள் விதுபாலா.

''வந்துவிட்டான்! வந்துவிட்டான்!'' என்ற எண்ணமே, அவளது மூளையை மழுங்கடித்து இருக்க, அதைக் கலைக்காமல்,

பாலமுருகனை நோக்கி, ''ஹே பாலா! இந்த முறை... ஃபைனல் இன்டர்வியூக்கு சத்யா தானே வரதா இருந்தது? சத்யா லீவ்வா?'' என்றார் அங்கு அமர்ந்திருந்த ஒருத்தர்.

''சத்யா இன்னைக்கு வரல, சிவா! தலைவலியாம்... இந்த இன்டர்வியூவை எங்க டிபார்ட்மெண்ட்ல இருந்து என்னை எடுக்கச் சொன்னான்... ஒரு கிளியன்ட் கால் இருந்தது... பட் இதுவும் முக்கியம் தானே. அதான் சீக்கிரமா முடிச்சிட்டு வந்தேன்... என்ன சீக்கிரமா முடிச்சும் கொஞ்சம் லேட் ஆகிடுச்சு! சாரி கய்ஸ்!'' என்றான் பால முருகன், இருக்கையில் அமர்ந்தவாறே. (அடேங்கப்பா! ஓவர் நடிப்பா இருக்கேடா சாமி!)

''தட்ஸ் ஓகே! இப்போதான்... பிரஸ்ட் காண்டிடேட் வராங்க!'' என்று சமாதானம் சொன்னவர்களைப் பார்க்கப் பார்க்க, பாலாமுருகனுக்கு ஏனோ சிரிப்பாய் வந்தது! பின்னே, விதுபாலா அறைக்குள் நுழைவதைப் பார்த்திருந்து விட்டல்லவா அவன் வந்ததே!

அதன் பின்னரே, நின்று கொண்டிருந்த விதுபாலாவிடம் பார்வை சென்றது அனைவருக்கும்!

''உட்காருங்க!'' எனக் கூறிய பாலாவின் பார்வை, விதுபாலாவின் கருவிழிகளை நேர்கோட்டில் சந்தித்து, ஏதோ சேதி படித்தது!

''என்னைத் தெரிந்தது போல் காட்டிக் கொள்ளாதே!'' என்ற எச்சரிக்கையை அவனது கண்ணிலிருந்து படித்தவள், தானும் கண்ணாலேயே ஆமோதித்தாள்.



''கேடி தான்!'' என்று மனதினுள் மெச்சிக் கொண்ட பாலாவின் வாய் மொழியாகவே, ''கில்லாடிதான்!'' என்று சொல்ல வைக்கும் வண்ணம், அந்த நேர்முகத் தேர்வை எதிர்கொண்டாள் விதுபாலா.

நிறுவனத்தைப் பற்றி ஆகட்டும், அவர்களது வாடிக்கையாளர்களைப் பற்றி ஆகட்டும், அவர்களது ஆண்டு வருமானத்தைப் பற்றி ஆகட்டும், கை தேர்ந்தவள் போல் அவள் பேசியதில், அனைவரின் கண்களிலும் மெச்சுதல் தெரிந்தது!

தொழில்நுட்ப வேலைக்கு வருவோரில், பலர் நிறுவனத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்குவதில்லை! தனது வேலைக்குத் தேவையானவற்றை மட்டுமே, அதுவும் மேலோட்டமாய் தான் பார்த்து வருவர்! ஆனால், இவள் வித்தியாசமாய் தென்பட்டாள்!

பதினைந்து நிமிட, நேர்காணலுக்குப் பின்னர் ''உங்களுடைய தேர்வு முடிவுகள், இன்னும் ஒரு வாரத்துக்குள் மின்னஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்'' என்ற நிறைவோடு, அவளை அனுப்பி வைத்தனர்.

பரீட்சார்த்தி வெளியே சென்றதும், அங்கிருந்த அனைவரும் கலந்து பேசி முடிவெடுப்பது வழக்கம்!

யாராவது ஆரம்பிக்கட்டும் என்று பாலா காத்திருக்க,

ஒருவர் ''நல்ல பிரில்லியண்ட் பெர்சன் தான் இல்லையா சிவா?!'' என்றார்.

''ஹ்ம்ம். எஸ்! வாஸ்ட் நாலெட்ஜ் இருக்கு...''

''ஆனா... கொஞ்சம் திக்குறாங்களே!''

''கிளியன்ட் கால் எடுக்கும்போது, பிரச்சனை வருமோன்னு யோசனையா இருக்கு!''

''கிளியன்ட் காலை விடுங்க... டீம்லேயே அவங்களால நல்லபடியா செட் ஆக முடியுமா?''

ஆளாளுக்கு ஒன்றொன்று பேச, அவர்களைச் சற்று நேரம் விவாதிக்க விட்ட பாலமுருகன் மெல்ல இடைப் புகுந்தான்.

''சிவா! ஸ்டாம்மர் பண்றது ஒரு சின்ன தடுமாற்றம் அவ்வளவுதான்... அதைப் போய், ஒரு தடைக்கல்லா பார்க்கிறது எனக்குச் சரியா படலை!''

அதற்குப் பதிலாய் ''நீங்களே யோசிச்சுப் பாருங்க, பாலா! ஆன்சைட் கால் எடுக்கும்போது, அவங்க திக்கினா நல்லாவா இருக்கும்?''

"இங்க இருக்க எல்லாருமே... மேடை பேச்சாளரா என்ன? நாமளும், பேச வேண்டிய விஷயத்தைக் கொஞ்சம் யோசிச்சு, நிறுத்தி நிதானமா தானே பேசுறோம்? அது மாதிரி எடுத்துக்கோங்க!''

ஒருவர் வாய் திறக்க எத்தனிக்கும் முன்னர் ''சில பேருக்கு... டெக்னிகல் நாலெட்ஜ் ஜாஸ்தி இருக்க சில பேருக்கு, சுத்தமா பேச்சுத் திறமையே இருக்காது! எங்க டீம்லேயே எடுத்துக்கோங்க... சுரேஷ் அப்படித்தான்! மாங்கு மாங்குன்னு வேலை செய்வான்... ஆனா... கிளியன்ட்டுக்கு ஸ்டேடஸ் சொல்லுடான்னு சொன்னா, கால் பண்ணவே அவ்வளவு யோசிப்பான்... அப்படியிருக்கும்போது, ஸ்டாமர்ரிங் அப்படிங்கற ஒரு சின்னப் பிரச்சனைக்காக, நீங்களே ப்ரில்லியண்ட்ன்னு ஒத்துக்கிட்ட ஒரு காண்டிடேட்டை விடணுமா?'' என முடித்தான், கேள்வியாய்.

அதற்குமேல், யாரும் மறுக்கவில்லை!

விதுபாலாவின் நியமன உத்தரவைத் தயாரிப்பதற்கான ஆணை, மனிதவள துறைக்கு அனுப்பப்பட்டது!



மாலை, வீடு திரும்பிய பாலமுருகனை ஆவலே உருவாய் பார்த்திருந்த ரமணிம்மாவிடம் ''என்ன பார்க்கிறீங்க? என் முகம்... பால் வடியும் பச்சப்புள்ள முகம் தான்... அதுக்காக... என்னையே பார்த்தா பசி தீர்ந்திடுமா என்ன? போங்க போங்க... ஏதாவது வேலை இருந்தா பாருங்க!'' என்றான் கையை சமையலறைப் பக்கம் காட்டி.

''இவன் பெரிய பச்சப்புள்ள! பேச்சைப் பாரு பேச்சை!'' என்று சலித்துக் கொண்டபோதும்,

''டேய் பாலா? விதுவுக்கு வேலை கிடைச்சிடுச்சா? சொல்லுடா ப்ளீஸ்!'' என்றார் ஆர்வத்தை அடக்க முடியாமல்.

"எனக்கென்ன தெரியும்? அந்தப் பொண்ணு... இன்டர்வ்யூக்கு வந்துச்சான்னு கூட எனக்குத் தெரியாது!''

''அடப்பாவி! டெஸ்ட் நல்லா பண்ணினா வேலை நிச்சயம்ன்னு அந்தப் பொண்ணுகிட்ட உறுதி கொடுத்தே?! இப்ப என்னமோ விட்டேத்தியாப் பேசுறே!''

"அது போன வாரம்! இது இந்த வாரம்! நா இன்னைக்கு வேலைக்கே போகலை... காலையில அம்பா ஸ்கைவாக்ல ஒரு படம்... மதியம் சத்தியத்தில ஒரு படம்... பார்த்திட்டு வீட்டுக்கு வந்துட்டேன்!''

"வேலைக்கே போகலையாடா?'' - என்று வாய் பிளந்து நின்ற ரமணிம்மாவின் தாடையில் லேசாய் தட்டி, அவரது உதடுகளை ஒன்றோடு ஒன்று ஒட்ட வைத்தவன்,

''ஆமா... மிஸஸ். ரமணி!'' என்றான் உல்லாசமாக.

''அப்ப... சாப்பாடை என்னடா பண்ணே?'' என்றார் ரமணிம்மா, மிக மிக அதிர்ச்சி அடைந்தவராக.

''உலகமே அழிஞ்சாலும் உங்களுக்கு நீங்க சமைச்ச இத்துப்போன சாப்பாடு தான் முக்கியம்!'' என்று மகன் சிரிக்க,

''இத்துப்போன சாப்பாடா? நல்லா இல்லைடா?'' - பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்ட வரின், கன்னத்தை மெல்லத் தட்டிவிட்டு, மேலே சென்று விட்டான் மைந்தன்.

''பெரிய கதாநாயகன்னு நினைப்பு!'' என்று வாய் விட்டே சலித்துக் கொண்ட, ரமணிம்மாவின் மனம் குளிர வென, ''தம்பியோட சாப்பாட்டு டப்பா காலியா தான்மா வந்திருக்கு! சும்மா... உங்களைக் கடுப்பேத்த சொல்லி யிருப்பாரு!'' என்றாள் மருமகள்.

அந்த நேரத்திற்கு நிம்மதியடைந்தாலும், விதுவுக்கு வேலை கிடைத்ததோ இல்லையோ என்று நெஞ்சம் படபடப்பதை அவரால் அறிய முடிந்தது!

அவர் மட்டுமல்ல, பத்மாவும் எப்படியாவது விஷயத்தை அவனிடம் வாங்கி விடலாம் என்று முயன்று தான் பார்த் தாள்!

தலையால் தண்ணி குடித்தாலும், சொல்வேனா என் பவனிடம் என்ன பேசி என்ன புண்ணியம்?!

விதுபாலா என்றொருத்தி வந்தது போலவே அவன் நடந்து கொள்ளவில்லை!

அன்றைய தினம், தேர்வை முடித்துக் கொண்டு ஊருக் குச் செல்வதாய் சொல்லியிருந்தாள் விதுபாலா. அத னால் அவளிடமும் கேட்க முடியவில்லை அவர்களால்!

கைப்பேசியில் கேட்கலாம் என்றால், ரமணிம்மா குறித்து வைத்திருந்த எண்ணின் மீது எதையோ கிறுக்கி வைத் திருந்தான் மைந்தன்!

''சை... என்னம்மா நீ? போன்ல ஸ்டோர் பண்ணி வைக்க வேண்டியது தானே? எதுக்கு டைரில குறிக்கிற?'' என்று மருமகளிடம் சலித்துக்கொண்டே,



''புள்ளப்பூச்சியை மடில கட்டின மாதிரி என்ன பாடு படுத்தி வைக்கிறான்!'' என்று மகனை வைதும் தீர்த்தார்.

''நீயா சொல்லமாட்டே சரி... நாங்களா போன் பண் ணிக் கேட்டா என்னடா?'' என்று ரமணிம்மா கேட்டதற்கு,

''அப்படியென்ன? தலை போற விஷயமா? பொறுங்க! பொறுத்தார்... பூமி ஆழ்வார்!'' எனப் பதில் கூறிய பாலா வின் அலும்பைப் பொறுக்க முடியாமல்,

''வேணாம்! வெறியாகிடுவேன்!'' என்று ஒருவிரல் நீட்டி, மிரட்டும் அளவிற்கு வந்து விட்டிருந்தாள் பத்மா!

அதற்கும் சிரித்தானே ஒழிய, சொல்வேனா என்றான் அவன்.

பல்லைக் கடித்துக் கொண்டு இரண்டு நாள் பொறுத் தவர்கள், திங்கட்கிழமை காலையில் விதுபாலா அந்தத் தெருவுக்குள் அடியெடுத்து வைத்ததும், வீட்டிற்குள் இட்டு வந்தனர்.

''ஒரு போன் பண்ணி... இன்ன நிலவரம்ன்னு சொல் லிட்டுப் போயிருக்கலாம் இல்ல... நாங்க ரெண்டு நாளா பாடா பட்டுப் போனோம்!''

''அ...அ...அஅஅய்யோ! அப்படியாக்கா! பாலா சார் சொல்லி யிருப்பாருன்னு நினைச்சேன்க்கா! போன்ல ர...ர...ரெ ரெம்ப கம்மியா தான் ரூபா இருந்துச்சு... எஎஎ.. எ... எதுன்னா அர்ஜன்ட்ன்னா வேணும்ன்னு பண்ணலை... அப்புறம் ஊ... ஊ... ஊஊருக்குப் போனதும் மறந்துட் டேன்! ச...ச..சா.. சாரிக்கா!'' என வருத்தம் கொண்டவள்,

அன்று நடந்த விவரம் முழுதும் கூறினாள்!

''பாரேன்... இவனே இன்டர்வியூ பண்ணிட்டு... நம் மாட்ட என்ன பசப்பு பசப்பி இருக்கான்!'' என்று வியக்கத் தான் அவர்களால் முடிந்தது!

அனைவரது ஆர்வத்தையும் சோதித்துவிட்டு, ஒரு வாரம் கழித்து, விதுபாலாவின் நியமன உத்தரவு வந்து சேர்ந்தது! அடுத்த வாரமே, வேலையில் வந்து சேரும் படி!!

மிகமிக சந்தோஷமாய், இனிப்பு டப்பாவுடன் ரமணிம்மாவின் வீட்டுப்படி ஏறினாள், விதுபாலா! ரமணிதரன் இருக்கும்போதே!

லேசாய் திகைத்து நின்ற ரமணிம்மா சுதாரிக்கும் முன்னர், ''வா... விது!'' என்று அவளைக் கைப்பற்றி வீட்டினுள் அழைத்த பத்மா, ''மாமா... இவ என்னோட சொந்தக்காரப் பொண்ணு... இங்க நம்ம பாலா தம்பி ஆபீஸ்ல வேலை கிடைச்சிருக்கு. அதான்... ஸ்வீட் கொடுத்திட்டுப் பார்த்திட்டுப் போக வந்திருக்கா!'' என்று கோர்வையாகச் சொல்லி முடிந்தவளை,

''பரவாயில்ல! செல்வா அளவுக்கு மங்குனியா இல்லாம ஷார்ப்பா சமாளிச்சுட்டாங்க!'' என்று மெச்சிக் கொண்ட பாலாவிடம், இனிப்பை நீட்டியவள்,

''த... த... தேங்க்ஸ் பாலா சார்!'' என்றாள் உண்மையான நன்றியுடன்.

''எதுக்கு தேங்க்ஸ்? நானா உனக்கு வேலை வாங்கிக் கொடுத்தேன்? உன்னோட திறமையால வேலை கிடைச்சிருக்கு! அதை நல்லபடியா பண்ணுங்க! ஆல் தி பெஸ்ட்!'' என்று விட்டு நகர்ந்தான் அவன்.

தன்னால் தான் இந்த வேலை கிடைத்தது என்று அவளுக்குத் தெரிந்தால், ஏற்கனவே தாழ்வு மனப்பான்மையில் தவிப்பவளை மேலும் மேலும் தாழ்த்திவிடும் என்ற எண்ணம் அவனுக்கு!

ஆனால், அந்த எண்ணம் அவனுக்கு மட்டுமிருந்து என்ன புண்ணியம்!?





# 7

விதுபாலா, பாலமுருகனின் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்து இன்றுடன், முப்பது நாட்கள் நிறைவு பெற்றுவிட்டன!

பயிற்சி நாட்கள் என்பதால், அவளால் பாலாவைக் கண்ணால் கூடப் பார்க்க முடியவில்லை!

ஒருவாறாகப் பயிற்சி முடிந்து, தினசரி அலுவலகப் பணிகளுக்குள் நுழைந்தவளை, முதல் நாளே ஒரு ப்ராஜெக்ட்டில் நியமனம் செய்தனர்!

அவளுக்கு ஏகப்பட்ட சந்தோசம்!

ப்ராஜெக்ட் கிடைத்து விட்டால், அவளது திறமையை வெளிக்காட்டி, மேலே மேலே வளரலாம் என்று ஆகாசக் கோட்டை கட்டியவாறே, அவள் அந்த ப்ராஜெக்ட்டின் மேலாளரைப் போய் பார்த்தாள்.

''ஹ... ஹ... ஹஹலோ சார்!'' என அவள் அறிமுகப் படுத்திக் கொண்டதைக் காதிலேயே வாங்காமல்,

''ஹ்ம்ம். நீங்க தான் விதுபாலாவா?'' என்றான் அவன். குரலில் அப்படியோர் எரிச்சல்!

''ஆ..ஆ..ஆமா சார். இப்போ தா புதுசா ஜாயின் பண்ணியிருக்கேன்... ட்..ட்... ட்டரைனிங் முடிச்சிட்டு நேரா வந்திருக்கேன்.''

அவளைக் கையமர்த்திவிட்டு, ''புதுசோ! பழசோ! ஏதோ ஒண்ணு! பேசி என்னோட நேரத்தை வீண பண்ணாம...

அதோ அங்க இருக்காரில்ல... அவர்கிட்ட போய், ப்ரா ஜெக்ட் பத்தித் தெரிஞ்சுக்கோங்க!'' என்றவன், அதன் பின்னர் அவளை மதிக்கவே இல்லை.

கண்களைத் திருப்பி, மடிகணினியில் மூழ்கிவிட் டான்.

முகம் வாட அங்கிருந்து அவள் நகர்ந்தபோது ''நமக் குன்னு அனுப்புறானுங்க பாரு... திக்கு வாயும்... கோண மூக்குமா! சை!'' என்று அவன் சத்தமாகவே முணு முணுத்தது, அவளுக்குக் கேட்டது!

முகமும் மனமும் செத்துவிட்டது, விதுவிற்கு!

''ம்ஹூம்! சோர்ந்து போகக் கூடாது... ம்ஹூம்! ம்ஹூம்!'' என்று தனக்குத் தானே பல முறை சொல்லிக் கொண்டு, மேலாளர் கைகாட்டியவரிடம் சென்றாள் அவள்.

இவனோ மேலாளரே மேல் என்றாக்கினான்.

''ஹ... ஹ... ஹலோ...'' என அவள் ஆரம்பித்த வாக் கியத்தை முடிக்கவே விடவில்லை.

''விதுபாலா?'' என்றான் கேள்வியாய்.

தலையை வேகமாய் ஆட்டி, ''ஆ... ஆ... ஆமா...'' என அவள் மீண்டும் தொடங்க,

''அதோ... அது தான் உங்க சீட்! போய், சிஸ்டம் எல் லாம் செட் பண்ணி வச்சுக்கோங்க...''

''த...த... தாங்க்ஸ்! எ... எ... என்ன என்ன செட்...''

''அதுக்கு ஒரு டாக்குமென்ட் உங்க ஈமெயிலுக்கு அனுப்புறேன்... அதை வச்சு, செட் பண்ணிக்கோங்க!''

அவள் கூறிய ''சரி''யைக் கூட அவன் கண்டு கொள்ள வில்லை! முன்னவன், மடிகணினி என்றால் இவன் போனில் மூழ்கிப் போனான்.



அவன் சொன்னதைச் செய்துவிட்டு, இரண்டு மணி நேரத்தில் திரும்பவும் அவனிடத்திற்குச் சென்றபோது, ''முடிச்சிட்டீங்களா? சரி! ப்ராஜெக்ட் பத்தின டாக்கு மென்ட்ஸ் எல்லாம் ஒரு சைட்ல இருக்கு... அதோட லிங்க் அனுப்புறேன். படிங்க!'' என்றான், அவனாகவே.

அதைப் படித்தால், தலையும் புரியவில்லை... வாலும் புரியவில்லை.

எப்படிச் சொல்வது என்று புரியாமல், ஒரு மணி நேரம் தவித்தவள், அதற்கு மேல் தாமதிப்பது சரியில்லை என்பதால், மீண்டும் அவனிடம் (வாசு) சென்றாள்.

''என்ன?'' என்று ஒரு எரிச்சல் பார்வை பார்த்தவ னிடம்,

''ச... ச... சார்... அந்த ட...டட...டாக்குமென்ட்...'' என அவள் ஆரம்பிக்க,

''அப்பவே ஈமெயில் பண்ணிட்டேன்...''

''இ...இஇல்... இல்ல வந்துடுச்சு! ஆனா...''

''அப்புறம் என்ன?''

''அ...அ.. அது புரியல...''

''உங்களை யாரு அதைப் படிக்கச் சொன்னது? நா வந்து எக்ஸ்ப்ளெயின் பண்ணுவேன்ல! சை... கொஞ்ச நேரம் இருங்க... வரேன்!''

சிறிது நேரத்தில் வந்தவனும், வேக வேகமாய் ஏதோ ஒப்பித்தான்!

நடுநடுவே, விதுபாலா சந்தேகம் கேட்டதையெல் லாம் அவன் மதிக்கவே இல்லை!

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று முழுதாகக் கேட்காமலே, அவனது ஊகத்திற்கேற்ப பதில் சொல்லிக் கொண்டே போனான்.

விதுபாலாவிற்கு எப்போதுமே, தன்னைத் தாழ்த்திப் பேசுபவர்களை விடவும், தன்னை முழுதாய் பேச விடா தவர்களைப் பிடிக்காது!

என்னமோ, ''இதைத் தானே சொல்ல வருகிறாய்?! போதும்... நிறுத்து! எனக்குப் புரிந்து விட்டது!'' என்பது போலிருக்கும், அவர்களது செய்கை!

ஒருவாறாக, உளறிக் கொட்டி, கிளறி மூடிவிட்டு அவன் சென்று விட்டான்.

நெஞ்சம் நெருஞ்சியாய் நெருட, ''ஒரு நல்ல வேலையைக் கொடுத்த கடவுளே, அதை மன நிறைவுடன் செய்யும் நிம்மதியை எனக்குக் கொடு!'' என்று கை கூப்பி, கண் மூடி வேண்டியவள், கண்ணைத் திறந்தபோது,

வலது கையை ஆசீர்வதிப்பது வைத்துக் கொண்டு ''அபயமளித்தோம், பக்தாய்! என்ன வரம் வேண்டும்! கேள்! அருள்வோம்!'' என்று கடவுள் வசனம் பேசிக் கொண்டு நின்றவன், பாலமுருகன்.

விதுவிற்கு இனிய ஆச்சரியம்! அதுவும், இவ்வளவு இலகுவாக பேசிக் கொண்டு அவன் நின்றது, மிகப் பெரிய ஆச்சரியம்!

'ப...ப...ப... பாலா சார்! நீங்களா?'' என அவள் வாய் பிளக்க,

''யாமே!'' என்றான் அவன் அப்போதும், கையை ஆசீர்வாத நிலையிலிருந்து இறக்காமல்.

கலகலவென, வாய்விட்டு வெள்ளிச் சலங்கைகள் சிதறவிட்டாள் விதுபாலா.

தானும் சிரித்துவிட்டு ''இந்த ப்ராஜெக்ட்டா?'' என் றான் அவன், வாசுவைக் கைகாட்டி.



''அ..அ..ஆஆமா சார், இன்னைக்குத் தான் ட்ரைனிங் முடிச்சு வந்தேன்...''

''வெரி குட்! ட்ரைனிங் முடிச்சதுமே, ப்ராஜெக்ட்ல போட்டுட்டாங்களா! குட் ஜாப்!'' என்று பாராட்டினான் பாலா.

''த...த...தாங்க்ஸ் சார்...''

''இதென்ன சார்? பாலான்னு கூப்பிடு... நீங்க என்ன கவர்மெண்ட் ஆபீஸ்லேயா வேலை பார்க்கிறீங்க? ஐ.டி. கம்பெனி மா! இங்க சார்... மோர் எல்லாம் இல்ல... பேர் சொல்லு!''

''ச...ச...சரி...''

''ஓகே! வேலையைப் பாருங்க... நான் இதே விங் (பகுதி)ல அந்த ஓரத்தில உட்கார்ந்திருப்பேன்... அதோ அந்த பிரிண்டர் இருக்குப் பாரு... அதுக்கு ரெண்டு சீட் தள்ளி தான் என்னோட சீட். எதுனாலும், என்கிட்டே தயங்காம கேளு!'' என்றவன், ஓர் மென்னகையுடன் அங்கிருந்து நகர,

விதுபாலாவின் மனதிலிருந்த நெருடல், சஞ்சலம், வருத்தம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தே போயின! புதிதாய் ஓர் உற்சாகம் பிறக்க, புது தெம்புடன் வேலையைத் தொடங்கினாள்!

இது தினமும் தொடர்ந்தது!

அதுவரை அழுது வடியும் நாள், பாலா வந்து ''குட் மார்னிங்!'' சொன்னதும் வண்ணச் சோலையாய் உரு மாறியது!

அவளது ப்ராஜெக்ட்டில் இருந்த மக்கள், அவளைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கியிருந்தால், அந்த அழுது வடியும் தன்மையும் அவளுள் வந்திருக்காது!

ஆனால், அந்த மனப்பான்மை அவர்களிடம் இருக்க வில்லை!

விதுபாலாவை விடவும் வயதில் அனுபவத்திலும் மூத்திருந்த அனைவருமே, ''தான் முன்னேற வேண் டும்'' என்ற எண்ணத்தில் உழைத்தார்களே தவிர, புதி தாய் வந்த பெண்ணிற்கு எதையும் சொல்லிக் கொடுப் போம் என்று எண்ணவில்லை!

எங்கே சொல்லிக் கொடுத்தால், தங்களை விடவும் முன் னுக்கு வந்துவிடுவாளோ என்ற எண்ணமோ அல்லது அவள் பேச்சுக்காக திணறுவதைப் பார்த்து இளக்காரமோ, யாருமே அவளிடம் பேசவில்லை.

மீறி, அவளாகப் போய் பேசினாலும், அவளை முழு தாய் பேச விடுவதே இல்லை.

''இ...இ... இந்த டாகுமெண்ட்ல'' என்று அவள் ஒரு டாக்குமென்ட்டின் பெயரைக் குறிப்பிட்டு கேட்கும்போதே,

''அதானே! அதைப் பத்தி... எல்லாமே விரிவா தான் இருக்கும்... பாருங்க! அப்படியில்லைன்னா வாசுகிட்ட கேளுங்க!'' என்று அவர்களாகவே முடித்து விடுவார்கள்.

ஒரு வாரத்திற்குப் பொறுத்துப் பார்த்தவள், அதன் பின்னர் அவர்களிடம் போய் நிற்பதை நிறுத்திக் கொண் டாள்.

காலையில், அன்றைய தினத்தின் வேலைக்காக வாசுவிடம் செல்பவள், மாலையில் அதை முடித்துவிட்டு, அதைப் பற்றிய விவரங்களை மின்னஞ்சலில் அனுப்பி விட்டுக் கிளம்பி விடுவாள்.

நடுவே, உணவிற்குக் கூட அவர்களுடன் செல்வ தில்லை!

உடன் பணிபுரிவோருடன் சாப்பிடச் செல்ல அவ ளுக்கு ஆசை தான்!



ஆனால், ஒரு நாள் கூட அவர்கள் அவளை அழைத்த தில்லை! ஒருநாள், அவர்கள் அனைவரும் உணவு கூடத்திற்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது, ''ந...ந.. நாநா... நானும் சாப்பிட வரட்டுமா?'' என்று தானே போய்க் கேட்டாள் விது.

பதிலேதும் சொல்லாமல், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டவர்கள், தோளைக் குலுக்கி ''சரி...'' என்றனர் அரை மனதாய்.

அதுவே போதுமானதாய், அவர்களுடன் நடந்தாள் விதுபாலா.

பின்னர் தான், ஏன்டா வந்தோம் என்றாகி விட்டது அவளுக்கு!

அவர்களுக்குள் பேசிச் சிரித்துக் கொண்டே உணவு உண்டவர்கள், விதுபாலா என்றொருத்தி அங்கிருப்பது போலவே பாவிக்கவில்லை.

அவளாய் முயன்று, ஏதாவது பேச முயன்றாலும், அக்கருத்து வெறும் காற்றிற்கே சென்றது!

அனைவரும் ஆண்களாய் இருந்தது வேறு, விது பாலாவுக்கு மேலும் சங்கடத்தைக் கொடுக்க, அதற்குப் பிறகு உணவுண்ணவென அவர்களுடன் செல்லவே இல்லை.

அப்படியான தினம் ஒன்றில், விடுதியிலிருந்து எடுத்து வந்த லெமன் சாதத்தை, இருக்கையிலிருந்த படியே உண்டு கொண்டிருந்த விதுபாலாவை அதிர வைக்க வென,

''சீட்ல உட்கார்ந்து சாப்பிடக் கூடாதுன்னு தெரியாதா உனக்கு? ரெண்டு தெருவை அடைச்சு ஃபூட் கோர்ட் கட்டி வச்சிருக்காங்களே, எதுக்குன்னு நினைச்சே?

வேலை பார்க்கவா? அங்க தான்மா சாப்பிடணும்!'' என்ற அதட்டலுடன் அங்கே வந்தான் பாலமுருகன்.

''அ..அஅ...அது... வந்து... கூகூ... கூட சாப்பிட யாரும் இ..இஇல்ல.. அ..அஅஅதான்!'' - பயத்தில் வெகுவாக திணறியது விதுபாலாவுக்கு.

''ஹே. ஏன் டென்ஷன் ஆகுறே?!'' என்று உடனே, குரலைத் தாழ்த்தியவன்,

''ஏன்? உங்க டீம்மேட்ஸ் கூட போக வேண்டியது தானே?''

''அ...அஅ..அது.... அது.. அவங்க எல்லாம் ச...ச..சேர்ந்து போறாங்க... நா...நா... தனியா இருக்க மாதிரி இருக்கு...''

''ரெண்டு மூணு நாளைக்கு அப்படித் தான் இருக்கும். போகப் போக சரியாகிடும்! சும்மா போ!'' என்றவன்,

''நாளைக்கு, இங்க உட்கார்ந்து சாப்பிடக் கூடாது! சரியா?'' என்ற கட்டளையுடன், அங்கிருந்து நகர்ந்தான்.

மறுநாள், உணவு முடித்துவிட்டு தனது நண்பர்களுடன் வந்த பாலாவின் கண்களில், தனியே அமர்ந்து உணவுண்ணும் விது பட்டாள்.

''மச்சான்! போய்ட்டே இருங்கடா! இதோ வந்துடுறேன்!'' என்றுவிட்டு அவளிடம் விரைந்தவன்,

''ஹே! ஏன் தனியா உட்கார்ந்து சாப்பிடுறே?''

''நீ.. நீநீ... நீங்க தானே... சீட்ல உட்கார்ந்து ச..ச.. சச.. சாப்பிடக் கூடாதுன்னு சொன்னீங்க!''

''அது மட்டுமா சொன்னேன்? உன் டீம் கூட போன்னு சொன்னேன்ல?''

''அ.. அஅ.. அது... அவங்க... அவங்க... அவங்களுக்கு நா வரது பி...பிபி... பிடிக்கலை... நா வரேன்னு



சொன்னதும் வேற எங்கயோ ப...ப...ப... போறதா சொல்லிட்டாங்க. ஆ...ஆஆஆனா... இங்க தான் உட்கார்ந்திருக்காங்க!'' என்று நடந்ததை மறையாமல் சொல்லி விட்டாள் விதுபாலா.

ஏனோ, அவனிடம் சொன்னால் நல்ல தீர்வு ஒன்று கிடைக்கும் என்று மனதிற்குப் பட்டது!

''ஹோ!'' என்று ஒரே வார்த்தையில் உள்வாங்கியவன்,

''சரி! நாளையில இருந்து... என்னோட சாப்பிட வா! என் டீம்மும் வருவாங்க!'' என்றவன், அடுத்த நாள் மறக்காமல் அவளையும் கூட்டிச் சென்றான்.

பரஸ்பரம் அறிமுகப்படுத்தி வைத்தவன் ''இனிமேல்... விது நம்மளோட தான் லஞ்சுக்கு வருவாங்க, மக்களா! அதனால, என் இமேஜை டேமேஜ் பண்ணாம இருங்க!'' எனக் கூற,

பலத்த சிரிப்பலையின் பின்னே ''ஜி! இமேஜா? உங்களுக்கா? அது... ஏதாவது டாட்டூவா ஜி... எங்கயாவது போய் ஒட்ட வச்சிட்டு வந்தீங்களா?'' என ஒருவன் கேட்க,

''அஞ்சு ரூபா கொடுத்து டாட்டூவைப் போட்டியாடா? இல்ல ரெண்டு ரூபா தானா? இப்படி உடனே அழிஞ்சு போச்சே மச்சான்! அழிஞ்சு போச்சே!!' என மற்றொருவன் (சத்யா) சேர்த்து ஊத,

''டேய்! இது அழிஞ்சு போற டாட்டூ இல்லைடா... நிலைச்சு நிக்கிற ஆதி காலத்து பச்சைக் குத்து!'' என்று காலரைத் தூக்கிவிட்டு, சிரித்தான் பாலமுருகன்.

மனம் விட்டுச் சிரித்த விதுவிடம் ''அழகா சிரிக்கிறீங்க!'' என்று சான்றிதழ் கொடுத்து, நண்பி ஆகிக் கொண்டாள், பாலாவின் டீம்மில் வேலை செய்யும் ரேகா.

''த..த.. தாங்க்ஸ்!'' என்ற விதுவுக்கும், அவர்களது உற்சாகம் தொற்றிக் கொண்டது.

ஒருவரது உணவை ஒருவர் சுவைப்பதும், ஆளாளுக்குக் காலை வாரிக் கொள்வதும், பொறாமை இல்லாத கிண்டலும் அவளுக்குப் பிடித்தது!

விது கொண்டு வந்த புளிசாதத்தைக் கூட, சிறு முகச் சுளிப்பு கூட இல்லாமல் எடுத்துக் கொண்டனர் அனைவரும்.

''வெறும் சாதம் மட்டும் என்ன சத்து? காய் எதுவும் எடுத்திட்டு வரலையா?'' என்று பாலா வினவ,

''எ..எ.. எங்க ஹாஸ்டல்ல சாதம் தான் த...ததா.. தருவாங்க!'' என்று மென்று முழுங்கினாள விதுபாலா.

''இதோ... என்னோட காயை எடுத்துக்கோ விது!'' என்று ரேகா நீட்டவும்,

''நீ செய்ற கொடுமையை நீ சகிச்சுக்கலாம்... கல்யாணம் பண்ணிக்கிட்ட குறைக்கு பாஸ்கர் சகிச்சுக் கலாம்... விது என்னம்மா பாவம் பண்ணினா?'' என்று பாலாவும்,

''அவளைப் பார்த்தா பாவமா இல்ல... விட்டுடுமா! விட்டுடு!'' என்று சத்யாவும் கோரஸ் பாட,

''எப்ப பார்த்தாலும் என் சாப்பாட்டைக் கிண்டல் பண்றதே இவங்களுக்கு வேலை! இருங்க... இருங்க... பாஸ்கர்கிட்டக்கச் சொல்லித் தரேன்!''

''தோடா! பாஸ்கர்... பெரிய சென்னைப்பட்டின தாதா! பெரிய கோதா காம்பிக்கிறா!'' என்று அலட்சியப் பார்வை பார்த்து, ரேகாவிடம் ஸ்பூனால் இரண்டு அடி வாங்கினர் இருவரும்.



அதற்குள், ரேகாவின் தட்டிலிருந்து கொஞ்சம் கையை எடுத்து உண்டுவிட்டு ''ஸ்....ஸ்ஸ்... சூப்பர்ரா இருக்கு! கரெக்ட்டா வெந்து, சரியான உ...உ...உப்பு காரம் எல்லாம் இருக்கு! ஏன் கி..கிகி..கிண்டல் பண்றீங்க?'' என்றாள் விது, தன் புது தோழிக்கு ஆதரவாய்.

''ஆஹா! எலி சிக்கிடுச்சுடா!'' என்று பாலா ஆர்ப்பரிக்க,

விதுவின் முகத்தைத் தன் பக்கம் இழுத்து, அழுத்தமாய் ஓர் முத்தம் வைத்து ''சோ... ஸ்வீட்! இவங்க மூக்கை உடைச்சதுக்கு, ரொம்ப தேங்க்ஸ் விது!'' என்று ஆனந்தம் கொண்ட ரேகா என்னவோ, வினாடி நேரத்தில் உணவில் கவனம் செலுத்தி விட்டாள்.

எதிர்பாராமல் விழுந்த முத்தத்தில் திகைத்து, கண்கள் விரிய, முத்தமிட்டது பெண் என்றாலும், கொடுத்தது முத்தம் என்பதால் கன்னங்கள் சிவக்க, விழித்திருந்த விதுவாகட்டும்,

விதுவின் கருவிழி ரோஜாக்கள் தாமரையாய் மலர்ந்ததையும், மஞ்சள் நிறக் கன்னங்கள் செந்நிறப் பூச்சில் மிதந்ததையும், முத்துக்கு ஈடாய் நின்ற காதுகள் பல வண்ண ரோஜா தோட்டத்தினுள் புகுந்ததையும் கண்டிருந்த பாலாவாகட்டும்,

இயல்பு நிலைக்கு மீண்டு வர, வெகு நேரம் பிடித்தது!



# 8

நாட்கள் வேகமாய் நகர்வது போலிருந்தது, விதுவிற்கு!

நாள் முழுதும் காற்றோட்டமற்ற அறையில் அடைந்து கிடப்பது போலவும், மதிய உணவு வேளைகளில்

மட்டும் சுவாசிப்பது போலவும், அந்த நாளின் இனிமையை நிர்மாணிப்பது உணவு வேளையாகிப் போனது!

அது மட்டுமல்லாமல், அலுவலக உள் மின்னரட்டை வாயிலாக வரும் பாலாவின் "குட் மார்னிங்!", "லஞ்ச் போலாமா?", "கிளம்பலையா?", "நான் கிளம்பிட்டேன்! பை! பை! நாளைக்குப் பார்ப்போம்!" என்ற குறுஞ் செய்திகளுக்காகவே மின்னரட்டையை உயிர்ப்பித்து வைப்பாள், விதுபாலா.

அப்படித்தான் ஓர் நாள், "குட் மார்னிங், விது!" என்ற செய்தி, பாலாவின் பேரைத் தாங்கி, கணினியில் மேலெழும்பியது.

"குட் மார்னிங், சார்!"

"ம்ம்... நோ சார்!! கால் மீ பாலா!"

"ஹ்ம்ம்... சரி!"

"ஆமா... நம்ம ஆபீஸ்ல எதுவும் போட்டி நடக்குதா என்ன?"

"போட்டியா? எதுக்கு?"

"நான் தான் கேள்வி கேட்டதா ஞாபகம்!"

சிரிப்பது போல் ஒரு ஸ்மைலி (சிரிப்பைத் தாங்கிய ஓர் முகம் வடிவம்) போட்டாள் விதுபாலா.

"என்ன பதிலையே காணோம்?"

"எனக்குத் தெரியலையே! என்ன போட்டி... நீங்க தான் சொல்லுங்களேன்!"

"மொத்த ஆபீஸ்லேயே யாரு அதிகமா அழுது வடியுறான்னு பார்த்து, அவங்களுக்கு ஒரு எண்ணெய் பாட்டில் ஃப்ரீயா கொடுக்கிறாங்களாம்! அதான்... அதில கலந்துகிறியோன்னு கேட்டேன்!" - என அவன் நீளமாய் அடித்து முடிக்கவும்,



சோக முகம் ஒன்றை பதிலாய் அனுப்பியவள்,

"ரொம்ப அசிங்கமா இருக்கா?"

"ரொம்பபபபபபபபபபபபபப..." எனப் பதில் அனுப்பியவனுக்கு,

அழுகும் முகம் பதிலாய் போனது.

"அய்யே! இதுக்கெல்லாம் அசரலாமா?" என்றவன்,

உடனேயே "ஏன்? உங்க ஹாஸ்டல்ல எண்ணெய் பாட்டில் எல்லாம் வச்சுக்கக் கூடாதுன்னு சட்டம் போட்டாங்களா? என்ன பண்றதுன்னு தெரியாம, தலையில கவுத்திட்டு வந்துட்டியா?"

"சும்மா... கேலி பண்ணாதீங்கஜி! தலைக்குக் குளிக்கலாம்ன்னு நினைச்சு, எண்ணெய் வச்சேன்... ஆனா நேரமாகிடுச்சு... அதான்!"

"சரி... சரி! விடு!"

அடுத்த நாள் காலை பதினோரு மணிக்காய், "ஹே விது! ஒரு அஞ்சு நிமிஷம்... பான்ட்ரி (டீ-காபி இருக்குமிடம்) வந்துட்டுப் போயேன்" என்று செய்தி அனுப்பினான், பாலமுருகன்.

அவர்களது செட்டில் யாருக்கும் பிறந்தநாளாய் இருக்கும், அதற்கு ஏதாவது வாங்குவதற்கு அழைக்கிறான் என்றெண்ணிச் சென்றவள்,

தனக்கே, அவன் பரிசளிக்கக் காத்திருப்பதை அறியவில்லை.

கையில் காபிக் கோப்பையுடன் நின்றிருந்த பாலாவின் அருகே அவள் சென்ற அடுத்த வினாடி, "இந்தா... இதைப் பிடி. ஒரு சின்ன கிஃப்ட்! உனக்காக!" எனக் கூறி, ஒரு சின்னப் பெட்டியை நீட்டினான்.

''எ... எ... என...னக்கா?'' - மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது விதுவிற்கு.

''ஆமா... உனக்குத்தான்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு... லஞ்ச்ல பார்ப்போம்!'' என்றுவிட்டு நகர்ந்தவனிடம்,

''எ... எ... என... எதுக்கு கிஃப்ட்?'' என்றாள் விது, அவனை வார்த்தையால் தடுத்து.

''அதுவா? இன்னைக்கு ரமணிம்மாவுக்கு பர்த்டே... அதான்!'' எனக் கூறிவிட்டு, வேக எட்டுக்கள் வைத்தவன், சட்டென நின்று, வேகமாய் அவளிடம் ஓடி வந்தான்.

''உங்க ரமணிம்மாவுக்கு நீ ஸ்பெஷல்ங்கிறதால உனக்கு மட்டும் தான் கிஃப்ட்... சரியா? அதுவும், அவங்களுக்கு பப்ளிசிட்டி பிடிக்காது... அதனால, லஞ்ச் டைம்ல எதுவும் உளறி வைக்காத!'' என்றுவிட்டு ஓடியே போனான்.

ரோட்டில் பழக்கமான ஒருத்தியை நினைவில் வைத்து, அதுவும் பிறந்தநாள் அன்று நினைவு வைத்து, அதுவுமில்லாமல் அவர் பிறந்தநாளுக்கு இவளுக்குப் பரிசு கொடுத்து... ச்சே! எங்கேயோ போயிட்டீங்க ரமணிம்மா என்று உள்ளூரப் பூரித்தவளாய்,

பாலாவின் வீட்டு எண்ணிற்கு அழைப்பு விடுத்தாள்.

நல்லவேளையாக, ரமணிம்மாவே எடுத்தார்.

அவர் ''ஹலோ'' சொன்னதும்,

''ஹ... ஹஹ... ஹலோ, ரமணிம்மா! நா விது பேசுறேன்! ஹாப்பி ப...ப... பபர்த்டே!'' என்றாள் விது உற்சாகமாய்.

''பர்த்டேவா? எனக்கா? இன்னைக்கா?'' எனக் குழம்பியவர்,



''ச்...ச்ச்... சுசுசும்மா நடிக்காதீங்க, ரமணிம்மா! ப...ப... பபாலா சார்கிட்ட கிஃப்ட் எல்லாம் கொடுத்து விட்டிருக்கீங்க. அப்புறம் என்ன?'' என்றதோடு நிறுத்தியிருக்கலாம்!

''உ...உஉ... உங்களுக்கு பப்ளிசிட்டி பிடிக்காது தான்... அதுக்காக கிஃப்ட் கொடுத்த என்கிட்டே கூட ந.. நந... நடிக்கணுமா?'' என அவள் செல்லமாய் சிணுங்கவும்.

''கிஃப்ட்டா?'' என ஒரு நிமிடம் குழம்பியவர், உள்ளுக்குள் ஏதோ கணக்குப் போட்டவராய் முகம் மலர,

''ஆமாமா! கிஃப்ட் கொடுத்தேன்... உனக்குப் பிடிச்சிருக்கா?''

''இ..இஇ... இன்னும் பிரிக்கலை... ஆனா... எ..என... எதுவா இருந்தாலும், நீங்க கொடுத்தது! எப்படிப் பிடிக்காம ப்...பப.. போ... போகும்?!'' என்றவள்,

''எ...என... என்ன ஸ்பெஷல் ரமணிம்மா? கேசரியா?'' என வினவினாள், ஆர்வம் மிகவுற.

''எதுக்கு ஸ்பெஷல்?''

''ஹ.. ஹஹ... ஹய்யோ... பர்த்டேக்கு!''

''ஆமாமா! பர்த்டே! பர்த்டே! வயசாகுதில்ல... அதான் மறந்து மறந்து போகுது!'' என்று சமாளித்தவர்,

''ஸ்பெஷல் தானே? ரெண்டு அடி...ச்சே.. ச்சே ரெண்டு அடி அகலத்துக்கு ஒரு பூசணி காய்ச்சிருக்கு... வித்தியாசமா அதில பாயசம் பண்ணினேன்!''

''ச....ச...சுசூப்பர்! பாலா சார்க்கு கொடுத்து விட்டிருக்கீங்க தானே? நா... நா... நா... லஞ்ச்ல சாப்புடுறேன்...''

''அய்யோ! சொதப்பிட்டேனா?'' என்று தெரியாமல் வாய்விட்டே சொல்லிவிட்டார், ரமணிம்மா. வாழ்க்கையில், பிறந்தநாளுக்காக இவ்வளவு பொய் சொல்ல

வேண்டும் என்று அவர் எண்ணியதே இல்லை! அதுவும், ஒரே நாளில்!

''எ...எ.. எஎன்ன ரமணிம்மா?'' என்று விது குழம்ப,

''அதில்ல விது... பாயசம் கொஞ்சம் சொதப்பிடுச்சு... அதான் கொடுத்துவிடல... பாலா சும்மாவே நக்கலடிப் பான்... அதான்!'' என்று அவர் மென்று முழுங்க,

''அ..அஅவரு சொன்னா சொல்லட்டும்... எனக்குக் கொடுத்து விட்டிருக்கலாம் இல்ல. ப்ச்...இ...இஇ... இன்னைக்கு புதன்கிழமை... வ..வவ...வெள்ளிக்கிழ மையா இருந்தாலாவது வீட்டுக்கு வந்திட்டு வருவேன்... இன்னைக்கு வந்தா... நை...நை...நைட் போக ந...நந... நேரமாகிடும்! அதான்... ய..யோ... யோசிக்கிறேன்!''

''அதனால என்னம்மா? இன்னொரு நாள் செஞ்சு தரேன்'' என்று அவளிடம் சிரித்துப் பேசிட்டு வைத்தவரின் மனதில் ''அய்யயோ! பூசணிக்காய் பாயசத்துக்கு எங்க போவேன் நான்... நான்... அதுவும் ரெண்டு அடி அகலம் உள்ள பூசணிக்காய்க்கு!'' என்ற எண்ணம் ஜெட் வேகத்தில் ஓடி, அவருள் பீதியைக் கிளப்பியது.

இதே பீதியை, பாலாவினுள் விதைத்தாள் விது.

மதியம் உணவு உண்டு கொண்டிருக்கும் போது, ''ப...பப...பாலா சார்! ரமணிம்மாகிட்டப் பேசினேன்...'' எனவும்,

கண்கள் வெளியே தெறித்துவிழ, வாயிலிருந்த உணவு சிதறிவிழ, ஏகத்திற்கும் புரையேறியது அவனுக்கு.

''எங்க... எல்லார் முன்னாடியும் ரமணிம்மாவின் பிறந்தநாளைப் பற்றி சொல்லிவிடுவேனோ!'' என்று பயப்படுகிறான் போல என்றெண்ணிய விது,

''பயப்படாதீங்க! நான் சொல்ல மாட்டேன்!'' என்பது போல் கண்ணைக் காட்டினாள்.



மேலும், புரையேறியது அவனுக்கு! இப்போது விக்கல் வேறு!

அப்போது பார்த்து ''நீ ஏன் ஜி-யோட அம்மாக்கு போன் பண்ணினே?'' என்று ஒருவன் வினவ,

''ர...ர...ரர.. ரமணிம்மா எனக்கு நிறைய ஹெல்ப் பண்ணியிருக்காங்க... ச்ச்... சும்மா எப்படி இருக்கீங் கன்னு விசாரிச்சேன்... அ..அஅ... அவ்வளவுதான்'' என்று கூறிய விதுபாலா,

''எப்படி சமாளிச்சேன்... யாரு!?'' என்று காலரைத் தூக்கி விடாத குறையாக, கண்ணை உயர்த்திக் காட்டி யதும், அவனையும் மீறி பாலாவுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

கூடவே, ''நீ சமாளிச்சுட்டே... இன்னைக்கு சாயந்திரம் நான் தான் மாட்டப் போறேன்! இதுக்குத்தான்... விடாம போன் பண்ணிக்கிட்டே இருந்தாங்க போல... சிக்கிட் டேடா சிவராமா! சின்னா பின்னம் ஆகுறதுக்குள்ள, எஸ் கேப் ஆகிடு!'' என்று மனதினுள் ஓர் தப்பித்தல் பட லத்தை, மெல்ல அரங்கேற்றத் தொடங்கினான்.

ஹோ! அந்தப் பரிசு... அதாவது பாலா கொடுத்தப் பரிசு! தப்பு... தப்பு... தப்பு! ரமணிம்மா பாலாவின் மூலம் கொடுத்தனுப்பிய பரிசு! அது ஒரு பெர்ஃஃப்யூம்!

மறுநாள் காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து, தலைக்குக் குளித்து, மெஜந்தா வண்ணத்தில் சந்தன வண்ண பார்டர் கொண்ட சுடிதாரை அணிந்து, லேசாய் ஒப்பனை செய்து, அவன் கொடுத்த பெர்ஃஃப்யூமை எடுத்து அடித்துக் கொண்டு, நிறைய முல்லைப்பூ வாங்கிச் சூடிக்கொண்டு, அலுவலகம் சென்றவள்,

''ஆபீஸ்ல என்ன அழகிப் போட்டி நடத்துறாங்களா?'' என்ற அவனது கேள்விக்காக காத்திருக்க,

அவனோ "ப்ரீயா கிடைச்சா... பினாயிலையும் குடிப்பே போலவே!" என்றான் முதல் செய்தியாகவே,

"?" ஒற்றைக் கேள்விக் குறி மட்டும் பதிலாய் அமைய,

"பின்னே! அந்த பெர்ஃப்பூமை கொஞ்சமா போட்டுக் கணும்... அரை பாட்டிலையும் ஒரே நாளில காலி பண்ணக் கூடாது சரியா? கொஞ்சமா... லைட்டா... பட்டும் படாம போட்டாலே போதும்! அதிலே குளிக்கக் கூடாது!"

விதுவிடமிருந்து பதிலே வராமல் போக,

"இங்க வரைக்கும் கப் அடிக்குது! பாவம்... உங்க டீம்ல எல்லாரும், மயக்கம் போட்டு விழப் போறாங்க!" - அதோடு நிறுத்தி இருக்கலாம்! விதி யாரை விட்டது!?

மீண்டும், "ஏய்... ஏய்... உன் அழகில மயங்கி விழுவாங்கன்னு சொல்லலை... நாத்தம் தாங்க முடியாம விழுந்திடுவாங்க!" என அவன் வம்பிழுக்கவும்,

"ஆமா... நான் பட்டிக்காடு தான்! எனக்கு இந்த ஊர் பொண்ணுங்க மாதிரி... நகத்தில அழுக்குப் படாம சாப்பிடத் தெரியாது! உடம்பு தெரிய துணி போடத் தெரியாது! எண்ணெயே தடவாம முடியை செம்பட்டையாக்கி வச்சுக்கத் தெரியாது! கண்டதையும் முகத்தில பூசி, ஆளை மயக்கத் தெரியாது! இதெல்லாம் தெரியாமலே இருந்துட்டுப் போறேன்... ஒண்ணும் தப்பில்லை!" என்று நீளமாய் பதிலடித்து முடித்தவள்,

மின்னரட்டையை மொத்தமாக அடைத்துவிட்டு, மூச்சு வாங்க நிமிர்ந்தாள்!

கைகள் இரண்டாலும் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்தவளுக்குக் கோபம் மட்டுப் படுவதாய் இல்லை!



"இதுவே, நேரில் சொல்லியிருந்தால்... உண்டு இல்லை என்று பண்ணியிருக்கலாம்!" என்ற எண்ணம் ஓடும் போது,

"கோவத்தில உனக்கு அளவுக்கு அதிகமாகவே திக்கும்! இங்க கோபத்தோட சேர்த்து ஏமாற்றம் வேற... வாயே வலியெடுத்து இருக்கும்! நல்லவேளை... மெசன்ஜர்ல பேசின!" என்ற எதிரெண்ணம் வலுப்பெற்றது.

அவளது எண்ணங்களுக்குள் நடந்த சண்டையைக் கலைப்பவன் போல், "விது... எழுந்து வெளிய வா!" என்ற கட்டளையோடு பாலா வந்து நின்றான்.

"ம்ம்... ம்ஹூம்.. வ... வவவர மாட்டேன்!"

"சொன்னா கேளு! வா!" - அழுத்தம் கூடி எச்சரிக்கை செய்த குரலை மீற முடியாமல், மெல்ல இடத்தை விட்டு எழுந்து வெளியே சென்றாள்.

"எதுக்கு உனக்கு இவ்வளவு கோபம் வருது? ஜஸ்ட் ஒரு ஜோக்... தானே!"

"எ... எ.. எது ஜ...ஜ... ஜோஜோக்? எஎஎஎன்னை எவ்வளவு கக... கேகேவலமா பப...ப... பேசினீங்க?" - வார்த்தைக்கு வார்த்தை திக்கியது விதுவிற்கு.

"லூசு... கேவலமா எங்க பேசினேன்? சும்மா... கிண்டல் பண்ணினேன் அவ்வளவுதான்!"

"கிகிகி... கிண்டலா? இது கிகிகிகிண்டலா? நா பப...ப...ப... பட்டிக்காட்டு பேக்குன்னு சொ... சொசொ... சொன்னீங்க தானே!"

"நா அப்படி அர்த்தம் பண்ணிச் சொல்லலை... பெர்ஃப்பூம் ஓவர்ரா இருக்கு... குறைச்சுக்கோன்னு சொன்னேன்..."

''அ.............. அஅதை சாதாரணமா சொல்ல வ...வ...வே...வேவேண்டியது தானே? அதென்ன... பிபிபிபிபிபினாயில் கொடுத்தா குடிப்பேன்னு சொசொசொ சொசொசொல்றது? நா என்ன ஓஓஓஓஓசிக்கு அஅஅ அலையுறேனா?'' - நான்கைந்து வார்த்தைக்கு ஒரு முறை திக்குபவள், வார்த்தைக்கு வார்த்தை அதுவும் மிக அதிகமாக தடுமாறத் தொடங்கினாள்.

''ஓகே! ஓகேடா... பப்லு! எதுக்கு டென்ஷன் ஆவுறே? பாரு... முகமெல்லாம் சிவந்து போச்சு... வாய் வலிக்கப் போகுதுடா... ரிலாக்ஸ்! ரிலாக்ஸ்!'' என்றவனின் அக்கறையை, அன்னியோனியத்தை உணரும் நிலையில் இது இருக்கவில்லை. கோபத்திலும், வலியிலும் தன்னை மறந்திருந்தாள் அவள்.

ஆனால், தன் பேச்சைத் தானே உணர்ந்தவனாய், லேசாய் உதடு கடித்துத் தவறைத் திருத்தினான் பாலா.

அவனது எந்த முயற்சியையும் கவனிக்காமல்... கவனிக்க முடியாமல், விதுவிற்கு வாயின் வலதுபுறம் ஏகமாய் வலியெடுக்க, ஏதோ நரம்பு சுருண்டது போல் சுருட்டி எடுத்தது வலி!

அவள், வாயைக் கையால் தாங்கிப் பிடிக்கவும் ''என்னாச்சு விது?'' எனப் பதறினான் பாலா.

''ரொரரம்பப் பேசினா... வவவலிக்கும்...'' என அவள் பரிதாபமாய்.

பாலாவின் மனம் அவளது ஒற்றைப் பார்வையில் உருகிப் போனது!

முகத்தைக் கையிலெடுத்து, மார்போடு அணைத்து, மிருதுவாய் கன்னம் வருடி, வலியெடுக்கும் இடத்தில் வலி போக முத்தமிட்டு... தன் எண்ணம் போகும் போக்கைக் கட்டுப்படுத்தியவன், அந்த நேரத்தின் அவசியத்தை உணர்ந்து ''சாரி விது! நா பேசினது உன்னை இந்தளவு பாதிக்கும்ன்னு நான் நினைக்கலை... வெரி சாரிமா! நான் செஞ்சது தப்புதான்... நீ இவ்வளவு தூரம் டென்ஷன் ஆவேன்னு எனக்குத் தெரியாது... சாரி விது!'' என மன்னிப்பை வேண்டி, வெந்நீர் எடுத்து வந்து பருக வைத்தான்.



அப்போதும், அவளது முகம் தெளியாமலே இருக்க, ''டாக்டர்கிட்ட போலாமா, விது?'' என்றான் மனம் பதறி.

''இஇஇஇல்ல்ல்ல.. இல்ல... உஉஉஉஉஉஉப்பு ஒத்தனம் கொடுத்தா சசசசரியாகிடும்!''

''ஹய்யோ! இன்னும் திக்குதே!'' என்று தலையில் கை வைத்தவன், ''அப்போ வா வீட்டுக்குப் போகலாம்...'' என்றான் உடனடியாக.

''இஇஇல்ல்ல... நா ஹஹஹ.... ஹாஸ்டல்லுக்குப் போய் வ...வ... வவவச்சுக்கிறேன்...''

''எப்போ? சாயந்திரமா?'' என்று எரிச்சல் பட்டவன்,

''இந்த வேலையே வேணாம்... நீ உடனே கிளம்பு!''

''இஇல்ல்ல... மேனேஜர் தி... திதி... திதிட்டு...'' - வாக்கியத்தை முடிக்கக் கூட முடியவில்லை. பயத்தில் நாக்குப் பிரண்டது!

''உடம்பு சரியில்லைன்னு லீவ் போடறே! அவன் என்ன திட்டுறது?!'' என்று அதட்டியவன்,

''உடம்பு நல்லா இருந்தா தான்... வேலை பார்க்க முடியும்! முதல சொல்லிட்டுக் கிளம்பு! நான்... கீழ வெயிட் பண்றேன்!''

விதுபாலா போய் உடம்பு சரியில்லை என்று விடுப்பு கேட்டதற்கு, அவளை ஏற இறங்க பார்த்த அந்த மேலாளர் ''ம்ம் சரி!'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

அந்தப் பார்வை, நெஞ்சினுள் ஓர் குளிரைப் பரப்ப, கைப்பையை எடுத்துக் கொண்டு, அவள் கீழே சென்ற போது, ஓர் ஆட்டோ பிடித்து வைத்திருந்தான், பால முருகன்.

''ம்ம் ஏறு!'' என அவன் கை காட்ட,

''சசசசரி... நா போய்க்கிறேன்... ப...ப..பபபை!''

''பையா? நானும் தான் உன்னோட வரேன்...''

''ஹோ!''

''ஆமா... பெரிய ஹோ தான்! தள்ளு!''

''நீநீநீநீங்க உங்க வவவவண்டில வாங்க... நா ஆஆஆஆட்ட்ட்ட்டோல வரேன்...''

''ஏன்... என்னோட மேடம் ஒரே ஆட்டோல வர மாட்டீங்களோ?''

''அ... அஅஅ... அய்யோ... அப்படியில்ல.. அப்புறம் உஉ.. உஉங்க வண்டி இங்கயே நிக்குமேன்னு சொசொ... சொசொன்னேன்...''

''நல்லா சமாளிக்கிற! வண்டில தான் போறதா இருந்தேன்... ஆனா... புல்லட்ல பின்னாடி உட்காருறது கஷ்டம்... அம்மாவே ரொம்பத் தடுமாறுவாங்க... உடம்பு சரியில்லாம இருக்க பொண்ணை ஏன் படுத்தணும்னு விட்டுட்டேன்!'' என்றவனின் மனதில் ஓர் சலிப்பு! ஓர் ஏக்கம்!

அதன் எதிரொலியாய், மற்றொரு நெஞ்சத்திலும் ஓர் ஏமாற்றம்!! வேறு யார்? நம் விதுபாலா தான்!



# 9

பாலாவின் வீடு, அலுவலகத்திற்கு அருகே என்பதால் பத்து நிமிடத்திலேயே விதுவும் பாலாவும் வீட்டை அடைந்து விட்டனர்.

ஆட்டோ நின்ற பின்னரும், விழி மூடியபடியே விது இருக்க, ''விதும்மா!'' என்றான் பாலா மெல்ல.

அவளது இமைகள் சிறகென விரிந்தெழ, ''ரொம்ப வலிக்குதாடா!?'' என்ற அவனது கேள்வியிலேயே, பாதி வலி மறைந்தது போலிருந்தது விதுபாலாவிற்கு.

சன்னமாய் தலையசைத்தவளின், முகத்தில் நாணத்தின் கோடுகள் விசா எடுக்காமலே நிரந்தரமாய் குடியேறின!

அவள் புறம் நீண்ட கரங்களை, ஆட்டோவின் கம்பியைப் பிடித்து சமன் செய்தவன், ''இறங்கு... விது!'' என்றான்.

அவள் நகர்ந்து வர, அவன் நகரவில்லை!

ஆட்டோவிலிருந்து இறங்கிய நிலையிலேயே பாலா நிற்க,

அவன் ஓட்டுனர் புறம் நகர்ந்து விடுவான் என்றெண்ணி, விது ஆட்டோவின் விளிம்பிற்கு நகர, அவன் நகரவில்லை.

ஓட்டுனரிடம் பணம் கொடுத்துவிட்டு, சில்லரைக்காக காத்திருந்தவனும் அவளைக் கவனிக்கவில்லை.

இதுநாள் வரை, பாலாவை அருகில் பார்த்திருக்கிறாள் தான்! ஆனால், மிக மிக அருகில்?!

மிலிட்டரிகாரன் போல் ஒட்ட வெட்டப்பட்டிருந்த சிகையும், மெலிதாய் வடிக்கப்பட்டிருந்த பிரஞ்சு பியர்டும், மிதமாய் வந்த பெர்ப்யூமின் வாசமும் உள்ளுக்குள் ஓர் இனம்புரியா உணர்வைக் கிளப்பிவிட,

''உஷ்...'' என்ற பெருமூச்சுடன், ஆட்டோவின் இருக்கையில் தொப்பென விழுந்தாள் விதுபாலா.

அதில் கவனம் கலைந்தவனாக, ''என்ன விது, இறங்கலையா?'' என்றான்.

''நீங்க தள்ளுங்க...'' என்று அவள் முணுமுணுக்க,

அவள் கவனித்தாலோ என்னவோ, பாலா கவனித்தான்! அப்போது விதுவிற்கு ஒரு வார்த்தை கூட திக்கவில்லை!

ஓர் விசித்திரப் பார்வையை அவளிடம் வீசியவன், பின் பக்கமாய் நகர்ந்து அவளுக்கு வழிவிட்டான்.

அதற்குள் கதவிற்கு விரைந்திருந்த பத்மா, ''விது வா வா...'' என்று அவளை அணைத்துக் கூட்டிச் சென்றாள்.

வீட்டுக் கதவைத் தாண்டி இரண்டடி எடுத்து வைத்ததும் தான் விதுவுக்கு, ரமணிதரனின் நினைவே வந்தது.

சட்டென நின்றவள், ''ரமணிப்பா!'' என்றாள் கேள்வியாக. சிறு பயத்துடனும் தான்!

''அப்பா... இப்போ தான் பேங்க் போறதா சொல்லிட்டுப் போறாங்க... அப்படியே அவங்க இருந்தாலும் என்ன பயம்? அப்பா ஸ்ட்ரிக்ட் தான்! ஆனா, பிற்போக்குவாதி இல்ல!'' என்றாள் பத்மா.

அந்த நேரத்திலும், அவள் வாய் நிறைய ''அப்பா... அம்மா'' என்று மாமனார் - மாமியாரை அழைப்பது, விதுவிற்குள் ஓர் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது! இதைப் பற்றி



பத்மாவிடம் கேட்க வேண்டும்... கேட்க வேண்டும் என்று நினைப்பாள்! ஆனால், ஏதும் தப்பாய் நினைத்து விடுவாளோ என்ற எண்ணத்தில் விதுபாலா வாய் திறப்பதில்லை! இப்போதும், அந்த எண்ணத்துடனே அவள் வாய் திறவாமல் இருக்க,

''வாடா விது! ரொம்ப வலிக்குதா? உப்பு ஒத்தனம் ரெடியா இருக்கு... வா... வா...'' என்று பதறியபடி வந்துவிட்டார் ரமணிம்மா.

நெஞ்சம் நெகிழ்ந்து போனது, விதுவுக்கு! தனிச்சையாக, தன் தாயிடம் எண்ணங்கள் ஓட, வாய் வலியை விடவும் மனதை அதிகமாய் வலிக்கச் செய்யும் அவரது வார்த்தைகள் காதுக்குள் ரீங்காரமிட்டு, கண்ணை இறுக மூடித் திறக்க வைத்தது!

உடனேயே, ''வலிக்குதா பாலாம்மா?!'' என்று பரிதவிக்கும் தந்தையின் குரலும், அதன் நாதத்திலேயே ஒலித்த ''ரொம்ப வலிக்குதா விது?'' என்ற பாலாவின் உருகலும் கண் முன் வந்து போயின!

தந்தையை நினைத்தோம்! சரி! ஆனால்... பாலாவை, ஏன்?! என்ற கேள்விக்கு விடை காண முடியாமல், அவளது வலி நீக்க, உப்பு ஒத்தனம் கொடுக்கப்பட்டது!

வலப்புற தாடையும், கன்னமும், கூடவே காதும் இழுப்பது போல் எடுத்த வலி, வெகுவாக மட்டுப்பட்ட போதும், முழுதாய் குறையவில்லை.

அதை அவளது முகவடிவிலிருந்தே கண்டு கொண்டவன் போல் ''வலி இன்னும் இருக்கா விது?'' என்றான், அங்கேயே குறுக்கும் நெடுக்குமாய் நடை பயின்று கொண்டிருந்தவன்.

மறுப்பாய் தலையசைத்தவள், ''ப...ப...பபபடுத்தா சரியாகிடும்! ஹாஸ்டல் போறேன்'' என்றாள் மெல்ல.

''ஏன்? இந்த வீட்டில படுக்க இடமே இல்லையா? ஹாஸ்டல போய் தான் படுப்பாளாமே!'' என்றபோது, பாலாவின் வார்த்தைகள் சுள்ளென விழுந்தன.

''சும்மா இருடா! முதல்ல வாங்க சாப்பிடலாம்... அப்புறம் கொஞ்சம் நேரம் படுத்திருந்துவிட்டு, ஹாஸ்டல் போலாம்!'' என்று அனைவரையும் உணவுண்ண அழைத்துச் சென்றார், விமலாரமணி.

தட்டில் காரட் துவட்டலை வைத்தவர், ''உனக்கு காரட்ன்னா ரொம்ப இஷ்டமாமே... பாலா பண்ணச் சொன்னான்... சாப்பிடு!'' என்றார் வாஞ்சையாக.

மின்னலின் ஒளி கீற்றென, பாலாவும் பாலாவும் கண்ணாலேயே மோதி நின்றனர்!

திருப்தியான சாப்பாட்டின் பின்னர், கிண்ணத்தில் மாதுளை முத்துக்களைப் போட்டு அனைவரிடமும் நீட்டிய பத்மா, விதுபாலாவிடம் நீட்டும்போது ''இந்த டிரஸ் சூப்பர்ரா இருக்குடா, விது!'' என்றார்.

விதுபாலாவின் கத்திப் பார்வை ஒன்று, பாலமுருகனின் முகத்தைக் கூறு போட்டது!

கைகளை மேலே தூக்கி, ''அய்யோ! எனக்கு இன்னைக்கு நேரமே சரியில்லை போல!'' என்று தனக்குத் தானே பரிதாபப்பட்டவன்,

''எனக்கு செருப்படி வாங்கிக் கொடுக்கிறதில உங்களுக்கு என்னண்ணி சந்தோசம்?'' என்றான் பத்மாவை ஓர் கெஞ்சுதல் பார்வை பார்த்து.

ரமணிம்மா ''என்ன... என்ன'' என்று வினவவும், காலையில் நடந்தது முழுதையும் சொல்லி முடித்தான் பாலமுருகன்.

தான் செய்தது வெறும் கிண்டலே, அதை அவள் தான் தவறாக எடுத்துக் கொண்டாள் என்பது போல்



சொல்லாமல், உள்ளதை உள்ளபடி கூறியவனின் குணம், விதுபாலாவினுள் ஓர் மெச்சுதலை உண்டு பண்ணியது எனில் அது மிகையல்ல! அதன் விளைவாய், அவன் சொல்லச் சொல்ல விதுவின் முகத்தில் ஓர் புன்னகை கூட அமர்த்தலாய் குடி கொண்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

''இவன் ஒரு லூசும்மா...'' என்று தொடங்கி, ரமணிம்மா ஒரு அர்ச்சனைப் படலத்தை நடத்தி முடிக்கவும்.

''ரொம்ப நாளா காத்துக்கிட்டு இருந்த மாதிரி இருக்கு?'' என்றான் மகன், சிறு சந்தேகத்துடன்.

''என்னடா? ரொம்ப நாளா?''

''அதான்... ஆடு எப்படா சிக்கும்... எப்படா உரிச்சுக் கழட்டலாம்ன்னு காத்துக்கிட்டு இருந்தீங்க, போல! இன்னைக்கு மாட்டினவுடன, சிக்கிட்டாண்டான்னு ரவுண்டு கட்டி அடிக்கிறீங்க! என்ன மேட்டர், மிஸஸ். ரமணி!?'' என்றான் புருவங்களை உச்சி மேட்டுக்கு இட்டுச் சென்று.

''ஆமா... நான் உரிச்சுக் கழட்டுற வரைக்கும் அமைதியா என் மூஞ்சியே பார்த்திட்டு இருப்பியாக்கும்! ரொம்பப் பச்சப்புள்ள மாதிரி நடிக்காதடா, ராஸ்கல்! இன்னைக்கு என்னமோ... விது இருக்கிறதால, வாயை அடக்கி வச்சிட்டு இருக்கே!'' என்றார் தாயும், அவனை அறிந்தவராய்.

''அப்போ... விது இருந்தா தம்பி அமைதியா இருக்குன்னு சொல்றீங்க? அப்படித்தானே அத்தை!'' என்று பத்மா தேனொழுகக் கேட்கவும்,

''ஏண்ணி? ஏண்ணி? உங்களுக்கு இந்த காண்டு!?'' எனக் கிண்டல் செய்தானே ஒழிய, பத்மாவின் வார்த்தையை மறுக்கவில்லை என்பதை விது கவனித்தாளோ

இல்லையோ மற்ற இருவரும் கண்டிப்பாக கணக் கெடுத்து வைத்துக் கொண்டனர்.

சிறிது நேரம் சிரிப்பும் பேச்சுமாய் கழிய, ''ந... நீ... நீநீங்க கொடுத்த பெர்ஃப்பூம் ந... நந... நல்லா இருந்துச்சு, ரமணிம்மா!'' என விது கூறவும்,

மகனைக் கண்ணால் அளந்துகொண்டே ''அப்புறம் நல்லா இல்லாம எப்படி இருக்கும்? பா...பத்மா உனக்க் காகன்னு பார்த்துப் பார்த்து வாங்கிட்டு வந்ததில்ல! இல்ல பத்மா?!'' என்றவர், மருமகளையும் கூட்டுச் சேர்த்தார்.

''ஆமாமா! கடை கடையா ஏறி இறங்கி... இந்த பா... பத்மா வாங்கினது!'' என்றாள் பத்மாவும், கொழுந்தனைக் கண்ணால் கேலி செய்து.

கொழுந்தனின் முகத்தில் தெரிந்த அசடைப் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொள்வதோடு நிறுத்தாமல், ''ரோஸ் ஃப்ராகிரஸ்ன்னு தேடித் தேடி இல்ல வாங்கினேன்... எப்படி பிடிக்காமப் போகும்?'' என்று மேலும் பேசினாள் பத்மா! ஆனால், அது அவனுக்கு ஆப்பாய் அமையாமல் வைத்தவளுக்கே திரும்பி ஆப்பமாய் வந்தது!

ஏனென்றால், விதுவுக்குப் பரிசளிக்கப்பட்ட பெர்ஃப்பூம் - லாவெண்டர் ஃப்ராக்ரன்ஸ்!

''இ..இஇஇல்லையே அக்கா... லாவெண்டர் பூ வாசம் வ....வவ...வந்துச்சே!'' என்று விதுபாலா குழம்பவும்,

''ஞே!'' என்று ஒரு விநாடி விழித்தாள், பத்மா!

வெடித்துக் கிளம்பும் சிரிப்பைப் பல்லைக் கடித்து அடக்குவது இவ்வளவு சிரமமாய் இருக்கும் என்று பாலா எண்ணியதில்லை!

சிரித்தால், மூன்று பக்கமிருந்தும் சங்கு தான் என்ற நிலையில் மிக மிகச் சிரமப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டவன், தாயைப் பார்த்து கண்ணாலேயே கிண்டல் கணையை எடுத்து வீசினான்.

மருமகள் விழிப்பதைக் காட்டிலும், மகனின் கிண்டல் மூளையைச் சட்டென பாதிக்க,

''அதுவா... ரெண்டுமே வாங்கிட்டு வந்தா! நான் தான் மாத்தி பாக் பண்ணிட்டேன் போல... பாலாவோட வைஃப்புக்குன்னு ரோஸ் ஃப்ராக்ரன்சை எடுத்து வச் சுட்டேன்... பத்மாக்குத் தெரியாது! ஆனா... பாலாக்குத் தெரியுமே? என்னடா பாலா கொடுத்தேனே? பத்திரமா வச்சிருக்கியா இல்லையா?'' என்ற கேள்வியில் மகனுக் குக் கிடுக்கிப் பிடி போட்டவர், ''எப்புடி?'' என்பதுபோல் அவனைக் கண்ணாலேயே மிரட்டினார்.

'எமகாதகிங்க!' என்று உள்ளுக்குள் எண்ணிய பாலா, மண்டையை இரண்டு முறை சாதகமாய் ஆட்டிவிட்டு, ஒன்றும் தெரியாதவன் போல் விட்டத்தையும் டீப்பாய் மேலிருந்த பூவையும் மிக கவனமாய் பார்த்துக் கொண் டிருந்தான்.

மகன் மீது பரிதாபப்பட்டவராய், அதற்குப் பின்னர் ''பிறந்தநாள்'' பேச்சை எடுக்கவில்லை ரமணிம்மா.

அதன் பின்னர், ஒரு மணி நேரம் படுத்தெழுந்த விது (பத்மாவின் கட்டாயத்திற்குப் பின்), விடுதிக்குக் கிளம் பும்போது,

ஓர் கைப்பையையும், உணவு கொண்டு செல்லும் ஓர் செல்லோவையும் கொண்டு வந்து கொடுத்தார் ரமணி.

''இந்த ஹான்ட் பாக்... போன வாரம் பாலா பெங்கூர் போனான்ல... அப்போ எனக்கு ஒண்ணு... பத்மாவுக்கு ஒண்ணுன்னு வாங்கிட்டு வந்தான். நா எங்க ஹான்ட்பாக் யூஸ் பண்ணப் போறேன்... அதுவும், இது சின்னப்

பொண்ணுங்க யூஸ் பண்ற மாதிரி வேற இருக்கு... நீ எடுத்துக்கிறியா? புதுசு தான்! நான் தொடவே இல்லை... உள்ள இருக்க பேப்பர் கூட அப்படியே இருக்குப் பாரு!'' என அவர் நீளமாய் பேசவும்,

''ந... நநீ... நீங்க யூஸ் பண்ணியிருந்தாலும் நான் எ... எட... எடுத்துப்பேன்...'' என்று சந்தோஷமாய் வாங்கிக் கொண்டாள் விதுபாலா.

''ஹய்யோ! சரியான காமெடி பீஸ், மிஸஸ். ரமணி, நீங்க! நீங்க யூஸ் பண்ண மாட்டீங்கன்னு தெரிஞ்சு தான் ஹான்ட்பாக்கே வாங்கிட்டு வந்தேன்... எதிர்பார்த்தது மாதிரியே, ''நா எங்கடா ஹான்ட் பாக் யூஸ் பண்ணப் போறேன்''ன்னு நீங்க சொல்ல, நானும் ''உங்களுக்குன்னு வாங்கிட்டு வந்துட்டேன்... ஒண்ணு நீங்க யூஸ் பண்ணுங்க... இல்லை உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணு யாராவது இருந்தா கொடுங்க''ன்னு நான் மனசில ஆயிரம் வாட்டி ஒட்டிப் பார்த்த டயலாக்கை எடுத்து விட்டேன்! நீங்களும் உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணான விதுவுக்கே கொடுத்திட்டீங்க! இதில என்ன டயலாக் வேண்டிக் கிடக்கு!'' என்ற பாலாவின் மைன்ட் வாய்ஸும்,

''டேய் டேய்! எங்கிட்டேவா?! நீ இதை விதுக்குத் தான் வாங்கிட்டு வந்தேன்னு எனக்குத் தெரியும்! என்னமோ தெரிஞ்ச பொண்ணுக்கிட்ட கொடுங்கன்னு சொல்றே... எனக்கு விது மட்டும்தான் தெரிஞ்ச பொண்ணா? நேத்து வந்தாளே, என் தங்கச்சிப் பொண்ணு சரண்யா... அவளும் தெரிஞ்ச பொண்ணு தான்! போன வாரம் வந்தாளே, என் பிரண்டோட பொண்ணு... அவ கூட தெரிஞ்ச பொண்ணு தான்! அவங்ககிட்ட எல்லாம் கொடுக்காம, ஏன்டா விதுக்கிட்ட கொடுக்கிறேன்? பயலே!''



என்று ரமணிம்மாவின் மைன்ட் வாய்ஸும் போட்டி போட்டுக் கொண்டு ஒலித்தன!

ஒரு வழியாக, விதுபாலா விடுதிக்குக் கிளம்பவும்,

''நா அவளை ஹாஸ்டல்ல விட்டுட்டு வந்துடுறேன்...'' என உடன் கிளம்பினான் பாலமுருகன்.

''காரை அப்பா எடுத்திட்டுப் போயிருக்காரே... பாலா!'' என்று ரமணிம்மா தயங்கவும்,

''எப்படியும் ஆபீஸ் போய் என்னோட வண்டியை எடுக்கணும் மா... கார் வேண்டாம்...'' எனக் கூறி, ''கிளம்பலாமா விது? மணி ஆறாகிடுச்சு...'' என்றான் விதுவிடம்.

''இ... இஇஇல்ல வேண்டாம்... நானே...'' என மறுத்த விதுவை, கண்களால் பாலாவும், வார்த்தைகளால் ரமணிம்மாவும் அடக்கி, அவனுடன் அனுப்பி வைத்தனர்.

ஆட்டோ பிடிக்கப் போன பாலாவிடம் ''இ... இ... இஇங்கிருந்து போக... இருநூறு ரூபா கேட்பானே?! ப... பப... பபஸ்ல போலாமா?'' என்றாள் விதுபாலா, பரிதாபமாய்.

பாலா, பால்யக் காலத்தில் மட்டுமே பேருந்தில் சென்றிருக்கிறான். அதன் பின்னர், சைக்கிள்... பைக்... கார்... புல்லட் என்று தனிக்காட்டு ராஜா தான்! எதற்காகவும் காத்திருந்ததில்லை! எதிலும் அடிபட்டு, நைப்பட்டது இல்லை! சுகவாசியாக இருந்து பழகியவனுக்கு, ''பஸ்'' என்றதுமே சிறு சுணக்கம் ஏற்பட்டது! ஆனாலும், அதை வெளியிட்டால், விதுவை இளக்காரமாய் நினைப்பது போலிருக்குமோ என்ற எண்ணத்தில் ''சரி'' எனத் தலையாட்டினான் அவன்! அரை மனதாகத் தான்!

அந்த அரை மனதும், பிதுங்கி வழியும் கூட்டத்துடன் ஒரு பேருந்து வரவும், முற்றிலுமாய் மாறிப் போனது.

நிற்கக் கூட இடமில்லாத அப்பேருந்தில் ஏறப் போன விதுவின் கைப்பற்றி நிறுத்தியவன் ''ஏய்... ஏய்! என்ன பண்றே? இவ்வளவு கூட்டத்திலேயா போகணும்??'' என்றான் உண்மையான பயத்துடனே!

''இ...இஇ.. இந்த பஸ் தான் நேரா ஹாஸ்டல் போகும்... அ...அ..அஅதான்!'' என்று இழுத்த விதுவுக்கும், அவனது தயக்கம் புரிந்தது.

அதனால், உடனேயே ''நீ... நீநீங்க போங்க... நா போய்ப்பேன்.... தினம் போறது த... தா... தாதானே!'' என்றாள் சமாதானமாக.

''கோச்சுக்காத... டாக்ஸில போலாமா? இல்ல ஆட்டோ... ப்ளீஸ் விது! எனக்கு இது பழக்கமில்லை... ப்ளீஸ்!'' என்று அவன் கெஞ்சவும் விதுவுக்கு ஆச்சரியமாக இருந்தது!

பாலா கெஞ்சி, அவள் பார்த்ததில்லை! கெஞ்சுவது அவனுக்குப் புதிது என்பது புரிந்தது!

''ஆட்டோவில் போகலாம்'' என்று ஒரே முடிவாய் அவன் சொல்லியிருக்கலாம்... ஆனால், அப்படிச் செய்யாமல் அவளது பேச்சுக்கு இடம் கொடுத்து வந்திருக்கிறான். ஆனால்... இந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் மிரண்டு விட்டான் போலும்! பாவம்! என்று நெஞ்சம் உருக, சம்மதமாய் தலையாட்டினாள் விது.

''தேங்க்ஸ்!'' என்றவனின் குரலுடன் சேர்த்து, ஆழ்ந்த நிம்மதிப் பெருமூச்சு வெளியிடப்படவும், விதுவின் இதழ்களில் மெல்லிய புன்னகை ஒன்று தன் முத்திரையைப் பதித்தது.

அவளது மனம் மாறுவதற்குள் ஓர் டாக்ஸியைப் பிடித்தவன், அவளது சிறு சுணக்கத்திற்குப் புரிந்தவனாய்



''இந்த நேரத்தில, ஆட்டோக்காரனும் டாக்ஸி ரேட் தான் கேட்பான்... கொடுக்கிறது கொடுக்கப் போறோம்... சௌரியமா போலாமே!'' என அவன் கூறவும், அவள் மறுக்கவில்லை.

பயணம் செய்வது இவ்வளவு சுகமாய் இருக்கும் என்று அவள் எண்ணியதில்லை. அடி மேல் அடியாக வண்டி நகர்ந்த போதும், அதன் உள்ளிருக்கும் அவர்கட்கு வெளியிருந்த வெட்பமோ கசகசப்போ தெரியவில்லை. ஏ.சி.யின் குளிர் அப்படி! பேருந்தில் நிற்க முடியாமல் நின்று கொண்டு வரும்போது, காண முடியாத சென்னையின் பிரம்மாண்டத்தை இப்போது கவனிப்பவளாய் விதுவின் பார்வை வெளியவே இருந்தது!

பயணம் ஆரம்பித்து இருபது நிமிடம் கழித்து, ''அப்படியென்ன வேடிக்கை? தாஜ்மஹாலை சுத்திப் பார்த்தவன் கூட, இந்த நேரத்துக்குப் பத்து வாட்டி வாயை மூடி மூடித் திறந்திருப்பான்... நீ என்னடான்னா வாயாலேயே பார்க்கிற மாதிரி, திறந்த வாயை மூடவே இல்லை...'' என்று பாலா கூறவும்,

முறைக்கத் தோன்றினாலும், சிரிப்பே பிரதானமாய் முகத்தில் இடம் பெற்றது!

அதன் பின்னர், அவரவர் படிப்பு... பிடித்தம்... பால்யம் என்று எண்ணங்கள் தடையின்றி வார்த்தைகளால் உலா வந்தன.

''பாஸ்... இங்க நிறுத்துங்க...'' என பாலா கூறவும் தான், சுற்றுப்புறம் உணர்ந்தாள் விதுபாலா.

''அதுக்குள்ள வந்துடுச்சா'' என்று சலித்த மனதை அடக்கி, ''ஹ... ஹ... ஹாஹாஸ்டலுக்கு இன்னும் தூரம் போகணும்...'' என்றாள் அவசரமாய்.

''இந்த ஹோட்டல்ல சாப்பிட்டுப் போலாம்... உங்க ஹாஸ்டல்லே ஒன்பது மணிக்குப் போனா வெளியே முட்டிக்கால் போடச் சொல்ல மாட்டாங்க இல்ல...'' என்றவன், விது பேசத் தொடங்கும் முன்னர்.

''இல்ல... வேணாம்... நான் ஹாஸ்டல்லயே சாப்பிட்டுக்கிறேன்னு சொல்லப் போறே... அப்படித்தானே? ப்ளீஸ் விது... இன்னைக்கு மதியம் உங்க ரமணிம்மா பண்ண கொடுமையான சமையலை சாப்பிட முடியாம சாப்பிட்டு, வயிறே வலிக்குது தெரியுமா? ஒரு நேரமாவது... நல்ல சாப்பாடு சாப்பிடுறேனே... ப்ளீஸ் யா... ப்ளீஸ் ப்ளீஸ்!'' என அவன் கெஞ்சவும், கெஞ்சுவது போல் நடிக்கவும்,

அடக்க மாட்டாமல் சிரித்துவிட்டு, ''இ... இஇ... இருங்க... இருங்க... ரமணிம்மாகிட்ட சொல்றேன்'' என மிரட்டினாள் விதுபாலா.

''ஹய்யே! உங்க ரமணிம்மா பெரிய டொரு... அந்த காமெடி பீஸுக்கெல்லாம் அய்யா பயப்பட மாட்டேன்!'' என்று காலரைத் தூக்கி விட்டவன், அவளுடன் உணவகத்தினுள் நுழைந்தான்.

உணவு முடிந்து கிளம்பும் போது, இருவரும் தத்தம் கைப்பேசி எண்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டனர். பாலாவுக்கு விதுவின் எண் தெரியும் என்றாலும், தெரியாதது போலவே வாங்கிக் கொண்டான் அவன்!

காலையில் நேரிலும், மாலையில் பேச்சிலுமாய் அவர்களது நாட்கள் கரைய, ஒரு புதன்கிழமை காலை பத்து மணிக்கு, அலுவலகத்திற்கு வந்த பாலாவின் கண்களில் விது திட்டு வாங்குவது பட்டது!



# 10

நடையின் வேகத்தைக் குறைத்து, விதுவின் ப்ராஜெக்ட் இருந்த பக்கம் கவனத்தை வைத்துக் கொண்டே நடந்தான் பாலா.

அங்கிருந்த குட்டிக் குட்டித் தடுப்புகளுக்கு மத்தியில், விதுபாலா நின்றிருக்க, அவளது மேலதிகாரி கடும் கோபத்துடன் முழங்கிக் கொண்டிருந்தான்.

''ஒன்பது டு ,ஆறு மணி வேலையை எதிர்பார்த்து வந்திருந்தா... அதுக்கு இது இடமில்லை...''

''நேத்து நைட், நீ பாட்டுக்குப் பையைத் தூக்கிட்டு கிளம்பிப் போய்ட்ட?''

''ஒன்பதரை மணி தானே ஆச்சு? அது உனக்கு என்ன நடு ராத்திரியா? எதுக்கு நேத்து கிளம்பிப் போனே?''

''பத்து மணிக்கு மேல போனா... ஆபீஸ்ல தான் கார் அரேன்ஜ் பண்ணுவாங்க இல்ல... வேலையை முடிச்சிட்டு அதில போக வேண்டியது தானே?''

''சரி... போனது தான் போனே! இன்னைக்காவது சீக்கிரம் வந்து செஞ்சிருக்கணுமா இல்லையா? இதான் வர நேரமா? நீ... ஆடி அசைஞ்சு வர வரைக்கும் இங்க வேலை காத்துக்கிட்டு இருக்குமா?'' என்று உச்சஸ்தாயியில் கத்தியவன்,

''கரெக்ட்டா ஒன்பது மணிக்கு சீட்ல இருக்கணும்!''

''எத்தனை மணி ஆனாலும், வேலையை முடிச்சிட்டுத் தான் கிளம்பிப் போகணும்!'' என்ற கட்டளை

யுடனும், ஓர் ஏளனப் பார்வையுடனும் அங்கிருந்து நகர்ந்து விட்டிருந்தான்.

தலை குனிந்து நின்றிருந்த விது, தன் நிலை உணர்ந்தவளாய் மெல்ல இருக்கைக்கு வந்தாள்.

இந்த நேரத்தில், அவளிடம் பேசுவது உசிதமல்ல என்று எண்ணியவனாய் தன் இடத்திற்குச் சென்றான் பாலா.

ஒரு வாரமாக அவன் ஊரில் இல்லை... வாடிக்கையாள ருடன் ஒரு கலந்தாய்வு விஷயமாக லண்டன் சென்றிருந் தான். அதனால், சரிவர விதுவிடம் பேச முடியவில்லை. அப்படியே பேசினாலும், சாப்பிட்டாயா... தூங்கினாயா என்ற கேள்விகள் மட்டுமே! ஹ்ம்ம்... இரு நாட்களாக ''வேலை ஜாஸ்தியா இருக்கு'' என்ற அவள் கூறியதாய் ஞாபகம்! என்னவாகிற்று என்று யோசித்துக் கொண்டே, விதுவை ஆன்லைன்னில் பிடித்தான்.

''ஹாய்'', ''ஹலோ!'', ''விது'' எந்த முன்னுரையும் இல் லாமல்,

''ஆபீஸ் கடையில வுட்வோர்ட்ஸ் கிரேப் வாட்டர் காலி ஆகிடுச்சாம்... வெளிய போய் வாங்கிட்டு வரவா?'' என்ற செய்தி, கணினி திரையில் மின்ன,

''ச்சு! போங்க! நா ஒண்ணும்... பாப்பா இல்லை!''

''ஹையோ... எவ்வளவு அறிவாளியா இருக்கே! டக்குன்னு கண்டு பிடிச்சுட்டியே கள்ளி! ஆமா... எப்பல இருந்து விது இவ்வளவு அறிவாளியா ஆனே?''

''ஹ்ம்ம்... இப்ப தான்!'' என்று அடித்தவள்,

''உங்களோட சேர்ந்து சேர்ந்து அறிவு மங்கிப் போய் இருந்துச்சு... நீங்க லண்டனுக்குப் போனதும், ஹப்பா நம்ம எதிரி ஓடிப் போயிட்டான்னு வெளிய தலைகாட்டி இருக்கு'' என்றாள் கூடவே.



''ஆத்தாடி ஆத்தா! செம மூளையா இருக்கும் போலவே! ஒரு அரைக்கிலோ பார்சல் கிடைக்குமா?''

''ஹ்ம்ம்... கிடைக்குமே? அரைக்கிலோல பாதி கிடைக் கும்...''

''கால் கிலோ தானா?''

''ம்ஹூம், அரைக்கிலோல பாதி...''

''அதான் கால் கிலோ...''

''ம்ஹூம். அரைக்கிலோங்கிற வார்த்தையில பாதி...''

''அடிப்பாவி... என்னை அடிப்பியா?''

''அப்புறம்... இப்படி மொக்கை போட்டா கொஞ்சுவாங் களா?''

''சரி! சரி! டென்ஷன் ஆகாதே! என்னாச்சு... மன்சூர் அலிகான் ஹை பிட்ச்ல கத்திக்கிட்டு இருந்தான்...''

''ப்ச்...''

''என்னாச்சு சொல்லு...''

''அதான் கேட்டிருப்பீங்களே... வேலையை முடிக் கலை... சீக்கிரம் கிளம்பிப் போயிட்டேன்... லேட்டா வந்தேன்...''

''ஏன் லேட்டா வந்தே? எப்பவுமே கடமை சிகாமணியா ஒன்பது அடிக்கிறதுக்கு ஒரு நிமிஷம் முன்னாடி வந்து நிப்பே...''

''ப்ச்... கிண்டல் பண்ணாதீங்க...''

''ஓகே... ஏன்னு சொல்லு...''

''நான் இங்க ஒன்பது மணிக்கு இருக்கணும்ன்னா ஹாஸ்டல்ல ஆறே முக்கால்... ஏழு மணிக்கெல்லாம்

கிளம்பணும்... ரொம்ப தூரம்ன்னு உங்களுக்குத் தான் தெரியுமே...''

''தெரியும்... எல்லா நாளும் வரவ... இன்னைக்கு என்னாச்சு?''

''மூணு நாளா... பதினொன்றை... பன்னண்டு மணி ஆகிடுது படுக்க, அதான் கொஞ்சம் அசந்துட்டேன்... அதுக்கு என்ன திட்டு பார்த்தீங்களா?! அதுவும் கியூப்ல கூப்பிட்டு வச்சு சொல்லலாம்ல... எல்லார் முன்னாடியும்... நட்டநடுல... ப்ச்... ரொம்பக் கஷ்டமா இருக்கு பாலா... அதுவும், நான் என்ன தினம் தினம் லேட்டா வர்றேனா என்ன? ஒரு நாள் தானே? ப்ச்... கஷ்டமா இருக்கு...''

''சரி... சரி... விடு! அவன் ஒரு லூசுப்பய! நிக்க வச்சு கேள்வி கேட்க... இது ஒண்ணும் ஸ்கூல் இல்ல! ப்ச்... புரியாதவனா இருப்பான் போல...'' என்று சமாதானம் சொல்லியவன், அத்துடன் நிறுத்தாமல்.

''ஆபீஸ் பக்கத்தில ஏதாவது ஹாஸ்டலுக்கு மாறிடேன்... விது? எதுக்கு அவ்வளவு தூரம் போயிட்டு போயிட்டு வரணும்?''

''அவன் திட்டினான்ங்கிறதுக்காகச் சொல்லலை...''

''தினம் ட்ராவல்லேயே கிட்டத்தட்ட நாலு மணி நேரம் போய்டுது...''

''அதனால... உடம்பும் கூடவே மனசும் அசந்தும் போய்டும் இல்லையா?''

''அப்புறம்... நீ ராத்திரில தனியா அவ்வளவு தூரம் போறதும் சேஃப்ன்னு எனக்குத் தோணலை... நீ பத்திரமா ஹாஸ்டல் போற வரைக்கும் எனக்கு டென்ஷனாவே இருக்கும்!''

''எதுக்கு... இதெல்லாம்? ஹ்ம்ம்.... பக்கத்திலேயே ஹாஸ்டல் பாரேன்...'' என்றான்.



அவனது முழு கருத்தையும் அறிந்து முடிக்கும் வரை, விதுபாலா குறுக்கிடவில்லை.

அவன் சொல்வதும் நியாயமே! ஆனாலும், அதிலிருந்த நியாயத்தை விடவும், அவன் சொன்ன ''நீ பத்திரமா ஹாஸ்டல் போற வரைக்கும் எனக்கு டென்ஷனாவே இருக்கும்!'' என்ற வார்த்தையில் தெறித்த அக்கறை கூடுதலாய் தித்திக்க, வேறு இடம் பார்க்கலாம் என்ற முடிவுக்கு வந்தாள், விதுபாலா.

அந்த வாரம் முழுதும், விதுபாலாவால் எங்குமே நகர முடியவில்லை. வேலை நெட்டி முறித்தது!

ஆனால், முதுகு ஒடிய இருந்த வேலையின் நடுவேயும் விதுவின் மனம் ஓர் இதத்தை உணர்ந்தது! அது, அவள் வேலை முடிந்து செல்லும் வரை பாலா அலுவலகத்திலேயே இருந்ததாலா? அவளது பசி அறிந்து, ''என்ன வேலைன்னாலும் அப்புறம் பார்த்துக்கலாம்... வா சாப்பிடலாம்'' என்று இழுத்துச் சென்றதாலா? அவள் அலுவலக ஊர்தியில் விடுதி செல்லும் வரை அவளுடன் கைப்பேசியில் பேசிக் கொண்டே வந்ததாலா? ''து... து... துதூக்கம் வருது'' என்று அவள் கூறினால், ''உன்னை யாரு தூங்க வேண்டாம்ன்னு சொன்னது... ஜஸ்ட் என்னோட காண்டக்ட்லேயே இரு... ஏதாவது பிரச்சனைன்னா எனக்குத் தெரியும்ல'' என்ற அவனது அக்கறையினாலா? மேலாளரின் சுடு சொற்களால் அவள் துவளும்போதெல்லாம், அவளைச் சிரிக்க வைத்ததாலா?

தெரியாத வேலையை அவள் செய்யச் சிரமப்படும் போது, தன்னாலான உதவியைச் செய்வதாலா? - ஏதோ ஒன்று விதுவுக்கு ஓர் சந்தோசத்தை விதைத்தது!

ஒரு வாரமும் இப்படியே கழிய, ஒரு நாள் மதியம் மூன்று மணிக்காய், பாலாவின் கணினியில் ''ஜி!'' என்ற செய்தி, விதுபாலாவின் பெயரைத் தாங்கி வந்தது.

பாலா ஒரு மீட்டிங்கில் இருந்தமையால், அவனால் உடனேயே பதில் கொடுக்க முடியவில்லை. அவன் தான் அந்த மீட்டிங்கின் ஒருங்கிணைப்பாளன் என்பதால் அவனது கணினியின் திரை எல்லாருக்கும் தெரியும்படி ப்ராஜெக்ட் செய்யப்பட்டு, பெரிய திரையில் மிளிர்ந்தது.

உள்அலுவலக மின்னரட்டையில், எப்போதுமே முதல் செய்தி மட்டும், திரையில் வலது மூலையில் தெரியும். வேண்டுமென்றால், அதை கிளிக் செய்து, செய்தியைப் படிக்கலாம். இல்லையேல், அதை அப்படியே விட்டுவிட்டால், தொடர்ந்து வரும் செய்திகள் திரையிடப்படாமல், வெறுமே செய்தி வந்ததற்கான அறிகுறியாய், மினிச் மினிச் என்று மட்டும் அது எரியும்.

அதனால், விதுவின் ''ஜி'' மட்டுமே பாலாவுக்குத் தெரிந்தது.

அவனது கணினி திரை அனைவருக்கும் தெரியும் என்பதால், பாலாவால் அதை கிளிக் செய்ய முடியவில்லை. அதனாலேயே, அவனால் அடுத்து வந்த செய்திகளைப் பார்க்க முடியவில்லை.

முதல் அழைப்பைத் தொடர்ந்து, ''எனக்கு அழுகையா வருது, ஜி'' என்று ஓர் செய்தி.

ஐந்து நிமிடம் கழித்து ''பிஸியா?'' என்று ஒரு செய்தி.

பின்னர், பத்து நிமிடத்தில் ''என் மேல கோபமா? ரிப்ளை பண்ணுங்க... ப்ளீஸ்'' என்று ஒரு செய்தி.

பதினைந்து நிமிடத்தில் ''ஏன் பேச மாட்டறீங்க? நான் ஏதாவது தப்பு பண்ணிட்டேனா?'' என்று ஒன்று.



''வேலையா இருக்கீங்களா, ஜி? ரொம்ப தொந்தரவு பண்றேனா?'' என்று அடுத்தது.

''எனக்கு உங்களை விட்டா யாரு இருக்கா...'' என்று கடைசி செய்தியை அடித்ததும் தான், விதுவுக்கு தனது வாக்கியத்தின் அர்த்தம் புரிந்தது.

ஒருமுறை அனுப்பியதை அழிக்கவும் முடியாத நிலையில் திணறிப் போனாள் விதுபாலா.

''என்ன நினைப்பில் அடித்தாய், பாலா? கொஞ்சமாவது யோசிக்க வேண்டாமா? அய்யோ என்ன நினைத்தானோ? கொஞ்சம் இடம் கொடுத்தால் தலை மேல் ஏறி உட்கார முயற்சிக்கிறாளே என்று எண்ணுவானோ? அப்பாவைக் கூட மறந்து, நீயும் தான் அப்படிச் சொல்லலாமா? என்ன நினைத்தானோ? என்ன நினைத்தானோ?'' என்ற பதைபதைப்பிலேயே உழன்று கொண்டிருந்தவளின் விழிகள்.

நொடிக்கொரு முறை, மின்னரட்டையின் திரையையே பார்த்துக் கொண்டிருந்தன.

அவளது சோதனைக்கு என்று, அரை மணி நேரம் கடந்த பின்னரும் பாலா பதில் கொடுக்கவில்லை.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், அவனது இருக்கைக்கே சென்று பார்த்து விடலாம் என்று அவள் எழ, ''பப்... விது... ஒரு அஞ்சு நிமிஷம் வெளிய போய் பேசலாமா?'' என்ற கேள்வியுடன், அங்கே விஜயம் செய்தான் பாலமுருகன்.

தன் இடத்திற்கே அவன் வருவான் என்று எதிர்பார்த்திராத விதுபாலாவுக்கு, திகைப்பே மிஞ்ச, வார்த்தைகளின்றி வெறுமே தலையசைத்தாள்.

அவளிடமிருந்து பதிலே வராமல் போகவும் ''ரொம்ப கோபமா இருக்கீங்களா, மேடம்? மீட்டிங்ல இருந்தேன்டா... அதான்!'' என்றான் அவன் சமாதானமாய்.

புதிதாய் வந்து விழுந்த, அவனது ''டா''வில் மனம் காற்றாய் மாறி மாறிப் பறக்கத் தான் செய்தது! ஆனாலும்...

மனதில் ஆயிரம் சஞ்சலங்கள் ஊஞ்சலாட, அவனுடன் நடந்தாள் விது.

இருவருக்கும் ஆப்பிள் ஜூஸ் வாங்கியவன், அலுவலகம் அமைந்திருந்த வளாகத்தில் இருக்கும் தோட்டம் நோக்கிச் சென்றான்.

ஓய்வுக்காக போடப்பட்டிருந்த பெஞ்ச் ஒன்றில் அமர்ந்தவன், ''உட்காரு... விது!'' என அவளுக்கும் கை காட்டினான்.

அவள் அமர்ந்து, இரு வாய் ஜூஸை குடித்து முடித்ததும் ''என்னாச்சு? எதுக்கு அழுகை?'' என்றான் மெல்ல.

வினாடிக்கும் மேலாய் அவனது விழி பார்த்தவள், சட்டென தாழ்த்திக் கொண்டாள்.

''சொல்லும்மா... என்ன பிரச்சனை? சொன்னாதானே தெரியும்! சொல்றதுக்குத் தானே எனக்கு பிங் பண்ணினே!? அப்புறம் என்ன?'' என உந்தினான் பாலா.

''ஹ... ஹ... ஹஹாஸ்டல் பார்க்கப் போணும்...''

''போக வேண்டியதுதானே?''

''எ..எஎ... எங்க மேனேஜர் விட மாட்டறாரு... நாநாநா... எல்லா வேலையும் முடிச்சிட்டேன்... ஆஆஆனா வேணுமே வ...வவ... வேலை தந்துட்டே இருக்காரு...''

''அவரு எதுக்கு உன்னை விடணும்? வார நாள்ல முடியலைன்னா வீக் எண்டுல பாரு...''

''ப்ச்... ஊ..ஊஊ... ஊருக்குப் போக வேண்டாமா? அப்பாவைப் ப...ப்ப... பாக்கணும்ல?'' என்றவள், மேலும் பேசினாள்.



''வ... வ... வேலை முடிச்சிட்டா விட வேண்டியது த...த...த.. தாதானே... வேணும்னே பண்றாரு'' என்றாள் வருத்தத்துடன்.

''சரி! மூக்கைச் சிந்தி கீழ போடாத... மூஞ்சில உருப்படியா இருக்கிறது அது ஒண்ணு தான்... அதுவும் போச்சுன்னா பார்க்க சகிக்காது...'' என்றவன், அவள் முறைக்கவும்,

''ஓகே! ஓகே! மொக்கை போடலை... மேட்டர்க்கு வரேன்...''

''இப்ப என்ன? உனக்குத் தங்கறதுக்கு ஒரு நல்ல இடம் வேணும் அவ்வளவு தானே?''

''ஆபீஸ்க்குப் பக்கத்தில இருக்கணும்...''

''வாடகை கம்மியா இருக்கணும்...''

''பாதுகாப்பா இருக்கணும்...''

''பஸ் ஸ்டாப்புக்குப் பக்கமா இருக்கணும்... அப்போ தான் ஊருக்குப் போக ஈஸியா இருக்கும்...''

''இதானே உன்னோட கண்டிஷன்ஸ்?'' என்று கேள்வியாய் நிறுத்தினான்.

''ஆம்'' என்பது போல் தலையாட்டியவள், ''உ....உ... உஉங்களுக்கு ஏதாவது இடம் தெரியுமா? நல்ல இடமா?'' என்றாள் ஆர்வமாக.

''ஹோ! தெரியுமே! ரொம்ப நல்ல இடம்!''

''பாரதியார் பாட்டில வர மாதிரி... காணி நிலம்... சுத்தி தோட்டம்... சுத்தமான காத்து... குளுமையான சூழல்...''

''முக்கியமா நல்ல சாப்பாடு...''

''காவலுக்கு ரெண்டு தடியனுங்க...''

''ஆபீஸ்க்குக் கூட்டிட்டுப் போய், கூட்டிட்டு வரதுக்கு ஒரு டிரைவர்! அதுவும், சம்பளமில்லாத டிரைவர்!''

''ஹே... முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேனே!''

''வாடகையே இல்லை! ஒரு பைசா கூட இல்லை!''

''ப்ரீ! ப்ரீ! ப்ரீ!''

கத்திரிக்காய் வியாபாரி போல், கூவிக் கூவி இடத்தை விளம்பரப்படுத்தியவனை விநோதமாய் பார்த்தவள்,

''அ... அஅ... அப்... அப்படியொரு இடமா? என்ன?'' என்று அதீதமாய் குழம்பிப் போன முகத்துடன்.

''ஹய்யோ! ஸ்ட்ரீட் லைட்டா இருக்கியே... தேவையான நேரத்தில எரியுறது இல்லை... தேவையில்லாத நேரத்தில பிரகாசமா எரியுறது...'' என்று நொந்து கொண்டவன்,

''அந்த இடம் - எங்க வீடு! அந்த ரெண்டு தடியனுங்க - நானும் எங்க அண்ணன் செல்வாவும்... பாவம் அப்பா, அவருக்கு அறுபது வயசாகிடுச்சு இல்ல... அதான் அவரையும் தடியனுங்க லிஸ்ட்ல சேர்க்காம லூஸ்ல விட்டுட்டேன! அப்புறம், அந்த டிரைவர் - அடியேன் பாலா தான்! ஹான்... அப்புறம் அந்த சூப்பர் சமையலுக்கு சொந்தக்காரங்க - ரமணிம்மாவும் அண்ணியும்! சாப்பாடு அப்படி இப்படித்தான் இருக்கும்... சும்மா ஒரு ப்ளோக்காக சொல்லிட்டேன்...'' - அவன் பேசிக்கொண்டே போக,

''இ...இ... இருங்க இருங்க! நீங்க பாட்டுக்குப் பேசிட்டே போறீங்க? உ...உ...உஉங்க வீட்டில வந்து நா எப்படி இருக்க முடியும்? ந...ந...நந... நடக்கிற காரியமா?'' என்று தலையில் அடிக்காத குறையாக அவனிடம் சலித்துக் கொண்டாள் விதுபாலா.

''ஏன் நடக்காது? இல்ல ஏன் நடக்காதுன்னு கேட்கிறேன்...'' என்று அவளது சலிப்புக்கு எதிர் பதமாய் குரலை உயர்த்திப் பேசியவன்,



வில் வடிவ விழியாளின் கருவிழிக்குள் கண் பதித்து, ''என்னோட பொண்டாட்டியா... அதாவது திருமதி. விதுபாலா பாலமுருகனா எங்க வீட்டுக்குள்ள வந்தா, நான் சொன்னதெல்லாம் நடக்கும்தானே?'' என்றான் ஆத்மாவிலிருந்து வெளிப்பட்டக் குரலில்.

# 11

''எ... எஎ... என்னது?'' - இது போல் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு... ம்ஹூம் ஆசை மனதினுள் இருந்தபோதும், அதை அவன் வெளியிட்டபோது திகைத்துத் தான் போனாள், விதுபாலா.

திகைப்பில் வார்த்தைகள் வராமல் அவள் விழித்து நிற்க,

''எதுக்கு இப்படியொரு ரியாக்சன்? க்ளோஸ் மௌத்... க்ளோஸ் தி மௌத், ஐ சே!'' என்றான் அவன் உடைந்த ஆங்கிலத்தில், வேண்டுமென்றே.

அவனது அதட்டலில், பட்டிக்காட்டான் போல் வாய் பிளந்து நிற்கிறோமோ என்ற சந்தேகம் எழும்ப, திறக்காத வாயை மேலும் இறுக மூடினாள்.

வெளிப்படையாய் தெரிந்த அவளது செயலில் வாய் விட்டுச் சிரித்த பாலா, ''பப்லு...'' என்றான் செல்லமாக.

அவனது முந்தைய வார்த்தைகளிலிருந்தே வெளி வராத விதுபாலாவுக்கு, இப்போதைய பேச்சு சுத்தமாகப் புரியவில்லை ''எ...எஎ... என்ன சொல்றீங்க?'' என அவள் மீண்டும் குழம்ப,

''ம்ஹூம்'' என மண்டையை வேகமாய் மறுத்து ஆட்டியவன்,

''இன்னொரு வாட்டி, வாயை மூடித் திற... விது! பார்க்க அழகா இருந்துச்சு!'' என்றான் சிறு பையனின் ஆர்வத்துடன்.

''ச்...ச்...சு... சும்மா விளையாடாதீங்க... எதில வ...வவெ... வெவெளையாடறதுன்னு இல்ல...'' என்று அவள் கடுப்படிக்க,

''யாரு விளையாடினா? சத்தியமா நான் விளையாட்டுக்குச் சொல்லலை... மனசார உணர்ந்து சொல்றேன்... ஐ லவ் யூ... இதைத்தான் வேற விதமா சொன்னேன்... அது உன்னோட ட்ரீ மண்டைக்கு ஏறலைன்னா நான் என்ன செய்யட்டும்?'' என்றான் தோளைக் குலுக்கி.

அவனது ''ட்ரீ'' மண்டையின் ஆராய்ச்சியில் சற்று நேரம் இறங்கியிருந்தவள், ''ப்ச்'' எனத் தன்னைத் தானே மண்டையில் குட்டிக் கொண்டு,

''இது வ...வவெ... வெவெளையாட்டு இல்ல! வாழ்க்கை!''

''பழைய டயலாக். புதுசா ஏதாவது ட்ரை பண்ணு, விது!'' எனக் கூறி அவளை முறைக்கச் செய்தவன்,

''எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு... ரொம்பவே பிடிச்சிருக்கு! உனக்கும் என்னைப் பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும். பிடிச்சவங்க ரெண்டு பேருமா சேர்ந்து, வாழ்நாள் முழுசும் வாழ்க்கையைப் பிடிச்ச மாதிரி வாழ்வோமே? என்ன சொல்றே?''

''.........''

''என்ன பதிலையே காணோம்? எப்படியும் உனக்கும் கல்யாணம் ஆகும்... எனக்கும் கல்யாணம் ஆகும். அதை ரெண்டு வேற வேற கல்யாணமா பண்ணாம நம்ம ரெண்டு பேரும் ஒரே கல்யாணமா பண்ணிக்கலாம். சரியா?''

''எ... எஎஎ... என்னமோ பட்டம் விடுற மாதிரி ஈஸியா ப...பப்ப்ப்... பேசுறீங்க?''

''பட்டம் விடுறது கூட கஷ்டம் தெரியுமா? கல்யாணம் ஈஸி தான்... பரஸ்பரம் பிடிச்சிருந்தா!?'' என்ற கொக்கியுடன் நிறுத்தினான்.

''இ...இஇஇ... இதுல நீங்களும் நானும் மட்டும் சம்மந்தப்படலை... உ...உஉஉ... உங்க குடும்பம், என்னோட குடும்பம்... எல்லாமே...''

''எங்க வீட்டில எந்தப் பிரச்சனையுமில்லை...' - அனாவசியமாத் தோளைக் குலுக்கினான் பாலா.

அவனை ஏற இறங்கப் பார்த்தவள், ''ர...ரரர... ரமணிப் பாவை மறந்திட்டுப் பேசாதீங்க...''

''ஹே! அவரு பார்க்கத்தான் டெரரு... பக்கா டம்மி பீஸ் தெரியுமா?'' என்றவனின் முகம், அவருக்கா பயப்படுகிறாய் என்பது போன்ற உணர்ச்சியை அள்ளிக் கொட்டியது.

தொடர்ந்து ''செல்வாவும் அண்ணியும் லவ் மேரேஜ் தான் தெரியுமா? அதுக்கு முதல்ல ஒத்துக்கிட்டது அப்பா தான்... அம்மா பார்க்க டம்மியா இருந்தாலும் அவங்க தான் கொஞ்சம் மக்கர் பண்ணினாங்க.. அப்பா தான் அம்மாவையே சமாதானம் பண்ணி கல்யாணத்துக்கு ஒத்துக்க வைச்சார். இப்ப என்னடான்னா ரெண்டு பேரும் சேர்ந்து, என் மண்டையை உருட்டுறாங்க. உன்னைக் கொண்டு போய் விட்டேன்னு வச்சுக்கோ... நான் கொஞ்சம் தப்புச்சுக்கலாம்'' என்றான் விலாவாரியாக.

''உ...உ.உங்க வீடு சரி... எங்க வ...வ...வீடு?''

''உனக்குப் பிடிச்சிருக்குன்னா உங்க அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டாங்கன்னு தான் எனக்குத் தோணுது. இத்தனை நாள் வரைக்கும், உனக்கு சப்போர்ட்டிவா இருந்தவர், இந்த விஷயத்தில உன்னோட விருப்பத்தை மீறி எதுவும் செய்வாருன்னு நினைக்கிறே?'' எனக் கேள்வியை அவளிடம் திருப்பியபோதும், ''கண்டிப்பாக மாட்டார்'' என்ற பதிலை அவனது தொனி தாங்கியிருந்தது!

''எ...எஎ... எல்லாம் சரி... நா... நாநான்?''

''சும்மா காமெடி பண்ணாத, விது? என்ன நீ? உனக்கு என்னைப் பிடிக்கலை? நிஜமா பிடிக்கலை? பிடிக்கலையா? ஹ்ம்ம் பிடிக்கலையா? எங்க சொல்லு... பிடிக்கலைன்னு சொல்லு? சொல்லு... பிடிக்கலைன்னு என்னைப் பார்த்துச் சொல்லு? ஹ்ம்ம்?'' ஒவ்வொரு ''பிடிக்கலை''க்கும், அவளை நோக்கி ஓரோர் அடியாய் எடுத்து வைத்தான், பாலமுருகன்.

அவன் தன்னை நோக்கி முன்னேறுவதைக் கண்டதும், முகம் முழுதும் சூடாக, கன்னம் சிவக்க, ''ஷ். என்ன இது? ஆபீஸ்ல போய்?'' என்றாள் விது, முணுமுணுப்பாக.

அப்போதும், விது கவனிக்கவில்லை. ஆனால் பாலா கவனித்தான்! விதுவிற்குத் திக்கவில்லை!

முகத்தில் ஓர் மர்ம முறுவல், வெற்றியின் களிப்புடன், காதலின் தாபத்துடன் வாடாமலராய் அரும்பி நிற்க, அவளைப் பார்த்து லேசாய் கண் சிமிட்டினான் பாலா.

அவன் நின்று விட்டதை உணர்ந்ததும் தான் விதுவுக்கு மூச்சே வந்தது. சட்டென, திரும்பி நின்று ''ப்...ப்ப்பபோலாமா?'' என்றாள் அவள்.

''ஹ்ம்ம் போலாம். ஆனா, நீ இன்னும் பதிலே சொல்லலையே?'' என்றபோது பாலாவின் உதடுகள் உல்லாசமாய் விரிந்தன.



''ச்...ச்சும்மா நினைச்ச உடனே சொல்ல முடியுமா?''

''அப்போ... அஞ்சு நிமிஷம் கழிச்சு சொல்லு.''

'ரொம்பத் தான் தாராளம்' என்று மனதினுள் எண்ணியவள், ஒன்றும் சொல்லாமல் இரண்டடி முன்னே எடுத்து வைத்தாள்.

''சரி விடு! எப்ப இருந்தாலும் நீ சரின்னு தான் சொல்லப் போறே... இதை இன்னைக்கு சொன்னா என்ன? நாளைக்கு சொன்னா என்ன?'' என்று விட்டேறியாய் கூறிவிட்டு, அவளுக்கு முன்னே எட்டு வைத்து நடக்க ஆரம்பித்தான் பாலா.

''நா... நா... ஒண்ணும்...'' என்று தடுமாறியபோதும், மறுத்து எதுவும் கூறாமல், கூற மனமில்லாமல் அவனது பாதம் பின்பற்றி நடந்தாள் விது.

காதலின் சாரலில் நனைந்தபோதும், விதுவின் பிரச்சனையை (அதாவது விடுதி பிரச்சனையை) பாலா அப்படியே விட்டுவிடவில்லை.

இரண்டே நாட்களில், ''நம்ம வீட்டுக்கு ரெண்டு வீதி தள்ளி, ஒரு நல்ல ஹாஸ்டல் இருக்கு. நானும் ரமணிம்மாவும் போய் பார்த்திட்டு வந்துட்டோம்... மாசம் ஐயாயிரம் வாடகை... இரண்டு மாசம் அட்வான்ஸ்... ஏ.சி. ஃப்ரிட்ஜ்... தனித்தனி கப்போர்ட்... மூணு வேளை சாப்பாடு... ரெண்டு வேளை பால்... சன்டே நான்-வெஜ்... துணி துவைக்க எக்ஸ்ட்ரா சார்ஜ்ன்னு நல்லாவே இருக்கு. என்ன சொல்றே? வந்து பார்க்கிறியா?'' என்றான் அவளிடம்.

கேள்வியாய் பார்த்த விதுவின் மூக்கை ஓர் விரலால் இப்படியும் அப்படியுமாய் தட்டியவன், ''என்னடா இவன்... வீட்டுக்கு வா... பொண்டாட்டியா வா... அப்படி

இப்படின்னு பினாத்தி ரெண்டு நாள் கூட ஆகலை... இப்ப தனி ஹாஸ்டல் பார்க்கிறானேன்னு உனக்கு மண்டை காயுமே? காயுதா?'' எனக் கேட்கவும்,

ஒரு முறை கூசிச் சிலிர்த்த விது, தன்னையுமறியாமல் மண்டையை ஆமோதிப்பாய் ஆட்டி விட்டாள்.

''ஆகா! அப்போ... கல்யாணம் பண்ணிக்கலாமா? இன்னைக்கா நாளைக்கா? எப்போ சொல்லு? நீயே சொல்லு!'' என்று குதூகலித்தான்.

''எல்லாமே அவசரம் தான் சாருக்கு!'' என்று எண்ணிய விதுவின் இதழோரம், ஓர் புன்னகை வந்து வந்து போனது.

''சிரிச்சா என்ன அர்த்தம்? ஓகேன்னா? என்ன விது சொல்றே?''

''ஆ...ஆஆம்... ஆமா சொல்றாங்க... சொரக்காய்க்கு உப்பில்லைன்னு.''

''இன்னைக்கு ரமணிம்மா சமைச்சு அனுப்பினதுக்குப் பேரு... சொரக்கா இல்ல. பரங்கிக்காய்! காயே கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு, உங்க சாப்பாடு கேவலமா இருக்குன்னு உங்க ரமணிம்மாகிட்ட சொல்லிடுறேன்...''

''அய்...ய்ய்யோ...''

''சரி சரி! கூல் இட்! எப்போ ஹாஸ்டலைப் போய்ப் பார்க்கலாம்...''

''அ...அஅ... அஞ்... அஞ்சாயிரம் ஜாஸ்தியா இருக்கே? நா இ...இஇ... இப்போ வெறும் ரெண்டாயிரத்து முன்னூறு தான் கொடுக்கிறேன்...''

''அந்த ஒட்டை ஹாஸ்டல்ல நீ தங்குறதுக்கு, அவனுங்க தான் உனக்கு எக்ஸ்ட்ரா ஆயிரம் ரூபா தரணும். அது மட்டுமில்லாம, உன்னால தான் அந்த ஹாஸ்டலே ஓடுதுன்னு நினைக்கிறேன்... அதுக்கு நன்றிக் கடனா ஒரு நூறு இருநூறு போட்டுக் கொடுக்கச் சொல்லு!'' என்றவன்,



''யோசிச்சுப் பாரு, சாப்பாடு எடுத்திட்டு வந்தாலும், பாதி நேரம்... வெளிய தான் சாப்பிடுறே. அது போக, பஸ் செலவு வேற... முக்கியமா ட்ராவல் டைம்... உடம்பு அசந்து போகுது இல்லையா? அதையெல்லாம் கம்பேர் பண்ணும் போது, இது பெட்டர்மா... ஒரு ஆத்திர அவசரம்ன்னா நம்ம வீடும் பக்கத்தில இருக்கும்... முக்கியமா, எனக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும். ப்ளீஸ் விது... சொன்னாக் கேளு'' என அவன் கூறியபோது, அவனது கூற்றிலிருந்த உண்மையை விடவும், குரலிலிருந்த அக்கறை அவளைத் தலையாட்ட வைத்தது.

விடுதி மாறிவிட்ட போதும் ''இது நிரந்தரம் இல்லை... விது. நம்ம வீடு தான் நிரந்தரம்... சும்மா யோசிச்சுட்டே இருக்காம... சீக்கிரம் அங்க வர வழியைப் பாரு'' என்று தன் கல்யாணப் ப்ரோபோசலை நினைவு படுத்திவிட்டே போனான்.

ஆனால், அவள் அந்த வீட்டினுள் வரும்போது, அவனது மனம் இதே சந்தோஷத்துடன் இருக்கப் போவதில்லை என்பதை அவன் அறிவானோ?

விதுபாலா விடுதி மாறிய பின்னர், தினமும் அலுவலகம் போவதும் வருவதும் பாலாவுடன் என்றானது. ஒரு சிறு மாற்றத்துடன் - அதாவது காரில்! புல்லட்டில் அல்ல!

ஒரு நாள், விடுதி வாசலில் நின்றிருந்த விது, பாலாவின் கார் வந்ததும், எப்போதும் போல் முன்னிருக்கையில் ஏறி அமர்ந்தாள்.

அவள் அமரக் காத்திருந்தவன் போல், ''எப்படி இருக்கீங்க மேடம்?'' என்றான், சிறு புன்னகையுடன்.

கடந்த இரண்டு நாட்களாக, பாலா ஊரில் இல்லை. வேலை விஷயமாக பெங்களூர் சென்றிருந்தான்.

அதனால் கேட்கிறான் என்றெண்ணிய விது, ஓர் விரிந்த புன்னகையுடன் ''ர...ர...ர... ராணி மாதிரி இருக்கேன்'' என்றாள்.

''அப்புறம் நாங்க என்ன கிழிஞ்ச கோணி மாதிரியா இருக்கோம்?'' என்று சிறு தொய்வு கூட இல்லாமல், அவன் பதிலளித்ததும், விதுவால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.

அவள் மனம்விட்டு சிரிப்பதை ரசனையுடன் பார்த்திருந்தவனின் மனதைப் பிரதிபலிப்பது போல், ''ஒண்ணும் புரியல... சொல்லத் தெரியல... கண்ணு முழியில கண்ட அழகில... ஆச கூடுதே!'' என்ற திரைப்படப் பாடல் சி.டி. ப்ளேயரில் ஓடியது.

தாங்க முடியாதவனாய் ''ஷ்... அப்பா...'' எனக் கூறி, கண்ணை இறுக மூடி, அவன் திறக்க,

''அ.. அஅஅய்யோ... க்க்... ககார்... கார்... கார்...'' எனக் கத்திக் கொண்டிருந்தாள் விது.

''ஷ்! கத்தாதே... கண்ணைத் திறந்துட்டேன்...'' என்று சுதாரித்து ஒட்டியவனிடம்

''நி... நிநிநீங்க... ஏன் புல்லட்ல வரதில்ல?'' என்றாள் அவன் புறமாய் திரும்பி.

''உன்னால தான்!''

''எ...எ..எஎன்னாலயா?''

''ஆமா... மேடம் தான் என்னோட புல்லட்ல வர மாட்டீங்களே... அன்னைக்கு அவ்வளவு யோசிச்சியே... அதான் கார் எடுக்கிறேன். இல்லைன்னா எனக்கு புல்லட் தான், டிரைவ் பண்ண ரொம்பப் பிடிக்கும்'' என்றான் அவன்.



''நா:..நாநாநா... வாயைத் திறந்து பு...புபுபுல்லட்ல வரமாட்டேன்னு சொன்னேனா? எனக்கும் புல்லட்ல போக ஆசை தா...ன் புல்லட் ஓட்ட இல்லை... பின்னாடி உட்கார்ந்து போக...'' என்றபோது, குரலில் தென்பட்ட ஆசையுடன் போட்டிப் போட்டுக் கொண்டு முகத்தில் வெட்கம், மணற்பரப்பில் கொட்டப்பட்ட தண்ணீராய் வேகமாய் பரவி, அழகு கூட்டியது!

அரை வினாடிக்கும் மேலாய் விதுவின் முகம் பார்த்த பாலாவின் கைகளில் கார் தடுமாறி, பின்னர் நிலை பெற்றது.

அடுத்த சில நிமிடங்களுக்கு அங்கே நிலவிய அமைதியின் சாரம் - காதல் மட்டுமே என்பதை சொல்லவும் வேண்டுமா?

ரம்மியமான அந்த அமைதியைக் கலைத்தவன் பாலாவே!

''இன்னைக்கு சாயந்திரம் எங்கேயாவது வெளிய போலாமா விது? கோவில்... பீச்... மால்... எங்கயாவது?'' என்றான் விதுவின் கைமீது கரம் வைத்து.

''ஹ்ம்ம்...'' என்றதைத் தவிர விதுவிடம் வேறு வார்த்தையில்லை.

''உனக்கு, எத்தனை மணிக்கு வேலை முடியும்?''

''இ...இ:... இன்னைக்கு டீம் அவுட்டிங்... எ...எல்... எல்லாரும் மூணு மணிக்கே கிளம்பிடுவாங்க. அப்புறம் ஃப்... ஃப்... ஃப்... ஃப்ரீதான்...''

''நீ அவுட்டிங் போலையா?''

''ம்ஹூம். ஒ.. ஒஒஒரு மாதிரி இருக்கு...''

''என்ன ஒரு மாதிரி... ஒன்பது மாதிரி இருக்கு? எதுக்கு டீம் அவுட்டிங்ன்னு வைக்கிறாங்க... வேலை டென்ஷன் எல்லாம் மறந்துட்டு, ரிலாக்ஸ் பண்ணிட்டு வரணும்ன்னு தானே? அதுக்கு ஏன் போகலை?''

''எ... எ... என்னை யாருக்குமே ப்..ப்..ப்பிடிக்காது... போனா த... ததனியா இருக்க மாதிரி இருக்கும்...''

''இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் போனா... தனியா இருக்க மாதிரி தான் இருக்கும். நீயா தான் டீம்மோட மிங்கிள் பண்ணனும். சும்மா... ஒரு கூட்டுக்குள்ளேயே இருக் கிறதா? இந்த மாதிரி கார்பொரேட் கம்பெனில எல் லாம்... சும்மா நம்ம வேலையை மட்டும் செஞ்சிட்டு, யார்கிட்டயும் பேசாம இருந்தா பொழைக்கத் தெரியாத வன்னு முத்திரை குத்திடுவானுங்க... நாலு பேரோட சோஷியலா பழகணும்...''

''இ...இஇல்ல...''

''என்ன இல்ல? வாழ்க்கை பூரா இப்படியே ப்ரோக் ராமரா காலத்தை ஓட்டிடலாம்ன்னு நினைப்பா? ஒரு ஒரு படியா மேல வரவேண்டாம்? இப்படி, எதிலையும் கலந் துக்காம இருந்தா, எப்படி மேல வரது?'' என்றான் கடுமையாக.

அதற்குள் அலுவலகம் வந்துவிட, ''இன்னைக்கு எனக்கு ஒரு கிளைன்ட் விசிட் இருக்கு. நாலு மணி வரைக்கும் நான் பிஸி... சாப்பாடு கூட அவங்களோடதான். அதனால, நீ டீம் அவுட்டிங் போய்ட்டு வந்ததும் மீட் பண்ணலாம். என்ன சரியா? ஏழு மணி... எட்டு மணிக்கு வந்திடுவே தானே?'' என்றான் விதுவைக் கேள்வியாய் நோக்கி.

''இ... இஇ... இல்... இல்ல நா போலை... ப்ளீஸ்... ஒரு ம..மம... மாதிரி இருக்கும்...''



''ஒரு மாதிரியும் இருக்காது... ரெண்டு மாதிரியும் இருக்காது... நல்ல மாதிரியா தான் இருக்கும். நீ போற! அவ்வளவுதான்! அங்க போகலைன்னா... என்னோட பேசாத!'' என்றுவிட்டு, அங்கிருந்து வேகமாய் நகர்ந்து விட்டான்.

இந்த வார்த்தைக்காக, இந்த அதட்டலுக்காக, இந்தக் கட்டளைக்காக, இந்த மிரட்டலுக்காக, தான் வாழ்நாள் முழுதும் வருத்தப்படப் போவது தெரிந்திருந்தால், அதைக் கூறியிருக்க மாட்டானோ?!



# 12

பாலா சொல்லிவிட்டபோதும், விதுவுக்கு அவுட்டிங் செல்ல விருப்பமே இல்லை.

அவளது ப்ராஜெக்ட்டில் அனைவருமே ஆண்கள். ஒரே பெண்ணான அவளை... அதுவும் திக்கு வாயான அவளை எப்போதுமே ஒரு பொருட்டாய் மதித்ததில்லை.

இப்போதுகூட, டீமில் இருக்கிறாளே என்ற ஒரே காரணத்திற்காக அவளுக்கும் அந்த அவுட்டிங்கிற்கான அழைப்பு வந்திருந்தது. ஓர் சம்பிரதாயம்! அவ்வளவே!

அவள் வருகிறாளா இல்லையா என்று கூட யாரும் கேட்கவில்லை. வரமாட்டாள்... வரவேண்டாம் என்ற எண்ணம் போலும்! விதுவுக்குமே, அவர்களுடன் போக மனமில்லை! அவர்களுடன் சென்று மனதைத் தனிமை படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, பாலாவுடனோ மதிய

உணவு செட் உடனோ நிம்மதியாக நேரத்தைக் கழிக்கலாம் என்ற எண்ணத்தில் இருந்தாள் அவள்!

ஹ்ம்ம். ஆயாசமாய் வந்தது விதுவுக்கு! பாலா சொல்வதும் சரி தான்... கூட்டுக்குள்ளேயே இருக்கக் கூடாது தான்... ஆனாலும்... ஆனாலும்... மனம் நிலைப் பட மறுத்தது.

பாலாவின் வார்த்தைகளில் தெறித்த உண்மையை ஒத்துக் கொள்ளவும் முடியாமல், ஒத்துப் போகவும் முடி யாமல் தவித்தவளுக்கு, அவனது "அங்க போகலைன்னா என்னோட பேசாத" என்ற வார்த்தை, நெஞ்சை நெருடிக் கொண்டே இருந்தது.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், பாலாவின் கைப்பேசிக்கு அழைத்து விட்டாள்.

முதல் மணியிலேயே, அவன் எடுத்து விடவும், மன தினுள் பரவிய நிம்மதியை அவளால் தீர்க்கமாய் உணர முடிந்தது.

"சாரி. ஒன் செகண்ட்... ஐ வில் பி பேக்" என்று அவன் சொல்வதும், வேகமாய் அவன் வெளியே வருவதும், மறுமுனையில் இருந்தவளுக்குத் தெளிவாகக் கேட்டது.

"என்ன விது? சீக்கிரம் சொல்லு! கிளையன்ட் கூட பிரேக்ஃபாஸ்ட் சாப்பிட்டுட்டு இருக்கேன்..."

"இ...இஇல்ல... அந்த அவ்...அவ்அவுட்டிங்..."

"என்ன அதுக்கு? போன்னு சொன்னேனே..."

"இ...இ...இல்ல... எல்லாரும் ஜென்ட்ஸ்... நா...நாநாநா மட்டும் தான் பொண்ணு..." என விது இழுக்க,

"எந்தக் காலத்தில இருக்கே விது, நீ? அதுவும், ஒரு ஐ.டி. கம்பெனில வேலை பார்த்துக்கிட்டு நீ பேசுறது எனக்கு ஆச்சரியமா இருக்கு?" என்று அதட்டியவன்,



"சும்மா எதுவும் குப்பைக் காரணத்தைச் சொல்லிக் கிட்டு போகாம இருக்க வழி பார்க்காத! சொல்லிட்டேன்! சரி வைக்கிறேன்!" என்று அவளது பதிலை எதிர்பார்க் காமல் வைத்து விட்டான் பாலமுருகன்.

அதன் பின்னர், இரண்டு முறை விது அழைத்தும் அவன் எடுக்கவில்லை.

மனம் சோர அமர்ந்திருந்தவளிடம் "நீங்க வரலையா?" என்று அவளது ப்ராஜெக்ட் மேட் ஒருவன் கேட்டான்.

அது வாய் வார்த்தைக்காக கேட்கப்பட்டது என்பது புரிந்தும், பாலாவின் கோபத்தை... வார்த்தையை மனதில் வைத்து, "ம்ம்.. வ...வவரேன்" என்று தலையாட்டி வைத்தாள் விதுபாலா.

"ஹய்யோ! போணுமே! போணுமே!" என்ற பரி தவிப்பிலேயே, மதிய உணவு கூட ஒழுங்காக உள்ளே செல்லவில்லை விதுவுக்கு.

கவனித்துவிட்டு கேட்ட ரேகாவிடம், "இ...இஇ.. இன்னைக்கு அவுட்டிங் போறோம். ஈ.சி.ஆர்ல ஒ..ஒ..ஒரு ரிசார்ட்!" என்றாள் விது, வருத்தமாக.

"ஹை! அவுட்டிங்கா? அதுக்கு எதுக்கு இப்படி அழுது வடியுறே?" என்று ரேகாவும்,

"நாங்கெல்லாம் அவுட்டிங்ன்னா... அன்னைக்கு முழு சும் வேலை பார்க்காம ஜாலியா சுத்திட்டுத் திரிவோம் தெரியுமா?" என ஒருவனும்,

"நைட் டின்னர் போறோம்ன்னா... இவனெல்லாம் முதல் நாள் ராத்திரில இருந்தே சாப்பிடாம இருப்பான் தெரியுமா?" என மற்றொருவனும்,

"ஹோட்டல் காரனே மிரண்டுடுவான்.. டேய்... அறநூறு ரூபாயைக் கொடுத்திட்டு ஆறாயிரம்

ரூபாய்க்குத் திங்குறீங்களேன்னு...'' என இன்னொரு வனும் கூற,

அவரவர் சென்ற அவுட்டிங் பற்றிய கதைகள் முழு வீச்சுடன் களத்தில் இறங்கி,

''நாம் தான் தேவையில்லாமல் பயப்படுகிறோமோ? போய்த் தான் பார்ப்போமே? என்னவாகிவிடும்?'' என்று விதுவின் மனதை சமன் படுத்தியது.

மூன்றரை மணியளவில், அலுவலக வாசலிலிருந்து கிளம்பிய வேனில் ஏறி அமர்ந்தபோதும், அன்றைய தினம் அவளது வாழ்வையே புரட்டிப் போடப் போகிறது என்பதை அவள் அறியவில்லை!

வண்டி கிளம்பிய பின்னர், ஒரு முயற்சியாய் பாலாவுக்கு அழைத்தாள் விது. ம்ஹூம். எடுக்கவில்லை.

சோர்ந்த மனதை, ''கிளியன்ட் மீட்டிங்கில் இருப்பான்'' எனக் கூறி சமாதானப்படுத்தி, உற்சாகமூட்ட முயன்றாள்.

வண்டி சென்னையை விட்டு விலகி, கிழக்குக் கடற்கரைச் சாலையில் பயணிக்க ஆரம்பித்ததும், தந்தைக்கு அழைத்தாள்.

''என்ன பாலாம்மா? எப்படிடா இருக்கே?''

''ந...ந..நல்லா இருக்கேன்பா... நீங்க எ...எளங்க இருக்கீங்க? கடையிலேயா?''

''ஆமாடா. வேலையெல்லாம் நல்லா போகுதா? எப்படா இங்க வர? அப்பாக்கு உன்னைப் பார்க்கணும் போல இருக்கு...''

''இ...இ... இந்த வாரம் வரேன்பா... பாலா டிக்கெட் போட்டுக் கொடுத்திருக்காங்க. அ...அஅ... அன்ரிசர்வ்ட்ல வரக் கூடாதுன்னு கோ... ஒ...ஒகோ... கோச்சுக்கிட்டாங்க.''



''நல்லதுடா... நானும் எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்..., காசைப் பார்த்துக்கிட்டு. அன் ரிசர்வ்ட்ல வராதன்னு... நிக்கக் கூட இடமில்லாம பாத்ரூம் பக்கத்தில எல்லாம் உட்கார்ந்திட்டு வரணுமா பாலா? உன்னை விட கம்மியா சம்பாதிக்கிற புள்ளைங்க எல்லாம்... எப்படி சொகுசா இருக்குதுங்க தெரியுமா? நல்லவேளை, அவரு சொல்லியாவது கேட்டியே!'' என்றார் தந்தை நிம்மதியாக.

மகள் வெறுமனே ''உம்'' கொட்டவும்,

''இங்க எல்லாரும் கேட்கிறாங்க பாலா... உனக்கென்னய்யா பொண்ணு பெரிய கம்பெனில அரை லட்சம் சம்பாதிக்கிறா... கையில செயின்... வாட்ச்ன்னு ஆளே மாறிப் போயிட்டேன்னு பொறாமைப்பட்டு மாஞ்சு போறானுங்க. அப்புறம் இன்னொண்ணு தெரியுமா... உங்கம்மாவுக்கு இப்ப எல்லாம் வீடு வீடா போய் என் பொண்ணு இப்படி... அப்படின்னு பெருமை பேசவே நேரம் சரியா போகுது. நீ வாங்கிக் கொடுத்த பட்டுச் சேலையை சுத்திக்கிட்டு ஊர் சுத்தப் போய்டுறா...'' என்றார் தாராளமாய் அள்ளித் தெளிக்கப்பட்டப் பெருமையுடன்.

முகத்தில் புன்முறுவல் மலர, ''ம்ம்'' கொட்டிக் கேட்ட விது,

''ஆ...ஆ..ஆஆனா... இன்னும் என்னைய திட்டுறாங்களே... நேத்துக்... கூட போன்ல பேசும்போது, நல்லாவே பேசலைப்பா...'' என லேசாய் வருத்தம் கொண்டாள்.

''அவ எல்லாம் முழுசா மாறணும்ன்னா உலகம் அழிஞ்சு, இன்னொரு வாட்டி உருவாகணும். ஏதோ... இந்தளவுக்காவது சந்தோஷமா இருக்காளேன்னு விடும்மா...'' என எப்போதும் போல் மகளைச் சமாதானம் செய்தவர்,

''எங்கேயும் போயிட்டு இருக்கியா, பாலாம்மா?'' என்றார்.

''ஆ... ஆஆஆமாப்பா... ஆபீஸ்ல எல்லாரும் வெளிய போறோம்... பி...பி... பீச்க்கு...''

''ஹோ! நல்லா போயிட்டு வாடா... இப்படி நாலு இடத்துக்குப் போயிட்டு வந்தா தான்... உலகம் புரியும்!'' என்று சந்தோசம் கொண்டவர்,

''ஹாஸ்டலுக்கு வந்ததும் அப்பாக்கு ஒரு போன் பண்ணிச் சொல்லிடுடா! ப்ளீஸ்!'' என்றார் பாசமுள்ள தந்தையாக.

ஆமோதிப்பாய் பேசிவிட்டு வைத்தவளுக்கு, அவுட்டிங் வந்தது சரி தான் என்ற எண்ணம் வலுத்தது.

ரிசார்ட்டுக்கு சென்றது, அங்கே மதிய உணவு உண்டது வரை எந்தப் பிரச்னையும் இல்லாமல் சென்றது நாள்.

உணவு முடிந்ததும், சில பல விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அதுவரை ஒதுங்கியே இருந்த விதுவுக்குக் கூட, ஆடி ஓடி அனைவரும் விளையாடியதில், தானும் கலந்து கொண்டிருக்கலாமோ என்ற ஏக்கம் பிறந்தது.

''வருகிறீர்களா?'' எனக் கேட்டவர்களிடம், ''ம்ஹூம்...'' என மறுத்தத் தன்னையே நொந்து கொண்டு,

சுவற்றிடம் சென்று காதலைச் சொல்லிக் கொண்டிருந்த ஒருவரைப் பார்த்து வாய் விட்டுச் சிரித்தாள், விது.

ஒரு டப்பாவில் நிறைய சீட்டுக்கள் இருக்கும். ஒவ்வொருவரும் அதை எடுத்து, அதில் என்ன எழுதி இருக்கிறதோ அதைச் செய்ய வேண்டும்.



சிரிப்பும் சந்தோஷமாய் கழிந்த நேரம், மாலையை எட்டியபோது, பாதி பேர் கடற்கரைக்குச் செல்ல, மீதி பேர் போதைக் கரைக்குச் சென்றனர். (அதாவது பாருக்குச் சென்றனர்).

பாருக்குத் தான் செல்கிறார்கள் எனத் தெரியாமல், அவர்களுடன் அந்த அறைக்குள் நுழைந்த பாலா, அங்கிருந்த தோற்றத்தைக் கண்டதுமே, ஒரு கணம் மிரண்டு, சட்டென வெளியே வந்து, கடற்கரை நோக்கி விரைந்தாள்.

தண்ணீரில் இறங்கி விளையாடிய மக்களுடன் கலக்காமல், கரையோரமாய் அமர்ந்து கடலின் ஆர்ப்பரிப்பை ரசனையுடன் பார்த்திருந்தவளின் கண்களில், ஓர் இனிய மயக்கம்.

பாலா அருகே இருந்தால்? அவன் மீது தலை சாய்த்து... அவனது பேச்சில் சிரித்து... அவன் ஸ்பரிசத்தில் கூசி... அவனது காதலில் திளைத்து... நெஞ்சம் அவனுக்காக வெகுவாக ஏங்குவது, விதுவுக்குப் புரிந்தது.

வாய் விட்டுச் சொல்லவில்லை என்றாலும், தனது காதலை அவன் புரிந்து கொண்டான் என்பதை விதுவும் புரிந்து கொண்டாள்.

''உனக்கு என்னைப் பிடிக்கும்ன்னு - எவ்வளவு உறுதியாகக் கூறினான்! எமகாதகன்! ஒரே பார்வையில்... உயிரை உருவி விடுவான்!'' - நெஞ்சம் பூரித்துத் தான் போனது, அவளுக்கு.

இன்று அவன் பார்த்ததும், கண் மூடி ரசித்ததும், கை மேல் கரம் வைத்ததும் - இப்போதும் மேனி சிலிர்த்து அடங்க, ஓர் இன்ப மயக்கத்தில் இருந்தவளைக் கலைக்க வென,

''ஏய்... இங்க என்ன பண்றே?'' என்ற கேள்வியுடன், அவள் அருகே வந்து அமர்ந்தான், அவளுடன் பணிபுரியும் ஒருவன்.

தொப்பலாய் நனைந்த அவனது உடை - கடலில் குதித்து விளையாடி இருக்கிறான் என்பதை உணர்த்த, அவனிடமிருந்து வந்த வாடை - மூச்சு முட்டக் குடித் திருக்கிறான் என்பதைக் காட்டியது.

அனிச்சை செயலாய், சற்று நகர்ந்து அமர்ந்தாள் விது.

அதில் தூண்டப் பட்டவனாய், வேண்டுமென்றே அவளருகே... அவளை இடித்துக் கொண்டு அமர்ந்தது, அந்த எருமை.

''எ...எஎ...என்ன ப...பபபண்றீங்க...'' - பதட்டத்திலும், பயத்திலும் ஏகத்திற்கும் திக்கித் துவங்கியது விதுவுக்கு.

''தோ... பாருடா... ரொம்பத் தான் சீன் போடறே?'' என்றவன்,

''டேய்... ரமேஷ்... குணால்... பைசக்'' என்று அனை வரையும் கூவி அழைத்தான்.

அவனது அழைப்பிலேயே ஏதோ விபரீதம் இருப்பதை உணர்ந்தவள் போல், மறுபுறமாய் திரும்பி ஓட எத்தனித் தாள் விதுபாலா.

''ஏய்... என்ன ரொம்பப் பண்றே? என்னமோ ரேப் பண்ணப் போற மாதிரி... சீன் போடறே...'' என்று வெறி கொண்டு கத்தியவன், அவளது கைகளை அழுந்தப் பற்றி, தடுத்து நிறுத்தினான்.

''வ்...வ்வ்வ்... வி...வி...விடு...' - ஒரு வார்த்தையை சொல்லவே, விதுவுக்கு சிரமமாய் இருந்தது.

''விடுவா? மரியாதையா பேசுடி'' என்று மிக்க மரியாதை யுடன் பேசியவனுக்கு, உதவி புரிய அவனது நண்பர்கள் வந்து சேர்ந்தனர்.



''என்னடா மாப்பிள்ள!'' என அவர்களில் ஒருவன் கேட்க,

''சும்மா பக்கத்தில தான்டா உட்கார்ந்தேன்... என்னமோ கற்பே போயிட்டு மாதிரி கண்ணகியாட்டம் கத்துறா...''

''ஓஹோ! அந்த பிசினஸ் டீம்ல இருப்பானே பாலா... அவனோட அந்த இழை... இழையுறா... அப்ப போகாத கற்பு... இப்பப் போயிடுச்சோ?'' என்றவன்,

''இப்ப போச்சா...'' என்று அவளது கன்னம் தொட்டான்.

''ஏ... ஏஏஏய்...வ்...வ்... விவிவிவிடு டாஆஆ'' - தனது மறுகையால், தன் கன்னம் தொட்டவனைத் தள்ளி விட்டாள்.

''ஏய் திக்கு வாய்... என்ன சொன்னே? எங்களுக்குப் புரியல...'' என ஒரு கழுதை கேட்கவும்,

''பிடிடான்னு சொன்னாடா... பிடி... பிடி...'' என மற் றொரு தேவாங்கு கிண்டல் செய்ய,

''பிடிச்சிடுவோம்'' எனக் கூறி, விதுவின் இரு கரங் களையும் பின்னால் கட்டினான் ஒருத்தன்.

மற்றொருவன், ''இங்க தொட்டா கற்பு போய்டுமா?''

''இங்க தொட்டா...''

''அங்க தொட்டா...''

''இங்க...''

''அங்க...'' என்று அவளது அங்கங்களை அசிங்கப் படுத்தினான்.

''வ்...வ்... வேவேவேவேணாம்ம்ம்...'' என்று விது அலறியதற்கு.

''திக்கு வாய்... வேணும்ன்னு சொல்லுதுடா... என்ன மாப்பிள்ள அப்படித்தானே கேட்குது?'' எனக் கேட்ட ஒருவன்,

''மாப்பிள்ள... தொட்டா எல்லாம் கற்பு போகாதுடா... அந்த பாலா பண்ற மாதிரி பண்ணனும்... அதாவது தனியா கூட்டிட்டுப் போய், எல்லாத்தையும் முடிச்சு அனுப்பு வானே... அப்படி...''

''ச்... ச்... ச்சீ... ப... ப்ப்ப்ப... பொறுக்க்க்க்கி.. அ..அ..அவவவவவவரு... அ... அப்ப்ப்ப்ப்ப்டி ச...சசசசெய்ய மா... மா... மாட்டார்ர்ர்ர்ர்ர்...''

''அவரு செய்யலைன்னா என்ன? நாங்க செய்றோம்...''

''மாப்பிள்ளை... நீ பக்கத்தில உட்கார்ந்ததும், முத்தம் கொடுத்திடுவியோன்னு தானே பயந்தா... கொடுடா... டேய் கொடுடா...'' என்று ஒருவன் ஏற்றிவிட,

முதலாமவன் முன்னேற, இன்னொருவன் அவளை இறுகப் பிடிக்க, தன் பலம் கொண்டு விது பின்னடைய, முதலாமவன் தான் நினைத்ததைச் சாதித்தான்.

விதுவால் குரலெடுத்துக் கத்தக்கூட முடியவில்லை.

உச்ச ஸ்தாதிக்குச் சென்றபோது, குரல் அங்கே அடைத்து நின்றது.

நாக்கு ஒருபுறமாய் இழுக்க, தாடையிலிருந்து காதுக்குச் செல்லும் நரம்பு, சுருண்டு இழுத்தது.

பேச்சு வரவில்லை என்பதிலேயே, விதுவின் பாதி திராணி போய்விட்டது.

ஏற்கனவே, அந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடம் என்பதால், அங்கே ஆள் நடமாட்டம் மிக மிகக் குறைவாய் இருந்தது.

அதுவுமில்லாமல், அன்றைய நாளை அவர்களது தேவைக் காகவென்று, விதுவின் ப்ராஜெக்ட் பதிவு பண்ணி யிருந்ததால், அவர்கள் மட்டுமே அங்கே இருந்தனர்.



பணியாளர்கள் அனைவரும் ஹோட்டலுக்குள் இருக்க, அங்கே விதுவின் துணைக்கு யாருமில்லை.

அறிவிழந்த மிருகங்களிடம் மாட்டிக் கொண்ட விது விற்கு, என்ன முயன்றும் தொண்டையிலிருந்து குரலே வெளிவரவில்லை.

''ஆ... ஆ... ஆ... ஆ... ஆ...'' என்று தன் பலம் முழுதையும் திரட்டி, அடி வயிற்றிலிருந்து கத்திப் பார்த்தாள் விது.

ம்ஹூம்!

ஐயோ!

''வேணாம்...'' என்று சொல்ல விழைகிறாள். வெறும் காத்து மட்டுமே வந்தது.

மீண்டும் ஒருமுறை ''வேணாம்...'' என்ற சொல் அவளுள்ளிருந்து வர முயல, வெறும் ''வ...'' மட்டும் தான் காற்றோடு கலந்து வந்தது.

இல்லை! முயற்சி செய்!

''விடுங்க... விடுங்க...'' என்று மனம் குரல் கொடுத் தாலும், தொண்டை முயற்சி செய்தாலும், ம்ஹூம் சத்தமே வரவில்லை.

குரலுடன் அவள் நடத்திய போராட்டத்தை மிஞ்சு வது போல், அங்கிருந்த காமப் பேய்கள் ஒவ்வொன்றும் விதுவின் கன்னத்தைப் பதம் பார்த்தன.

''சை...'' என்ற வார்த்தைகூட வரவில்லை அவளுக்கு.

தன்னால் முடிந்த மட்டும் முகத்தைப் பின்னுக்குத் தள்ளி, காலால் உதைக்க முயன்று, உடலால் ஓர் போராட் டமும், குரலால் ஒரு போராட்டமும் நடத்தியவள்,

''முருகா... முருகா... முருகா...'' எனக் கடவுளை அழைக்கத் தொடங்கினாள். அதுவும், மனதின் குரல்

மட்டுமே மால்மருகனைத் தேடியது! உதடுகள் வெறும் காற்றையும் வலியையும் மட்டுமே தாங்கி நிற்க, அச்சிறு பாவை நிர்கதியாய் நின்றாள்.

தெய்வச் செயலோ என்னவோ, தூரத்தில் ஒருவர் நடந்து போவது தெரியவும்,

முருகனை மனதில் வைத்து, "தப்பித்தே ஆக வேண்டும்" என்ற வைராக்கியத்துடன், கால்களை உந்தி, ஓரடி மேலெழும்பியவள், அதே வேகத்தில் எதிரே இருந்தவனின் தொடையில் ஓர் உதை விட்டாள்.

அதில் அவன் தடுமாறி விழ, அவளைப் பிடித்திருந்த மற்ற இருவரும், அந்த திடீர் தாக்குதலில் ஒரு கணம் தடுமாற, அந்த கணத்தைத் தனதாக்கிக் கொண்டு, மின்னலென அங்கிருந்து பாய்ந்தாள், விதுபாலா.

மூச்சிரைக்க ஓடியவள், அங்கு அவளது மேலாளரைக் கண்டதும், துவண்டு தான் போனாள்!

ஏற்கனவே, அவருக்கு அவளைப் பிடிக்காது! எதற்கடா அவளைத் திட்டலாம் என்றிருப்பார்... இப்போது...

ஆனால், அவரோ "என்னாச்சு விதுபாலா?" எனத் தணிவாய் வினவவும்,

சோர்ந்த விழிகளை ஆச்சரியத்தால் மலர்த்தி அவரைப் பார்த்தவள், வாய் திறந்து எதுவும் பேசாமல்... பேச முடியாமல்... தன்னை நோக்கி வந்தவர்களைக் கை காட்டினாள்.

அவளது நிலையை உணர்ந்தவர் போல், "உன்கிட்ட தப்பா நடந்துக்கிட்டாங்களா?" என்றார் அவராகவே.

கண்ணீரில் தோய்ந்த கண்களும், அவமானத்தில் கருத்த முகமும், அத்து மீறலில் துவண்ட தேகமுமாய் அவள் ஆமோதிக்க,



"சை! பொறுக்கிங்க!" என்றவர், அவர்கள் புறம் திரும்ப,

"என்ன விஜய்? திக்கு வாய்... ஊமையாகிடுச்சே... இதை வச்சு எப்படி ப்ராஜெக்ட்டை நடத்துறதுன்னு யோசிக்கிறீங்களா? பயப்படாதீங்க... நாங்க வச்சுக்கிறோம்" என ஒருவன் கண்ணடித்தான்.

"ஸ்டாப் இட், ரமேஷ்! நீங்க எல்லாம் ப்ரோஃபஷனல் மாதிரியா நடந்துக்கிறீங்க? குப்பத்து ரௌடிங்க மாதிரி... ச்சை... இப்படியொரு பிஹேவியரை நான் எதிர்பார்க்கவே இல்லை. குடிச்சா கண்ணு... மண்ணு தெரியாம போய்டுமா? என்ன?" என்று பொரிந்தவர்,

"நீ வாம்மா. உன்னை முதல் ஹாஸ்டல்ல கொண்டு விடுறேன்.." எனக் காரை அவளை அழைத்தார்.

குடித்தால், மேலாளர் என்ன முதலாளியே வந்தாலும் உறைக்குமா என்ன?

"என்ன விஜய்? நீங்க மட்டும் தனியாளா என்ஜாய் பண்ணலாம்ன்னு நினைக்கிறீங்களா? ஜமாய்ங்க!" என ஒருவன் கண் சிமிட்ட, பளாரென விழுந்தது ஓர் அறை.

அவனது பேச்சிலேயே, அங்கம் அடங்கிவிட, பாதி செத்துவிட்டிருந்தாள் விதுபாலா. அதனால், அந்த அறை அவளை இம்மியும் பாதிக்கவே இல்லை.

ஓர் அறை விழுந்ததும், மற்றவர்கள் ஓரடி பின்னே வைக்க,

"என்னையா அடிச்சே?" என்று அடி வாங்கியவன் மட்டும், கண்ணில் தீயுடன் முன்னே வந்தான்.

"வேணாம் ரமேஷ்! உன்னோட எதிர்காலத்தைப் பாழாக்கிக்காத" என்று அவர் எவ்வளவோ எச்சரித்தும், அவன் கையை ஓங்கிக் கொண்டு முன்னேற,

தன் கைப்பேசியிலிருந்து ஹோட்டல் வரவேற்பறைக்கு அழைத்தவர், ''பீச் பக்கத்தில் ஒரு கசமுசா நடக்குது. சீக்கிரம் வாங்க...'' என்றார் வேகமாய்.

அதில், மேலும் ஆத்திரம் கொண்டவனாய், அவரது முகத்தில் அவன் குத்தவும், அவர் தடுமாறிக் கீழே விழ,

அவர் பின்னே நின்றிருந்த விதுபாலா, இரண்டடி பின்னடைந்து தடுமாற,

''இவளாலதான்'' என்று வெறி கொண்ட ஒருவன், அவளை எட்டிப் பிடித்து, குரல் வளையை இறுகப் பிடித்து, அங்கிருந்த சுவற்றோடு தலையை இடித்தான்.

# 13

தன் கழுத்தை இறுக்கிய கரங்களைத் தன்னிட மிருந்து பிரிக்க முயன்று தோற்றாள், விது!

அவ்வளவு இறுக்கமாய் இருந்தது, அவனது பிடி! குடி போதையின் தாக்கம்!

அவளது இரு கரங்களின் சக்தியையும் மீறிக் கொண்டு, அவளைச் சுவற்றோடு வைத்து அழுத்தினான் அவன்.

பின்னாலிருந்து இழுத்தவர்களின் பலத்தையும் மீறி, அவளைக் கொன்று விடும் முடிவுடன் அவன் முன்னேற,

விதுவுக்கு மூச்சு முட்டியது!

ஏற்கனவே தொண்டைக்குழிக்குள் ஏதோ பெரிய அடைப்பு போல் தோன்றிய உணர்வு, இப்போது சுத்த மாய் மரத்துப் போய், தொண்டை என்று ஒரு உறுப்பு இருப்பது போலவே இல்லை!



காற்றாய் வந்த குரல் கூட, உள்ளேயே தள்ளப்பட்டது!

அதையும் மீறி, அவனது விரல்களின் அழுத்தம் கழுத்தில் படியப் படிய, கண்கள் மேலே சொருகத் தொடங்கின!

அவ்வளவு தான்... சாவு நெருங்கி விட்டது என்றே எண்ணினாள் விதுபாலா.

''அப்பாவைக் காணாமல்... பாலாவைப் பார்க்காமல்... கடவுளே!'' என்று உள்ளம் உடையும் வலி, வெளியே கேட்கும்போதே,

ரிசார்ட் ஊழியர்கள் வந்துவிட, விதுபாலாவின் உயிர் தப்பியது.

அதற்குள் விதுவின் மேலாளரும் சுதாரித்து எழுந்து நின்றார்.

''அவங்கள போலீஸ்ல ஒப்படைங்க சார்'' என அவர் நகர,

''விஜய்...'' என அலறினர் அனைவரும்.

அவர்களை மதிக்காமல், ''விதுபாலா... நீ வா...'' எனக் கூறி, சுவற்றுடன் ஒன்றி நின்ற விதுவின் புறம் கை நீட்டினார்.

ஓரடி கூட முன்னே வைக்க முடியாமல், அவள் அப்ப டியே துவண்டு விழ, ''சார்... தூக்குங்க... சீக்கிரம்... சீக்கிரம்'' என்று பறந்தனர் அங்கிருந்தோர்.

அங்கிருந்தோர் இரு குழுக்களாய் பிரிந்து, ஒரு குழு விதுவையும், மற்றொன்று அந்த கொலைகாரர்களையும் பார்க்கச் செல்ல, ரிசார்ட்டின் வரவேற்பறைக்கு விதுவை இட்டுச் சென்றவர்கள், அவள் முகத்தில் தண்ணீரை அடித்துத் தெளித்தனர். கூடவே, வலுக்கட்டாயமாய்

வாயைத் திறக்கச் செய்து, கொஞ்சம் தண்ணீரை உள்ளே செலுத்தினர்.

காய்ந்து போயிருந்த தொண்டைக்குள் தண்ணீரின் ஸ்பரிசம் நடந்ததும் தான், விதுவால் கண்ணைத் திறக்கவே முடிந்தது.

''அவங்களை சீக்கிரம் ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போறது தான் நல்லது...'' என ஒருவர் கூறவும்,

அந்தப் பொறுப்பைத் தனதாக்கிக் கொண்ட விதுவின் மேலாளர், ''வாம்மா... ஏதாவது ஹாஸ்பிடலுக்கு போய்டலாம்...''

விதுவுக்கு, சட்டென ரமேஷின் வார்த்தைகள் நினைவு வந்தன! அந்த மனநிலையில், அவளால் அவரை நம்பவும் முடியவில்லை... நம்பி அவருடன் செல்லவும் முடியவில்லை.

கடந்த இருபது... இருபத்தியைந்து நிமிடத்தில் நடந்து முடிந்த பிரளயத்தில், யோசிக்கும் திறனை முற்றிலுமாய் மறந்திருந்தாள் அவள்!

பயம்! பயம்! பயம் மட்டுமே நிலை பெற்று நின்றது!

கண்ணில் அடக்க முடியா பயத்துடன் அவரை நிமிர்ந்து பார்த்தவள், ஒன்றும் சொல்லாமல் குனிந்து கொண்டாள்.

அவளது மனதைப் படித்தவர் போல ''என்னைப் பார்த்துப் பயப்படுறியா விதுபாலா?'' எனக் கேட்டு, அதற்காய் கோபப்படாமல்,

''என்னை நம்பும்மா. உனக்கு எந்தவிதமான சேதமுமில்லாம, உன்னோட ஹாஸ்டல்ல கொண்டு விட்டுடறேன்'' என்றார்.

ம்ஹூம்! ரயிலின் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஓடிக் கொண்டிருந்த விதுவின் நெஞ்சம், நம்ப மறுத்தது!



வேலை இடத்தில் கண்ணியமாய் நடந்து கொண்டவர்கள் தாமே இப்போது கேவலப்பிண்டங்களாய் மாறிப் போனார்கள்! இவரோ, வேலை இடத்திலேயே அவளைக் கண்டு எரிச்சல் பட்டவர்... ம்ஹூம்! நெஞ்சம் ஏனோ அவளை அங்கிருந்து ஒரு அடி கூட நகர விடாமல் தடுத்தது!

ஆனால், அங்கிருந்து போக வேண்டும்! ஹ்ம்ம்... போக வேண்டும்! போயே ஆக வேண்டும்!

எப்படி? அவளுக்குத் தோன்றிய ஒரே விடிவு - பாலா! பாலமுருகன்!

வேகமாய் தனது கைப்பைக்குள்ளிருந்து கைப்பேசியை எடுத்தவள், பாலாவின் எண்ணை அழுத்தினாள்.

அங்கே, பாலா அவனது குடும்பத்தினருடன் அமர்ந்து, மாலை காபியை அருந்திக் கொண்டிருந்தான்.

அழைப்பு வர வர, அதை பாலா துண்டித்துக் கொண்டே இருந்தான்.

டீம் அவுட்டிங்கிற்குப் போகாமல் இருந்துவிட்டு, அவனைச் சமாதானப் படுத்த முயல்கிறாள் என்ற எண்ணமும், கூடவே கோபமும் அவனுக்கு.

''யாரு கூப்பிடுறா? விதுவா? என்ன சண்டையா இருந்தாலும் போனை எடுக்காம இருக்காத!'' என்று அதட்டியது ரமணிம்மாவோ, பத்மாவோ அல்லது செல்வாவோ அல்ல! ரமணிப்பா! - ரமணிதான்!

ஓர் வியந்த பார்வையுடன் அவரை ஏறிட்டான் மகன்.

''நான் உனக்கு அப்பனடா!'' என்பது போல் அவரும் பார்த்தார்.

''எங்களுக்கு எல்லாம் தெரியும்!'' என்பது போல் குடும்பத்தினர் அனைவருமே பார்க்க, பாலாவுக்குள் ஓர் வெட்கம் பரவுவதை, அவனால் உணர முடிந்தது!

அதில் லயித்து... ரசிக்க முடியாமல், மீண்டும் அழைப்பு வந்தது. ஆனால், பாலாவின் எண்ணில் அல்ல! வீட்டு எண்ணில்!

விதுவாய் இருக்காது என்றே எண்ணினான், பாலா! வேறு யாரோ என்ற நினைப்பில், விதுவின் அழைப்புக் காக, கைப்பேசியையே பார்த்திருந்தவனை,

வீட்டுத் தொலைபேசியை எடுத்த ரமணிம்மாவின் ''ஹலோ... ஹலோ! யாரு பேசுறது? ஒண்ணுமே கேட் கல... கொஞ்சம் சத்தமா பேசுங்க!'' என்ற வார்த்தைகள் கலைத்தன.

தொலைபேசிக் கருவியை, ஒருமுறை ஆராய்ந்து விட்டு ''யாருன்னு தெரியலையே... ஒண்ணுமே கேட்க லையே!'' என்றவாறே, அவர் வைக்கப் போக,

வேகமாய் வந்து கைப்பேசியை பறித்தான், பாலா.

அவனும் ''ஹலோ... ஹலோ! யாரு?'' என்று மூன்று முறை கேட்கவும்,

எதிர்முனையில், சிறு சலசலப்பு கேட்டது.

தொடர்ந்து, ''பாலாவா பேசுறது? நான் விஜய் பேசு றேன்!'' என்றது எதிர்முனைக் குரல்.

''விஜய்?'' என பாலா கேள்வியாய் நிறுத்த,

''விதுபாலாவோட மானேஜர்!''

''ஹோ! விஜய்! நீங்க என்? அவுட்டிங் இல்லையா? விது வந்தாளா? ஏதும் பிரச்சனையா? விது... விது... எங்க? என்ன ஆச்சு?'' - இதயம் துடிக்கப் பரந்து விட்டான், பாலா.

''பாலா! ரிலாக்ஸ்... நான் சொல்லி முடிச்சிடுறேன்...'' என்றவர்,

''ப்ராப்ளமே இல்லைன்னு சொல்ல மாட்டேன். ப்ராப்ளம் தான்... நீங்க வந்தா தான் அதுக்கு சீக்கிரம் சொல்யூஷன் கண்டுபிடிக்க முடியும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ... அவ்வளவு சீக்கிரம் வாங்க! கூட, ஒரு பெண் துணை இருந்தா பெட்டரா இருக்கும்...'' என்று ஒரே மூச்சில் விஷயத்தை சொல்லி முடித்தார்.

''என்ன விஜய்? எனக்கு ஒண்ணுமே புரியலையே... விது எங்க முதல்ல? அவ நல்லா.. நல்லா தானே இருக்கா... ப்ளீஸ்... கொஞ்சம் தெளிவா சொல்லுங்களேன்...''

''பாலா... ப்ளீஸ்! இப்போ விவரமா பேசுறதுக்கு நேரமில்லை... நீங்க கிளம்பி வாங்க. உங்களுக்கு, நான் ஒரே ஒரு உத்திரவாதம் தான் கொடுக்க முடியும்.. விதுபாலாவோட உயிருக்கு எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. ப்ளீஸ் நோட்... உயிருக்கு! சோ... கிளம்பி வாங்க! உடனே! வைக்கிறேன்!'' என்றவர், அழைப்பை வைத்துவிட்டார்.

''பீன்.. பீன்'' என்று அலறிய தொலைபேசியை ஒரு வினாடிக்கும் மேலாய் வெறித்தவன், குடும்பத்தாரின் ''என்ன? என்ன?'' என்ற குடையலுக்கு, ''விதுவுக்கு ஏதோ பிரச்சனை போல.. நான் உடனே போகணும்..'' என்று தந்தி மொழியில் பதில் சொல்லிவிட்டு, சாவி மாட்டி யிருக்கும் இடத்திற்கு விரைந்தான்.

அவனது கைகள், பைக் சாவியை எடுக்கவும்.

''பாலா! கார்ல போ... பைக் வேண்டாம்!'' என்றார் ரமணிதரன்.

கூடவே, சிறிது யோசனை கொண்டவராய், ''அம்மா வையோ பத்மாவையோ துணைக்கு அழைச்சிட்டுப் போ!'' என்றார்.

''அப்பா!'' என்று பாலா கேள்வியுடன் நிறுத்த,

''எதுவும் தப்பா இருக்காது, பாலா! இருந்தாலும்... ஒரு பெண் துணை இருக்கட்டும்'' என்றார். விஜயின் வார்த்தையும் நிழலாட, தலையசைத்தான் பாலா. ஆனால், நெஞ்சம்... என்ன விபரீதமோ... என்ன விபரீதமோ என்று துடித்துத் தவித்தது!

செல்வாவும் ''நானும் வரேன்டா'' என்று உடன் கிளம்பினான்.

அங்கே ரிசார்ட்டில் - பாலாவின் எண்ணிற்கு முயன்று முயன்று தோற்றுவிட்டு, அவனது வீட்டு எண்ணை அழைத்த விதுவால், பேசவே முடியவில்லை!

அவளும், உதட்டை அசைக்கிறாள்... தம் பிடித்துக் கொண்டு வயிற்றிலிருந்து காற்றை உந்தித் தள்ளி வார்த்தைகளாக்க முயல்கிறாள்... ம்ஹூம்... சத்தமே வரவில்லை... பேச்சே வரவில்லை... வெறுமே உதடு மட்டும் அசைகிறது! குரல் வர மறுக்கிறது!

அந்தப் பக்கம்... ரமணிம்மாவின் குரல்... ஹய்யோ கத்துகிறார்களே... பேசு விது... ஹ்ம்ம் பேசு... ம்ஹூம் முடியவில்லை!

அய்யோ வைக்கப் போகிறார்களே... வைக்காதீங்க.. வைக்காதீங்க என்று அவள் கத்தியது, அவள் மனதுக்கு மட்டுமே கேட்டது!

அவளது உயிர் முழுதாய் வடிவதற்குள், பாலாவின் ''ஹலோ'' காதிற்குள் தேனென பாய்ந்து, புது தெம்பை ஊட்டியது.

''பாலா...'' என்கிறாள்... ''ஜி'' என்றாள்.... ''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்கிறாள்... எதுவுமே ஒலி வடிவம் பெறவில்லை!

வைத்துவிடுவானோ என்று அவள் பதறும்போதே, அவளது தடுமாற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்த விஜய், பாலாவுடன் பேசும் பொறுப்பைத் தனதாக்கிக் கொண்டார்.



பாலாவின் குடும்பம் அங்கு வர எடுத்துக் கொண்ட ஒரு மணி நேரமும் நரகமாய் தான் கழிந்தன.

அந்த இடைவெளியில், ''சீக்கிரம் ஹாஸ்பிடல் போறது தான் விதுபாலா நல்லது. யோசிக்காம, என்னோட வாம்மா'' எனப் பல முறை கெஞ்சிவிட்டார், விஜய்.

ஆனால், விதுவால் மனம் ஒத்து அவருடன் செல்ல முடியவில்லை.

போய்விடலாம் என்றெண்ணி இரண்டடி எடுத்து வைப்பவள், ''வேண்டாம்'' என்று சட்டென அமர்ந்து விடுவாள். ''பாலா'' என்பவன் வந்துவிட்டால் போதும்... நாம் பாதுகாப்பு வளையத்திற்குள் சென்றுவிடுவோம் என்ற எண்ணம் நெஞ்சில், ஆணி அடித்தாற்போல் பதிந்திருக்க, வாயிலேயே பார்த்தபடி அமர்ந்திருந்தாள் அப்பாவை.

பாலாவின் கார் ரிசார்ட்டின் வாயிலைக் கடந்த நொடி, விதுபாலா அமர்ந்த இடத்தை வில்லாக்கி, அங்கிருந்து அம்பாய் பாய்ந்திருந்தாள்.

குறி தப்பாமல் பாய்ந்த அம்பாய், ஓடி வரும் விதுவைக் கவனித்துவிட்டு வண்டியை விட்டிறங்கிய பாலாவின் மார்பு சேர்ந்தாள் மங்கையாள்.

''என்ன விது? விது என்னடா?'' என அவன் கேட்க கேட்க,

அதற்கு மேல் தாங்க முடியாதவளாய், அவனுள் புதைந்து போனாள் விதுபாலா.

விதுவின் அருகே செல்லப் போன பத்மாவின் கை பிடித்து நிறுத்திய செல்வா, ''இங்கேயே இரு'' என்பது போல் கண்ணால் செய்கை செய்தான்.

அவர்கள் அஞ்சி வந்தது போல், எந்த சேதாரமும் இல்லை என்று அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடும் போதே, ''ஹே விது... என்னாச்சு... என்னாச்சு... எழுந் திரு...'' என்று தன் மீது சாய்ந்திருந்த விதுவை உலுக்க ஆரம்பித்தான், பாலா.

ஏனெனில், விது தன்னுணர்வு தொலைத்து, மயக்க முற்றிருந்தாள்!!

தன் மீது கணம் கூடுவதை உணர்ந்து, பாலா சுதாரிப்ப தற்குள், விதுவின் கண்கள் மேலே சொருகத் தொடங்கி, அவளை ஆழ் மயக்கத்திற்கு இட்டுச் சென்றது.

ஆண்மகனான பாலாவிற்கே, அந்த நேரத்தில் எப்படி நிலைமையை சமாளிப்பது என்பது புரியவில்லை.

மனம் தடுமாற, மனம் கவர்ந்தவளின் நிலையை ஜீரணிக்க முடியாமல், திகைத்து நின்றான் பாலமுருகன்.

பத்மா தான் சட்டென சுதாரித்தாள்.

''என்ன பாலா யோசனை? ம்ம் சீக்கிரம்... ஹாஸ்பிடல் போலாம்...'' என்று விரட்டியவாறே, தோய்ந்து விழுந்த விதுவின் கணம் தாங்கினாள்.

அதற்குள் அங்கு விரைந்திரந்த விஜயும், ''ஆமா.. முதல்ல ஹாஸ்பிடல் போலாம்... அவங்களால பேச முடியல... குரலே வெளிய வரல...'' எனத் துரிதப்படுத்தினார்.

''என்னது!??'' - சகலமும் ஒடுங்கி நின்றது பாலா வுக்கு.

''ப்ளீஸ் பாலா... அதிர்ச்சியடைய இது நேரமில்லை! வா...!'' என்ற செல்வா, தம்பியின் ஜில்லிட்ட கரங் களைப் பற்றி அழைத்துச் சென்றான்.

அருகிலிருந்த மருத்துவமனைக்குச் செல்லும்வரை, யாருமே பேசவில்லை.



சுடு தணலில் போட்டப்பட்டது போல் வாடிய முகமும், தோய்ந்த அவளது தேகமும், அவர்களது நாக்கைக் கட்டிப் போட்டது!

மடியில் சாய்ந்திருந்த விதுவின் கன்னம் வருடிய வனுக்கு, என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள் ளும் வேகம் இருந்தபோதும், என்ன நடந்திருந்தாலும் விதுவிற்கு ஒன்றுமாகிவிடக் கூடாது என்ற எண்ணமே வலுத்து நின்றது!

அப்போது தான் பாலா கவனித்தான்! விதுவின் மேனி யில், நிறைய நகக் கீறல்கள்.. சிவப்பேறிய தடுப்புகள்... கன்றிய காயங்கள்... சில ரத்தச் சாயல்களும்... கொஞ்சம் மது வாடையும்...

அவை பட்டிருந்த இடத்தைப் பார்த்தே, அவனால் என்னவென்று யூகிக்க முடிந்தது! ஆனால், ஜீரணிக்கத் தான் முடியவில்லை!

யார்? யார்? யார்? என்று வெறி கூடி நின்றவனுக்கு, உடன் பணிபுரிபவர்கள் என்ற எண்ணமே ஏற்பட வில்லை! ஏனென்றால், அலுவலகம் சார்ந்து வரும் அவுட்டிங்க்கில் மது அருந்த அனுமதியில்லை. பலரும், பெண்கள் உடன் வருவதால் அதை சிரமேற்கொண்டு கடைபிடிப்பர்! வேறு யார்? வேறு யார்? என்று உழன் றிருந்தவனுக்கு, விஜய் நடந்த விஷயத்தைக் கூறியதும் ரத்தம் தலைக்கேறியது.

சிகிச்சைக்காக விதுவை மருத்துவரிடம் ஒப்படைத்து விட்டு, வெளியே காத்திருக்கும் நேரத்தில்தான் விஜய், மாலை நடந்த விபரீதத்தை பாலாவிடம் தெரிவித்தார்.

கை முஷ்டி இறுக அமர்ந்திருந்தவன், ''ஆபீஸ் அவுட்டிங்ல எப்படி விஜய், ஆல்கஹால் எடுக்கலாம்?

அதை எப்படி நீங்க அனுமதிக்கலாம்? கூட ஒரு பொண்ணு வந்திருக்காங்கிற எண்ணமே இல்லையா?'' என்றான் அவரை அதிகாரமாய் நோக்கி.

அவனது கேள்வியில் இருந்த நியாயத்தை உணர்ந்தே இருந்தார் அவர்.

ஆனால், தன் பக்க வாதமாய் ''விதுபாலா வருவாங் கன்னு எனக்குத் தெரியலை... கடைசி நிமிஷம் தான் வரதா சொன்னாங்க. அவங்க வரமாட்டாங்கன்னு நினைச்சு...'' - முடிக்காமல்... முடிக்க முடியாமல் இழுத்தார் அவர்.

அந்தக் கடைசி நிமிட மனமாற்றத்திற்குக் காரணம் - அவனல்லவோ! அவனது நெஞ்சமே அவனை ஓங்கி அறைவது போல் வலித்தது அவனுக்கு!

''அவ போக மாட்டேன்னு தா சொன்னா... நான் தான்... நான் தான் டீம்மோட பழக இது தான் நல்ல வாய்ப்பு.. அப்படி... இப்படின்னு அவளைக் கரையா கரைச்சு அனுப்பி வச்சேன்... சை...''

''உங்க பாஷையில்... இது தான் 'பழகுறதா?' நீங்கெல் லாம் படிச்சவங்க தானா? அதுவும் ஒரு ஹை ப்ரோ ஃபைல் கம்பெனில வேலை பார்த்துக்கிட்டு... ரெடிக்குலஸ்... என்ன பண்றேன் பாருங்க? அந்த நாய்ங்க எங்க? நாய்ங்க... தெரு நாய்ங்க... சை.''

அவனது ஆவேசத்தைக் கண்டு அதிர்ந்தவராய், ''அங்க ரிசார்ட் ஆளுங்க பிடிச்சு வச்சிருக்காங்க...'' எனப் பதில் கூறினார் விஜய்.

''ஏன்? போலீஸ்ல கம்ப்ளைன்ட் பண்ணலையா? ஃபேவரிசம் பார்க்கிறீங்களா?''

''அப்படியில்லை...'' என்று விஜய் இழுக்கும் போதே,



''யோசிச்சுப் பேசு... பாலா! போலீஸ்க்குப் போனா, நம்ம பொண்ணையும் தான் விசாரணைக்குக் கூப்பிடு வாங்க...'' என்று எச்சரித்தான், செல்வா.

''விசாரணைக்குக் கூப்பிட்டா போலாம்... நானும் துணைக்குப் போவேன்...''

''நீ போவே! நா.. நீ யாரு... என்ன உறவு.. எப்படி பழக்கம்ன்னு ஆயிரம் கேள்வி கேட்பான்... நம்ம சமூகம் இன்னமும் சில அடிமட்ட எண்ணங்களிலிருந்து வெளி வரவே இல்லை, பாலா! கொஞ்சம் பொறுத்துச் செய்ய லாம்'' என செல்வா, நிதர்சனத்தை எடுத்துரைக்கும் போதே,

மருத்துவர், அவர்களுடன் பேசும் தோரணையில் வெளியே வந்தார்.

யாரும் ஆரம்பிக்கும் முன்னரே, அவர் பேச ஆரம்பித் தார்.

''வெளிக்காயங்களுக்கு மருந்து போட்டிருக்கேன்... பட்... அவங்க குரல்?'' எனத் தொடங்கி, கேள்வியாய் நிறுத்தி, உதட்டைப் பிதுக்கியவர்,

''என்னால, என்ன பிரச்சனைன்னு கண்டுபிடிக்க முடியல... ஏதோ நரம்பு இழுத்த மாதிரி இருக்கு. பெட்டர்... நீங்க ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போய் டுங்க...''

''மோர் ஓவர், அவங்க ரொம்பவே மென்டலா டிஸ் டர்ப் ஆகியிருக்காங்க... அதுவும் கூட இந்த பிரச்சனைக் குக் காரணமா இருக்கலாம்...'' என்று தனது பரிசோதனை யின் முடிவை அறிவித்து முடித்தார்.

கூடவே, ''இன்னும் அரை மணி நேரத்தில், அவங்க நார்மல் ஆகிடுவாங்க. நீங்க உடனே, ஸ்பெஷாலிட்டி

ஹாஸ்பிடல் கூட்டிட்டுப் போய்டுங்க'' எனக் கூறி விடைபெற்றார்.

மூவர் குழு (பாலா, செல்வா, பத்மா) விதுவை அழைத்துக் கொண்டு, சென்னை மாநகரில் இருக்கும் ஓர் புகழ்பெற்ற காது-மூக்கு-தொண்டை மருத்துவமனைக்குச் செல்ல, ரமணிம்மாவும் ரமணிதரனும் அங்கு வந்திருந்தனர்.

என்னென்னமோ பரிசோதனைகள் செய்தனர்!

நரம்பு சுருண்டு இருக்கிறது என்றார்கள்!

அளவுக்கு அதிகமான பிரஷர் என்றார்கள்!

அவள் அதிகமாய் வாயைத் திறந்ததால், ஓர் நிலைக்கு மேல் செயல்பெற முடியாமல் மரத்து விட்டது என்றார்கள்!

பயம் தான் காரணம் என்றார்கள்!

இதே நிலைமை தொடர்ந்தாள், பேச்சு வராமலே போய்விடும் அபாயம் உண்டு என்றார்கள்!

பதினாறு ஆயிரம் ரூபாய்க்கு ஏதோ ஊசி, அதுவும் நரம்பில்... தாடையிலிருந்து காதுக்குச் செல்லும் நரம்பில் போட வேண்டும் என்றார்கள்!

பாலாவுக்கு மட்டுமல்ல, விஷயமறிந்து ஊரிலிருந்து விழுந்தடித்து ஓடிவந்த விதுவின் தந்தைக்கும் தலை சுற்றியது!

கடைசியாக, அந்த ஊசியைப் போட்ட பின்னரும், விதுவின் நிலைமை மாறாமலிருக்க,

"அவங்க மனபயம் தான் காரணம்... அதைச் சரி பண்ணினாலே... பேசிடுவாங்க!'' என்று மருத்துவர், ஒரே கருத்தாய் முடிவு சொல்ல, பாலமுருகன் அந்த மருத்துவமனையின் தியான அறையில் அமைதியாய் உட்கார்ந்து யோசித்தான்.



அதில் ஏற்பட்டத் தெளிவின் விளைவாய், "இந்த வார வெள்ளிக்கிழமைக்குள்ள எனக்கும் விதுக்கும் கல்யாணம் நடக்கணும். உங்களால ஏற்பாடு பண்ண முடியுமா? இல்ல, நான் பார்த்துக்கவா?'' என்ற முடிவைத் திடமாய் எடுத்து, அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கினான் அவன்!!

# 14

''என்னடா விளையாடுறியா?'' என்று முதலில் அதிர்ந்தவர் ரமணிம்மா தான்!

''என்னைப் பார்த்தா என்ன கிரிக்கெட் கிரௌண்ட்ல நிக்கிற மாதிரி இருக்கா? சும்மா, எரிச்சலைக் கிளப்பாதீங்க?'' என்று எரிந்து விழுந்தவன்,

''ஏன்? உங்களுக்கு விதுவை மருமகளா ஏத்துக்கிறதில என்ன பிரச்சனை?'' என்றான் நேரடியாகவே.

''எனக்கு ஒண்ணும் பிரச்சனையில்லை. உங்க ரெண்டு பேரோட கல்யாணம் எப்ப நடக்கும்ன்னு காத்திருக்கிற முதல் ஜீவன் நான் தான்.. ஆனா, விதுவோட இந்த நிலைமையில... எனக்கு சரியா படலை...'' என்றார் ரமணிம்மா விளக்கமும், வருத்தமுமாக.

ரமணிதரனோ, "அவளோட பயத்தைப் போக்கணும்ன்னு நீ நினைக்கிறது எனக்குப் புரியுது! ஆனாலும்...'' என மகனது மனதைப் படித்தவராய் பேசிய போதும், தனது தயக்கத்தை மறையாமல் வெளிக்காட்டினார்.

கூடவே "அவளுக்கு ஒரு பாதுகாப்பான இடத்தைக் கொடுக்கணும்ன்னா அதுக்கு கல்யாணம் மட்டும் தான் தீர்வுன்னு இல்லை, பாலா" என்றவர்,

பாலா ஏதோ பேசத் தொடங்கவும் "ஒரு நிமிஷம்!" என அவனைக் கையமர்த்திவிட்டு, "உன்னோட காதலுக்கு நான் எதிரி இல்லை. ஆனா... இப்படியொரு சூழ்நிலையில உங்களோட கல்யாணம் நடக்கிறதுல எனக்கு விருப்பமில்லை" என்றார் தெளிவாக.

கணவரும் தன்புறம் பேசவும், "சொந்தக்காரங்க எல்லாம்... வாய்க்கு வந்தபடி பேசுவாங்கடா! விது சரியானதும் பார்த்துக்கலாம்" என்றார் ரமணிம்மா.

"அப்பா... அம்மா! இந்தக் கல்யாணம்... விது எமோஷனலா என்னை டிபண்ட் பண்ணியிருக்கிற இந்த டைம்ல நடந்தா தான்... எங்களோட காதலுக்கே ஒரு அர்த்தமிருக்கும்ங்கிறது என்னோட கணிப்பு!" எனத் தன் வாதத்தைத் தொடங்கியவன்,

"ஜஸ்ட் ஒரு ஈர்ப்பினால நாங்க லவ் பண்ணலை... ஒருத்தரோட குறை நிறைகளை அப்படியப்படியே ஏத்துக்கிற பக்குவம் எனக்கும் இருக்கு... விதுக்கும் இருக்கு. கல்யாணத்தை வெறும் சந்தோஷமா பார்க்காம, அதில் அன்பும் அர்த்தமும் நிரம்பி இருக்கணும்ன்னு எதிர்பார்க்கிறேன்" எனக் கூறி, சிறு இடைவெளி விட்டான்.

"இந்த டைம்ல தான்.. விதுவுக்கு என்னோட முழு ஆதரவும் தேவை... அதை கல்யாணம் பண்ணிக்காமலும் கொடுக்கலாம்.. ஆனா உங்களோட சோ கால்ட் சொஸைட்டி அதை ஒத்துக்காது. விதுவுமே ஒத்துக்க மாட்டா... போற போக்கில், யாராவது ஏதாவது சொல்லிட்டா, அதிலேயே உடைஞ்சு போய்... இப்போ



இருக்கிற நிலைமையைவிட மோசமா போகவும் சான்ஸ் இருக்கு."

"அதனால, கல்யாணம்ங்கிற பந்தம் மட்டுமே, விதுவுக்குள்ள ஒரு நல்ல மாற்றத்தை உண்டுபண்ணும். ப்ளீஸ்! என்னைப் புரிஞ்சுக்கோங்க!" எனத் தன் நீண்ட பேச்சை நிறைவு செய்தான்.

மறுத்துப் பேசத் துவங்கிய மனைவியைக் கையமர்த்திவிட்டு, "ரமணி! அவன் இவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னதுக்கு அப்புறமும், நாம மறுத்துக்கிட்டு இருக்கிறது நல்லதில்லை. எப்பனாலும், அவனுக்கும் விதுக்கும் தான் கல்யாணம்ன்னு முடிவாகிடுச்சு... இப்ப நடந்திட்டுப் போகட்டுமே? என்ன சொந்தக்காரங்க ஏதாவது பேசுவாங்க.. பார்த்துக்கலாம்... விடு! சொந்தக்காரன் வந்து கடைசி காலத்தில நமக்குத் துணை நிக்கப் போறதில்ல... புள்ளைங்க தான் பார்க்கணும்... அதனால, சொந்தக்காரங்க பேச்சை விட, பையனோட விருப்பம் தான் முக்கியம்!" என்ற ரமணிதரன், மனைவியைச் சமாதானம் செய்வது போல் தனது சம்மதத்தையும் தெரிவித்தார்.

தன் வீட்டில் எப்படியும் சம்மதம் கிடைத்துவிடும் என்றெண்ணியிருந்த பாலாவுக்கு, விதுவை நினைத்துத் தான் கொஞ்சம் கலக்கமாக இருந்தது!

"உங்களுக்கு நான் வேணாம்..."

"என்னை விட நல்லா பொண்ணா... நல்லா பேசக்கூடிய பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோங்க..."

"வாய் பேச முடியாத என்னோட எப்படி குடும்பம் நடத்துவீங்க.."

"கல்யாணம் பண்ணி, குழந்தைன்னு ஒண்ணு பிறந்து, அதுவும் என்னை மாதிரி திக்கு வாயா இருந்தா சிரமம்..."

''எனக்குக் கல்யாணமே வேணாம்...''

- இப்படியான எதிர்ப்புக்களை எதிர்நோக்கி, மருத்துவ மனை சென்றவனுக்கு, விஷயம் தெரிந்ததும், விதுவின் கண்களில் தெரிந்த உணர்ச்சிக் கலவை மிகுந்த ஆச் சரியத்தைக் கொடுத்தது!

அவளிடம் அதிர்ச்சி இல்லை! ஓர் திகைப்பு மட்டுமே! அத்திகைப்பில், சந்தோசம் ஓர் துளி, நன்றி இரண்டு துளி, பயமின்மை சிறு துளிகள், அன்பின் கதகதப்பு பல துளிகள் என்று அவளது சம்மதம் கண்ணிலேயே காவிய மாய் விரிந்து பரந்தது!

அவனது கையைப் பிடித்து, மெல்ல தன் புறமாய் இழுத்துக் கண்களை அகல விரித்து, அவனை விழுங்கி விடுபவள் போல் சற்று நேரம் பார்த்திருந்துவிட்டு, ''நான் சீக்கிரமே சரி ஆகிடுவேன்!'' என உதடு அசைத்தவள், அவன் ஏதோ பேசத் தொடங்கவும் ''உங்களோட இருந்தா!'' என முடித்தாள்.

அதில் மெய்யுருகிப் போனவனாய், தன்னை நோக்கி நீண்டிருந்த அவளது ஆட்காட்டி விரலை, அழுந்தப் பிடித்து அவளும் ஓர் கதகதப்பை விதைத்தான் பாலா!

அவனுள்ளிருந்த விரலை உருவிக் கொள்ளாமல், மெல்ல அவளது உதடுகள் ''தேங்க்ஸ்'' என அசைந்து கொடுத்தன.

அந்த வார்த்தையைக் காட்டிலும், அவளது கண்களில் தான் எத்தனை எத்தனை பாவனை!

வெயிலில் அலைந்து திரிந்தவனின் தொண்டையில் ஜில்லென்ற பதநீர் இறங்கிய நிம்மதி!

பாலா என்பவனின் துணை ஒன்று மட்டுமே, தன்னை இன்னலிலிருந்து காக்கும் என்ற எண்ணம் அவளுள் ஆழ விதைந்திருந்தது.



அது எதனால் என்பது அவளுக்குமே புரியவில்லை!

ஒருவேளை, சம்பவம் நடந்ததன்று காலையில் தான், அவர்களது காதல் பரஸ்பரம் உணரப்பட்டதாலா?

இல்லை, அவளுக்கு ஓர் இன்னல் எனும்போது, அதைத் தீர்ப்பவன் பாலா என்பதாலா? வேலை வாங்கிக் கொடுத்தது தொடங்கி, எத்தனையோ பிரச்சனைகளைத் தீர்த்து வைத்திருக்கிறானே!

இல்லை, அந்தக் கொடும்பாவிகள் பாலாவையும் அவளையும் அசிங்கமாய் சித்தரித்ததாலா?

இனிமேலும், செல்வி.விதுபாலாவாக இருக்க முடியும் என அவளுக்குத் தோன்றவில்லை என்பதாலா? திருமதி என்ற பட்டம்... அதுவும் திருமதி.பாலமுருகன் என்ற பட்டம் அவள் பட்ட களங்கங்களைத் துடைத்தெறிந்து விடும் என்பதாலா?

ஏனென்று புரியாத போதும், விதுபாலாவுக்கு விடி வெள்ளி வசந்தமாய் வாசல் வந்தது போலிருந்தது!

அவன் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொன் னதுமே, உள்ளே போன தன் குரல் மீண்டு வந்துவிடும் என்ற நம்பிக்கை அவளுக்கு வந்துவிட்டது.

உள்ளே ஊற்றாய் பெருகிய சந்தோஷத்தில், சரி யென்று விட்டாள்!

அவளது சம்மதம் கிடைத்த வினாடி, உள்ளே அடித்த பெரும் புயல் எந்தவித ஆரவாரமும் இன்றி அடங்கிவிட்ட தில், அங்கிருந்த இருக்கையில் தோய்ந்து அமர்ந்தான் பாலா.

அதன்பின்னே, அங்கே ஓர் அர்த்தமுள்ள... அர்த்த மில்லா அமைதி சூழ்ந்து நின்று, இருவரது மனங்களின் நாளங்களையும் ஒன்று சேர்க்க முயன்றது!

நிமிடங்கள் கரைந்த நிலையில், விடாமல் பிடித் திருந்த அவளது கையில் சிறு நடுக்கம் ஓடி மறைவது தெரிய, ''என்ன''வென்று வினவினான் பாலா, கண் களால்!

அப்போதும் அவள் வாய் திறக்கவில்லை! கண்களே, மனதை... மனதின் கலக்கத்தை எடுத்துக் காட்டின.

அவன் தான் முதலில் காதலைச் சொன்னான் என்ப தெல்லாம் மறக்க, தனது சுயநலத்துக்காக அவனது வாழ் வைப் பாழக்குகிறோமோ என்ற கலக்கம் சூழ்ந்து நின்றது, கண்ணில்.

அதைப் படித்தவனாய் ''ஷ்! பப்லு! உன்னோட இந்த நிலைமை... இப்போதைய செட்பாக் (பின்னடைவு) தான்... நிரந்தரமான முடிவில்லை! சோ... எனக்கு நீ சரி யான மேட்ச் இல்லையோன்னு கவலைப்படறதை விட் டுடு! ப்ளீஸ்!'' என்றான் பாலா, பார்வையாலும், வார்த்தை யாலும் அவளுள் புகுந்து!

அப்போதைக்கு, அக்கலக்கம் மறைவது போலிருந்த போதும், அது முழுதாய் மறையவில்லை என்பது பாலா வுக்குப் புரிந்தது!

ஆனால், அதை முழுதாய் மறைய வைப்பதும் சாத்திய மில்லை என்பது அவனது எண்ணம்! காலப்போக்கில், அவர்கள் வாழும் வாழ்க்கையின் விளைவாய் மட்டுமே அது போக வேண்டும் என்றெண்ணினான் அவன்! போகும்... போக வைப்பேன் என்ற முடிவு உள்ளே விதைய, அங்கே காதல் வேறு பரிமாணம் பெற்று மிளிர்ந்தது!

தீவிர முக பாவத்துடன் அவன் திரும்பியபோது, மீண் டும் விதுவின் முகத்தில் ஓர் கலக்கம்!

''என்னடா?'' என பாலா உருக,



''அம்மா...'' என்றாள் அவள். அசைந்த உதடுகள் லேசாய் நடுங்க, முகம் பயத்தில் இருள, உடம்பு ஒரு முறை தூக்கிப் போட்டது.

''என்ன பயம் உனக்கு? எதுனாலும் நான் பார்த்துக் கிறேன்...'' என்று உறுதி கொடுத்தவன், அதன்படி பார்த்தும் கொண்டான்.

விதுவின் தந்தைக்கு, அக்கல்யாணத்தில் எந்தவிதமான தடையும் இருக்கவில்லை! சொல்லப் போனால், மிக மிக சந்தோஷமே!

விது, நல்லபடியாய் இருந்தபோது இத்திருமணம் நடந்திருந்தால் கூட, இவ்வளவு சந்தோஷப்பட்டிருப் பாரா என்று தெரியவில்லை. ஆனால், ஓர் இக்கட்டான சூழ்நிலையில் மகளின் கைபிடிக்கும் பாலாவின் மீது, அவரது மரியாதை ஏகத்திற்கும் ஏறியதில், உலகத்தி லேயே அதிர்ஷ்டசாலியாய் மகளையும், உலகத்திலேயே அதீத சந்தோசம் கொண்டவராய் தன்னையும் உணர்ந்தார் அவர்.

மகள் ''அம்மா'' என்று தயங்கியபோது, ''நான் பார்த்துக் கிறேன் பாலாமா. பெத்த கடமைக்கு அவளைக் கல்யாணத் துக்குக் கூப்பிடணும். அவ வந்து ஏதாவது கலாட்டா பண்ணினா, அப்புறம் பார்த்துக்கலாம்'' என்றார் மனைவி யின் குணம் அறிந்து.

அவருக்குமே, விதுவை எப்படி ஊருக்கு அழைத்துச் செல்வது என்று சிறு குழப்பம் கலந்த பயம் இருந்தது!

பேச்சு லேசாய் திக்கும்போதே, மகளை வசைபாடி வறுத்தெடுக்கும் மனைவி, பேச்சே வராமலிருக்கும் போது, குதறி எடுத்துவிடுவாளே என்ற பயம் ஒருபுறம்! ஏறகனவே, அதீத மன அழுத்தத்தில் இருக்கும் மகளை,

ஊருக்கு அழைத்துச் சென்றால், மொத்தமாய் குரலை இழந்து... கூடவே சுயத்தையும் இழந்து விடுவாளோ என்ற பயம் மறுபுறம்! இதனடுவே, பாலமுருகனின் குடும்பத்தார், பெண்ணிடம் காட்டும் பிரிவும் பாசமும் அவரைக் குழப்ப வேறு செய்தன!

அடுத்து என்ன என்று அவர் மயங்கி நிற்கும்போது, தேனாய் பாய்ந்த கல்யாணச் செய்திக்கு முன், மனைவியின் பேச்செல்லாம் தூசு என்றே எண்ணினார் அவர்!

மனைவி பற்றிய அவரது கணிப்பைப் பொய்யாக்காமல், சென்னை வந்திறங்கிய விதுவின் தாய், விதுவை வசை பாடத் துவங்க,

''இன்னும் ரெண்டு நாள் பொறுங்க... சனியன்னு சொல்ற உங்க பொண்ணு எங்க வீட்டு மகாலட்சுமி ஆகிடுவா. அதுக்கப்புறம் உங்களுக்கு எந்தத் தொல்லையும் இருக்காது!'' என்று பாலா திருப்பிக் கொடுக்க,

கொஞ்சம் அடங்கிப் போனார், விதுவின் தாய்.

கொஞ்சமாய் அடங்கி நின்றவரை முழுதாய் வாய் அடைக்கவென, விதுவுடன் அவரைத் தனித்துவிடவே இல்லை, பாலா.

ஒன்று அவன் துணை இருந்தான். இல்லை, ரமணியம்மாவை துணை இருக்கச் செய்தான்.

வேலைகள் வேகமாய் நடந்தேற, யாருக்கும் காத்திராமல் கல்யாண நாளும் வந்து சேர்ந்தது.

குன்றத்தூர் முருகன் கோவிலில், இரு குடும்பத்து அங்கத்தினர் மட்டும் சூழ்ந்திருக்க, செல்வி.விதுபாலா, திருமதி.பாலமுருகனாய் மாறினாள்.

பாலா அணிவித்த பொன்மஞ்சள் தாலி, அவளது மார்பில் பட்ட வினாடி, அந்தத் தாலியின் வீற்றிருந்த



அம்மையின் சூலாயுதமும், அப்பனின் உடுக்கையும் அவளுள் அரண்டு கொண்டிருந்த அந்த நாள் நினைவுகளின் கொரூரத்தை, அடித்து விரட்டியது போலிருந்தது அவளுக்கு!

அவர்கள் சுமத்திய கலங்கமெல்லாம், அந்த மஞ்சளில் கரைந்து விட்டது போலிருந்தது!

அவன் நெற்றி மீது இட்ட குங்குமம், ரத்தமாய் வடிந்திருந்த வேதனையை சுவடின்றிக் கழுவி விட்ட உணர்வு அவளுள்!

அவனிட்ட திலகத்திலிருந்து சிந்திய சில துளிகள், அவளது மூக்கில் பட, அந்தக் கயவர்களின் கைபட்ட இடம் தூய்மை பெற்றது போன்ற விடுதலை உணர்வு அவளுக்குள்!

மாலை மாற்றும் போது, அவனது நெற்றியிலிருந்து சிதறிய வேர்வைத் துளிகள், கங்கையில் ஸ்நானம் செய்த ஆத்மார்த்தத்தை அவளுள் விதைத்தது!

கண்ணிலிருந்து சின்னதாய் இரு நீர் மணிகள் உருண்டோட, பளபளத்த விழிகளுடன் தாலியையே வெறித்திருந்தாள், விதுபாலா.

கலங்கி நின்றவளை ஆதரவாய் அணைத்த பத்மா, கைக்குட்டையால் தங்கையாகி விட்டவளின் கண்ணீரைத் துடைத்து ''ஷ்... விது! சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்தில்... இதென்ன அழுகை? தம்பி என்ன நினைக்கும்? ஹ்ம்ம் கண்ணைத் துடை!'' என்றாள் பெரியவளாய்.

சட்டென, விது பாலாவை நிமிர்ந்து பார்க்க, அக்கள்வன் அவளைப் பார்த்துக் கண்ணடித்து நிமிர்ந்தான்!

''எல்லார் முன்னாடியும் கண்ணடிக்கிற அழகைப் பாரு!'' என்று அலுத்துக் கொண்டாலும், உள்ளூர ஓர் உற்சாக

ஊற்று பெருகுவதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

தொங்கத் தொங்கத் தாலியும், தழையத் தழையப் பட்டுப் புடவையும் அதற்கும் மேலாய் பொங்கிப் பெருகிய ஆனந்தமுமாய் நின்ற மகளைக் காண்கையில்,

''ஊர்ல ஒருத்தருக்கும் சொல்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டாளே கடன்காரி...'' என்று கரித்துக் கொட்டிய மனைவியின் பேச்சு, மண்டையில் ஏறவே இல்லை விதுவின் தந்தைக்கு!

அதுவும், மகளின் புகுந்த வீட்டுக்காரர்களின் பெருந்தன்மையும் சிரித்த முகமும், மகளின் வாழ்க்கையில் இனி வசந்தமே என்ற நம்பிக்கையை அவருள் விதைத்தது!

ஆதரவான உறவுகள் சூழ்ந்திருக்கையில், மகளின் பிரச்சனை விரைவிலேயே குணமாகிவிடும் என்று உறுதியாகவே நம்பினார் அவர்.

அந்த உறுதி கொடுத்த உருக்கமோ என்னவோ, மகளைத் தாரை வார்த்துக் கொடுக்கையில் ''இந்த அப்பனால தான்... உனக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கையைக் கொடுக்க முடியல... இனியாவது நீ நல்லா இருக்கணும் பாலாமா!'' என்றார் குரல் நடுங்க.

ஏற்கனவே கண்ணீர் முட்டிக் கொண்டு நின்ற விதுவுக்கு, தந்தையின் வார்த்தைகளைக் கேட்டதும், மடை திறந்த வெள்ளமாய் கன்னம் நனைந்து விட்டது!

''அப்பா... நீங்க மட்டும் எனக்கு ஆதரவா இல்லைன்னா... தாழ்வு மனப்பான்மையிலேயே நான் செத்துப் போயிருப்பேன்பா! ப்ளீஸ் இப்படியெல்லாம் பேசாதீங்கப்பா...'' என்று சொல்லத் துடித்தது அவள் மனம்! ஆம், துடிக்க மட்டுமே செய்தது! ஆனால், சொல்ல முடியவில்லை!



உதடு மட்டுமே அசைய... வார்த்தையை வெளிக் கொட்ட முடியாமல், திணறிப் போனாள் விது!

உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதில், குரலின் பங்கு எத்தகையது என்பது மீண்டும் உரைக்க, மனம் வலித்தது!

நெஞ்சுக் கூட்டிலிருந்து விடை பெற்ற வார்த்தைகள் வடிவம் பெறாமல், தொண்டைக்குள்ளேயே அமுங்கிப் போக, நாசி விடைக்க அழுது நின்றாள் பெண்.

நினைத்ததைச் சொல்ல முடியாமல், வெறுமே உதட்டை அசைத்துக் கொண்டு, பேச்சற்ற ஜடமாய் நிற்பது போன்ற உணர்வில் அவள் தத்தளிக்கும் போது,

''என்ன மாமா பேசறீங்க? விதுவை ஒரு குறையுமில்லாம வளர்த்திருக்கீங்க... அவ குறைன்னு நினைச்சதை மறக்க வச்சு, அவளை ஒரு இஞ்ஜினீயர் ஆக்கியிருக்கீங்க... நல்ல வேலைக்குப் போக தூண்டுகோலா இருந்திருக்கீங்க... என்னை மாதிரி ஒரு சூப்பர் டூப்பர் மாப்பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கீங்க... இவ்வளவு பண்ணிட்டு அதுவும் கடைசியா பண்ணது எவ்வளவு பெரிய சாதனை? அதை மறந்துட்டு இப்படிப் பேசலாமா?'' என்றவன் பாலா, உண்மையும் பீத்தலுமாய்!

அவ்வளவு நேரம் அங்கு நிரம்பி இருந்த ஒரு வகை அமைதியை, அவனது பேச்சு சிறு சிரிப்பலையாய் மாற்றிப் போட்டது!

கூடவே, விது கொடுத்த இரண்டு அடிகள், சிறு சிரிப்பலையை பெரும் ஆர்ப்பரிப்பாய் உருமாற்றியது!

அதன் பின்னர், மற்றவருக்கு விரைவு ரயிலாகவும், மணமக்களுக்கு மாட்டு வண்டியாகவும் நகர்ந்த பகல், ஒருவழியாக இரவை அடைந்தது! ஆனந்தமாய்!



# 15

அந்த இரவின் விடியல், ஓர் புது பரவசத்தைக் கொடுக்க, பாலாவின் அறையில் அவனது வருகைக்காக காத்திருந்தாள் விதுபாலா.

ஆம்! இரவு உணவு முடிந்ததும் ''நீ போய் ரூம்ல ரெஸ்ட் எடு.... எனக்கு வெளிய கொஞ்சம் வேலையிருக்கு'' என்று சென்றவன் தான், இன்னமும் வரவில்லை.

''கல்யாணத்தன்னைக்குமா?'' என்று முணுமுணுத்த பெற்றோரையே மதிக்கவில்லை எனும்போது,

''கட்டின அன்னைக்கே பொண்டாட்டியை அம்போன்னு விட்டுட்டுப் போறாரு... இவரைப் போய் உலகத்தில் இல்லாத ஓவிய மாப்பிள்ளைன்னு பிடிச்சிருக்கா உங்க சீமந்தப் புத்திரி!'' என்று கத்திய விதுவின் தாயை சட்டமே செய்யவில்லை.

மணி ஒன்பதைத் தாண்டி, பத்தையும் கடந்தபோது, விதுவுக்கு இருப்பே கொள்ளவில்லை.

''முதலிரவை வச்சுக்கிட்டு எங்க ஊர் சுத்துறான்?'' என்று கடுப்பாக வந்தது.

அந்தக் கடுப்பு கொஞ்சம் கொஞ்சமாய், ''ஒருவேளை, இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லையோ? அதான் என்னை அவாய்ட் பண்றானோ?'' என்ற கலக்கமாய் மாற்றம் கொண்டது!

''ஊமையா இருக்கவளைக் கொஞ்சி என்ன புண்ணியம்? அவளால் திருப்பிக் கொஞ்ச முடியுமாக்கும்ன்னு நினைக்கிறானோ?''



''அப்புறம் ஏன் கல்யாணம் பண்ணிக்கிட்டான்?'' என்று மண்டைக்குள் ஆயிரம் நண்டுகள் ஓட, ஓர் நிலைக்கு மேல் அவைக் கொடுத்தக் குடைச்சல் பொறுக்க முடியாமல், கைப்பேசியை எடுத்து அவனது எண்ணை அழுத்தி விட்டாள்.

அங்கே ரிங் போகும் வரை, அவன் மீதிருந்த கோபம் மட்டுமே பிரதானமாய் இருக்க, மனதினில் அவனை நறுக்கென்று கேட்க வேண்டிய கேள்வி மட்டுமே ஓடிக் கொண்டிருந்தது.

ஓர் பத்து ரிங்கிற்குப் பின்னர், அவனது ''ஹலோ'' கேட்டதும் தான், தனது நிலையை முழுதாய் உணர்ந்தாள், விதுபாலா.

அவன் பேசினாலும், அவளால் பேச முடியுமா என்ன? எந்தத் தைரியத்தில் அவனுக்கு அழைத்தாள்?

நேரில் இருக்கும்போது, உதட்டின் அசைவை வைத்து, அவள் சொல்ல வருவதைக் கணிப்பான் தான்!

ஆனால், கைப்பேசியில் எப்படி முடியும்? பேச்சு என்ற பேரில், அவளது வாயிலிருந்து வரும் காற்றை வைத்து... அது உண்டு பண்ணும் ஊ... ஊ என்ற ஒலியை வைத்து எப்படி வரிவடிவம் கண்டுபிடிப்பான்?

வெடித்துக் கொண்டு வந்தது அழுகை!

அழுகையின் விளிம்பில் அவள் நிற்கும்போதே ''ஹே பப்லு! என்ன விஷயம்டா? சொல்லுமா!'' என்று ஊக்கியது அவன் குரல்.

''சொல்லுமாவா?!!! இவனுக்கு என்ன பைத்தியமா? அவளது நிலமையை மறந்து விட்டானா என்ன? சொல்லு என்றால் என்ன அர்த்தம்? என்ன சொல்வது? எப்படிச் சொல்வது?'' என்ற இயலாமை அழுகையை இரு மடங்காக்க, வெடித்துக் கிளம்பியது அழுகை!

''ஹா... ஹ... ஹ... ஹ... க்கக்... ஹுக்க்...'' என்று விம்மலும் விக்கலுமாய் அவள் வெடித்துவிட,

''ஏய்... ஏய்... எதுக்கு அழறே? பப்லு! ஸ்டாப் இட்!'' என்று போனில் கேட்டுக் கொண்டிருந்த குரல், சில வினாடிகளிலேயே அருகில் கேட்கவும் திகைத்துப் போனாள் விதுபாலா.

சட்டென அழுகையின் அளவு குறைந்துவிட, அவனைத் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள் விதுபாலா.

''என்ன அப்படியொரு பார்வை? மூணு குலாப் ஜாமூனை ஒண்ணா சேர்த்துப் பிடிச்ச மாதிரி... எம்மாம் பெருசா இருக்கு கண்ணு? வாட் இஸ் தி மேட்டர்?'' என்று கண் சிமிட்டியவன்,

அவளை இடையோடு சேர்த்தணைத்து, மறு கையால் அவளது கன்னத்தில் வழிந்த கண்ணீரை சுண்டிவிட்டான்.

இங்கேயே இருந்து கொண்டு தன்னை ஏமாற்றி இருக்கிறான் என்பது புரிய, தன் பலம் முழுதையும் திரட்டி, அவனை விலக்கித் தள்ளினாள் விதுபாலா.

''ஹே! வலிக்குதுடி... பார்க்கத் தான் ஒல்லியா இருக்கே... ஆனா செம ஸ்ட்ராங்... தள்ளாதடி... தள்ளாதன்னு சொல்றேன்... தள்ளாத...''

அவன் பேசிய எதையும் அவள் காதில் வாங்கவே இல்லை. இரு கைகளாலும் அவனைத் தள்ளி, வெளிவராண்டாவில் கொண்டு விட்டவள், குடுகுடுவென ஓடி வந்து, அந்தக் கதவை அடைக்கப் பார்த்தாள்.

அவள் கதவை அடைக்கும் வரை, பாலா வேடிக்கையா பார்த்துக் கொண்டிருப்பான்?

அவளை விட வேகமாய் நகர்ந்து, அவளைப் பின்னோடு அணைத்துத் தூக்கியவாறே அறைக்குள் பிரவேசித்தான்.



''ம்ம்... ம்ம்... ம்ம்...'' என அவள் கையையும் காலையும் அடித்துக் கொண்டு, அவனிடமிருந்து விலக முற்பட,

''அடிங்க! என்ன கோபம் உனக்கு?'' என்று அவளது பலத்துக்கும் மேலாய் தன் பலம் திரட்டி அவளை அடக்கியவன், கட்டிலில் சாய்த்தான்.

தன் முகம் நோக்கிக் குனிந்தவனின் தாடையைப் பலமாய் தாக்கி, அவனது முகத்தைத் தள்ளினாள் விதுபாலா.

''என்னடா? ஏன் கோபம்?'' என்றவன்,

அவள் முகத்தைத் திருப்பவும், ''உனக்காகத் தான் நான் வீட்டில இருந்துக்கிட்டே, ரூம்குள்ள வராம இருந்தேன்'' என்றான் அவன், திருப்பிய அவள் முகத்தில் ஓர் முத்தம் வைத்து.

அந்த வார்த்தைகளில், அவள் சட்டென் முகம் திருப்ப, பாலாவின் உதடுகள் எக்குத்தப்பாய் அவளது முகத்தில் தடம் பதித்தது!

கிடைத்த வாய்ப்பை விடாதவனாய் அவன் புகுந்து விளையாட, அவனை விலக்கி, விஷயம் வாங்குவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது விதுவிற்கு!

''ம்ம்ம்'' - பொறுக்க முடியாமல், நறுக்கென்று கிள்ளி விட்டாள் விது.

கையை உதறிக் கொண்டு, ''ஆ... ஆ...'' என அவன் விலகவும், அது தான் சாக்கென்று ஓடிப் போய், சோபாவில் அமர்ந்து கொண்டாள் மனையாள்.

''சரியான ராட்சசி! யாராவது... ஃபர்ஸ்ட் நைட் அன்னைக்கு... புருஷனை இந்த அடி அடிப்பாங்களா? அடிக்கிறதுமில்லாம கிள்ளி வேற வைக்கிறே! இதுக்குத் தான்... நகத்தை நீள நீளமா வளர்த்து வச்சுக்கிறீங்க

போல... ஆஅ... ஆ...எரியுது!'' என அவன் கையை ஊதவும்,

விதுவுக்கும் ஒரு மாதிரி போய் விட்டது! ரொம்பவும் பலமாய் கிள்ளிவிட்டோமோ என்ற எண்ணம் தோன்ற, தன் நகங்களை ஆராய்ந்தாள்.

''ப்ச்... கூர்மையாய் தான் இருக்கின்றனவோ... பாவம்... நன்றாக கீறி விட்டேனோ... தடம் பதிந்திருக்குமோ!'' என்றெல்லாம் நெஞ்சம் பரிதாபப்பட, மெல்ல எழுந்து, அவனிடம் சென்றவள், அவனது கையைப் பிடித்துப் பார்த்தாள்.

தன் பேச்சை முடித்துக் கொண்டு, அவளது முகத்தையே பார்த்திருந்த பாலாவுக்கு, அவள் நிச்சயம் தன்னை நோக்கி வருவாள் என்பது புரிந்தது.

அவள் நகத்தை ஆராய்ந்த அழகையும், அவள் முகத்தில் தோன்றிய பாவங்களையும் ஓர் கள்ளச் சிரிப்புடன் ரசித்திருந்தவன், அவள் வருவதற்காகவே தன்னை அடக்கிக் கொண்டு, சற்று நேரம் அமைதி காத்தான்.

அவள் தன் கையைப் பிடித்ததுமே, அவளைப் பிடித்துக் கொண்டான், பாலமுருகன்.

''ஹப்பா! என்ன கோபம்! என்ன கோபம்! என் பப்லுக்கு என்னமா கோபம் வருது?'' என்று அவளது மூக்கைப் பிடித்து ஆட்டியவனின் கையில் ஓர் அடி வைத்தவள்,

''நீங்க மட்டும்... ஃபர்ஸ்ட் நைட் அன்னைக்கு என்னைத் தனியா விட்டுட்டுப் போலாமா? நான் எவ்வளவு பயந்துட்டேன் தெரியுமா?'' என்றாள்.

குரல் மட்டுமே கோபத்தை வெளிக்காட்டும் என்பதெல்லாம் பொய்யென்று புரிந்தது, பாலாவுக்கு! வெறும் உதட்டசைவிலும், கண்ணின் ஜாலத்திலும், உடல் மொழியிலுமே தன் கோபம் மற்றும் பதட்டத்தின் அளவை வெளிக் காட்டினாள், விது!



தன் கைச்சிறையில் நின்றிருந்தவளின், மன விலங்கை விடுவிக்கும் பொருட்டு, ''எனக்கு மட்டும் உன்னை விட்டு விலகிப் போகணும்ன்னு ஆசையா என்ன? காலையில இருந்து... எப்படா ராத்திரி ஆகும்... எப்படி நீ ரூம்க்கு வருவேன்னு காத்துக்கிட்டு இருக்கிறவன், உன்னை விட்டு விலகிப் போறேன்னா ஏதாவது காரணம் இருக்கும்ன்னு புரிஞ்சுக்க வேண்டாமா? இப்படியா, உன்னையும் வருத்திக்கிட்டு, என்னையும் அடிச்சுக்கிட்டுத் திரியுறது?! ஹ்ம்ம்?'' என்றவன்,

''இந்த மூளையை கொஞ்சம் யூஸ் பண்ணியிருந்தா... இந்நேரம் நாம எங்கெங்கயோ போயிருக்கலாம்... ப்ச்! என்ன செய்றது?'' என்று சலிப்பு வேறு கொண்டான்.

அவன் கூற வருவது பாதி புரிய, மீதி புரியாமல் போக, விழித்துக் கொண்டு நின்ற மனைவியின் இமைகளில் ஓர் முத்தம் வைத்தவன் ''விது! என்னால உன்னை இப்படிப் பார்க்க முடியலைடா... என்னால தான் உனக்கு இப்படியொரு நிலைமை வந்திடுச்சுன்னு மனசு கிடந்து வலிக்குது! இந்த நிலைமைக்குக் காரணமான நானே, உன்னை இதில இருந்து மீட்டுடணும்ன்னு தான்... இப்படிப் பண்ணினேன். நான் ரொம்ப நேரம் வரலைன்னா... கட்டாயம் நீ போன் பண்ணுவேன்னு நினைச்சேன்... அப்படிப் பண்ணும் போது, ஒரு உந்துதல்ல நீ பேசிடுவேன்னு நினைச்சேன்...'' என்றான், தன் செயலுக்கான விளக்கமாய்.

அவளுக்கும் அவனது முயற்சி புரிந்தது!

கோபத்தில் சிவந்திருந்த முகத்தை, அவனது மார்பில் ஆழப் புதைத்துக் கொண்டவள், பல நிமிடங்கள் கரைந்த பின்னரும், தன் அணைப்பைத் தகர்த்தவில்லை.

அவனுமே விலக எண்ணவில்லை!

ஆதரவாய் முதுகு தடவி, முடி கோதி, தோள்பட்டைகளை இதமாய் பிடித்துவிட்டு, கழுத்தில் இலகுவாய் பிடித்து விட்டு, தன் செய்கையால் அவளது உடலையும், தன் அணைப்பால் அவளது மனதையும் தளரச் செய்து கொண்டிருந்தான்.

''உன் மனசில இருக்கிறதை சொல்லிடுடா...'' என அவன் உந்தவும், சட்டென நிமிர்ந்து பார்த்தாள் விதுபாலா.

''ஆமா... சொல்லிடு! இந்த நேரத்தில அதை ஏன் கிளறுறேன்னு நினைக்கிறியா? எனக்கும், அங்க நடந்ததைத் திரும்பக் கேட்கிறதில துளியும் விருப்பமில்லை தான்... ஆனா... அதைச் சொன்னா உன்னோட மனசு பாரம் குறையும்னு எனக்குத் தோணுது... ப்ளீஸ் விது! ஜஸ்ட் ஓபன் அப்! ஒரு தடவை சொல்லிட்டா... உன் மனசில இருக்கிற அந்தக் குப்பையெல்லாம் வெளிய வந்திடும்! ஒரு திறந்த மனசோட... சந்தோஷமா நாம நம்ம வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்'' என்று குரலில் வற்புறுத்தலுடன் அவன் பேசவும்,

அவனது வார்த்தைகள் முடிந்த விநாடி, விதுபாலாவின் கண்கள் கண்ணீரின் ஊற்றாய் மாறிப் போயின!

''என்னடா? என்னடா? அழாத பப்லு!''

''ஏன்மா? உனக்கு மனசுக்குப் பிடிக்கலைன்னா விட்டுடு விது... வேணாம்...''

''அய்யோ... நான் தெரியாம கேட்டுட்டேன் பப்லு! விடுமா!''

''விது அழாத! ப்ளீஸ்!''

''உன்னை அழ வச்சுப் பார்க்கிறதே எனக்குப் பொழப்பா போச்சுப் போல...''



''நான் உனக்கு நல்லதுன்னு நினைச்சு செய்றது எல்லாமே இப்படி சொதப்பலா முடிஞ்சிடுதே! ஹய்யோ! ப்ளீஸ் விது... நிறுத்துடா!''

ம்ஹூம்! அழுகை நிற்கும் பாடாய் இல்லை!

செய்வதறியாமல், அவளாய் நிறுத்தட்டும் அவன் காத்திருக்க, அவள் நிறுத்தினாள்!

தேம்பிக் கொண்டே, அவனை நிமிர்ந்து பார்த்தவள் ''அ... அஅன்னைக்கு... அ... அன்னைக்கு... என்ன ந... நநடந்துச்சு தெரியுமா?'' எனக் கேட்டாள் பெரிதாய் இடைப்பட்ட விக்கலுடன். ஒலி வடிவம் பெறவில்லை என்றாலும் பேச்சு பேச்சுத் தானே?!

வார்த்தையால் அல்லாமல் கண்ணால் "சொல்லும்மா..." என்றான் கணவன்.

இப்போது தான் நடந்தது போல், கண்களை இறுக மூடித் திறந்து, வலியை வெளியேற்றியவள்,

''நா... நா... பேசுறது பு... பு... புரியுதா?'' என்றாள் உதட்டோடு சேர்த்து கைகளாலும் பேசி.

வினாடி தாமதிக்காமல், ''நல்லாவே!'' என அவன் புன்னகை பூக்க,

''ஆ... ஆ... ஆனா... எனக்குப் புரியல... நா என்ன பேபே... பேசுறேன்னு எனக்குக் கேட்க மாட்டேங்குது... ம... மம... மமனசில ஏதோ நி... நி... நினைக்கிறேன்... ஆனா... அது வ... வ... வவார்த்தையா வருதான்னு தெரியல... ச... சத்தமே இல்லல... அ... அ... அதான்... எனக்கே சரியான்னு தெ... தெதெதெரியல...'' - கண்ணில் அளவிட முடியாத ஓர் வருத்தம்!

நெஞ்சம் ரணமாய் வலித்தது, பாலாவுக்கு!

"படுபாவிங்களா! உங்களுக்கு இருக்குடா, வேட்டை!" என்று சூளுரைத்த மனதின் கோபத்தை அடக்கிக் கொண்டு, மனைவியைத் தேற்றத் துவங்கினான் பாலா! அவள் தானே, அவனது தலையாய கடமை!

"விது! இங்க பாரு! உனக்கு ஒண்ணுமே இல்லைடா... அதிகமா பயந்ததில இப்படி ஆகிடுச்சு! நீ வேணும்னா பாரேன்... கூடிய சீக்கிரமே நீ பழைய மாதிரி ஆகிடுவே!" என்றவன்,

ஏதோ மேலும் சொல்லத் துவங்கவும், "நா... நா... அன்னைக்கு நடந்ததை ச... சொசொசொல்லவா வேணாமா?" என்று சிறு பிள்ளையாய் இடையிட்டாள் மனைவி.

உருகி நின்ற கணவன் "ம்ம்ம்" என்பது போல் தலையசைக்க,

"நா... நா... வ... வவ... வேன்... வேணாம்னு எவ்வளவு சொன்னே த... த... தா... தெரியுமா? கேட்கவே இல்லை..." எனத் தொடங்கியவள், அவுட்டிங் சென்ற தினம் நடந்த அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

"ஒ... ஒ... ஒடம்பபபபெல்லாம் எஎஎஎரியுது... அ... அஅஅப்படியே செத்த்த்த்த்த்த்த்த்த்துடலாம் போல... இஇ... இ... இ... இருந்துச்சு..."

"ஷ்" என்றபடியே, தன் உதடுகளின் மேல் விழுந்த அவனது விரல்களை விலக்கியவள்,

"அ... அஅஅந்த நே... நேர்ர்ரம் நான் யாரைத் தேடினேன் த... த... தா... தெ... தெரியுமா?" எனக் கேட்டு,

அவனது பதிலை எதிர்பார்க்காமலே, தன் ஆட்காட்டி விரலை அவனது மார்பில் அழுத்தி, "உங்களை..." என்றாள்.

தாங்க முடியாமல், உடம்பு இறுக, இறுகி நின்ற மனைவியை இறுக அணைத்தான் கணவன்.



அந்த நேரத்தில் மட்டும், அவன் அங்கே இருந்திருந்தால்? அவனது தேவதையின் குரல் மறைந்திருக்காதோ? அவன் மீதே அவனுக்கு வெறுப்புப் பெருகிறது!

ஆனால், சுய வெறுப்பைக் காட்டிலும், எதிரே நிற்பவளின் துயர் பெரிதாய் தெரிய, தன்னோடு ஒன்றி நின்றவளின் காதருகே குனிந்து, "நீ உன்னை எங்கேயும்... எப்பவும்... எதுக்காகவும் தனியா அனுப்ப மாட்டேன், விது! வாழ்நாள் முழுசும்... உனக்கு நான் துணையா இருப்பேன்!" என்றான் ஆத்மார்த்தமாய்.

"ம்ம்ம்... ம்.." எனக் கூறித் தானும் அவனை இறுக்கிக் கொண்டவள், சற்று நேரத்தில் கொஞ்சமாய் விலகினாள்.

"ப்ளீஸ்டா... இங்கேயே இரு..." என மீண்டும் இழுத்தவன், படுக்கையில் அவளுடன் விழ,

"ஒரே நி... நி... நிமி... நிமிஷம்..." எனக் கெஞ்சுவது போல் பாவனை காட்டியவள், அவனிடமிருந்து மொத்தமாய் விலகிவிட வில்லை.

அவனது மார்பில் தாடையைப் பதித்து, முகத்தை மட்டும் நிமிர்த்தி அவனைப் பார்த்து,

"உ... உ... உஉங்களோட இ... இஇஇஇருந்தா... எனக்க்க்க்கு எந்தக் கக... க... ககஷ்டமும் வராதுன்னு மம... ம... ம... மனசு சொல்லுது... அதே... மா... மாஆ... திரி வந்த கக... க... கஷ்டமும் சீக்கிரமே போய்டும்ன்னு மனசு ச... ச... சொ.. சொசொல்லுது... அ... அ... அஅஅதனால என்னை வி... வி... விவிவிட்டுப் போகாதீங்க! இப்போ... செஞ்ச மாதிரி கு... கு... கூ... கூகூட வேண்டாம்! நீங்க விலகி நி... நிநி... நிக்கும் போது, எனக்க்க்குக் குரல் வரும்ன்னு தோணலை... நீங்க நெ... நெ... நெநெருங்க நெருங்கத் தான் எஎ... எஎ... எ... எனக்குள்ள

ஒரு ஆ... ஆஆத்மபலம் வரும்ன்னு தோ... தோதோதோ... ணுது'' என்று, மறையாமல், தன் மனதை வெளிப்படுத்தினான்.

மனதில் இருப்பதைத் தங்கு தடையின்றி வெளியிட்டு விட்டால், வாழ்வில் ஏது பிரச்னை?! அதுவும், நமது துணையிடம் மனதை கண்ணாடியாய் திறந்து காட்டும் போது, மேலும் அதில் அவர்களே சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது, அந்த உறவுக்குள் எத்தனை எத்தனை சந்தோசம்! அன்புப் பரிமாறல்! ஆனந்தக் கொண்டாட்டம்! அணையிடா காதல்! விகல்பமில்லா காமம்!

இருவருக்குள்ளும் விரிந்து பரந்திருந்த காதல், இன்றைக்கு மற்றவர் மனதில் ஊடுருவி, அங்கே வேர் வரை பாய்ந்து, கற்பக விருட்சமாய் காட்சி தந்தது!

அங்கே நிலவிய அமைதிக்கு என்ன பெயர் சூட்டுவது? அழகென்றா? அமுதென்றா? தென்றலென்றா? தேவநாதம் என்றா?

அற்புத நொடிகளாய் கழிந்த அந்த நொடிகளின் முடிவில், பாலா தனது புது மணமகன் அவதாரத்தை அமல்படுத்தினான்.

அவனது முன்னேற்றத்தில் மயங்கிக் கிறங்கியபோதும், புது மணமகளின் முறுக்கைக் கையில் எடுத்தவளாய், ''ம்ஹூம்...'' என அவனிடமிருந்து விலக எத்தனித்தாள்.

பாலாவின் பலத்திற்கு அவளை ஒரே இழுப்பில் கையில் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால், வேண்டுமென்றே அவளை விலக விட்டவன் ''ஹோ... சரி சரி! நான் முத்தம் கொடுக்கக் கூடாதா? நீ தான் கொடுப்பியா? சரி... சரி... கொடு கொடு!'' என்றான் அவள் புறம் தன் முகத்தைத் தாழ்த்தி.



''அஸ்கு.. புஸ்கு...'' என அவளும் சீண்டலில் இறங்கினாள்.

''ஹோ! முகம் வேணாமா? ஏன்டா? முகத்திலேயே எத்தனை பார்ட் இருக்கு... கண்ணு... நெத்தி... மூக்கு... கன்னம்... காது... அப்புறம் முக்கியமா...'' என அவன் தொடங்க,

''அய்யே... ஆ... ஆஆ... ஆசை தா... தாதாதான்...'' எனப் பழிப்புக் காட்டினாள் விதுபாலா.

''சரி விடு! உனக்கும் வேணாம்... எனக்கும் வேணாம்! டாஸ் போட்டுடலாம்! தலை விழுந்தா நீ எனக்கு! பூ விழுந்தா நா உனக்கு!'' என பாலா கூறவும்,

அதன் அர்த்தம் புரிய, முழுதாய் அரை நிமிடம் பிடித்தது விதுவுக்கு!

அர்த்தம் புரிந்ததும், செல்லமாய் இரு அடி வைத்தவளின் கரங்கள், அதன் பின்னர் அவள் வசம் இருந்திருக்குமா என்ன?

பூவோ? தலையோ? ஒருவரிடம் மற்றவர் தோற்க, முடிவில் காதல் மேடையில் கட்டப்பட்ட தாம்பத்திய சிம்மாசனத்தில் இருவருமே ஜம்மென்று அமர்ந்தனர்!!

# 16

அதன் பின்னர், வாழ்க்கையைத் துரத்தும் அவசரகதியுடன் நாட்கள் வேகமாய் செல்வது போலிருந்தது விதுவுக்கு.

முதன் அவசரமாய், பாலமுருகன் திருமணம் முடிந்த இரண்டாவது நாளே அலுவலகம் சென்றான்.

அவன் காட்டிய வேகத்திற்கு, குறைந்தது ஒரு மாத காலத்திற்குத், தன்னை விட்டு நகர்வது கடினம் என்றெண்ணியிருந்த விதுவுக்கு, அதிர்ச்சியின் அளவு பெரியதாய் தான் இருந்தது!

''ஆபீஸ் போக வேண்டாமா?'' என்று தான் அவனைப் பிடித்துத் தள்ளும் நிலை வரும் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு,

''ஏன் ஆபீஸ் போறீங்க?'' என்று கேட்க ஒரு மாதிரியாக இருந்தது!

வேலைக்குச் சென்றதைக் கூட, ஓரளவுக்கு சமாளித்துக் கொண்டவளால், அவன் தினமும் இரவு பத்து மணி தாண்டி வருவதை சகித்துக் கொள்ள முடியவில்லை.

பத்து மணிக்கு மேல் வருபவன், உண்ணக் கூட மாட்டான்.

''பப்லு! செம டயர்ட்...'' என்ற வார்த்தையே முதலும் கடைசியுமாய் இருக்க, அடுத்த நிமிடம் நித்திரை தான்!

அவன் பொய் சொல்லவில்லை என்பது அவனது சிவந்த விழிகளிலும், அசந்து தெரியும் அங்க அசைவிலுமே விதுவுக்குப் புரியும்! ஆனாலும்!

இதற்கெல்லாம் ஓர் முடிவாய், அந்த வார இறுதி வர, ''இப்ப என்ன வேலை வருதுன்னு பார்க்கிறேன்?'' என்று கறுவும் அளவிற்கு, விது பொருமலோடு காத்திருந்தாள்.

வெள்ளிக்கிழமை இரவு பதினோரு மணிக்கு மேல் வந்தவன், ''இன்னும் தூங்கலையா?'' என்றதோடு, அவளையும் இழுத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்து விட்டான்.



''ஐயோ டிரஸ் மாத்தலையே!'' என்ற எண்ணத்தில், அவள் அவனை உலுக்கியதற்குப் பதிலாய் அவன் அசையவே இல்லை எனும்போது, விது எங்கிருந்து பேசுவது?

''சரி... எப்படியும் நாளை முழுதும் வீட்டில் தானே இருக்கப் போகிறான்!' என்ற தைரியத்தில், அவனது ஸ்பரிசத்தை அனுபவித்த வாறே, உறங்கிப் போனாள் விதுபாலா.

ஆனால் அந்த மிதப்பைப் பொய்யாக்கும் வண்ணம், காலை ஐந்து மணிக்கெல்லாம் ''பப்லு! எழுந்திரு... வெளிய கிளம்பணும்!'' என்று அவளைக் கிளப்பினான் கணவன்.

''அதற்குள் ஏழாகி விட்டதா?'' என்ற வியப்புடன் கண் விழித்த விது, அவன் அலுவலகம் கிளம்புவது போல் உடையணிந்து நிற்கவும், திகைத்துப் போனாள்!

''ஆபீஸ்க்கா?'' என அவளது உதடுகளும் கருமணிகளும் ஒருங்கே அசைய,

''ஹ்ம்ம். அப்படித் தான்! நீ எழுந்திரு... முதல்ல குளிச்சிட்டு வா!'' என்று அவளைக் கை பிடித்து எழுப்பி விட்டான்.

''நானுமா?'' என்பது போல், தன்னை நோக்கிக் கை அசைத்தாள் விதுபாலா.

''ஆமா... நீயும் தான்! கிளம்பு!'' என அவன் பொறுமை இழப்பது போல் இருந்தது, விதுவுக்கு.

ஏனோ, அவனைக் கோபப்படுத்த மனமில்லாமல், மளமளவென குளித்து வெளியே வந்தாள்.

முதன் அவசரமாய், பாலமுருகன் திருமணம் முடிந்த இரண்டாவது நாளே அலுவலகம் சென்றான்.

அவன் காட்டிய வேகத்திற்கு, குறைந்தது ஒரு மாத காலத்திற்குத், தன்னை விட்டு நகர்வது கடினம் என் றெண்ணியிருந்த விதுவுக்கு, அதிர்ச்சியின் அளவு பெரியதாய் தான் இருந்தது!

''ஆபீஸ் போக வேண்டாமா?'' என்று தான் அவ னைப் பிடித்துத் தள்ளும் நிலை வரும் என்று எதிர்பார்த் திருந்தவளுக்கு,

''ஏன் ஆபீஸ் போறீங்க?'' என்று கேட்க ஒரு மாதிரி யாக இருந்தது!

வேலைக்குச் சென்றதைக் கூட, ஓரளவுக்கு சமாளித் துக் கொண்டவளால், அவன் தினமும் இரவு பத்து மணி தாண்டி வருவதை சகித்துக் கொள்ள முடியவில்லை.

பத்து மணிக்கு மேல் வருபவன், உண்ணக் கூட மாட்டான்.

''பப்லு! செம டயர்ட்...'' என்ற வார்த்தையே முதலும் கடைசியுமாய் இருக்க, அடுத்த நிமிடம் நித்திரை தான்!

அவன் பொய் சொல்லவில்லை என்பது அவனது சிவந்த விழிகளிலும், அசந்து தெரியும் அங்க அசைவி லுமே விதுவுக்குப் புரியும்! ஆனாலும்!

இதற்கெல்லாம் ஓர் முடிவாய், அந்த வார இறுதி வர, ''இப்ப என்ன வேலை வருதுன்னு பார்க்கிறேன்?'' என்று கறுவும் அளவிற்கு, விது பொருமலோடு காத்திருந்தாள்.

வெள்ளிக்கிழமை இரவு பதினோரு மணிக்கு மேல் வந்தவன், ''இன்னும் தூங்கலையா?'' என்றதோடு,



அவளையும் இழுத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்து விட்டான்.

''ஐயோ டிரஸ் மாத்தலையே!'' என்ற எண்ணத்தில், அவள் அவனை உலுக்கியதற்குப் பதிலாய் அவன் அசை யவே இல்லை எனும்போது, விது எங்கிருந்து பேசுவது?

''சரி... எப்படியும் நாளை முழுதும் வீட்டில் தானே இருக்கப் போகிறான்!' என்ற தைரியத்தில், அவனது ஸ்பரிசத்தை அனுபவித்த வாறே, உறங்கிப் போனாள் விதுபாலா.

ஆனால் அந்த மிதப்பைப் பொய்யாக்கும் வண்ணம், காலை ஐந்து மணிக்கெல்லாம் ''பப்லு! எழுந்திரு... வெளிய கிளம்பணும்!'' என்று அவளைக் கிளப்பினான் கணவன்.

''அதற்குள் ஏழாகி விட்டதா?'' என்ற வியப்புடன் கண் விழித்த விது, அவன் அலுவலகம் கிளம்புவது போல் உடையணிந்து நிற்கவும், திகைத்துப் போனாள்!

''ஆபீஸ்க்கா?'' என அவளது உதடுகளும் கருமணி களும் ஒருங்கே அசைய,

''ஹ்ம்ம். அப்படித் தான்! நீ எழுந்திரு... முதல்ல குளிச் சிட்டு வா!'' என்று அவளைக் கை பிடித்து எழுப்பி விட்டான்.

''நானுமா?'' என்பது போல், தன்னை நோக்கிக் கை அசைத்தாள் விதுபாலா.

''ஆமா... நீயும் தான்! கிளம்பு!'' என அவன் பொறுமை இழப்பது போல் இருந்தது, விதுவுக்கு.

ஏனோ, அவனைக் கோபப்படுத்த மனமில்லாமல், மளமளவென குளித்து வெளியே வந்தாள்.

தலை வாரி முடித்த அவளது கைகள், சேலை இருந்த பக்கம் செல்லவும், ''சுடிதார் போட்டுக்கோ, விது! சாரீ வேணாம்!'' என்றது அவன் குரல்.

சட்டென திரும்பிப் பார்த்தால், அவனது அலமாரியில் எதையோ மும்முரமாய் எடுத்துக் கொண்டிருந்தான்.

''முதுகெல்லாம் கண்ணு இவனுக்கு! அந்தப் பக்கம் பார்வை இருக்கும்போதே, இங்க என்ன நோட்டம்?'' என்று மனதினுள் வைதபோதும், அவனுக்குப் பிடித்த இளம் மஞ்சள் வண்ணச் சுடிதாரை எடுத்து அணிந்தாள் மனையாள்.

அவள் துப்பட்டாவை பின் பண்ணக் காத்திருந்தவன் போல் ''போலாமா? வா வா!'' என்று இழுத்தான்.

அவன் இழுத்த இழுப்பிற்கு உட்பட்டு, வீட்டின் வரவேற்பறைக்கு வந்து சேர்ந்தனர் இருவரும்.

''கிளம்பியாச்சா? பத்திரமா போயிட்டு வாங்க!'' என்று ரமணிம்மாவும்,

''அவளைப் போட்டு ரொம்ப இழுத்தடிக்காத, பாலா!'' என்று ரமணிதரனும், வழியனுப்பக் காத்திருந்தனர்.

''சரி சரி!'' என்று அதையும் அவசரமாய் சொல்லிவிட்டு, புல்லட்டின் சாவியை எடுத்துக் கொண்டு படியிறங்கினான் மகன்.

''எங்க?'' என்பது போல், விது ரமணிம்மாவிடம் ஜாடை பேச,

ரமணிம்மாவின் ''போ!'' என்ற சைகையை மிஞ்சிக் கொண்டு,

''எங்க போறோம்னு அங்க போனதும் தெரிஞ்சுட்டுப் போகுது! ஏறு முதல!'' என்ற பாலாவின் அதட்டல், அந்தக் காலை நேர அமைதியைக் கிழித்தது!



அதைத் தூக்கிச் சாப்பிடுவது போல் ''அவளை அதட்டாதன்னு சொன்னேன்!'' என்று ரமணிதரனின் அதட்டல் ஓங்கி ஒலித்தது.

''சரிங்க நாட்டாமை!'' என்றதோடு, வீட்டை விட்டு வண்டியை விரட்டினான் பாலமுருகன்.

புல்லட்டின் பின்புறம் அமர்ந்திருந்த விதுவுக்கு, அவன் முன்னே சொன்னது உண்மை தான் எனப் புரிந்தது!

அவன் அமர்ந்தது போக, புல்லட்டில் இரண்டு கையகல இடம் மட்டுமே மீதம் இருந்தது!

இதில் அமர்வதற்கே பிரத்யேகப் பயிற்சி எடுக்க வேண்டியிருக்கும் போலவே என்று விது எண்ணிக் கொண்டிருக்கும் போதே, வண்டி நிறுத்தப்பட்டது.

அவனிட்ட சடன் பிரேக்கில், ஒரு நிமிடம் தடுமாறி, அவன் முதுகோடு சாய்ந்தவளை ''உன்னை எதுக்கு சுடிதார் போட்டு வரச் சொன்னேன்னு நினைச்சே?'' என்றான் பாலா, சற்றே கோபமேறிய குரலில்.

எதற்கிந்த கோபம் என்று புரியாமல், விது விழித்துக் கொண்டிருக்க, ''முதல்ல வண்டியை விட்டு இறங்கு'' என்றான் கணவன்.

அடித்த ப்ரேக்கில் பாதி இறங்கியிருந்த விது, முழுதாய் இறங்கியதும், அவளது கைப்பற்றி முன்னே இழுத்தவன் ''டபுள் சைடு போட்டு உட்காரு!'' என்றான் அதிகாரமாய்.

''ஏன்?'' என அவள் புரியாமல் தலையசைக்கவும்,

''உட்காரு விது! நேரமாகுது!'' என்று அதட்டிய கையோடு,

''ஒரு வழியா நாட்டாமையை சமாளிச்சிட்டு வந்தா... இந்தக் குட்டி சொம்புத் தொல்லை தாங்க முடியலையே!'' என்று அவன் புலம்பவும்,

வண்டியின் பின்னே ஏறப் போனவள், சட்டென முன்னே வந்து ''நா... சொ... சொசொம்பா... சொ... சொசொம்ம்ம்ம்பா...'' என இடுப்பில கை வைத்துக் கொண்டு புஸு புஸுவென மூச்சு விட்டாள்.

''சரிம்மா தாயே! நீ சொம்பில்லை... தெரியாம சொல லிட்டேன்!'' என்று அவளது கைபிடித்து, கண்ணில் ஒத்திக் கொண்டவன், அதே கையால் அவளைப் பின்னே தள்ளிவிட்டான்.

ஒரு வழியாக, அவள் ஏறி அமர்ந்து (கால்களை இரு புறமும் போட்டு), வண்டியை சற்று தூரம் நகர்த்திய பின்னர் ''நீ குட்டி சொம்பில்லை... மாசக் கணக்கா துவைக்காத ஜமுக்காளம்! பிச்சுக்கு... பிச்சுக்குன்னுட்டு!'' என அவன் தகுந்த ஏற்ற இறக்கத்துடன் கூற, நடு முதுகில் நச்சென்று ஒரு குத்து விழுந்தது.

''ஆ... ஆ! கனல் கண்ணன், பீட்டர் ஹெயன், ஜாக்கு வார் தங்கம் எல்லாரையும் கலந்து கட்டி அடிக்கிறியேடி!'' என்று அலறியவன்,

பின்னால் கையைக் கொடுத்து, முதுகில் மத்தளம் வாசித்துக் கொண்டிருந்த மனையாளின் கைகளை எடுத்து, இடுப்பில் வைத்து இறுக்கிக் கொண்டான்.

''இதற்குத் தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரி!'' - பழைய பட பாணியில் அவன் சிரிக்க, புல்லட்டில் அவ னுடன் செல்ல விருப்பம் என அன்றைய தினம் அவள் தெரிவித்ததைச் சொல்கிறான் என்று புரிந்த விதுவுக்கும் சிரிப்புப் பீறிட்டது!

கூடவே, அன்றைய தினத்தின் தொடர் நிகழ்வுகள் வரிசையாய் வலம் வர, சட்டென மனசும் முகமும் வேதனையில் வாடிப் போயின.



உள்ளிருந்து பொங்கி வரும் கண்ணீரைக், கணவனின் கறை படியா கரும்பச்சை வண்ண டி-ஷர்ட்டில் துடைத் தாள் விதுபாலா.

''பப்லு! நோ க்ரையிங்... எனக்குப் பிடிக்காது!'' என்றான் பாலா, கோபமாக.

அதற்குப் பதிலாக, "ம்ம்... ம்ம்'' கூட வராமல் போக வும்,

''சொல்லிட்டே இருக்கேன். அழாத! நா என்னமோ... என்னோட விது பயங்கர ஸ்ட்ராங் பெர்சனாலிட்டின்னு நினைச்சிட்டு இருக்கேன்... டோன்ட் ஸ்பாயில் மை தாட்ஸ், விது! ப்ளீஸ்!'' என்றான் மீண்டும் அழுத்தமாய்.

விதுவால் அதற்கு மேல் அழ முடியவிலலை. அவனது அதட்டலை விடவும், அவள் மீது அவன் வைத்த நம் பிக்கை, அவளை வாய் மூடச் செய்தது!

மௌனமாய் சில நிமிடங்கள் கழிய ''என்ன? ஒரே டியா சைலன்ட் ஆகிட்டீங்க மேடம்! தூங்கிட்டீங்களா?'' என்றான் அவன் வம்பிழுக்கும் குரலில்.

இடுப்பைச் சுற்றியிருந்த அவளது கரங்கள், சற்றே இறுகி, ''நான் தூங்கவில்லை'' எனக் காட்டியது!

''அதானே பார்த்தேன்! நேத்து நைட், மேடம் விட்ட குறட்டையில பக்கத்து ஃபிளாட்டுக்குத் திருட வந்த ரெண்டு திருடங்க ஓடிப்போய்ட்டாங்களாம்! அப்படிப் பட்ட அரும்பெரும் சாதனையை செஞ்சிட்டு, இப்பையும் படுத்துத் தூங்குதேன்னு நினைச்சேன்!'' என அவன் பேசிக் கொண்டே போக,

''ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்'' என நீள முனங்கல் ஒன்றும், ''பட்'' என ஓர் அடியும் பரிசளிக்கப்பட்டன.

''பதில் பேச முடியலன்னா அடிக்கிறதா? என்ன பழக்கம் இது? கழுதை!'' என்ற குரலில் அதட்டலுக்குப் பதிலாய் சிரிப்பே விரவி இருந்தது!

தனது குரல் வெளியே கேட்காது என்பதை மறந்து, ''நா... நா... து... து... தூங்கிகிகிகினேன்ன்ன்ன்... நீ... நீ... நீங்க தாதாதான் திதிதிதினம்ம்ம்ம் லேட்ட்ட்ட்ட்ட்ட்டா வந்து... உடடடடடடனே து... து... தூங்ங்கிங்கிங்கிடு றீங்க...'' என்று தான் எண்ணியதைக் கூறிவிட்டாள் விது பாலா.

பேசி முடித்தப் பின்னர் கூட, தான் பேசியது அவனுக்குக் கேட்கவில்லை என்பதை அவள் உணரவில்லை!

பாலா ''எதுவும் சொன்னியா பப்லு?'' எனக் கேட்கவும் தான், தன் நிலைமை உணர்ந்து, வெட்கிப் போனாள்.

வெட்கிப் போனாள் என்பது கூட சிறு சொல் தான்! தன் நிலையறியா அவமானத்தில், ஊண் குறுகி, உடல் கூனி, மனம் உடைந்து போனாள்!

சின்ன விஷயம்! இதற்குக் கூட என்ன பாடாய் இருக் கிறது! முகத்திற்கு நேரே பேசும்போது, உதட்டசைவை வைத்துக் கண்டுபிடிக்கிறான் தான்... அதற்காக எந்நேர மும் முகத்திற்கு நேரே இருக்க முடியுமா என்ன? என்ன கொடுமை இது? வாழ்வின் சிறு சிறு சந்தோஷங்களைக் கூட அனுபவிக்க முடியாமல், ஊமை என்ற பட்டத் துடன் வாழ்க்கை ஓடப் போகிறதா? மனம் தாழ்வு மனப் பான்மையால் கூனிக் குறுகிப் போனது!

கண்ணை முட்டிக் கொண்டு நின்ற கண்ணீரைத் தவிர, அவளிடம் வேறெந்த பதிலும் இருக்கவில்லை!

பல நிமிடங்கள் கழிந்த பின்னரும், மனைவியிட மிருந்து எந்தவிதமான பதிலுமில்லாமல் போகவே, ''பப்லு?!'' என்றான் பாலா மெல்ல.



அவனது விளிப்பிற்குப் பதிலாய், ஓர் கேவலே வெளி யானது!

சட்டென வண்டியை சாலையின் ஓரமாய் நிறுத்தியவன், ''என்ன பப்லு!'' என்றான் தலையை பின்னால் திருப்பி.

பதில் சொல்ல முடியாமல், மீண்டும் ஓர் கேவல் வர, விஷயம் புரிந்தவனாய் தலையில் லேசாய் தட்டிக் கொண்டான், பாலமுருகன்.

''பைக்ல வேண்டாம் பாலா! கார்லேயே போயேன்... விதுவுக்கும் அப்போ தான் பேச வசதியா இருக்கும்!'' என்று தந்தை கூறியதற்கான காரணம் இப்போது புரிந்தது, அவனுக்கு!

இடுப்பை இறுக்கிக் கொண்டு, சிறு பிள்ளை போல் தேம்பும் மனைவியைத் தேற்றும் வகையறியாமல், அவளது கை பிடித்து, ''ஒரு நிமிஷம் கீழ இறங்கு, விது'' என்றான்.

அவள் இறங்கியதும், ''இங்க பாரு விது! இப்படி தொட் டதுக்கெல்லாம் அழுதா, என்னால எதுவுமே பண்ண முடியாது!'' என்றவன்,

அவள் உதட்டைக் கடித்து அழுகையை அடக்கவும், ''கஷ்டம் தான்! வருத்தம் தான்! நான் இல்லைன்னு சொல்லலை... அதையே நினைக்காம... அதுக்குள்ளேயே புழுங்கிக்கிட்டு இருக்காம... கொஞ்சம் ரிலாக்ஸ்டா இரும்மா! உங்களோட இருந்தா நான் சரியாகிடுவேன்னு தெம்பா சொன்ன விது தான் எனக்கு வேணும்! உன் கிட்ட அந்த நம்பிக்கை இருக்கணும்... அப்போ தான் சீக்கிரம் சரியாக முடியும்! என்ன சரியா?'' என்றான் அழுந்தியிருந்த அவளது உதட்டை விடுவித்து.

பொது இடம் கருதி, அவள் கையைத் தட்டிவிட்டதை மதிக்காமல் ''நம்மளோட கல்யாணம் நடந்ததில,

ஏதாவது ஒரு நன்மை இருக்கணும் விது! தேறி வந்துட்டு இருந்த உன்னை, மேலும் மேலும் அழுக வச்சு, உள்ளேயே அமுக்கி வைக்கிறதா இருந்தா... எல்லாரையும் எதிர்த்துக்கிட்டு நடந்த இந்தக் கல்யாணத்துக்கு அர்த்தமே இல்லாம போய்டும்! எனக்கு அந்தக் கெட்ட பெயரை வாங்கிக் கொடுக்க மாட்டேன்னு நினைக்கிறேன்'' என்றான் அழுத்தத்துடன்.

அவன் சொல்ல வருவது அவளுக்கும் புரிந்தது!

அவன் இடத்தில் வேறொருவன் இருந்திருந்தால், விதுபாலாவின் நிலைமையைக் கண்டு எட்டுக் கால் பாய்ச்சலில் ஓடிப் போயிருப்பான்! என்ன மாதிரியான அன்பிருந்தால், அவளுக்காக... அவளுக்காக மட்டுமே இத்திருமணத்தை நடத்தி இருப்பான்?

அந்த அலசலின் முடிவில் ''தனக்காக இல்லையென்றாலும், எதிர்பார்ப்பில்லாத அவனது அன்பிற்காகவாவது தான் இனிமேல் அழக் கூடாது! தன்னைத் தானே தாழ்வாய் எண்ணக் கூடாது!'' என்றெண்ணியது மனம்.

உள்ளத்தின் உறுதி, முகத்தில் பிரதிபலிக்க, இரு கைகளாலும் கண்ணை இறுகத் துடைத்தவள், ''போலாம்'' என்பது போல் சைகை செய்துவிட்டு, வண்டியில் ஏறினாள்.

''தட்ஸ் மை பப்லு!'' என்று சீராட்டிய கணவனின் கைகளில் வண்டி சீறிப் பாய்ந்தது!

அதன் பின்னர், அங்கே நிலவிய அமைதியை அதிக நேரம் நிலைக்க விடாமல், வண்டி ஒரு வீட்டின் முன்னே நின்றது.

வண்டியில் அமர்ந்து கொண்டே விது அந்த வீட்டை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க, ''அதென்ன



மிட்டாய் கடையா... திறந்த வாயை மூடாம பார்த்திட்டு இருக்கே? இறங்கு முதல்ல!'' என்றான் பாலா.

''வெவ்வே!'' என அவனுக்குப் பழிப்புக் காட்டிவிட்டு, விது கீழே இறங்கி நிற்கவும்,

''வாங்க! வாங்க! வெல்கம் பாலா! வெல்கம் விது!'' என்றது ஓர் பரிச்சியமான குரல்.

''ஹே! இது ரேகா அல்லவோ!'' என இன்பமாய் அதிர்ந்தாள், விதுபாலா.

பல நாள் கழித்துப் பார்ப்பவர்கள் போல, இருவரும் கட்டிப் பிடித்துக் கொள்ள, ''அஹெம்... அஹெம்...'' என இருமினான் பாலமுருகன்.

''பொறுக்காதே!'' என ரேகா நொடிக்கவும்

''அவங்களை உள்ளே வரவிடு ரேகா! மாமா கிளம்பறதுக்குள்ள, அவரைப் பார்த்தாகணும்!'' என ஓர் ஆணின் அதட்டலில் ''ஆமா... வாங்க வாங்க...'' என அவர்களை உள்ளே இட்டுச் சென்றாள் ரேகா.

''என்னம்மா எங்க பாலா எப்படி? வெளியில சூரப்புலி... வீட்டில வேட்டைப் புலியா?'' என்று விதுவின் கைபிடித்து அழைத்துச் சென்ற ரேகா கண்ணடிக்கவும்,

''அவ விட்டா பேசிட்டே இருப்பா... நீங்க இந்த ரூம்ல வெயிட் பண்ணுங்க. நான் மாமாவை வரச் சொல்றேன்'' என்றான் ரேகாவின் கணவன்.

ரேகாவும் அவர்களுடனே வர, ''அவங்களுக்கு ஏதாவது குடிக்கக் கொடு'' என அவளை விரட்டிவிட்டு, அவனும் வேகமாய் எங்கோ விரைந்தான்.

முதற்கட்ட அதிர்ச்சியை ஒருவாறாய் சமாளித்த விது, ''யாயாயாயாரு? எதுக்கு இஇஇஇங்க வ... வவவ... வந்திருக்கோம்?'' என்றாள் கணவனிடம்.



# 17

"ரேகாவோட மாமா... ஒரு லீடிங் சைக்காட்ரிஸ்ட்! டெல்லில ப்ராக்டிஸ் பண்றார்... இங்க ஒரு வேலையா வந்திருக்கிறதா ரேகா சொன்னாங்க... அதான் ஜஸ்ட் ஒரு பிரண்ட்லி விஸிட்..." என்று பாலா சொல்லும்போதே,

அவர் உள்ளே வந்துவிட்டிருந்தார்.

"ஹலோ! பாலா வெஸ் பாலா! எப்படி இருக்கீங்க?" என்ற கம்பீரக் குரலுடன் வந்தவரை வரவேற்க, விதுவின் கால்கள் தானாகவே எழுந்து நின்றன.

"சிட் டவுன்! சிட் டவுன்! நான் ஸ்கூல் டீச்சர் இல்ல... யுவர் பிரண்ட்! கொஞ்சம் ஓல்ட் பிரண்ட்!" என்று பெரிய ஜோக்கை சொல்லிவிட்டது போல், அவர் கடகடவென சிரிக்க,

விதுவின் அதரங்கள் சிரிக்கவா வேண்டாமா என்று போராடிக் கொண்டிருந்தன.

"ஹலோ யங் லேடி! உன் முழு பேர் என்ன?"

"....."

"விதுபாலா!" என்றான் பாலா.

அவன் புறம் திரும்பாமலே "நீ லேடியா?" என்றார் அவர் பட்டென.

விதுவின் கண்கள் வேகமாய் கணவனைப் பார்க்க, அவன் தோளைக் குலுக்கிக் கொண்டு உதட்டைப் பிதுக்கினான்.



"ஓகே விதுபாலா! என்ன படிச்சிருக்கே?"

"....." - இப்போது விதுவின் கண்கள் கணவனை யாசித்து நின்றன.

"அவன் என்ன உனக்கு ஸ்பீக்கரா? பேசு விதுபாலா!"

இப்போது விதுவின் கரங்கள், கணவனின் சட்டையைப் பிடித்து இழுத்தன.

உடனேயே "பாலா, நீ வெளிய போ!" என அவனைப் பார்த்து ஆணையிட்டார் பெரியவர்.

மனைவியின் முகத்திலிருந்த கலக்கம் அவனை லேசாய் தயங்க வைக்க, "உன் வைஃப் தொட்டதுக்கெல்லாம் உன்னையே டிபண்ட் பண்ணி இருக்கணும்னு நினைச்சின்னா... இங்கேயே இரு! அவ ஒரு தனி மனுஷியா... உலகத்தை ஃபேஸ் பண்ணனும்ன்னு நினைச்சா வெளிய போ!" என அவர் ஆணித்தரமாய் கூற, அடுத்த நிமிடம் பாலா அந்த அறையில் இருக்கவில்லை.

வெளியே செல்லும் கணவனையே தவிப்புடன் பார்த்திருந்த விதுவிடம் திரும்பிய பெரியவர், "என்ன விது? என்கிட்டே என்ன பயம்?" என்றார்.

பேந்தப் பேந்த விழித்தவளின் தலை, மறுப்பாய் அசையவில்லை.

"நான் உன்னோட தாத்தா மாதிரி... சரியா? சும்மா கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாமா?" என்றவர், அவளது கையை எடுத்துத் தன் கைக்கு நடுவே வைத்துக் கொண்டார்.

சட்டென கையை உருவத் தோன்றியது விதுவுக்கு!

அவளது மனதை படித்த மருத்துவராய் "இப்படிப் பிடிச்சிருக்கிறது பிடிக்கலையா? சரி எடுத்துக்கோ!" என அவரே விடுதலை செய்துவிட, ஒரு மாதிரியாகி விட்டது விதுவுக்கு.

கையை அவரிடம் நீட்டாமல், தன்னிடமும் இழுத்துக் கொள்ளாமல், இருவருக்கும் நடுவே காற்றில் துலாவ விட்டிருந்தவள், அவரை ஓர் சங்கடப் பார்வை பார்த்தாள்.

''இட்ஸ் ஓகே! நான் தப்பா எடுத்துக்கலை...'' என்ற பெரியவர்,

''என்ன படிச்சிருக்கேன்னு கேட்டேனே?'' என்றார் மீண்டும்.

''ஹான்...'' என ஒரு நிமிடம் திகைத்து விட்டு,

''பி... பி பி பி பி... இ.''

அவளது உதட்டசைவை உன்னிப்பாய் கவனித்து ''அடேங்கப்பா இன்ஜினீயரா? இப்ப எல்லாம் டாக்டர்ரை விடவும் இன்ஜினீயர் தான் அதிகம் சம்பாதிக்கிறாங்க தெரியுமா?'' என்றார் பெரியவர்.

ஒன்றும் சொல்லாமல், ஓர் வருத்தப் பார்வை பார்த்து விட்டுக் குனிந்து கொண்டாள் விது.

அவளுக்குத் தெரியாமல் ஓர் மர்மச் சிரிப்பை உதிர்த்தவர், ''என்ன சம்பளம் வாங்குவே? ஒரு முப்பதாயிரம் இருக்குமா? இல்ல அதிகமா? நான் எல்லாம்... உன் வயசில சோத்துக்கு சிங்கி அடிச்சிட்டு இருந்தேன் தெரியுமா?'' என்றார் வருத்தம் போல்.

''நா... நா நா நா நா... வேலைக்க்க்க்க்க்கு.ப போ... போபோபோகலை...''

''ஏன்?''

''ரெ... ரெரெ... ரேகா சொ... சொசொல்லலையா?''

''என்ன சொல்லணும்?''

அழுது விடுபவள் போல் பார்த்தவள், ''எ... எ... எஎஎஎன்னை... என்னை... என்னை... அ... அஅஅ...



அஸ்... அசிங்கமா... ர... ரொரொரொரம்ப அசிங்கமா... கூகூகூகூகூகூகூட வேலை பாபாபாபாபார்க்கிறவங் களே... அதான் வ... வவரல...'' என அழுகையும் ஆத்திரமுமாய் சொல்லி முடித்தாள் விது.

சட்டென, அருங்கிருந்த கப்பிலிருந்த காபியை அவள் கை மீது கொட்டினார் பெரியவர்.

எதிர்பாராத நேரத்தில் நடந்த அந்தத் தாக்குதலில், முதலில் திகைத்த விது, ''எ... எ... என்ன்ன இது?'' என முதலில் கொண்டது எரிச்சல் தான்.

பின்னர், தன் கைக்குட்டையை எடுத்து, காபி பட்ட இடங்களை எல்லாம் துடைத்து எடுத்தாள்.

அப்போதும், பாலாவிற்கு பிடித்தமான இளமஞ்சள் சுடிதாரில் காபியின் கோலங்கள் அழியாமல் இருக்கவே ''ச்சு...'' என்று அவரைப் பார்த்து முறைத்துவிட்டு, அந்த அறையிலிருந்த வாஷ்பேசினுக்கு சென்று, தண்ணீர் எடுத்து, அதைக் கழுவினாள்.

பத்தி நிமிடப் போராட்டத்திற்கு பின்னர், காபிக் கரை சற்றே மறைந்திருந்தது.

அங்கிருந்த கை கழுவும் சோப்பை எடுத்த, அந்த இடத்தில் லேசாய் போட்டவள், மீண்டும் அழுத்தித் துடைத்தாள். இப்போது பழைய நிறம் எட்டிப் பார்த்தது.

நிம்மதி உற்றவளாய், அமர்ந்திருந்த இருக்கைக்குத் திரும்பியவள், துணியை இறுகப் பிழிந்து, அதில் அதிகப் படியாய் இருந்த தண்ணீரை உதறினாள்.

ஒருவாறாய் இருக்கையில் அமர்ந்து, குற்றம் சாற்றும் பார்வை ஒன்றை பெரியவர் மீது வீசவும்,

''இப்போ என்ன பண்ணினே? உன் உடம்பில காபி கொட்டிடுச்சுனதும், உடனே அதைத் துடைச்சே...

அப்புறம் கழுவினே... அப்புறம் டிரஸ்ல பட்ட கறையைத் துடைச்சே... கடைசியா அதோட மிச்ச சொச்சமான தண்ணியையும் உதறி வெளிய தள்ளிட்டே...'' எனப் பேசிக் கொண்டே போனார், பெரியவர்.

''என்ன சொல்ல வருகிறார்?'' என்பது புரியாமல் விது பார்த்திருக்க,

''நீ சொன்னியே? யாரோ கொஞ்ச பேர்... உன்னை அசிங்கப்படுத்திட்டாங்கன்னு! அதுவும், இது மாதிரி ஒரு கறை தான்! இங்க உன் உடம்புன்னா... அங்க உன்னோட மனசு! இங்க உன் உடம்போட சேர்த்து துணியும்ன்னா... அங்க உன் மனசோட சேர்த்து உடம்பும்! இதை எப்படி உதறி எறிஞ்சியோ... அப்படியே அதையும் தூக்கிப் போட்டுடணும்!'' என்றார் ஆணித்தரமாய்.

வியந்து நோக்கிய விதுக்குள் ஏதோ மாற்றம்! ஆனாலும்...!

''காபி கொட்டினது ஒரு சின்ன விஷயம்... அதைப் போய்... ஏதோட கம்பேர் பண்றாருன்னு நினைக்கிறியா?

''மனசு தான் விது காரணம்! சின்ன விஷயம்... பெரிய விஷயம்ன்னு பிரிச்சுப் பார்க்கிற சக்தி மனசுக்கு மட்டும் தான் இருக்கு! இதைச் சின்ன விஷம்ன்னு நினைச்சு... உதறிட்டுப் போயிட்டே இருக்கணும் விது!'' எனக் கூறியவர்,

''இந்த விஷயம் நீ பயப்படற அளவுக்கு பெரிய விஷயமா இருந்தா... பாலா உன்னைக் கல்யாணம் பண்ணி இருப்பாரா?'' என்றார் அடுத்த அம்பைக் கையிலெடுத்து.

''என்னோட பாலா அப்படியில்ல... என்னை எந்த நிலைமையிலேயும் கை விட மாட்டார்'' என்று சொல்ல எண்ணிய விது,



''எ...எ....என்னோட பாலா....'' என்றதோடு வார்த்தையை நிறுத்திவிட்டு, விக்கித்து நின்றாள்.

ஏனென்றால், வார்த்தைகள் வெளி வந்த வேகத்தில், ''பாலா...'' என்ற வார்த்தை மட்டும் ஒலி வடிவம் பெற்றிருந்தது!

''ஹேய்!'' என்று பெரியவர் கத்த,

விதுவுக்குமே மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது! ''ப... பப... பாபாலா... பாலா'' என இரு முறை சொல்லிப் பார்த்தாள்.

முதன் முறையைப் போல் அழுத்தம் பெற்று வராவிட்டாலும், ''பா...'' என்ற வார்த்தையும் ''லா'' என்ற வார்த்தையும் அதற்கான ஒலி வடிவங்களை, ஓரளவுக்குப் பெற்றிருந்தன.

அவள் மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்க்க, ''பாலாவை விடு... உன்னோட கற்பே போயிருந்தாலும் அவர் உன்னைக் கை விட்டிருக்க மாட்டார்! ஆனா... அவங்க குடும்பம்? அவங்க சொந்தம்?'' என்று நிறுத்தினார் கேள்வியாக.

பல நாட்களுக்குப் பின்னர் கேட்ட தன் குரலிலேயே தன்னைத் தொலைத்திருந்த விது, ''கற்பு'' என்ற வார்த்தையில் விதிர்விதிர்த்துப் போனாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறே? கற்புங்கிறது ஒண்ணும் கெட்ட வார்த்தையில்ல புரியுதா? கற்பு... செக்ஸ் இதெல்லாம் கெட்ட வார்த்தைன்னு யார் சொல்லிக் கொடுத்தா? இந்த சொஸைட்டியா? ஸ்டுபிட்!'' என்றார் அழுத்தமாக.

''சரி... விடு! அந்த டாபிக் போக வேண்டாம்....!'' என்று கையசைத்துவிட்டு, முதலில் பேசிய விஷயத்திற்கே வந்தார்.

''ஏதாவது பெருசா நடந்திருந்தா பாலாவோட குடும்பம் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டு இருப்பாங்களா?'' என்றார் மீண்டும்.

முன்னர் போல ''ஒத்துக் கொள்வார்கள்'' என்று தைரிய மாய் சொல்ல முடியவில்லை, விதுவால்.

தன் பெரிய மகனின் திருமணத்தைப் போல், இளைய மகனின் திருமணம் விமர்சையாய் நடக்கவில்லை என்ற வருத்தம் ரமணிம்மாவுக்கு உண்டு என்பது அவள் அறிந்ததே! மேலும், விதுவின் நிலைமையை மனதில் வைத்து, திடீர் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டபோதும், சொந்தங்கள் யாரும் வரவில்லை என்ற மனத்தாங்கல் இரு வீட்டுப் பெற்றோருக்கும் உண்டு என்பதையும் அறிந்த விதுவால், பதில் சொல்ல முடியவில்லை. இதற்கே இப்படியென்றால், இவர் சொல்வது போல் கற்பு பறி போயிருந்தால்... நினைவே கதிகலக்கியது! அவர்கள் ஒத்துக் கொள்வது இருக்கட்டும், அவளே உயிருடன் இருந்திருப்பாளா? ''சந்தேகம் தான்'' என்றது மனம்!

அதையே அவரும் பிரதிபலித்தார்.

''அவங்க ஒத்துக்கிறது ஒத்துக்காதது ஒரு பக்கம் இருக்கட்டும்! நீயே ஒத்துப்பியா? இந்நேரத்திற்கு, நீ என் முன்னாடி உட்கார்ந்திருக்கிறதே பெரிய விஷயமா இருந்திருக்கும்!'' என்றவர்,

''உன் ஆழ் மனசே, இந்த விஷயத்தைப் பெருசு படுத்தல! அதான்... நீ இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டதுக்கு முழுக் காரணம்! அதையும் தாண்டி, உன் ஹஸ்பெண்டோட சந்தோஷமா இருக்க இல்லையா?'' என அவர் நேரடியாய் கேட்க,

அதற்கான பதிலை, விதுவின் சிவந்த கன்னங்களும், குனிந்த தலையும், நிமிர்ந்து பார்க்க முடியாத வெட்கமும் எடுத்துரைக்க,



''தட்ஸ் இட்! யூ ஆர் ஆல்ரைட் விதுபாலா! ஜஸ்ட் தட் அவுட்டர் லேயர் ஒஃப் ஃபியர்! (மேல்புறமாய் இருக்கும் அச்சம் மட்டுமே)! நீ நினைச்சா, அதையும் தூக்கி எறிய முடியும்!''

கண்களில் ஒலியுடன் நிமிர்ந்த விதுவுக்குள், இன்னும் கொஞ்சம் சந்தேகம் இருப்பது போல் தோன்றியது பெரியவருக்கு.

''இப்போ உன்னோட கையைத் தொடலாமா?'' என்று அனுமதி கேட்டார் பெரியவர்,

இப்போதும் விது லேசாய் தயங்க, ''நான் கையை விட்டதும், நல்லா சோப்பு போட்டுக் கையைக் கழுவிடு! தட்ஸ் ஆல்... இட்ஸ் கோன்! போயே போச்சு! வேணும்னா... ரேகாவைக் கொஞ்சம் பினாயில் தரச் சொல்றேன்... அதைப் போட்டுக்கூடக் கழுவிக்கோ!'' என அவர் சிரிக்கவும், விதுவின் அதரங்கள் சிரிப்பை உதிர்க்க, கைகள் தானாக அவரை நோக்கி எழும்பின.

''இப்போ சமீபமா... ஒரு பிரபல பாடகியோட கணவர் தற்கொலை பண்ணிக்கிட்டார் தெரியுமா?'' எனக் கேட்டார்.

''இதை எதற்குக் கேட்கிறார்?'' என்று புரியாத போதும், ''தெரியும்'' எனத் தலையசைத்தாள் விது.

''அவங்க கணவர் இறந்ததுக்கு எத்தனை விதமான விமர்சனங்கள்ன்னு பார்த்திருப்பே இல்ல! வார்த்தைகள் எவ்வளவு வலி கொடுக்கும்ன்னு உன்னோட அனுபவத்திலேயே தெரிஞ்சிருக்குமே... அதுவும், அவங்க ஒரு பிரபலம்! முகத்துக்கு நேர ஆதரவா பேசினாலும், முதுகுக்கு பின்னாடி எவ்வளவு நக்கல் பண்ணியிருப்பாங்க இல்லையா?''

''அதையெல்லாம் ஒதுக்கி வச்சிட்டு, எவ்வளவு அழகா வெளிய வந்தாங்க! ''நீங்க என்ன பேசினாலும், என்னோட வாழ்க்கையை உங்களோட எண்ணங்களுக்குக் கடனா கொடுக்கமாட்டேன்! நானே அதை வாழ்வேன்! வாழ்ந்து காட்டுவேன்!'' ன்னு அவங்க எழுந்து வந்த அழகு, உலக அழகிகிட்ட இருக்கா என்ன?'' என்றவர் சிறு இடைவெளிவிட்டார்.

தொடர்ந்து, ''அவங்க கஷ்டத்தை விட உன்னோட கஷ்டம் என்ன பெருசான்னு கேட்கமாட்டேன்... ஆனா... பெருசோ சின்னதோ, அதை இன்னொருத்தரோட விளம் பரத்துக்குக் கொடுக்காத... நீயே சாமாளின்னு சொல் றேன்...'' என்றார்.

கூடவே, ''தனியா சமாளிக்க வேண்டிய அவசியம் கூட உனக்குக் கிடையாது! உன்னைத் தங்கத் தட்டில வச்சுத் தாங்க உன்னோட பாலா இருக்கார்! யூ ஆர் லக்கி, விது! ஜஸ்ட் சியர் அப் அண்ட் ஸ்டெப் அப்!'' எனத் தன் உரையை முடித்தார்.

விதுவின் முகத்தில் தெளிவிற்கான அஸ்திவாரம் பலமாய் போடப் பட்டிருந்ததை, அவளது கண்கள் பறை சாற்றின.

''ஓகே! யங் லேடி! போய்... உன்னோட பாலாவைப் பாரு... நான் என்னோட டோராவை மாத்துறதுக்கான வேலையில ஈடுபடறேன்!'' என்றவர், இருக்கையிலிருந்து எழுந்து விடை கொடுத்தார்.

''தேங்க்ஸ்!'' என விதுவின் உதடுகள் உதிர்த்த வார்த் தையை,

''இதை... உங்க ஹஸ்பெண்ட்டுக்கும்... உங்க பிரண்டு ரேகாவுக்கும் தான் சொல்லனும்!'' எனக் கூறி, வெளியே



காத்திருந்த இரு நல்ல உள்ளங்களின் பக்கம் திருப்பி விட்டார்.

விதுவிடம் பேசுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட ஒரு மணி நேரமும், பாலாவிற்குப் பெரும் பரிதவிப்பாய் இருந்தன.

சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூட உடைந்து அழும் மனைவியின் முகமே மனதில் நிற்க, அறை வாயி லையே பார்த்திருந்தவனுக்கு, லொடலொடவென பேசிக் கொண்டிருந்த ரேகாவின் பேச்சு காற்றில் கரைந்த கற்பூர மாய் கரைந்து போனது!

''ஷ் ரேக்ஸ்! அவரே டென்ஷன்ல இருக்காரு... நீ வேற ஏன் அறுத்துத் தள்ளுறே?'' என்று தன் கை பிடித்து எழுப்பிய கணவனிடம்,

''அவரோட டென்ஷனைக் குறைக்கலாம்னு தான் பேசிட்டே இருக்கேன்... விடுங்க!'' என்று மல்லுக் கட்டி னாள் ரேகா.

''அப்படியா? அவரோட டென்ஷனை எவ்வளவு தூரம் குறைச்சிருக்கேன்னு பார்ப்போம்?'' என்றவன், பாலாவின் புஜத்தை லேசாய் தொட்டு ''பாலா சார், இவ யாரு?'' என்றான்.

லேசாய் திகைத்துத் திரும்பிய பாலா ''ஹோ... இவளா? இஸ் ஷி பின் லேடி? ஹோ இல்லை? பூலான் தேவி? அதுவும் இல்லையா? லொட லொட லொள்ளம்மா? அதுவு மில்லையா? ஓட்டை வாய் ஒட்டடைக் குச்சியா? சரி... அவ பேர் இருக்கட்டும், அவ பேசினது ஸ்பானிஷ் தானே? இதுவும் தப்பா? ஒரு வேளை, ஜெர்மனா?'' என படுபயங் கரமாக சிந்திக்க,

''ஹம்... ஹம்... அஹெம்... அஹெம்...'' என சிணுங்க ஆரம்பித்து, பெரிய அழுகையில் முடித்தாள் ரேகா.

அந்த நேரம் தான், விது அறையை விட்டு வெளியே வந்தாள்.

நேரே வந்து பாலாவின் அருகே அமர்ந்து கொண்டவள், அவனது இடது கையுடன் தன் இரு கைகளையும் கோர்த்துக் கொண்டு, அவனது தோளோடு ஒண்டி நின்றாள்.

தேர்வெழுதிவிட்டு அன்னையிடம் ஓடி வரும் சிறுமி போல் காட்சி தந்த மனைவியின் புறம், லேசாய் தலை சாய்த்து "என்னடா?" என்றான் மெல்ல.

சுற்றியிருப்போர் மறந்து, தனது உலகம் அவன் என்பது மட்டுமே கருத்தில் நிலைக்க, அவனை நோக்கி நிமிர்ந்தவள்,

"பா... லா... ஹா... ஹா..." என்றாள் அவனது கண்ணுக்குள் தன் கண்ணைப் புகுத்தி.

"ஹே!" என்ற ஒற்றைக் கூவலில், அவளைத் தூக்கித் தட்டாமாலை சுற்றினான்.

அவனுக்கிருந்த சந்தோஷத்திற்கு, அதற்கு மேலும் ஏதாவது செய்திருப்பான்.

"அய்யோ... என் புருஷன் பச்சப்புள்ள! கண்ண மூடுங்க... கண்ண மூடுங்க!" என்று கத்தியபடியே, தன் கணவனின் கண்ணை மூடிய ரேகாவும்,

"அய்யோ! என் பொண்டாட்டி கேடிக்குக் கேடி! இதைப் பார்த்து... என்னையும் தூக்கச் சொல்லிடுவாளே... கண்ணை மூடு... கண்ணை மூடு" என்று கத்திய ரேகாவின் கணவனும்,

பாலா வெஸ் பாலாவின் காதல் போர் தொடங்குவதற்கு முன்னரே, அதற்கு முற்றுப் புள்ளி வைத்தனர்.

அங்கே எழுந்த சிரிப்பலையில், ரேகாவின் மாமாவும் கலந்து கொள்ள, "ஒரு ஃபைவ் மினிட்ஸ்... உங்ககிட்ட பேசலாமா சார்?" என்று வினவினான் பாலா.



"தாராளமா!" என்றவர், அறைக்குள் நுழைய,

அவர் பின்னே நடந்த பாலா, "ரேகா... காபிங்கிற பேர்ல ஒரு வாட்டர் கொடுத்தியே... அதைக் கொஞ்சம் திக்கா கலந்து என் பொண்டாட்டிக்குக் கொடு!" என்று ரேகாவிற்கு ஓர் கட்டளையும்,

"அந்த வாட்டரை நீ முழுசா குடிக்கணும்ன்னு அவசியமில்லை, விதும்மா! ஜஸ்ட்... கப்பை இப்படிக்கா கொஞ்ச நேரம்... அப்படிக்கா கொஞ்ச நேரம் திருப்பிக்கிட்டு இரு! நான் ஓடி வந்துடுறேன்" என்று மனைவிக்கு ஓர் அறிவுரையுமாய் உள்ளே நடந்தான்.

"ரொம்பத் தான்! இப்போ தான்... நீ குடிச்ச கப்பை கழுவப் போட்டேன்... என்னம்மா இது... ஒரு ஓரமா பள்ளம் விழுந்திருக்குன்னு வேலைக்காரி கேட்கிறா! காபி சூப்பரா இருந்ததால, என் நண்பன்... ச்சே எதிரி உறிஞ்சி... உறிஞ்சி... கப்பைப் பள்ளம் பண்ணிட்டான்னா சொல்ல முடியும்? ஏதோ சொல்லி சமாளிச்சேன்!" என்று பதிலுக்கு அலுத்துக் கொண்டாள் ரேகா.

விது, சிரிப்பை அடக்க முடியாமல் கண்ணில் நீர் வர சிரிக்க, அதை மேலும் கூட்டுவது போல்,

தலையை மட்டும் அறையை விட்டு வெளியே நீட்டிய பாலா "ரேகா... இப்போ போய் பாரேன்! அந்த வேலைக்காரி, இந்த பிசாத்துக்கிட்ட வேலை பார்க்கிற கொடுமையை விட, இப்படிப்பட்ட கொடுமையெல்லாம் காதால கேட்க வேண்டியிருக்கேன்னு இந்நேரம் தலையை சுவத்தில நங்கு... நங்குன்னு முட்டிக்கிட்டு இருப்பா..." என்றான் சிரிப்பின் சாயலே தெரியாத சீரியஸ் குரலில்.

வீடே சிரிப்பால் அதகளப் பட்டது (வேலைக்காரி உட்பட!)

''அடிங்க!'' என்று ரேகா கையை ஓங்கிக் கொண்டு வர,

கதவை அடைத்தவன், ''சாரி டாக்டர்!'' என்றான் சிறு கெஞ்சலுடன்.

அவரோ ''தட்ஸ் ஒகே! இந்த லைவ்லினஸ் லைஃப்ல தேவை!'' என்றார் புன்னகை வழிய.

''தேங்க்ஸ் டாக்டர்!'' என்ற பாலா,

''இதுக்கு மட்டுமில்ல. விதுவோட முகத்தில ஒரு தெளிவு தெரியுது... அதுக்காகவும் தான்! இங்க கிளம்பி வரும்போது கூட, ரொம்ப ஃப்ரைஜைலா இருக்காளே... எப்படி மாறப் போறான்னு பயந்தேன்! பட்... இப்போ...! எனக்கே கொஞ்சம் தெம்பு வந்திடுச்சு!'' என்றான் ஆத்மார்த்தமாய்.

கூடவே, "அவளுக்கு ஒண்ணும் பெருசா இல்லை இல்ல டாக்டர்? சரியாகிடுவா தானே?'' என்றான் சந்தேகமாய்.

''நூறு சதவீதம்!'' என்று உறுதி கொடுத்தவர்,

''எங்களோட மனோதத்துவ முறையில பேசிக்கா சில விதிகள் இருக்கு... லைக்...''

''உப்புப் பெறாத விஷயத்திற்குக் கூட அளவுக்கு அதிகமா சிரிச்சா, அந்த நபருக்கு ஆழ் மனசு தனிமை இருக்குன்னு அர்த்தம்.''

''ரொம்ப நேரம் தூங்கினா... ஏதோ சோகமிருக்குன்னு புரிஞ்சுக்கணும்...''

''நிறைய பேசறவங்க... அதே நேரம் வேகமா பேசுற வங்க... எதையோ மறைக்கிறாங்கன்னு அர்த்தம்...''

''ஒரு வரையறை இல்லாம சாப்பிட்டாலோ... இல்லை சாப்பிடாமலே இருந்தாலோ... அவங்க டென்ஷன் பார்ட்டி...''



''ஒருத்தரால மனசு விட்டு அழ முடியலைன்னா, அவங்க பலவீனமானவங்க... அதே மாதிரி, சின்னச் சின்ன விஷயத்துக்குக் கூட அழுதா, அவங்க ரொம்ப வெகுளி!''

''ஒருத்தருக்குச் சின்னச் சின்ன விஷயத்திற்குக் கூட கோபம் வந்துச்சுன்னா, அவன் அன்புக்காக ஏங்குறாங் கன்னு அர்த்தம்!''

''இந்த விதிகளை வச்சுப் பார்க்கும்போது, உங்க மனைவி கடைசி ரெண்டுலையும் வருவாங்க... ஷி நீட்ஸ் லவ் அண்ட் கேர்! அதை கொடுக்க நீங்க இருக்கும் போது, என்ன பயம்? அடுத்த வாட்டி நான் சென்னை வரும் போது, விது சரியாகிடுவாங்கங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு! அவங்களோட தாடை நரம்புக்குத் தேவையான சிகிச்சையோட சேர்த்து, உங்க காதலையும் கொஞ்சம் தூக்கலா கொடுங்க, போதும்!'' என்றார் மருத்துவர், நம்பிக்கையுடன்.

# 18

பாலா மருத்துவரிடம் பேசிக் கொண்டிருந்த அதே நேரம், திருமதி பாலாவிடம் திருவாளர் பாலாவின் பெருமை களை அள்ளிவிட்டுக் கொண்டிருந்தாள், ரேகா.

''இந்த ஒருவாரமா, பாலா எங்களோட சாப்பிடக் கூட வரதில்லை தெரியுமா? ஃபுல் டைம் வேலை தான்...'' என அவள் ஆரம்பிக்க,

''பு... புபுபுபு... புதுப்... ப்ப்ராஜெக்ட்டா? எனக் கேட்டாள் விது.

உதட்டசைவை வைத்துக் கண்டுபிடிக்க, ரேகா ஒன்றும் பாலா அல்லவே!

''என்னது?'' ''என்ன சொன்னே?'' என்று ஒரு முறைக்கு மூன்று முறையாக தெளிவுபடுத்திய பின்னர்,

''புது ப்ராஜெக்ட் எல்லாம் இல்லை... இது உன்னோட வேலை!''

''என் வேலையா? என்னது?'' என்ற கேள்வியை விது கேட்காமலே, அவளது கண்கள் பறைசாற்றவும்,

''உன்னோட டீம் மெம்பர்ஸ் மேல பாலா ஹாராஸ் மென்ட் கேஸ் ஃபைல் பண்ணியிருக்கார். உனக்குத் தெரியுமா?'' என ரேகா வினவவும்,

விதுவுக்கு ஏகத்திற்கும் திகைப்பு... அதிர்ச்சி என்றே சொல்ல வேண்டும்!

போலீஸ் விசாரணைக்குப் பயந்து கொண்டு, அந்த மிருகங்களுக்கு எந்த தண்டனையும் வாங்கிக் கொடுக்க முடியாமல் போய் விட்டதே என்ற ஆதங்கம்... கோபம்... வெறி, அவளது மனதின் மூலையில் அரித்துக் கொண்டே இருந்தது, நிஜம்!

ஆனால், அதை அவள் ஒருநாளும் வெளியிட்டதே இல்லை! தன் நிலைமை அறிந்தவளாய், போலீஸ் விசாரணை.. .கைது... கோர்ட் என்று சென்றால், தானிருக்கும் நிலைக்கு அதை எதிர்கொள்ள முடியாது என்று தன்னைத் தானே மதிப்பிட்டு வைத்திருந்ததால், யாரிடமும் அதைப் பற்றி அவள் பேசியதே இல்லை! பாலாவிடம் உட்பட!

ஆனால், அவள் கணவன்!?

தன் நெஞ்சம் புகுந்து, அதன் ரகசியங்களை அறிந்தவன் போலல்லவா நடந்து கொள்கிறான்!



இன்று காலை, முதுகெல்லாம் கண் என்றெண்ணியது தப்பு! உடம்பு முழுதும் கண்!

''என் கணவன் என்னை அறிந்தவன்!'' என்ற கர்வத்தையும் மீறி,

அந்தக் கயவர்களுக்கு என்னவாகிற்று என்ற ஆர்வம் தலை தூக்கி நின்றது!

விதுவின் ஆர்வத்தைப் புரிந்து கொண்டோ அல்லது தன் பேச்சின் தொடர்ச்சியாகவோ, ரேகா அதையும் கூறினாள்.

''ஹெட்ச். ஆர், மேனேஜ்மென்ட் ஆளுங்க, டிவிஷனல் ஹெட்ஸ்ன்னு ஏகப்பட்ட பேரு, நம்ம ஆபீஸ்க்குப் படையெடுத்திட்டு இருந்தாங்க... எல்லாம் நம்ம பாலா பண்ண எஸ்கலேஷன் தான்... இந்த பிரச்சனையை இங்க தீர்த்து வைக்கலைன்னா, அடுத்த ஸ்டெப் லீகல் நோட்டீஸ் தான்ங்கிற அளவுக்கு, அவங்களை ஒரு கலக்குக் கலக்கிட்டார்.''

''மோர் ஓவர், கம்பெனிக்கும் இது ஒரு ப்ளாக் மார்க் தானே? உன்னோட டீம்ல எல்லாரையும் கூப்பிட்டு விசாரிச்சாங்க... உன் மேனேஜர் விஜய்... உன் டீம் ஆளுங்க... அப்புறம் உன்னோட ஜாயின் பண்ணவங்க... எங்களை... பாலாவை எல்லாரையும்...''

''கடைசியா... நாங்க எதிர்பார்த்தது தான் நடந்துச்சு! அந்த ரோக்ஸ் எல்லாரையும் வேலையை விட்டுத் தூக்கிட்டாங்க... ஒரு சிங்கள் எக்ஸ்பீரியன்ஸ் லெட்டர் கூட கொடுக்கலை...''

''இங்க மட்டுமில்ல... எங்கயுமே அவங்களுக்கு வேலை கிடைக்க முடியாதபடி செஞ்சுட்டார், பாலா!''

''ஜஸ்ட் நாட் திஸ்... நீ பழையபடி மாறிடணும்ன்னு ரொம்பவே பிரயத்தனப்படறார்... நேத்து கூட, விது என்

மேல டிபண்டன்ட்டா இருக்கிறது, எனக்குப் பிடிச்சிருக்குத்தான்... பட்... இப்படி இருந்தா அவளுக்குன்னு ஒரு தனித்துவம் இல்லாமலே போய்டும்... ஐ வான்ட் ஹெர் பாக்ன்னு சொன்னப்போ, அவரோட கண்ணில உண்மையான காதல் இருந்துச்சு!

''அதான்... என்னாலான உதவியா... அக்கா வீட்டில தங்கிட்டு, அப்படியே டெல்லி போக இருந்த மாமாவை இங்க வர வச்சு, உங்களை மீட் பண்ண வச்சேன்.

''சில சமயம்... உன்னைப் பார்த்தா எனக்கே கொஞ்சம் பொறாமையா இருக்கு! உனக்காக... உனக்காகன்னு யோசிச்சு பாலா செய்யும் போது, துக்கிளியூண்டு பொறாமை எட்டிப் பார்த்துடுது! யூ ஆர் வெரி லக்கி, விது!'' என்று சிறு குழந்தையாக, முடித்தாள் ரேகா.

ரேகாவின் பொறாமை, உள்ளுக்குள் பெருமையை உண்டு பண்ண, மருத்துவரிடம் பேசிவிட்டு வந்த கணவனை கண்களால் விழுங்கினாள் விது.

அவனது பார்வையும் அவளது கண்களோடு கலக்க, அந்த நிமிடம் அப்படியே உறைந்து போனது!

ரேகா வீட்டினரிடம் விடைபெற்று, வண்டியில் செல்லும் போது, அங்கே அதிகமாய் பேச்சு வார்த்தை ஏதும் நடைபெறவில்லை.

வழியில், ஓர் கோவிலைக் காணவும், பாலாவின் தோளில் சமிக்கை செய்து, வண்டியை நிறுத்தும்படி கூறினாள் விது.

வண்டியை நிறுத்தியவன், ''நீ கும்பிட்டு வா, பப்லு! நா இங்கேயே இருக்கேன்...'' என்றால்.

''ஏன்?'' என்ற கேள்வியுடன் ஏறிட்டவள்,



''ஹ்ம்ம்... வா... வா... வாங்க...'' என அவனது கை பிடித்து, வண்டியிலிருந்து இழுத்தாள்.

''ஹே... வேணாம் விது!''

''ப்... ப்... ப்ளீஸ்... பா... பா... லா...''- அந்த வரியில் ''பாலா'' மட்டுமே ஒலி பெற்று ஒளிர,

மறுக்க முடியாமல் உள்ளே சென்றான் பாலமுருகன்.

அக்கோவிலை ஆட்சி செய்து கொண்டிருந்த வெங்கட சுப்ரமணியரை வணங்கிவிட்டு, அங்கிருந்த சுற்று பிரகாரத்தில் சற்று நேரம் அமர்ந்தனர்.

அப்போது பார்த்து, அங்கே பிரசாதம் கொடுக்கத் தொடங்க, ''ஹே பிரசாதம்!!! நான் வாங்கிட்டு வரேன்!'' என்று சிறு பிள்ளையாய் துள்ளிக் குதித்து எழுந்தவன், பாலாவே தான்!

பொறுமையாய் வரிசையில் நின்று, சுடச் சுடப் பொங்கலை வாங்கிக் கொண்டு, விதுவின் அருகே அமர்ந்தவன், ''நீ வாங்கலை?'' என்றான், பொங்கலின் மீது பார்வையைப் பதித்துக் கொண்டே.

''ம்ஹூம்...'' என அவள் கூறியதற்கு,

''நல்லா இருக்கும் பப்லு... போ... போய் வாங்கிக்கோ...'' என்றான், சற்றே நிமிர்ந்து.

மீண்டும் அவனது பார்வை பொங்கலுக்குச் செல்லவும், வலுக்கட்டாயமாக அவனைத் தன் முகம் பார்க்க வைத்த விது, ''உ... உஉஉங்களோடதில கொஞ்சம் த... தததர மா... மாமாமாட்டீங்களா?'' என்றாள், அவன் புறம் கை நீட்டிய வாறே.

''உனக்காக நான் என்ன வேணும்னாலும் செய்வேன் தான்... ஆனா... திஸ் பிரசாதம்! நோ... வே! எனக்கு சாமியை விட... இந்தப் பிரசாதம் தான் ரொம்பப்

பிடிக்கும்! உன்னை நான் லவ் பண்றேன் தான்... அன் பிற்கு... பாசமிருக்கு... ஆல் தி ப்ளா... ப்ளா இருக்கு... பட் என்னோட பிரசாதத்திற்கு பங்குக்கு வரக்கூடாது! எனக்குப் பிடிக்காது!'' என்றபோது, இவனா அவன் என் றிருந்தது விதுவுக்கு. அதுவும், அவன் கையை ஆட்டி ஆட்டிப் பேசிய விதத்தில், அப்படியே ஓர் ஐந்தாம் பையனை நினைவு படுத்த, பீறிட்டுச் சிரித்தாள் விது.

கோபப்படத் தோன்றாமல், மனம் விட்டுச் சிரித்த விது, தானும் எழுந்து பிரசாத வரிசையில் நிற்கவும்,

''என்னோடவே வந்திருக்கலாம் இல்ல... இப்போ உனக்கு அளவு கொஞ்சமா தான் கிடைக்கும்!'' என்று பாலா கூறியபோது, ஒரு விரலை மடக்கி, பழிப்புக் காட்டு வார்களே சிறுவர்கள் அப்படி இருந்தது விதுவிற்கு!

தலையில் அடித்துக் கொள்ளத் துடித்த உணர்வை அடக்கி, வரிசையில் நின்றவளுக்கு, எதிரே அமர்ந்து வெண்பொங்கலை ரசித்து ருசித்து உண்டு கொண் டிருந்த பாலா ஓர் குழந்தையாகவே பட்டான்.

நல்லது கெட்டது தெரிந்த பெரிய மனிதனாய் இருந் தாலும், கணவனுள்ளும் ஓர் குழந்தைத் தனம் இருப் பதை உணர்ந்தாள் மனையாள்!

இந்தக் குழந்தைத் தனத்தையும், குறும்புத் தனத் தையும், கூடவே இரும்பின் உறுதியோடு இருக்கும் நெஞ்சத்தையும் குலைத்துவிடாமல், அவனுடன் நூறு ஆண்டு வாழ வேண்டும் என்று மனமார வேண்டியபடியே, பிரசாதத்தை வாங்கிக் கொண்டு அவன் பக்கம் அமர்ந் தாள் விது.

அவள் அமர்ந்ததும், ''இதை அப்புறம் சாப்பிடலாம்'' எனப் பிரசாதத்தை வாங்கிக் கீழே வைத்துவிட்டு,



''நீ என்னை லவ் பண்றியா?'' என்றான் முதல் கேள்வி யாய்.

''இ... இ... இதென்ன புபு... பு... புபுதுசா... ஆ... ஆ... ஆமா... லவ் ப... பபப... பண்றேன்..''

''எவ்வளவு லவ் பண்றே?''

''அ... அஅஅ... அய்... அய்யோ... எ... எஎஎ... என்னாச்சு? ரொரொரொரொம்பம்பம்பம்ப... இ... இஇஇஇ... இல்லன்னா அ... அஅஅ... ப்பான்னு கூட சொ... சொசொல்... சொல்லாம... பா... பாபாபா... லான்னு மு... முமு... முதல்ல சொல்லுவேனா?''

''தேங்க்ஸ் தேங்க்ஸ்! நீ லவ் பண்றது உண்மைன்னா... அதை ப்ரூவ் பண்ணிக் காட்டு...''

''ப்... ப்ப்... ப்ர்... ப்ரூஃபா? எ... என... எப்படி?''

இந்தக் கேள்வியைக் கேட்கும் போதே, பல வகை கற்பனைகள் விதுவின் மனதில் ஓடி மறைந்தன.

''ஒருவேளை, பொது இடம் என்றும் பாராமல் முத்தம் கேட்பானோ?''

''ஹ்ம்ம்... ஐ லவ் யூன்னு கத்திச் சொல்லச் சொல் வானோ?''

''இல்லை... இனிமேல் அழக்கூடாது என்று சத்தியம் வாங்குவானோ?''

''அப்படியேதும் இல்லையென்றால், அந்த ஹாராஸ் மென்ட் கேஸ் பத்தி எதுவும் பேசுவானோ? என்னை வந்து கம்ப்ளைன்ட் தரச் சொல்வானோ?''

சில வினாடி இடைவேளைக்குள் ஆயிரம் கற்பனைகள் வலம் வர, கணவனே சொல்லட்டும் என்று அவனது முகம் பார்த்தாள் மனையாள்.

''ஒண்ணும் பெருசா இல்ல...'' என்றவாறே விதுவின் கையை எடுத்துத் தனது கையோடு வைத்துக் கொண்டவன்,

''இந்தப் பிரசாதத்தை எனக்குத் தரியா?'' என்றானே பார்க்கலாம்!

''விது அயர்ந்து போனாள்! சிரிப்பில்!

''அய்... ய்யயோ! அய்... ய்ய்யயோ! உ.... உஉ.... உங்களோட!'' என்று தலையில் அடித்துக் கொண்டவள், பிரசாதக் கிண்ணத்தை எடுத்து, அவனது கையில் திணித்தாள்.

''குட்கேர்ள்! உடனே ப்ரூவ் பண்ணிட்டியே!'' என்று சிலாகித்தவன், சிறு வெட்கம் கூட இல்லாமல் அதைக் காலி செய்தான்.

சிரிப்புடன் பார்த்திருந்த மனைவியின் புறம் திரும்பி யவன் ''செம பசி... நேத்து மதியம் சாப்பிட்டது! அதான்!'' என்றான் அசடு வழிய.

''ஏ... ஏ... ஏன் என்னாச்சு? ஏ... ஏஏஏ... ஏன் சா... சா.... சாப்பிடல?'' என விது பதற,

''ரேகா சொல்லி இருப்பாளே... அவ வாயில தங்காதுன்னு எனக்குத் தெரியும்... நேத்து சாயந்திரம் தான்... அவனுங்களுக்கு டிஸ்மிஸஸ் ஆர்டர் கொடுத்தாங்க... அதைப் பார்த்த அப்புறம் தான், உனக்கு ஒரு நியாயம் கிடைச்ச மாதிரி, எனக்கு ஒரு திருப்தி! நிம்மதி! நிறைவு! இப்படி என்ன வேணுமானாலும் சொல்லிக்கலாம்!'' என்று உண்மையான மன நிறைவுடன் பதில் சொன்னவன்,

''நீ கூட நினைச்சிருப்பே... கல்யாணமாகி ரெண்டு நாளைக்கு, இவன் கொஞ்சின கொஞ்சல் என்ன? இப்போ வீட்டுக்கே வரதில்லையேன்னு... ஆனா... உனக்கு ஒரு ஜஸ்டிஸ் வாங்கிக் கொடுக்காம, உன்னோட இழையறது



எனக்கு என்னமோ ரொம்ப ஈனத் தனமா பட்டுச்சு! சோ... முதல, அந்த வேலையை முடிப்போம்... அப்புறம் நம்ம பப்லுவை கவனிச்சுக்கலாம்ன்னு இருந்துட்டேன்...'' எனத் தன் உள் மனது எதிரொலித்ததை வார்த்தையாய் வெளி யிட்டான்.

''சாரி பப்லு! உனக்குக் கஷ்டமா தான் இருந்திருக் கும்... பட்... எனக்கு வேற வழி தெரியல...'' என அவன் கூறியபோது, குழந்தைத்தனம் முற்றிலும் மறைந்து, அன் பில் உருகி நிற்கும் ஓர் காதலன் தனம் வந்து சேர்ந் திருந்தது!

அந்த அன்பில் கரைந்து, கணவனின் கரம் பற்றினாள் விதுபாலா.

''ஹே... நீ என்னை லவ் பண்றே ஞாபகம் இருக்கட் டும்!'' என எச்சரிப்பது போல் கணவன் கூறவும்,

புரியாமல் அவனை ஏறிட்ட விது, அவனது கரங்கள் பிரசாதத் தொன்னையை பின்புறம் இட்டுச் செல்வதைக் கண்டு, பலமாகவே தலையில் அடித்துக் கொண்டாள்.

உடனேயே, தாரத்தினுள் தங்கியிருக்கும் தாய்மை உணர்வு தலை தூக்க, ''வா... வாவாங்க போ... போ... போவ்வோம்... வீவீவீவீட்டில் போய் சா... சா... சாப்ப்பிடலாம்'' என அவன் முகம் திருப்பினாள்.

''வீட்டுக்கா? சான்ஸே இல்லை! இன்னைக்கு... ஏகப்பட்ட அப்பாயிண்ட்மெண்ட் இருக்கு!'' என்றவன்,

''கிளம்பு!'' என்று அவளைக் கைபிடித்து எழுப்பினான்.

அவனது கை பிடித்து நிறுத்தியவள், ''வே... வேவே வேற யாராவது டா... டா... டாக்... டாக்கிட்டப்போ... போபோ... போறோமா? ச... ச... சை... சைக்காட்ரிஸ்ட்டா? எ... எ... எஎனக்கு... எஎஎஎனக்கு...''

என்றவளுக்கு, வாக்கியத்தை முழுதாய் முடிக்க முடிய வில்லை. அவளையும் மீறி, கலக்கம் படர்ந்து விட்டது முகத்தில்.

''நினைச்சேன்!'' என்று தலையில் அடித்து கொண் டவன்,

''இதென்ன விது, பட்டிக்காட்டுத் தனமா இருக்கு!? சைக்காட்ரிஸ்ட்கிட்ட போறவங்க எல்லாரும் பைத்தியமா என்ன? படிச்ச நீயே இப்படி நினைச்சா எப்படி?'' என்று வேகமாய் பொரிந்தவன்,

''இதுக்காகத் தான்... நான் உன்னை ஹாஸ்பிடலுக்கு அழைச்சிட்டுப் போகலை! வீட்டு சூழல... அதுவும் ஒரு பிரண்ட்லியான டாக்குக்கே இப்படியா ரியாக்ட் பண்றது? பாட் ஆன் யூ, விது!'' என்றான் உண்மையான கோபத்துடன்.

மெல்ல அவன் புஜம் தொட்டு ''சாரி...'' என அவள் கண்களால் கெஞ்சியபோதும், பாலாவின் கோபம் குறையவில்லை.

''ப்ச்! உன் மனசு கஷ்ட பட்டுடக்கூடாதேன்னு யோசிச்சு... யோசிச்சு... நான் ஒன்னொண்ணையும் செஞ்சா... சை...'' என இயலாமை மேலோங்க, எரிச்சல் பட்டான் அவன்.

அவனது முகத்தில் கோபத்தின் ரேகைகள் மறையாமல் இருக்கவே, விதுவுக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை.

காலை உதைத்துக் கொண்டு, ''எனக்கு வெளிய போற மூடே போச்சு... வா... வீட்டுக்கே போவோம்...'' என அவன் நடக்கவும்,

சுற்றும் முற்றும் பார்த்தவள், விரைந்து ஒடிச் சென்று, அவன் வலது முழங்கையை வேகமாய் இழுத்து, பச்சென



அவனது கன்னத்தில் ஓர் முத்தம் வைத்து, ''கோ... கோபம் போ... போபோ... போச்சா?'' என வினவி,

அவனது அகன்ற கண்களை ஊடுருவி, ''இ... இ... இன்னும் கோ... கோகோ... கோபமா? வே... வேவே... வேணும்னா... இங்க ஒ... ஒஒஒ... ஒரு முழு... முத்தம் த... தத... தரவா?'' என அவனது மறு கன்னத்தை நிமிண்டி விட்டாள்.

வார்த்தைகள் ஒலி பெறாவிட்டாலும், அவற்றில் காதலின் ஒளி வீசுவது போலிருந்தது, பாலாவுக்கு!

''ஆஹா! இப்பவும் வீட்டுக்குத் தான் போகணும் போலவே! நானே ஒரு வாரமா காஞ்சு போயிருக்கேன்... சும்மா என்ன டெம்ப்ட் பண்ணி விடாத சொல்லிட் டேன்! காஞ்ச மாடு... கம்புல மேஞ்ச மாதிரி ஒரே தாவா தாவிடுவேன்!'' என்று ஒரு விரல் நீட்டி மிரட்டியவன்,

''ஆனாலும்... உனக்குத் தில்லு தான்டி! கோவில வச்சு... அதுவும்... ரெண்டு கன்னத்தில... உன்னைப் போய் பச்சப்புள்ளன்னு நினைச்சுட்டேனே?'' என்று போலி வருத்தம் வேறு கொண்டான்.

''ஹா... ஹா... ஹா...'' என மனம் விட்டுச் சிரித்த விது,

அவனது பாக்கெட்டில் கை விட்டு, அவன் எப்போதும் வைத்திருக்கும் சிறு ரைட்டிங் பேடை எடுத்தாள். கூடவே, பேனாவையும்.

அச்செயலின் அர்த்தத்தை உணர்ந்தவன் போல், ''ஏன் பப்லு... வாய் ரொம்ப வலிக்குதா? பேசக் கஷ்டமா இருக்கா?'' என்று பதறினான், கணவன்.

''ம்ம்... ம்ம்ம்...'' என்றவள், ரைட்டிங் பேடைக் காட்டி, அதில் எழுதிக் காட்டுவது போல் சைகை செய்தாள்.

''சரி'' என்று ஒப்பியவன், ''வீட்டில போய் உத்தனம் வச்சிட்டுப் போலாமா, பப்லு!?'' என்றான் அவளது தாடை எலும்புகளை லேசாய் பிடித்துவிட்டு.

வேண்டாம் எனத் தலையை ஆட்டி மறுத்தவள், பேனாவால் அவனை மெல்ல தட்டி, ரைட்டிங் பேடை பார்க்கச் சொன்னாள்.

''கடவுள்கிட்ட எதுக்கு வரோம்? எங்க வாழ்க்கை சந் தோஷமா அமையணும்ன்னு தானே? அந்த சந்தோஷத்தை... அளவு மீறாம அவர் முன்னாடியே அனுபவிச்சா... அவ ருக்கும் சந்தோசம்... நமக்கும் சந்தோசம்!'' என எழுதினாள் விது.

அவள் எழுத எழுத படித்துக் கொணடே வந்தவன், ''அளவு மீறாம...'' என்ற வாக்கியத்தைப் படித்ததும்,

''அதானே பார்த்தேன்... என்னடா எந்த லாக்கையும் காணோமேன்னு... செம உஷார் பார்ட்டி-டி நீ!'' என்றான் சிரிப்புடன்.

அடுத்ததாய், அவன் விதுவை அழைத்துச் சென்ற இடம் பேச்சுப் பயிற்சியாளரின் (speech therapist) மருத் துவக்கூடம்!



# 19

காலை உணவை முடித்துக் கொண்டு, ஓர் பிரபல மருத்துவமனைக்குள் காலடி எடுத்து வைத்ததுமே, விதுவின் கரங்கள் பாலாவை இறுகப் பற்றின.



''ஒண்ணுமில்லைடா... ஜஸ்ட் ஒரு அரை மணி நேரம் தான்! அப்புறம், நோ ஹாஸ்பிடல்... நோ அட்வைஸ்... நோ பயம்! ஓகே!'' என்று அவள் கரம் தட்டி, தைரியம் கொடுத்தவன்,

அங்கிருந்த வரவேற்பு பெண்ணிடம் சென்று, ''மிஸஸ்.விதுபாலா பாலமுருகன், ஒன்பதரை மணிக்கு அப்பாயிண்மெண்ட் வாங்கி இருக்கோம்'' என்றான்.

''வெயிட் பண்ணுங்க சார்! இன்னும் பத்து நிமிஷத்தில் கூப்பிடுறேன்!'' என்ற பதில் கிடைக்கவும், மனைவியின் அருகே வந்து அமர்ந்து,

''சென்னைல இருக்கிற ஸ்பீச் தெரபிஸ்ட்லேயே இவர் தான் நல்லா பார்க்கிறதா கேள்விப்பட்டேன்... பார்ப் போம்!'' என்றான் முன்னுரை போல.

''ஸ்ப்... ப்... ப்பீச் தெ... தெதெதெரபிஸ்... ஸ்ஸ்ஸ்ட்ன்னா என்ன?'' என விது வினவவும்,

பாலாவுக்கு முதலில் தோன்றிய உணர்ச்சி - பரிதாபம் தான்! அவளது பொருளாதார சூழ்நிலையையும், பெற் றோரின் பாமரத்தனத்தையும், அந்தப் பரிதாபத்திற்குப் பதிலாக்கி, பேச்சுப் பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க ஆரம்பித்தான்.

''பேச்சு வராம இருக்கிறது... பேச்சு குழறல்... ஏதாவது அதிர்ச்சியில பேச்சு சட்டுன்னு நின்னு போறது... இதுக்கெல்லாம் ட்ரைனிங் கொடுக்கிறவங்க தான் ஸ்பீச் தெரபிஸ்ட்'' என அவனது விளக்கத்தைத் தொடர விடா மல்,

''நீங்க போகலாம், சார்'' என்று குறுக்கிட்டாள் வர வேற்புப் பெண்.

உள்ளே சென்றதும், விதுவிடம் அவளது அடிப்படை விபரங்களைக் கேட்டறிந்த மருத்துவர்,

"நா வேணும்னா வெளிய இருக்கவா?" என்று கேட்ட பாலாவிடம்,

"நோ! நோ! நீங்களும் இங்கேயே இருங்க... நான் ஹாஸ்பிடல்ல சொல்லித் தரதை... நீங்க தான் வீட்டில சொல்லிக் கொடுக்கணும். அவங்க இருக்கிறதை விட, நீங்க இங்க இருக்கிறது தான் முக்கியம்!" என்று தடுத்தார்.

இருவரும் ஆர்வமாய் அவரது முகம் பார்க்க, விதுவின் தாடை... வாய்... காது... மூக்கு என்று ஆராய்ந்தவர், "ஏதோ ஊசி போட்டதா சொன்னீங்க இல்லையா?" என்றார்.

"ம்ம்..." என விது தலையசைக்க,

"அதுக்கு அவசியமில்லைன்னு எனக்குத் தோணுது..." என அவர் இழுக்கவும்,

"ஏன் டாக்டர்?" என்றான் பாலா குழப்பமாக.

"அவங்களுக்கு தாடையிலையோ... வாயிலையோ எந்தப் பிரச்னையும் இல்லை. ஜஸ்ட் இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்!" என்றார் அவர் ஆணித்தரமாக.

மனைவியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அன்றைய சம்பவத்தை சுருக்கமாய் எடுத்துரைத்தான் பாலா.

அதன் தொடர்ச்சியாக, "எப்போ பார்த்தாலும், கண்ணில ஒரு பயம்... தயக்கம்... அதை விட... எல்லாத்துக்கும் அழுகை! இவளை என்ன பண்றதுன்னே தெரியல..." என்று தன் ஆற்றாமை முழுதையும் கொட்டிவிட்டான்.

கணவன் பேசுவதையே கேட்டிருந்த விதுவுக்கு, அப்போதும் கண்ணை முட்டிக் கொண்டு கண்ணீர் தான் கொட்டியது!



அவளை ஓர் உஷ்ணப் பார்வை பார்த்துவிட்டு, பாலா முகம் திருப்பிக் கொள்ள,

"இல்ல மிஸ்டர்.பாலா! இப்போ நடந்த சம்பவத்தால் மட்டும், அவங்களுக்கு இந்த பாதிப்பு ஏற்படலை.." எனக் கூறி, அவனது கருத்தை மறுத்த மருத்துவர்,

"சின்ன வயசில இருந்தே, அவங்களுக்குள்ள ஒரு காம்ப்ளெக்ஸ் இருந்திருக்கு! பேச்சு திக்குற எல்லாருக்குமே இருக்கிறது தான்... அது, இந்த சம்பவத்தால ரொம்ப ஜாஸ்தி ஆகிடுச்சு! தட்ஸ் இட்!" எனக் கூறவும்,

"ம்ம்... ம்ம்..." எனத் தலையை வேகமாய் அசைத்து, ஆமோதித்த விது,

பாலாவின் கையேட்டை எடுத்து வேகமாய் எழுத ஆரம்பித்தாள்.

"நான் பிறந்ததில இருந்து... அம்மா என்னைத் திட்டாத நாளே இல்லை தெரியுமா? அவங்களுக்கு நான் ஒரு அவமானச் சின்னம்! அசிங்கம்! பையனா பிறக் கலைங்கிறது ஒரு தப்புன்னா... திக்கு வாயா பிறந்தது பெரிய கொலை குற்றம் மாதிரி!! எனக்கு விவரம் தெரிஞ்சு, ஒரு நாள் கூட, என்னை அம்மா கொஞ்சினதே இல்லை... கொஞ்சுறது என்ன? சாப்பாடு கூடப் போட்ட தில்லை...!"

"அப்பா... ரமணிம்மா... பத்மாக்கா... பாலா இவங்களைத் தவிர என்னை யாருக்குமே பிடிக்காது!"

"ஆபீஸ்ல கூட, என்னை ஏதோ வேற்று கிரக மனுஷி மாதிரி ஒதுக்கியே வச்சிருந்தாங்க..."

"வேலை கொடுப்பாங்க... செய்வேன்! அதுக்கு மேல, என்னோட யாருமே பேச மாட்டாங்க!"

''பேச மாட்டாங்கங்கிறதை விட, நான் பேசுறதைக் கேட்கிற அளவுக்கு, அவங்களுக்குப் பொறுமை இல்லை...''

''நானுமே, நம்மளை அவாய்ட் பண்றவங்களோட ஏன் இருக்கணும்ன்னு அவங்களோட பேச மாட்டேன்... பாலா வோட இருக்கிறது எனக்கு கம்ஃபர்ட்டபிளா இருந்தது!''

''ஆனா... அதை... அவங்க கொச்சைப் படுத்தினதும், ரொம்பக் கோபம் வந்துடுச்சு...''

''எனக்கு எப்பவுமே கோபம் வந்தா ரொம்பத் திக்கும்! ரொம்ப ரொம்பத் திக்கும்!''

அவள் எழுதிக் கொண்டே போக, பாலாவின் எண் ணங்கள் சற்றே பின்னோக்கிச் சென்றன. சின்னதாய் அவளைக் கிண்டல் பண்ணியதற்கே, அவளுக்கு எப்படி பேச்சு குழறியது என்று பாலாவுக்குத் தெரியுமே! அப்படி யிருக்கும் போது, அக்கயவாகளின் கையில் சிக்கியிருக் கும் போது, பேச்சுக்காக எவ்வளவு தவித்திருப்பாள் என் பது புரிய, அதற்குத் தானே காரணமாகிப் போனோமே என்ற கழிவிரக்கம் மேலோங்க, அவளது இடது கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டான், தன் வேதனையை உணர்த்தும் வகையில்!

கணவனை ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, மீண்டும் எழுதினாள் விதுபாலா.

''அந்த நேரம் பார்த்து... அவங்க என்னோட கழுத்தை வேற நெறிச்சாங்க...''

''கோபத்திலேயே... பாதிக்குரல் வரலையா... இப்போ சுத்தமா வரலை...''

''அதுக்கு அப்புறம்... நானும்... கத்திக் கத்திப் பார்த் தேன்...''



''தொண்டை வரைக்கும் வருது... அப்புறம் வரலை...''

''மூச்சைப் பிடிச்சு, வயித்தில இருந்து காத்தைத் தள்ளி, தொண்டை வரைக்கும் கொண்டு வரேன்... ஆனா... வெறும் காத்து தான் பலமா... விகாரமா வந்துச்சு... பேச்சு வரலை...''

அந்த வரிகளை எழுதும் போது, விதுவின் கரங்கள் ஏகத்திற்கும் நடுங்க, அதை கண் கொண்டு பார்க்க முடிய வில்லை, அவளது கணவனால்!

அவளைத் தோளோடு ஆதரவாய் அணைத்து, தலை கோதியவனின் கரங்களை எடுத்துக் கன்னத்தில் அழுத்திக் கொண்ட விது,

இப்போது எழுதவில்லை.

''இ... இ... இவர் ம... மம... ம... மட்டுமில்லைன்னா நா... நாநாநா... நா செத்துப் போயிருப்பேன்!'' என்றாள் கண்களில் எட்டிப் பார்த்த ஒளியுடன்.

மருத்துவர் வாஞ்சையுடன் பார்த்திருக்க, மீண்டும் காகிதத்தில் எழுத ஆரம்பித்தாள் விது.

''நா... நானும் பேசணும்ன்னு தான் நினைக்கிறேன்... ஆனா... முடியல! முன்னாடி பயம் இருந்துச்சு... ஆனா... இப்போ... பேசிடணும்ன்னு ரொம்ப ஆசையா தான் இருக்கு... ஆனா என்னால் முடியல... பேச முடியலன்னதும்... அழுகை வந்திடுது! பேசவே முடியாம போயிடுமோன்னு திரும்பவும் பயம் வந்திடுது... கஷ்டமா இருக்கு...'' என அவள் எழுதவும்,

அவளது கையைப் பிடித்துக் கொண்ட மருத்துவர் ''ஓகே! ஓகே! சியர் அப், விது! இந்த உலகத்தில முடி யாத காரியம்ன்னு எதுவுமே இல்லை... சரி ஆகிடும்!

சரி பண்ணிடலாம்!'' என உறுதி கொடுத்து, அவளிடம் பேச ஆரம்பித்தார்.

சில் வார்த்தைகளை அவளைப் பேசச் சொன்னவர், சில தொடர் வாக்கியங்களையும் வாசிக்க வைத்தார்.

பின்னர், ஒரே எழுத்தை வேகமாய் வாசிக்க வைத்தார்.

கால் மணி நேரம் தொடர்ந்த இந்தப் பயிற்சியின் பின்னர், ஓர் முடிவுக்கு வந்தவர் போல், அவர்கள் முன்னே ஓர் நாற்காலியை எடுத்துப் போட்டு அமர்ந்தார்.

''உண்மையைச் சொல்லப் போனா... திக்கு வாய்ன்னு ஒண்ணு உலகத்தில இல்லவே இல்லை! பேச்சிற்கு நடுவே ஏற்படும் நிறுத்தம்! அளவுக்கு அதிகமான நிறுத்தம்! அவ்வளவு தான்!''

''நம்மளோட பேச்சுக்கு... ரெண்டு முக்கியக் காரணி உண்டு. முதலாவது மூச்சு. ரெண்டாவது நாக்கு!''

''வார்த்தையை தயாரிக்கிறது மூச்சு... அதுக்கு சொல் வடிவம் கொடுக்கிறது நாக்கு!''

''பேச்சு சரளமா வரணும்னா... அதற்குப் போதுமான அளவு மூச்சு வெளியாகணும்! ஆனா, இவங்க விஷயத் தில என்ன ஆகும்ன்னா, மூச்சு கொஞ்சமா வரும்! இல்ல, அவங்க முதலிலேயே மூச்சு முழுசும் யூஸ் பண்ணிடு வாங்க... அதனால, பேச்சுக்குத் தேவையான மூச்சு அவங்களுக்குக் கிடைக்காது! சோ, வார்த்தைக்கு நடுல நிறைய இடைவெளி விழுந்திடும்!''

''இது வந்து உடல் ரீதியான ஒரு காரணம்! ஆனா... மனரீதியா இன்னொரு காரணம் இருக்கு!'' என்றவர் ஒரு சிறு இடைவேளைக்குப் பின்னர்,



''சின்ன வயசில... அவங்க மூச்சு பத்தாம பேச்சுக்கு நடுல நிறைய இடைவேளை விட்டதை திக்கு வாய்ன்னு நினைச்சு, அப்படியே ஒரு முத்திரையைக் குத்தி இருப்பாங்க...''

''அதுவே, அவங்க ஆழ் மனசில பதிஞ்சு போய்டுச்சு!''

''நமக்கு பேச்சு சரளமா வராது... நமக்கு நாக்கு குழறும்ங்கிற எண்ணம் மனசில பதிஞ்சு போனதால, பேசும் போதெல்லாம் அவங்க ஓவர் கான்ஷியஸ் ஆகிடு வாங்க! திக்கக் கூடாது.. திக்கக் கூடாது... மத்தவங்க முன்னால வித்தியாசமா தெரியக் கூடாதுங்கிற எண்ணத் தில, அந்த ஓவர் கான்ஷியஸ் ரொம்ப அதிகமாகி, அதுவே அவங்களை அளவுக்கு அதிகமா திக்க வைக்கும்!''

''நீங்க கவனிச்சுப் பார்த்தீங்கன்னா தெரிஞ்சிருக்கும்! தான் திக்குறதை அவங்க ஆழ் மனசு மறந்திட்டு இருக் கிற நேரங்களில, அவங்களோட பேச்சில எந்த தடங் கலும் இருந்திருக்காது! இவ்வளவு நாள் பார்க்கலைன்னா... இனிமேல் கவனிங்க!'' என அவர் சொல்ல,

''இல்ல டாக்டர்! நான் பார்த்திருக்கேன்... என்னோட பேசும் போது... தட் இஸ்... எங்களுக்கான பர்சனல் நேரங்களில விது திக்க மாட்டா! நான் நோட் பண்ணி யிருக்கேன்!'' என்று முகம் மலர்ந்தான், பாலமுருகன்.

''வெரி குட்! இட்ஸ் ஜஸ்ட் சைக்காலஜி! ஹய்யோ இந்த வார்த்தையை உச்சரிக்கும் போது... திக்குமேன்னு அவங்க பயப்படும் போது தான், அதிகமா திக்கும்! நமக்கு திக்கும் அப்படிங்கிற எண்ணத்தை ஒதுக்கி வச்சிட்டு, சாதாரணமா... கான்ஷியஸ்னஸ் இல்லாம பேசினா... பேச்சு கண்டிப்பா திக்காது!'' என்றார் முடி வாக.

கூடவே, ''அதுக்கான எக்ஸ்சர்சைஸ் தான் இங்க கொடுப்போம்....''

''இந்த பயிற்சில மூணு நிலை இருக்கு...''

''முதல்ல, மூச்சு பயிற்சி... உங்களோட மூச்சை நீடிக்கச் செய்றது!''

''அடுத்தது, பேச்சோட வேகத்தை குறைக்கிறது! அப்போ தான், தெளிவா பேச முடியும்!''

''கடைசியா, சைக்காலஜி ட்ரீட்மெண்ட்! எந்த வார்த்தையும் உச்சரிக்கிறது கஷ்டமில்லைங்கிற எண்ணத்தை உங்களுக்குள்ள விதைக்கிறது!''

''உங்களுக்கு இதில சம்மதம்னா, ரிசப்ஷன்ல பணத்தைக் கட்டிடுங்க!'' என அவர் பொறுப்பை அவர்கள் பக்கம் திருப்ப,

''நீ இங்க இரு விது! நான் வந்துடுறேன்!'' என வெளியே செல்ல எழுந்தான், பாலா.

அவனது முழுக்கையை சட்டையின் நுனியை சட்டென பிடித்து இழுத்தவள், ''நானும்...'' எனக் கண்களால் கெஞ்சி அவனுடன் நடந்தாள்.

''எதுக்கு இப்ப என்ன வால் பிடிச்சிட்டே வரே?'' என அவன் கேட்க,

''எ... எ... எஎவ்ளோளோளோளோ ப... பப... பபணம் க... ககக... கட்டடடடடணும்?'' என்றாள் அவள் ஓர் தவிப்புடன்.

''எவ்வளவா இருந்தா என்ன? இதுக்குத் தான் வந்தியா? போ... உள்ள போய் உட்காரு!'' என அவன் அதட்டியதை ஒதுக்கி,



''சொல்லுங்க...'' என அவனை நகர விடாமல் பிடித்து வைத்தாள், மனையாள்.

''ஹாஸ்பிடல்ன்னு கூடப் பார்க்க மாட்டேன், விது! சப்புன்னு அடிச்சிடுவேன்... எதெதுக்குக் கணக்குப் பார்க்கிறதுன்னு ஒரு விவஸ்தை இல்லை?'' என்றான் கண்ணில் கனலுடன். வார்த்தைகளில் வேகம் காட்டிய போதும், சத்தம் காட்டாத அவனது கோபம் அவளை ஏதோ செய்ய, மௌனமாய் உள்ளே சென்றாள் விது.

உள்ளத்தின் ஒரு ஓரமாய் பணத்தைப் பற்றிய சஞ்சலம் இருந்தபோதும், மறு ஓரத்தில் ''என் கணவன் எனக்குச் செலவு செய்வதற்குக் கணக்குப் பார்க்க மாட்டான்'' என்ற பெருமை இருக்கவே செய்தது! எந்தவொரு பெண்ணுமே எதிர்பார்க்கும் விஷயமன்றோ அது!!

பாலா பணத்தைக் கட்டிவிட்டு வந்ததும், தனது சொல்படி, அன்றைய தினமே, பயிற்சிகளை ஆரம்பித்தும் விட்டார் அவர்.

காலையில் பத்து மணிக்குத் தொடங்கிய பயிற்சி, ஒரு மணி நேர உணவு இடைவேளை தவிர மாலை ஆறு மணி வரை தொடர்ந்தது!

மேற்கொண்ட பயிற்சிகள் விளைவித்த நன்மைகளை விடவும், அவளைப் போல் நிறைய பேர் அங்கு வந்திருந்ததே, விதுவின் பிரச்சனையைப் பாதியாய் குறைத்தது எனலாம்!

எப்போதுமே, கஷ்டத்தில் தவிக்கும் எந்தவொரு மனிதனுக்கும், உலகத்திலேயே கொடுமையான துன்பத்தைத் தான் அனுபவிப்பதாக... தான் மட்டுமே அனுபவிப்பதாகத் தோன்றும்! அதுவே, தன்னைப் போன்ற

கஷ்டத்தில் இருப்பவர்களையோ... தன்னை மிஞ்சிய துயரத்தில் இருப்பவர்களையோ கண்டால், மனம் ஆறுதல் அடைவதோடு மட்டுமில்லாமல், தான் அனுபவிக்கும் துன்பம் ஒன்றுமே இல்லை என்பது போன்ற எண்ணமும் வந்துவிடும்!

அதே போல் தான் விதுவிற்கும் நிகழ்ந்தது!

தான் மட்டுமே திக்கு வாயால் துன்பப்படுவது போல் எண்ணியிருந்தவளுக்கு,

பேசும் ஓரோர் வார்த்தைக்கும், நாக்கு படு பயங்கர மாய் சுருண்டு கொள்ளும் பெண்மணி,

மூன்று வயது நிரம்பிய பின்னரும், அம்மா... அப்பாவே சொல்லாத குழந்தை,

பேச்சு சரிவர வரவில்லை என்பதற்காகத் தற்கொலைக்கு முயன்று, கழுத்தில் தடயத்துடன் அமர்ந்திருக்கும் மனிதர்,

திக்கு வாய் என்பதற்காக வீட்டை விட்டுத் துரத்தப் பட்ட இளவயது பெண்,

தனக்குப் பிறக்கும் குழந்தையும் திக்கு வாயாக பிறந்துவிடுமோ என்று பயப்படும் ஓர் கர்ப்பிணி,

தாழ்வு மனப்பான்மையின் காரணமாகக் கல்லூரிக்குப் போகமாட்டேன் எனக் கூறும் இளைஞன்,

திக்குவதால், கேலிக்கு ஆளாக்கப்பட்டு, வீட்டை விட்டு வெளியே வரவே பயப்படும் கல்லூரி மாணவி.

எனப் பலரைக் கண்டதும், உள்ளம் அசைந்து கொடுத்தது!

பாசம் வைக்கத் தந்தை, போற்றி பேணக் கணவன், ஆதரவு தர உறவுகள் என்று பலர் சுற்றி இருக்கும் போது,



தன்னால் முன்னர் போல்... ம்ஹூம்... முன்னரை விடவும் நன்றாகவே பேசிவிட முடியும் என்ற நம்பிக்கை வந்தது!

அதனாலேயே, அந்த நாள், அவளது வாழ்வின் ஓர் மறக்க முடியாத நாளாக அமைந்தது!

காலையில் சந்தித்த மனிதர், அவளுக்கு நடந்த வன்கொடுமையை துடைத்தெறியும் தைரியத்தைக் கொடுத்தார் என்றால், இப்போது சந்தித்த மருத்துவர், பிறவி கோளாறு என்று அவள் நினைத்திருந்த பிரச்சனைக் குத் தீர்வு கூறினார்!

ஆனால், இதற்கெல்லாம் காரணம் - அவள் கணவன்! அவளது பாலா! அவளது காதலை வென்ற ஜி!

கண்களில் மையலுடன், காலையிலிருந்து தன்னுடனே இருந்த கணவனைப் பார்த்தாள் விது.

''ஹே! என்ன இது? இந்தப் பார்வை பார்க்கிறே?'' என்றவன்,

''நைட் வரைக்கும் வெயிட் செய்... பப்லு! இந்தப் பார் வைக்கான பதிலைச் சொல்றேன்!'' என்று கண் சிமிட்டி னான் பாலா.

கூடவே, ''காலையில இருந்து அலைஞ்சது... உடம்பு அசதியா இருக்குமே! இன்னைக்கு உனக்கு ரெஸ்ட் விடு றேன்... நாளையில இருந்து டபுள் ஷிப்ட்... அதுக்கு போனஸா ரெண்டு முத்தம் வேணா தரேன்... என்ன சொல்றே?'' என்றான் சலுகை கொடுப்பவன் போல்.

தொடர் பயிற்சிகளால் உடம்பு அயர்ந்திருந்தபோதும், மனம் மகிழ்வுற்று, பெரும் உற்சாகத்துடன் தழைத்திருந்

தது, விதுவிற்கு! ஆனாலும், தன் நிலைமையை வாய்விட்டு அவன் முகத்திற்கு நேரே கூற ஒரு மாதிரியாக இருந்தது! அதனால், அவனது கையேட்டை எடுத்து, எழுதத் துவங்கினாள்.

அவன் பின்னோடு வரவும், ''வ... வவவ... வரக் கூடாது...'' என்றாள் சிணுங்கலாக.

கையை மேலே தூக்கி; ''எப்படியும் நான் தான் படிக்கப் போறேன்... போ... போ'' என்று ஆர்வமில்லாதவன் போல், நின்று கொண்டான், பாலா.

வலது காலை மடக்கி, சுவற்றில் ஊன்றியபடி, செந்தாமரை முகத்தவளாய் கையேட்டிலேயே பார்வையைப் பதித்திருந்த மனைவியைப் பார்வையால் மேய்ந்தான்.

''நீங்க ஒண்ணும் எனக்கு போனஸ் தரத் தேவையில்லை... நா உங்களுக்கு இன்சன்டிவ் தரேன்... இன்னைக்கே வேலை செய்ங்க! அதுவும் டபுஸ் ஷிப்ட்!'' என எழுதியவள்,

இரண்டெட்டில் அவனிடம் விரைந்து, அவனது கைக்குள் காகிதத்தைத் திணித்துவிட்டு, மின்னல் வேகத்தில் பார்க்கிங்கில் நின்றிருந்த புல்லட்டின் அருகே சென்று நின்று கொண்டாள்.

அன்றிரவு, முத்தம் எனும் காயுடன், அணைப்பு எனும் கூட்டும் சேர்ந்து கொள்ள, தீண்டல் எனும் சாம்பார் ஊற்றப்பட, காமம் எனும் உணவு காதல் எனும் இலையில், சுவைக்கச் சுவைக்கத் திகட்டாத தாம்பத்திய விருந்தாய் பரிமாறப்பட்டது!





# 20

அதன் பின்னர் நாட்கள், படு வேகமாக செல்வது போலிருந்தது, விதுபாலாவிற்கு.

காலையில் ஓர் செல்லச் சீண்டலுடன் எழுந்தால், குளித்துவிட்டு கீழே செல்லவே ஒரு மணி நேரம் ஆகிவிடும்! ஆக்கிவிடுவான்!

அதன் பின்னர், செல்வாவும் பாலாவும் அலுவலகம் கிளம்புவதற்குள் அதகளம் தான்!

''இவன் சாப்பிடறதை அவன் சாப்பிட மாட்டேங்கிறான்... அவன் சாப்பிடறதை இவன் சாப்பிட மாட்டேங்கிறான்... ரெண்டு எல்.கே.ஜி புள்ளைங்களை கூட கட்டி மேச்சுடலாம் போல... இவனுங்க படுத்துற பாடு இருக்கே!'' - காலை சமையல் செய்து, அதை மகன்களின் வயிற்றுக்குள் அடைக்கும் வரை, ரமணிம்மாவின் நேரம் அவரிடமே இல்லை.

சமையல் பொறுப்பு அவரது என்பதால், அவருக்கு எடுபிடி பத்மா. எடுபிடிக்கு கைத்தடி விதுபாலா.

வார்த்தைகளில் கண்டிப்புக் காட்டும் ரமணிதரன் கூட, பிள்ளைகளின் வண்டியைத் துடைப்பது, ஷூ பாலீஷ் போடுவது என்று அவர்களைக் கிளப்பிவிடும் அழகில், விதுவுக்கு என்றுமே ஓர் ஆச்சரியம் உண்டு!

அவர்கள் கிளம்பிய பின்னர், விதுவுக்குத் தார்க்குச்சிப் போடத் தொடங்கிவிடுவார்கள், ரமணிம்மாவும், ரமணிப்பாவும்!

எங்கேயா? பேச்சுக்கான பயிற்சி முகாமிற்கு!

பள்ளிக் குழந்தைக்கு உணவு கட்டிக் கொடுப்பது போல், ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து எடுத்து வைக்கும் ரமணிம்மாவும் ஏகத்திற்கும் நெருக்கம் ஏற்பட்டுப் போனது விதுவுக்கு!

அவளைப் பயிற்சி மையத்திற்கு அழைத்துச் செல்லும் ரமணிதரன் ஆகட்டும், திரும்பி வந்ததும் "இன்னைக்கு ட்ரைனிங் எப்படி இருந்துச்சு, விது?" என்று ஆர்வத்துடன் விசாரித்து, அவளைப் பேசத் தூண்டும் பத்மாவாகட்டும், "வா... வா... வந்து உத்தனம் வச்சுக்கோ! வாய் வலிச்சுப் போயிருக்கும்!" என்று பறக்கும் ரமணிம்மாவாகட்டும், விதுவின் மனதினுள்ளிருந்த தனிமை உணர்வை விரட்டி, அவளையும் அக்குடும்பத்தின் ஓர் முக்கிய அங்கமாய் உணர வைத்தனர்.

ஓர் ரசனையுடன் வாழ்க்கை சென்று கொண்டிருக்க, "தொடர்ந்து பயிற்சி எடுக்கும் போது தென்படாத பிரச்சனைகள், பயிற்சியை இரண்டு நாள் இடைவேளைக்குப் பிறகு தொடர்ந்தால் வெளிவந்துவிடும். அதனால், இரு தினங்கள் உங்களுக்கு விடுமுறை!" என்று பயிற்சி முகாமிற்கு விடுமுறை விட்டிருந்தனர்.

முழு நாளும் வீட்டில் இருந்த விதுவிற்கு, நேரம் நகராமலே போக, அவர்களது அறையை முற்றிலுமாய் புரட்டிப் போட்டு, தூசி தும்பில்லாமல் துடைத்து, அலங்கோலமாய் சிதறியிருந்த பாலாவின் பொருட்களை அழகுற எடுத்து வைத்து, இருவரது துணிகளையும் அதற்குரிய இடங்களில் அடுக்கி என்று காலை முதல் மாலை வரை வேலை மூச்சு முட்டியது!



ஒருவாறாக மாலை நாலு மணிக்கு, துவைத்துக் காயப் போட்ட ஜன்னல் திரைகளை மாட்டிவிட்டு நிமிர்ந்தபோது, கொஞ்சம் பெருமையாகக் கூட இருந்தது, விதுவுக்கு!

அதை மேலும் அதிகப்படுத்துவது போல், காய்ந்த துணிகளை மொட்டை மாடியிலிருந்து எடுத்துக் கொண்டு வந்த பத்மா,

"ஆஹா! தம்பியோட ரூமை இவ்வளவு சுத்தமா நான் பார்த்ததே இல்லையே? தரையைப் பார்த்து... தலை சீவி... பொட்டு வச்சுக்கலாம் போலவே... பளபளன்னு இருக்கே!" என்று ஆச்சரியப்பட்டுப் போனாள்.

எடுத்த வேலையை நல்லபடியாக செய்த திருப்தி நெஞ்சம் முழுதும் நிறைய, அதை இரு மடங்காக்குவது போல்,

மாலை காபியின் போது, "ரமணி! உன் சின்ன மகன் ரூமை பார்த்தியா? இந்த ரூம்... நம் வீட்டில தான் இருந்துச்சான்னா இருக்கு! குப்பையில பிறந்து, குப்பையில வளந்து, குப்பையில குடுத்தனம் நடத்திட்டு இருந்தவனுக்கு, பொண்டாட்டியால ஒரு விடிவுகாலம் பிறந்துச்சு! இவ மட்டும் வரலை, ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள்... குப்பையோட குப்பையா அவனைத் தூக்கி, குப்ப லாரில போட்டிருப்பேன்..." என ரமணிதரனும்,

"இப்ப மட்டும் என்னவாம்... அவன் எடைக்கு எடை குப்பையை எடை போட்டில்ல, குப்ப லாரில போட்டிருக்கோம்!" என ரமணிம்மாவும் பேசினர்.

இப்படியான சந்தோஷத்துடன் சேர்த்து, சிறு பயத்தையும் அவளது நெஞ்சினுள் புகுத்தினர், புகுந்த வீட்டினர்.

"அவங்கப்பா பொறுக்க முடியாம, ஒரொரு நாள்... அவனோட ரூமைக் கிளீன் பண்ணப் போவாரு...

அவ்வளவு தான்... அன்னைல இருந்து அடுத்து ஒரு வாரத்துக்கு, இதைக் காணோம்... அதைக் காணோம்... என்னோடதை ஏன் எடுக்கறீங்க... நான் உங்களை அடுக்கச் சொன்னேனான்னு அவரைப் போட்டு ஒரு வழி ஆக்கிடுவான்! இப்போ என்ன பண்றான்னு பார்ப்போம்!'' என்ற ரமணிம்மா பகிர்ந்த தகவலே, விதுவின் பயத்திற்கு வித்தாகிப் போனது!

ஆனால், பயத்தை உண்டு பண்ணிய அவரே, அதைத் துடைக்கவும் செய்தார்.

''அடடா! பாலா சார்க்கு பாலா மேடம் மேல கோபமே வராது! ரமணி வெஸ் ரமணி மேல தான் வரும்!'' என்று சூழலை இலகுவாக்க முயன்றவர்,

விதுவின் முகம் யோசனையுடனே இருக்கவும், ''ரமணி வெஸ் ரமணின்னு சொல்லும்போது தான் ஞாபகம் வருது... நீ மொத தடவை... இங்க வந்த தெரியுமா? அப் போவே, நானும் பத்மாவும் உன்னையும் பாலாவையும் பாலா வெஸ் பாலான்னு நினைச்சோம்!'' என்று பேச்சை வேறு பக்கம் திருப்பினார்.

''முதல் நாளேவா?'' என்பது போல் மிகுந்த ஆச்சரியத் துடன் விது விழி விரிக்க,

''அவங்க மட்டுமில்லைம்மா.. நானும் தான்!'' என்று அவர்களுடன் சேர்ந்து கொண்ட ரமணிதரன்,

''பார்த்த முதல் நாளே.. நீ எங்க பையனை ஏதோ செஞ் சிருக்கே! அதனால தான்.. நா இங்க இருந்தா நீ வீட்டுக்கு வரது போறதுக்கு இடைஞ்சலா இருக்குமேன்னு என்னை மதுரைக்குப் பெட்டி கட்டினான், உன் புருஷன்!'' என் றார், ''அனைத்தும் நானறிவேன்'' என்ற பாவனையுடன்.



''தாய் அறியாத சூலா?'' என்ற சொல்லுக்கு நிகராய், தந்தைக்கு ஒன்றுமில்லையே என வருத்தம் கொண்டாள் விதுபாலா.

அவளது அன்றைய நாளின் ஆச்சரியங்களை அதிகரிப்பது போல், ''உனக்கு ஒரு பெர்ஃஃப்பூம் வாங்கிக் கொடுத் திட்டு... அதில ரமணிம்மாவை கோர்த்து விட்டுச்சே தம்பி, அன்னைக்கே நாங்க கன்ஃஃபார்ம் பண்ணிட்டோம்.. நீ தான் பாலா மனசில இருக்க பாலான்னு! பாலா வெஸ் பாலாவோட இன்னிங்க்ஸ் ஆரம்பிச்சதில, தம்பிக்கு எவ்வளவு சந்தோஷமோ தெரியாது? ஆனா.. எங்களை யெல்லாம் ஒரு வழி பண்ற தம்பியை, ஒரு ரன் கூட எடுக்க விடாம பந்தாடினதுல எங்களுக்கு ஏக சந்தோசம்!'' என்றாள் பத்மா, சிரிப்புடன்.

''ஆ... ஆ... ஆஹா... அன்னைக்கு ர..ர...ரமணிம்மா பிறந்தநாள் இ..இஇ... இல்லையா?'' என்று விது பரபரக்க,

''மெதுவா பேசு, விது! வார்த்தைக்கு வார்த்தை இடை வேளை விட்டு, மெதுவா பேசு!'' என்று அறிவுறுத்தினார் ரமணிதரன்.

''சரிப்பா...'' என்று விட்டு,

''அன்னைக்கு... ரமணிம்மா... பி..பி..பிறந்தநாள்... இல்லையா...'' என்றாள் விது, மீண்டும் கேள்வியாக.

''பிறந்தநாளா? எனக்கே என்னோட பிறந்தநாள் நினைவிருக்காது... இதில... அவனுக்கு இருக்குமாக் கும்? செல்வா அட்லீஸ்ட் ஒருவகையில் சேர்த்துக்க லாம்.. சின்னது இருக்கே... என்னோட பிறந்தநாள்ன்னு தெரிஞ்சதுன்னா என்னோட பிறந்தநாளுக்கு... என்கிட்

டேயே எதையாவது வாங்கிட்டுப் போய்டும்! இதில, இவன் எனக்கு கிப்ட்.. அதில் நான் உனக்கு கிப்ட்! கடவுளே! கடவுளே!'' என்று ரமணிம்மா தலையில் அடித்துக் கொள்ளவும்,

அங்கே சிரிப்பலை சொர்ண சங்கீதமாய் பரவ, விதுவின் மனதில், காதல் மனதை வருடும் மெல்லிசையாய் மணம் பரப்பியது!

கணவன் வந்ததும், அவன் கன்னம் இரண்டையும் பிடித்துக் கொஞ்சி, ''என்னோட பப்லு!'' என்று கொஞ்ச வேண்டும் போலிருந்தது விதுவுக்கு!

''பப்லு!'' என்று நெஞ்சம் உச்சரிக்கும் போதே, அவர்களுக்குள் நடந்த ''பப்லு'' உரையாடல் மின்னி மறைந்தது அவளது அகக்கண்களில்!

ஓர் நாள், நள்ளிரவு நேரத்தில், அன்றைய களியாட்டங்களின் களிப்புடன் விது, கணவனின் மார்பில் சாய்ந்திருக்க,

''பப்லு...'' என மெல்ல அழைத்து, காதோடு செல்லச் சண்டை நடத்திக் கொண்டிருந்த முடிக்கற்றைகளை மெல்ல ஒதுக்கிவிட்டான்.

''ம்ம்ம்ம்...'' என அவள் மயங்க,

''பப்லு...'' என்றான் மீண்டும்.

''ம்ம்...''

''பப்லு..'' கொஞ்சம் அழுத்தம் கூடுதலாய் வந்தது அழைப்பு.

''என்ன?'' என அவள் வினவ,



''இல்ல.. சும்மா சொல்லிப் பார்த்தேன்...'' என்றவன்,

''பப்லு.. பப்லு.. பப்லு..'' என்றான், ரசனையின் தொனிகள் மாற மாற.

''அதென்ன பப்லு?'' என்றாள் விது, அவனது மார்பில் தாடையைப் பதித்து, முகத்தை நிமிர்த்தி, அவனைப் பார்த்தவாறே.

''அதுவா? அது... அது வந்து...'' என்று இழுத்தவன், தன்னைப் பார்த்திருந்த கண்களில் தொடங்கி, மூக்கு, காது, கன்னம் என்று வளைய வந்தான்.

''ஷ்.. நீங்க வரது இருக்கட்டும்... சொல்லுங்க... அதென்ன பப்லு...'' என்றாள் அவனது தாடையில், ஓர் குத்து குத்தி.

அந்தக் குத்தில், அணைப்பை வேகமாய் இறக்கியவன், ''வன்முறை ஆகாதுடி என் வஞ்சிக் கொடி'' என்றான் இரு மடங்கு சந்தோஷமாய். ஏனென்றால், ஓர் பெரிய வாக்கியத்தை (ஐந்து சொற்களுக்கு மேலுள்ள வாக்கியம்), விது திக்காமல் பேசியிருந்தாள்.

அவளை அறியாமலே நடந்த அந்த விஷயத்தை அவளிடம் சொல்லி, அடுத்த முறையிலிருந்து அவளை ஊன்றி கவனிக்கும்படி செய்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடன், அதை ஒதுக்கி வைத்தவன், தாங்கள் பேசிக் கொண்டிருந்த விஷயத்திற்கே தாவினான்.

''ஹான்... என்ன கேட்டே? அதென்ன பப்லுன்னு தானே கேட்டே...'' என அவளது உதடுகளில் கோலமிட்டுக் கொண்டே கேட்க,

''ம்ம்... சொல்லுங்க...'' என்று சிணுங்கியவள், சட்டென அவனது விரலைக் கடித்துவிட்டாள்.

''நாய்க்குட்டி... நாய்க்குட்டி... நாய்க்குட்டிக்கு வைக்கிற பேரை வச்சுக் கூப்பிடறதால.. நாய்க்குட்டி மாதிரியே ஆகிட்டடி!'' என்று அவளது மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

''ஆஹா... நாய்க்குட்டி பேரா? ஹான்...'' என அவள் அழ, (போலியாக)

''ஆமா... தோ.. தோ... நாய்க்குட்டி.. காலைச் சுத்தும் நாய்க்குட்டி... ரொட்டி திங்கும் நாய்க்குட்டி...'' எனப் பாடியவன்,

அவள் மேலும்மேலும் சிணுங்கவும் ''அழறியாக்கும்... சகிக்கல!'' என்றுவிட்டு, அவளது முறைப்பில் உண்மையான காரணத்தைக் கூற ஆரம்பித்தான்.

''சின்ன வயசில... அம்மா என்னை இப்படித்தான் கூப்பிடுவாங்க! பாலாவை சுருக்கி... பப்லு.. பப்லுன்னுட்டு! எனக்கும் ரொம்பப் பிடிக்கும்!''

''ஆனா... ஒரு வாட்டி, எங்க சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிருந்தோமா... அங்க பார்த்தா ரெண்டு நாயி.. ஒண்ணு பேரு பைரூ... இன்னொண்ணு பப்லு!''

''அன்னைக்கு விட்டது இந்த பப்லுவை...!'' என்று ஒரு பெருமூச்சு விட்டவன்,

''ஆனா... உன்னைப் பார்த்ததும்... குறிப்பா சொல்லணும்ன்னா உன்னோட பேரைக் கேட்டதும், என் மனசில தோணினது இந்தப் பேரு தான்!''

''அதில இருந்து... நீ எனக்கு எப்பவுமே ''பப்லு'' தான்! என்னமோ என் மனசுக்கு நெருக்கமா.. செல்லமா.. செல்ல நாய்க்குட்டி மாதிரி.. என் சந்தோஷத்துக்காகவே இந்த பப்லு வந்த மாதிரி...'' என சொல்லிக் கொண்டே போனவன்,



மனைவியின் கண்களில் தெரிந்த வாஞ்சை, வியப்பு, சிறு கோபம், திகைப்பு, காதல், பாசம் என்ற உணர்வுகளின் கோர்வையில் தன்னைத் தொலைத்து, அவளிடம் தன்னைத் தொலைத்தான்.

அவளும், தனது முந்தானையில் அவனை மூடி, ''பப்லு.. என் செல்ல பப்லு...'' என்று பதிலுக்கு அழைத்து, அங்கே ஓர் முத்த யுத்தத்திற்கு அஸ்திவாரம் போட்டாள்.

அந்த நினைவுகள், ஆழ் மனசு வரை சென்று தித்திக்க, பாலாவின் ''பப்லு'', தனது ''பப்லு''விற்காக காத்திருக்க ஆரம்பித்தாள்!

போதாக்குறைக்கு, அன்றைய சாயந்திர மெனுவில், விதுவின் கைப்பக்குவம் வேறு சேர்க்கப்பட்டு, ஓர் இனிப்பு அவனுக்காய் காத்திருந்தது!

ஆனால் வந்த அந்த பப்லு, பத்ரகாளியாய்... ம்ஹூம் பத்ரகாளனாய் மாறிப் போனது!

பாலா அலுவலகம் விட்டு வந்ததும், ''இன்னைக்கு... விது பன்னீர் கட்லட் பண்ணி இருக்காடா... சூப்பரா வந்திருக்கு... சாப்பிடு!'' என்றார், ரமணிம்மா முதல் வார்த்தையாக.

அதற்குப் பின்பாட்டாய் ''ஆமாடா... நல்ல டேஸ்ட்! அதுக்கு... ஒரு டிப் (சாஸ்) பண்ணியிருக்கா.. அதான் டாப் கிளாஸ்!'' என்று பாராட்டினான் செல்வா, வாயிலிருந்த கட்லட்டை ருசித்துக் கொண்டே!

அதற்கு ஒழுங்கான பிரதிபலிப்பைக் கொடுத்திருந் தால் அவன் பாலா அல்லவே!

''ஹோ! இன்னைக்கு சரவணபவன்ல இருந்து, கட்லட் வாங்கிட்டு வந்து, பின்பக்கக் கேட் வழியா கொடுக்கச் சொன்னியே! அதுவா வித்து இது?'' என்று அப்பாவி போல் கேட்டவனை, ரமணிம்மா ஒரு அடி வைக்க,

''ம்ம்... ம்... ம்ஹ்ம்ம்... ம்ஹஹ்ம்ம்...'' எனச் செல்ல மாய் சிணுங்கினாள் விதுபாலா.

''அஹெம்... அஹெம்... அஹெம்...'' என அவளைப் போலவே சிணுங்கி, பாலாவும் கிண்டல் செய்ய,

அங்கே ஓர் கண்டனப் பேரலை எழுந்து அடங்கியது.

அதில் ஆனந்தமாய் துவண்ட பாலமுருகன், ''ஆனா லும்... ரெண்டே மாசத்தில இவ்வளவு பேரையும் எப்படி வித்து வசியம் பண்ணினே? நானும் இருபது... இருபத்தி யஞ்சு வருஷமா முயற்சி பண்றேன்... நோ லக்!'' என அவன் வருத்தம் கொள்ளவும்,

''அதுக்கெல்லாம் ஒரு முக லட்சணம் வேணும்டா மகனே!'' என்றார் ரமணிதரன்.

''ஹ்ம்ம். நீங்க சொல்றதும் கரெக்ட் தான்! என்ன செய் றது.. உங்க ஜாடையில பிறந்துட்டேனே?! ஒருவேளை... நான் அம்மா மாதிரி பிறந்திருந்தா ஏதாவது லக் இருந் திருக்கலாம்... ஆனா அதுவும் டவுட் தான்...'' என அவன் உதடு பிதுக்க,

''அடிங்க!'' என்று கையோங்கிக் கொண்டு, அவனை மாடிக்குத் துரத்தினார் ரமணிம்மா.



இருந்த பதினைந்து படிகளை, முப்பதே நொடிகளில் அவன் கடக்கும் அழகை ரசித்துக் கொண்டே, அவனுக் கான மாலை காபியை கலக்க சமையற்கட்டிற்குள் சென்றாள் விதுபாலா.

மனதினுள், ஓர் இனிய படபடப்பு!

தங்களது அறையைத் திறந்ததும், அவனது முகத்தில் தென்படும் ஆச்சரியத்தைப் பார்க்க வேண்டும் போல் ஓர் பரபரப்பு!

''சூப்பர்டா பப்லு! ரொம்ப அழகா இருக்குடா!'' என்ற அவனது பாராட்டைக் கேட்கும் ஆவல்!

ஓர் இன்ப எதிர்பார்ப்புடன் காபியை ஆற்றிக் கொண்டு, வெளியே வந்தவளை, ''விதுதுதுதுதுதுதுது! இங்க வா!'' என்ற கோப அழைப்பு, திடுக்கிட வைத்தது!

அனைவருமே அதிர்ந்து நோக்க, ''ஒண்ணுமில்லை... சும்மா பயமுறுத்துவான்! போ...போய்ப் பாரு!'' என அசையாமல் நின்ற விதுவை மேலே அனுப்பி வைத்தார் மாமியார்.

அப்போதும், வித்து ஒன்றும் பெரிதாய் எண்ணிவிட வில்லை.

அவனது பொருள் எதையாவது தேடியிருப்பான்... அதைக் காணவில்லை என்றதும் கத்துகிறான் என்ற எண்ணம் தான் அவளுக்கு!

''இங்க தானே இருக்கு...'' என அவள் எடுத்துக் கொடுத்தும், லேசாய் அசடு வழிய நிற்பான். பிறகு நாம் முறுக்கிக் கொள்ளலாம் என எண்ணித் தான், அறைக் கதவைத் திறந்தாள் விதுபாலா.

அவள் வருவதற்காகவே காத்திருந்தவன் போல், இடுப்பில் கை வைத்து, முகத்தில் கடுப்புடன் நின்றிருந்தவன், மனைவியின் கையில் காபியைக் கண்டதும் ஏகத்திற்கும் கடுப்பாகிப் போனான்.

''என்ன இது?'' என அவன் பார்வையாலும், சைகையாலும் கேட்க,

அவனது முக பாவத்திலேயே பயந்து போயிருந்தவள் ''க...க...கா... காபி...'' எனத் திக்கினாள்.

''எதுக்கு இந்த அவசரம்? மெதுவா பேசு... மூச்சை இழுத்துவிட்டுப் பேசுன்னு எத்தனை வாட்டி சொல்றது?'' என அவன் அதட்ட,

மண்டையை ஆமோதிப்பாய் ஆட்டியவள், ''கா.. காபி...'' என்றாள் மீண்டும்.

''ஏன்? காபி மட்டும் எடுத்திட்டு வந்திருக்கே? ஏதோ... கட்லட் பண்ணியாமே... அதையும் பத்து எடுத்திட்டு வர வேண்டியது தானே?'' என்றான் ஒரு மாதிரி குரலில்.

அக்குரலில், சத்தியமாய் கிண்டலோ கேலியோ இல்லை! அதற்கு மாறான ஏதோ ஓர் உணர்ச்சி! எதுவென்று பகுத்தறிய முடியாமல், விது தவித்திருக்க,

''ஆமா... கட்லட் மட்டும் தான் செஞ்சியா? நைட்டுக்கு ஃபுல் மெனு போட்டு... வடை பாயசத்தோட விருந்து சாப்பாடு சமைச்சிருக்க வேண்டியது தானே?''

அப்போதும், குரலில் ஓர் வித்தியாசத் தொனி!

குழம்பி நின்ற விது.. ''எ... என்னாச்சு...'' என்றாள் மெல்ல.



''என்ன ஆகணும்? உனக்கு என்ன மனசில அக்மார்க் பொண்டாட்டின்னு நினைப்பா?'' என அவன் கோபமாக வினவவும், விது திகைத்தே போனாள்!

எதையும் சரிவர புரிந்து கொள்ள முடியாமல், ''எ..என்ன.. என்ன வி.. விஷயம்..'' எனக் கேட்டாள், குரல் நடுங்க.

''என்ன விஷயமா? வீட்டை சுத்தமா வச்சுக்கவும், என்னோட துணியைத் துவைச்சுப் போடவும், வாய்க்கு ருசியா சமைச்சுப் போடவும், ஆபீஸ் விட்டு வந்தா காபி கலந்து தரவும் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலை! அப்படியொரு சராசரி எதிர்பார்ப்பு என்னோட மனசில சுத்தமா இல்லை!'' என்றவன், அவளது திகைத்தப் பார்வைக்குப் பதிலாய் மேலும் பேசினான்.

''எந்தவொரு புருஷனும், பொண்டாட்டி எல்லாத்துக்கும் அவன் மேல டிபண்டன்ட்டா இருக்கணும்ன்னு நினைப்பான்... ஆனா.. நான்!?'' என்று கேள்வியாய் நிறுத்தியவன்,

''எனக்கு நீ இன்டிபண்டன்ட்டா இருக்கணும்... உன்னோட திறமையை வளக்கிறதுக்கு நான் உதவியா இருக்கணுமே ஒழிய, அதை முடக்கி வீட்டுக்குள்ளேயே உன்னை அடக்கி வைக்கிறதுக்கு நான் உதவியா இருக்கக் கூடாது! இருக்கவும் மாட்டேன்!'' என்றான் ஆணித்தரமாய்.

அவளது விழிகள் வியப்பின் விளிம்பில் விரிந்து நிற்க,

''ஆமா.. நீ ஒரு பிரச்சனையில மாட்டி இருந்தப்போ... அதில் இருந்து உன்னை மீட்டு, நல்லபடியா வாழ வைக்கணும்ன்னு நினைச்சேன் தான்!''

''ஆனா... அந்த நல்லபடியாங்கிறது... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறது மட்டுமில்லை! நீ தைரியமா வெளிய போகணும்.. வேலை பார்க்கணும்.. உன்னை மாதிரி தாழ்வு மனப்பான்மையில துவண்டு போயிருக்கவங்களுக்கு ஒரு எக்ஸாம்பிளா இருக்கணும்! அதைத் தான் என்னோட விதுக்கிட்ட இருந்து எதிர்பார்க்கிறேன்.. இந்தப் பணிவிடை எல்லாம் எனக்கு வேணாம்!'' என்றான் தன் நிலைப்பாட்டை வலியுறுத்தி!

# 21

கணவன் சொல்ல வருவது புரிந்தும் புரியாமல் இருக்க,

''எ.. எ... என்ன சொல்றீங்க?'' என்றாள் விது, குழப்பத்தில் தோய்ந்த முகத்துடன்.

''என்ன சொல்றேனா? காலையில எழுந்ததும், என் காலைத் தொட்டுக் கும்பிட்டு, தாலியை எடுத்துக் கண்ணில ஒத்திக்கச் சொல்றேன்!'' என்றான் அவன் நக்கலாக,

''எ... எஎன்னது?'' என அவள் மீண்டும் குழம்ப,

''எல்லாத்துக்கும் ஒரே மாதிரி ரியாக்சன் கொடுக்காத விது! எனக்குக் குழப்பமா இருக்கில்ல...''

''உங்களுக்கு... என்ன குழப்பம்? எ.. எ.. எஎன்னைத் தான் குழப்பி எடுக்கிறீங்க?''



''என்ன குழப்பம் உனக்கு?'' என இலகுவாக கேட்டவன்,

''என்னோட விது ஹவுஸ் வைஃப்பா இருக்கிறது எனக்குப் பிடிக்கலை... நீ வேலைக்குப் போகணும்... வேலையையும் தாண்டி ஏதாவது செய்யணும்! அதான் என்னோட ஆசை!''

''அப்போ... ஹவுஸ் வைஃப்புன்னா கேவலமா? இ.. இஇஇஇ... இருங்க.. ரமணிம்மாகிட்ட சொல்றேன்... பத்மாக்காகிட்டயும்!''

''உடனே அங்க இங்க தாவிடுவியே?! நான் என்னோட வைஃப்பைப் பத்திப் பேசுறேன்... செல்வா மனைவியையோ... ரமணிதரன் மனைவியையோ நான் கம்பாரிசனுக்கு எடுத்துக்கவே இல்லை!''

''தென்.. நான் ஹவுஸ் வைஃப்போட வேலையைக் கேவலம்ன்னு சொல்லலையே.. நீ ஹவுஸ் வைஃப்புக்கான மேக் இல்லை! உன்னோட திறமை வேற லெவல் விது!'' என்றான் மிகவும் உறுதி தொனித்த குரலில்.

கண்ணில் சுருக்கத்துடன் அவள் அவனையே பார்த்திருக்க,

'பார்வையிலேயே... மனுஷனை சாச்சிடுவியே!' என்று மனதினுள் எண்ணியவன், அவளை இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டு, அண்ணாந்து தன் முகம் பார்த்தவளின் நெற்றியில் முத்தம் வைத்து,

''ஏன் அப்படி சொல்றேன்னு நினைக்கிறியா? அந்த ஸ்டாமரிங் கியூர் சென்டர்ல நீயே பார்த்த இல்ல.. திக்குவாய் பிரச்சனையால எத்தனையோ பேர் தற்கொலைக்கு முயற்சி பண்ணியிருக்காங்க. அவங்களையெல்லாம்

விடவும், உன்னோட பிறந்த வீட்டு சூழ்நிலை மோசம்.. விது! அம்மாவே சப்போர்டிவா இல்லைன்னா.. அதுவும் இப்படியொரு விஷயத்தில்... கண்டிப்பா வேறயொரு ஆளா இருந்தா.. ஏன் நானா இருந்தாக் கூட, இந்தளவுக்கு படிச்சு, ஜஸ்ட் ஃபர்ஸ்ட் அட்டம்பட்லேயே இவ்வளவு பெரிய கம்பெனில பிளேஸ் ஆகியிருக்க மாட்டேன்... உன்கிட்ட ஸ்டஃப் இருக்கு, விது! அது.. இந்த ரூம்குள்ளயோ.. இந்த வீட்டுக்குள்ளயோ அடங்கிப் போக வேண்டாமே... வெளிய வா விது! வேலைக்கு வா! நீ.. தெரிஞ்சுக்க... எத்தனையோ விஷயங்கள் இருக்கு! அதுக்குத் துணையா நான் இருப்பேன்!'' என்றான் ஆத்மார்த்தமாக.

அவனது ஓரோர் வார்த்தையிலும் தொனித்த அன்பில்.. நேசத்தில்... உண்மையான அக்கறையில்.. உள்ளம் நலிந்து, அவன் நெஞ்சோடு ஒண்டி நின்றாள் விதுபாலா.

ஆனால், அது ஓர் நிமிடம் தான்!

அடுத்த வினாடி, ''இ...இ...இஇ...இதுக்குத்தான்.. அப்படிக் கத்துனீங்களா? நா... எ.. எ... எஎவ்ளோ பயந்துட்டேன் தெரியுமா?'' எனக் கூறி, சரமாரியாக அவனை அடிக்கத் துவங்கிவிட்டாள்.

ஒரு வாக்கியத்திற்கு ஒரு முறை என்ற தவணையில் திக்கிக் கொண்டிருந்த விதுவின் பேச்சு, முன்பை விட அதிகமாய் இடைவேளை விட்டு வரவும், ''மெதுவா பேசு விது! முன்னை விட திக்குது பாரு...'' என அவளைத் திருத்தத் தொடங்கியவன், ஒரு கட்டத்தில் வலி தாங்க முடியாமல்,

''ஆ.. ஆ.. ஆ... என்னடி... அம்சவேணி மாதிரி அமைதியா தானேடி இருந்தே... திடீர்னு நீலாம்பரியா மாறி பின்னி எடுக்கிறியே? என்ன மேட்டர்?'' என அவளிடமிருந்து தப்பித்தவாறே கேட்க, அதற்கும் அடி விழுந்தது.



''யா.. யா... யார்... அ..அன்.. அ.. அஅஅ.. அந்த... அ.. அ.. அ.. அம்சவேணி?'' என அவள் காளி போல் உஷ்ணம் பெற,

''சும்மா ஒரு ரைமிங்க்கு சொன்னேன்டி...''

''ர..ர...ர..ரை...ரை...ரைம்..ரைமிங்-கா??''

முன்னரை விடவும் பலமாய் விழுந்த அடிகளைத் தாங்க முடியாமல், குளியலறைக்குள் சென்று மறைந்தான் பாலமுருகன்.

''தி..திதிதி...திதிறங்க..'' என்று சில வினாடிகள் கத்தியவள், குளியலறை கதவிலேயே சாய்ந்து நின்று கொண்டாள்.

ஐந்து நிமிட ஆசுவாசத்திற்குப் பின்னர், ''எப்படியும் வெளியே வந்து தானே ஆகணும்! வரட்டும்! வச்சுக்கிறேன்!'' என அவள் கருவிக் கொண்டிருந்த வேளையில்,

மின்னல் வேகத்தில் குளியலறைக்கதவு திறக்கப்பட, அதன் மீது சாய்ந்து நின்ற விது, நிலை தடுமாறி, உட்புறமாய் விழ,

அதற்காகவே காத்திருந்தவன் போல், அவளைக் கீழே விழாமல் கையில் தாங்கியவன், அப்படியே அவளை அள்ளிக் கொண்டான்.

கால்கள் குளியலறைக் கதவை சாற்ற, உதடுகள் மனைவியின் திகைத்த அதரங்களுக்குக் கதவாகிப் போயின!! அதன் பின், முத்தங்களின் நடத்திய சன்னடையில்,

முன்னர் போட்ட சண்டை கத்திக் குத்தோ சமாதானமோ எதுவுமில்லாமல் அந்தரத்தில் நின்று போனது!

அடுத்தும் வாழ்க்கை முன்னர் போல் தான் சென்றது! ஆனால், விதுவிற்குள் ஓர் குழப்பம்! தயக்கம்! யோசனை! எல்லாமே!

பாலா சொல்வதைப் போல், வேலைக்குச் செல்லலாம் என்று ஒரு மனம் சொன்னபோதும்,

''தன்னால் முடியுமா?'' என்று மற்றொரு மனம் குழம்பியது.

முன்னர் பார்த்த வேலை தான்... ஆனால்... நடுவில் நடந்த அச்சம்பவம்?!

அது சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்த போதும், அங்கிருக்கும் பிறர்? அவர்களின் குறுகுறு பார்வையையும், குடையும் கேள்விகளையும் எதிர்நோக்கும் தைரியம் தன்னிடம் இருக்கிறதா?

வீட்டிலும் சரி... ட்ரைனிங் செல்லும் இடத்திலும் சரி, அவளது குறையே நிறையாகிப் போனது! ஆனால்... வெளியில்?

எல்லா மனிதர்களும் ஒரே மாதிரி குணம் கொண்டவர்கள் அல்லவே!?

சுருக்கென்ற வார்த்தையையோ... துளைக்கும் பார்வையையோ தாங்கும் சக்தி தன்னிடம் இருக்கிறதா?

அப்படியேதும் நடந்தால், பாலா இருப்பான் தான்! ஆனால்.. அவன் சொன்ன ''நீ.. இன்டிபண்ட்டா இருக்கணும் விது!'' என்ற வாக்கியம் நடப்புக்கு வராமலே போய்விடுமோ என்ற பயம் வேறு!



இவ்வாறாய் அவள் தனக்குள்ளேயே போராடிக் கொண்டிருக்க, பாலா வேலை விஷயமாக டோக்கியோ செல்வதாய் வீட்டில் தெரிவித்தான்.

''எ.. எ... என்னது? ட்ட்..ட்...டோக்கியோவா?''

''விது, கேப் விட்டு.. நிதானமா பேசு!'' என்ற அதட்டல் நாலாபக்கமிருந்தும் வர,

''ம்ம்ம்...'' என லேசாய் சிணுங்கி,

''நானு?'' என்றாள் கேள்வியாக, கணவனிடம்.

''என்ன நீயி? ஆபீஸ் போறதா ஐடியாவே இல்லையா? இன்னும் ரெண்டு நாளில ட்ரைனிங் முடியுதில்ல... அடுத்த திங்கட்கிழமை ஆபீஸ் ஜாயின் பண்ற வழியைப் பாரு! ஏற்கனவே, ரெண்டு மாசத்துக்கும் மேல... லீவ் ஆகிடுச்சு!'' என்று அதட்டினான், பாலா.

''ப்ச்!'' என்று சலிப்பு முகத்தில் பரவ, சட்டென எழுந்து சமையலறைக்குள் மறைந்தாள் விதுபாலா.

''என்ன விது?'' என பத்மாவும்,

''என்ன பாலா இது?'' என்று ரமணிம்மாவும் ஒருசேர ஆரம்பிக்க,

''அவரு போறதைப் ப..ப..பத்திக் கேட்டா... நான் ஆபீஸ் போறதைப் பத்திப் பேசுறாரு... அவர்கிட்ட வே.. வே.. வேற என்ன பேசுறது?'' என்று விது பொரிந்து தள்ள,

''என்னோட வேலையை நான் பார்க்கிறேன்.. உன் வேலையை நீ பாருன்னு சொல்றது தப்பா? என்ன கொடுமை ரமணி இது?'' என்று பாலாவும் பதிலுக்குப் பேசினான்.

''ஆமா... நான் தா.. தா... தான் கொடுமை பண்றேன்... அவரை டோர்க்கியோ என்ன... அ...அ...அண்டார்டிக்கா வுக்கே போகச் சொல்லுங்க..'' என்று விது மூக்கால் அழ,

''நேரடியா என்கிட்டே பேசு விது... அதென்ன மீடியேட் டர் வச்சுப் பேசுறே?'' என்று அதட்டினான் பாலா.

''ஆமாப்பா.. எல்லா த.. த..தப்பும் நான்தான் பண் றேன். நீங்க சத்தியவான்... சாவித்திரி பு..பு...புருஷன்! போங்களேன்!'' என்ற விதுவின் பேச்சு, சம்பந்தா சம்பந்த மில்லாமல் நீண்டு கொண்டே போக,

குடும்பத்தின் மற்ற அங்கத்தினர் அனைவரும், அவர் கள் போடும் சண்டையை ஓர் ரசனையுடன் பார்த்திருந் தனர்.

''ஷ்! பார்த்தியா.. எப்படி வாய் பார்க்கிறாங்கன்னு? நம்மளை வச்சு ஒரு சீரியலுக்கு ஸ்க்ரீன் ப்ளே ரெடி பண்ணிடுவாங்க... இதெல்லாம் நமக்குத் தேவையா? வா.. தனியா டீல் பண்ணிக்கலாம்'' எனக் கூறிக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்து, விதுவின் கைப்பற்றி அழைத்து வந்தான் பாலா.

''அவன் அடி வாங்குறது.. நமக்குத் தெரியக்கூடாதாம் ம்மா! அதான் ஓடறான்'' என செல்வாவும்,

''பாவம்மா.. அவன் எங்களுக்கு ஒரே ரெண்டாவது பிள்ள! பார்த்துப் பதமா அடி விது!'' என்று ரமணிம் மாவும்,

''வாழ்க்கையில இப்படி சான்ஸ் கிடைக்கிறதெல்லாம் ரொம்ப அபூர்வம் விது! நல்லா யூஸ் பண்ணிக்கோ!'' என்று பத்மாவும் கேலியாய் அவர்களைத் தொடரவும்,



''நீங்கெல்லாம் இவ்.வ்வ்வ்வ்வ்வ்வ்வளவு நல்லவைங் கன்னு எனக்குத் தெரியாம போச்சே!'' என்றான் பாலா, போலி ஆச்சரியத்துடன்.

அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த ரமணிதரனிடம் திரும்பியவன், ''என்ன மிஸ்டர். ரமணி... ஒரு கவுன்ட்டரும் கொடுக்காம பேசாம இருக்கீங்க?'' என்றான் புருவத்தை உயர்த்தி.

''அதுவா? மாடிப்படி திரும்புற இடத்தில... ஒரு ஒட்ட டைக் குச்சியை சாய்ச்சு வச்சிருக்கேன். நல்லவேளைக்கு.. அது விது கண்ணில் பட்டு, அதை அவ மறக்காம எடுத்திட்டுப் போணுமேன்னு யோசிச்சிட்டு இருக்கேன்!'' என்றார் ரமணிதரன், படு தீவிரமாக.

பலத்த சிரிப்பலையின் ஊடே, தன் கன்னத்தையே மாறி மாறி இரண்டடி வைத்துக் கொண்ட பாலா, ''இதுக் குப் பேரு தான்... சொந்த வாயால சேத்துல விழுறது! உனக்குத் தேவையாடா பாலா, இது?'' என்றபடியே, உர்ரென்று நின்று கொண்டிருந்த மனைவியை இழுத்துக் கொண்டு, அறைக்குள் நுழைந்தான்.

என்ன தான் விதுவின் கை ஓங்கி இருந்தது போல் தோன்றியபோதும், முடிவில் பாலாவே ஜெயித்தான்!

அந்த முடிவின் படி, பதினைந்து நாள் பயணமாக அவன் ஜப்பான் செல்ல, விது வேலைக்குச் செல்வதாய் முடிவாயிற்று!

''பாலா இல்லாமல் எப்படி, வேலைக்குச் செல்வது?'' என்ற கேள்வி ஒரு புறம் என்றால்,

''வேலையிடத்தில் தன்னால் சமாளிக்க முடியுமா? ஏதும் அசம்பாவிதம் நேர்ந்து விட்டால், என்ன செய்வது?

அப்படி நேர்ந்தால் அதை எதிர்கொள்ள முடியுமா?'' என்ற கேள்விகள் விதுவை நாலாபுறமும் இம்சித்து எடுத்தன.

இதனடுவே ஓர் நல்ல விஷயமாக, பத்மா கருத்தரித்தாள்!

வீடே ஓர் புதுவரவை எதிர்நோக்கி சந்தோஷித்திருக்க, கர்ப்பிணியான பத்மாவின் தாய் வீடு சரியில்லை என்பதால், புகுந்த வீட்டுத் தாயான ரமணிம்மாவே மருமகளின் மசக்கை நேரத்தில், அவளைத் தாங்கினார்.

அதன் ஒரு பகுதியாக, ஓர் நாள் காலை, சில பல பரிசோதனைகளுக்காக ரமணிம்மாவும் பத்மாவும் மருத்துவமனைக்குச் சென்றிருந்தனர்.

ரமணிதரன், விதுவை பயிற்சி முகாமில் இறக்கிவிட்டு விட்டு ''இன்னைக்கு.. பென்ஷன் விஷயமா ஹெட் ஆபீஸ் வரைக்கும் போக வேண்டியிருக்குமா.. எப்படியுமா.. சாயந்திரம் வரைக்கும் இழுத்தடிச்சிடுவாங்க... அதனால, நீயே வீட்டுக்குப் போயிடுறியா?'' எனக் கேட்டார்.

''ஒண்ணும் பிரச்சனையில்லை ரமணிப்பா! நான் பப..பா...பார்த்துக்கிறேன்... நீங்க உங்க வேலையை முடிச்சிட்டு வாங்க!'' என்று அவரை இன்முகத்துடன் அனுப்பி வைத்த விதுவுக்கும், இன்னும் சற்று நேரத்தில் ''ஹய்யோ... தனியாக இருக்கிறோமே? யாராவது துணைக்கு இருந்திருந்தால் பரவாயில்லையே!'' என்று தானே மறுகப்போவது தெரியவில்லை!

''சரிம்மா'' என்ற ரமணிதரன்,

''இப்போ... ஒரே ஒரு வாட்டி தான்மா பேச்சு தடுமாறிச்சு! வெரி குட்! இப்படித் தான்... நிதானமா



பேசணும்!'' என்று தட்டிக் கொடுக்கவும் மறக்கவில்லை.

சிறு சிரிப்புடன், முகாமிற்குள் சென்ற விதுவிற்கு, அதன் பின்னர் தொலைபேசி உரையாடல் பயிற்சி, தெரியாதவருடன் பேசும் பயிற்சி, மேடையில் பேசும் பயிற்சி என்று நேரம் இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது.

மாலை மூன்று மணிக்காய் வீட்டுக்குத் திரும்பியவளுக்குப், பூட்டிய வீட்டைக் கண்டதும் லேசாய் மனம் சுணங்கியது!

எப்போதும், பத்மாவோ ரமணிம்மாவோ வாயிலையே பார்த்துக் கொண்டு நிற்பார்கள்! முக்கியமாய் பத்மா! தோட்டத்தின் எந்தப் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தாலும், விது வரும் சத்தம் கேட்டு விட்டால், அடுத்த நிமிடம் அங்கே வந்து விடுவாள்! பத்து நிமிடம் அன்றைய நடப்புகளைப் பேசிய பின்னரே, ஓரக்கத்திகள் இருவரும் அவரவர் வேலையைப் பார்ப்பர்!

பழகிய சில நாட்களிலேயே, ஓர் நெருக்கம் ஏற்பட்டுப் போன உறவுகளை எண்ணியவாறே கதவைத் திறந்தவள், ''எல்லா டெஸ்ட்டும் நல்லபடியா எடுத்திட்டு வந்திடணும்! பத்மாக்காவும் குழந்தையும் ஆரோக்கியமா இருக்கணும்!'' என்று மனதார வேண்டிக் கொண்டாள்.

மேலே தங்கள் அறைக்குச் சென்று, உடை மாற்றியவள், பாலாவிடமிருந்து ஏதாவது மின்னஞ்சல் வந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக கணினியை எடுத்தாள்.

சாலையை நோக்கியிருந்த அவர்களது அறை ஜன்னல் ஒன்றைத் திறந்தவள், மேஜையை அதனருகே இழுத்துப் போட்டுக் கொண்டு, மின்னஞ்சலைத் திறந்தாள்.

அவளது எதிர்பார்ப்பை ஈடு செய்வது போல், ''பப்லு...'' என்ற தலைப்புடன் ஓர் மின்னஞ்சல் சிரித்துக் கொண்டு நின்றது!

அதைத் திறந்து, மின்னல் வேகத்தில் கண்ணை ஓட்டியவளுக்கு, முகம் செம்பருத்தி மலர் மீது தெளித்த பதநீராய் சிவந்து, குளிர்ந்து போயிற்று!

''ச்சே... இவனுக்கு விவஸ்தையே இல்லை...'' என்று அலுத்துக் கொண்டே அதே மனம், அவனது வார்த்தைகள் வார்த்தைகளாய் நின்று விடாமல், உயிர் பெற மாட்டாதா என்று விவஸ்தையில்லாமல் ஏங்கித்தான் போனது!

''இவ்வளவு ஆசையை வைத்துக் கொண்டு ஏன் போனானாம்!?'' என்று நொடித்த உள்ளத்துடன் சேர்த்து, கழுத்தையும் அவள் நொடிக்க,

ஜன்னல் வழியே தெரிந்த காட்சியில் அப்படியே உறைந்து போனாள் விதுபாலா!

ஏனென்றால்... எதிர்ச்சாரியில்... அதாவது எதிர் கட்டிடத்தில்... அவளை ஏமாற்றிய நிறுவனத்தின் திறக்கப்படாத கதவை ஒருவன் திறந்து கொண்டிருந்தான்.

ஓர் உக்கிரம் உடம்பு முழுதும் ஓடி, உதிரத்தை உஷ்ணமாக்கியது!

அவர்கள் நடத்திய நேர்முகத் தேர்வு, கொடுத்த நியமன உத்தரவு, கேட்ட பணம், அதைப் புரட்ட தந்தை பட்ட கஷ்டம், ஆர்வமும் சந்தோஷமுமாய் அவள் காத்திருந்தது, முடிவில் அவர்கள் ஏமாற்றியது, காவல் நிலையத்தில் காட்டிய அலட்சியம், கால் தேய இந்த வீதியே கதி என்று கிடந்தது என்று ஒவ்வொன்றும் நினைவு வர, நெஞ்சம் கொதித்துப் போனது!



தன்னைப் போன்று எத்தனையோ பேரை ஏமாற்றிய பாவிகளுக்கு, உரிய தண்டனை வாங்கிக் கொடுத்தே ஆக வேண்டும் என்று மனம் சூளுரைத்த போதே, ''மேலாளர்'' என்று சொல்லிக் கொண்டவனைத் தொடர்ந்து ''மனித வள மேலாளர்'' என்று அரிதாரம் பூசிய மற்றவன் உள்ளே நுழைந்தான்.

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு அவர்கள் நுழைவதே, திருட்டுத் தனத்தைப் படம் பிடித்துக் காட்டியது!

மத்தியான நேரத்தில், அதிகமாய் ஆள் நடமாட்டம் இருக்காது என்று எண்ணினார்களோ என்னவோ, வேகமாய் கதவைத் திறந்து கொண்டே உள்ளே நுழைந்தவர்கள், கதவை அடைத்து உள்ளிருந்து பூட்டினர்.

அவர்கள் காட்டிய அவசரமும், கண்ணில் தெரிந்த கள்ளத்தனமும், உடல் மொழியில் தென்பட்ட பதட்டமும், இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர்கள் இடத்தைக் காலி செய்து விடுவார்கள் என்பதைப் பறைசாற்றியது.

இப்போது விட்டால், எப்போதுமே அவர்களைப் பிடிக்க முடியாது என்பது புரிந்தது, விதுவிற்கு!

இப்போதே பிடித்துவிட வேண்டும்! ம்ம்! எப்படியும் பிடித்துவிட வேண்டும்! என் மனம் அழுத்திச் சொன்ன போதும், ''எப்படி?'' என்பதில் குழம்பிப் போனாள்.

''ச்சே! இன்னைக்குன்னு பார்த்து, வீட்டில் யாருமே இல்லையே? ஐயோ!'' எனத் துவண்ட மனதைத் திடப்படுத்திக் கொண்டு,

கைப்பேசியில் ரமணிம்மாவின் எண்ணிற்கு அழைக்க அழுத்தினாள்.

ஆனால், அழைப்பு போவதற்கு முன்னரே, மருத்துவ மனையில் இருப்பவர்களைத் தொந்தரவு செய்வது நல்லதல்ல... அதுவும், குழந்தைக்கான பரிசோதனைக் குச் சென்றிருப்பவர்களை டென்ஷன் படுத்தக் கூடாது என்பது தோன்றிவிட, ரமணிம்மாவை அழைக்கும் எண் ணத்தைக் கைவிட்டாள் விது.

அடுத்து, ரமணிதரன்!

அவரை அழைத்தாலும்... மவுண்ட் ரோட்டில் இருக்கும் தலைமை அலுவலகத்திலிருந்து அவர் இங்கே வருவதற் குள், இவர்கள் ஓடி விடுவார்கள்!

ஹ்ம்ம் என்னதான் செய்வது? யாரை அழைப்பது!

ஹான்! செல்வா!

அவனுக்கு அழைத்தால், முழு ரிங்கும் போய்... எடுக் கப்படாமலே போயிற்று!

''அய்யோ... எடுங்களேன் அத்தான்!'' என்று மீண்டும் ஒரு முறை அழைத்தாள். ம்ஹூம்!

''ச்சே!'' என்ற சலிப்பின் முடிவில், முழுதாய் ஐந்து நிமிடங்கள் மறைந்து போயிருந்தன.

''அய்யோ... போயிருவானுங்களே!'' என்ற பதட்டம் நெஞ்சில் சூழ, எதிர்ச்சாரியை நொடிக்கொரு முறை நோட்டம் விட்டாள்.

உள்பக்கமாய் பூட்டியிருந்த கதவு, சற்று நிம்மதியைக் கொடுத்தாலும், எந்த நிமிடமும் அவர்கள் வெளியேறி விடும் அபாயம் இருப்பதை உணர்ந்தாள் விது.

கடைசியாய், ''பாலாவுக்கு அழைப்போமா'' என்ற எண்ணம் தோன்ற,



''மவுண்ட் ரோட்டில் இருக்கும் ரமணிதரன் வரவே ஒரு மணி நேரம் ஆகும்... இதில் ஜப்பானில் இருக்கும் கணவனுக்கு அழைக்கிறாளாம்! லூசு! லூசு! அவன் என்ன ஜப்பானில் கல்யாணராமனா? பறந்து வர?'' என்று மனம் தன்னைத் தானே சாடியது.

உடனேயே ''அய்யயோ! ஜப்பானில் கல்யாணராமன்ல கமல் ஆவியா இல்ல வருவாரு... ஐயோ என் புருஷன் நல்லபடியா வீடு வந்து சேர்ந்திடணும், முருகா! தெரி யாம சொல்லிட்டேன்!'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள் விது!

கூடவே, ''அந்தப் படத்தில் வரும் பல்லும்... வாயும்... ச்சே! என் பப்லு அழகு பா!'' என்று அந்த நேரத்திலும், அவனைச் சீராட்டியது காதல் கொண்ட அவளது நெஞ்சம்!

நின்ற இடத்திலேயே, அப்படியே அமர்ந்தவள், வேக மாய் ஆழ் மூச்செடுத்து அவளை சமன் செய்து கொண்டாள்.

''நிதானமா இருக்கணும், விது! டென்ஷன் ஆனா உனக்குத் திக்கும்! சோ... நோ டென்ஷன்! பதட்டமில் லாம் கூலா ஹேண்டில் பண்ணு! எல்லாமே நல்லா நடக் கும்!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள், அறையிலிருந்து வெளியே வந்தாள்.

மாடியிலிருந்து இறங்கியவாறே, தந்தைக்கு அழைத் தவள் ''அப்பா... நா... நா... விது பேசுறேன்... நம்மளை ஏ... ஏ.. ஏமாத்தினாங்கள்ல ஒரு கும்பல்... அவங்க மாட்டியிருக்காங்க... நான் அவங்களைப் போய் கையும் களவுமா பிடிக்கப் போறேன்... நீங்க... எ... எஎ... என்ன பண்றீங்க... போலீஸ்க்கு போன் பண்ணி... எங்க வீடு இருக்கத் தெருவுக்கு வரச் சொல்லுங்க...'' என்றாள் விது.

விது பேச ஆரம்பித்ததுமே, ''பாலாம்மா...'' எனத் தொடங்கிய அவளது தந்தை, அதன் பின்னர் அனாவசியமாய் இடையிடாமல், மகள் சொல்வதை உள்வாங்கினார்.

''நான் சொல்லிடுறேன் பாலா. ஆனா... நீயா தனியா போகாத... வீட்டில யாருமில்லையா? மாப்பிள்ள... எப்ப டோக்கியோல இருந்து வருவார்?''

''அவர் வரவரைக்கும் எல்லாம் இருந்தா... அ...அ..அஅஅவனுங்க அடுத்த நாட்டுக்கே ஓடிப் போயிடுவானுங்க...''

''சரி! சரி! வேற யாருமில்லையா?''

''யாருமில்லைன்னு தானேபா... உ...உ...உ...உங்களைக் கூப்பிடுறேன்...''

''சரி டா! என்னை விடவும், சம்மந்திக்கு அங்க உள்ள விவரம் தெரியும். அதான் கேட்டேன்! அவரையே போன் பண்ணச் சொல்லேன்... மா! இங்க இருந்து கூப்பிட்டு... அதை அவங்க சென்னைக்கு சொல்லி... நேரமாகாதா?''

''ஐயோ... சரிப்பா! வள...வளன்னு பே... பேசாம... மாமாக்கு நீங்களே போன் பண்ணுங்க...''

''சரி கண்ணு!''

''வைக்கிறேன்...'' என மகள் வைக்கப் போகவும்,

''கண்ணு... தனியா போகாதமா... ரோட்டில யாரையாவது துணைக்குக் கூட்டிட்டுப் போ! அடிச்சுக் கிடிச்சுப் போட்டுற போறானுங்க!''

தந்தையின் அக்கறையிலும் ஓர் நியாயம் இருப்பது புரிய, ''சரிப்பா... நா... நா... பார்த்துக்கிறேன்...'' என்ற விது, வெளிவாசலை நெருங்கியிருந்தாள்.



எப்போதும் போல், அவர்கள் வீட்டு மாமர நிழலில், இஸ்திரி கடைக்காரர் நின்றிருந்தார்.

மேலே ஓர் கண்ணை வைத்துக் கொண்டே, அவரிடம் பேசிய விதுவிடம், அவருக்கு முன்னேயிருந்த அலட்சியம் இருக்கவில்லை. தனக்கு நிழல் தரும் வீட்டின் மருமகளாய் இருக்கும் விதுவிடம் அலட்சியம் காட்ட அவர் ஒன்றும் முட்டாள் அல்லவே! அதுவும், அவர் தாகத்தைத் தீர்க்கவும், உடல் கழிவுகளை வெளியேற்றவும், வெயிலில் இளைப்பாறவும் இடம் கொடுக்கும் வீடன்றோ!

ஆதலால், அவள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டார் மனிதர்.

''அண்ணா... அந்த ஏமாத்துக்காரனுங்க வந்திருக்கானுங்க... எ... எஎஎ.. எப்படியாவது அவங்களை இங்க இருந்து போறதுக்கு முன்னாடி பி..பிபிடிச்சிடணும்! நீங்க தான் அண்ணா உதவி செய்யணும்!'' என்றாள் விது, அவசரமாக.

''எங்க? எங்க?... இரு நான் போய் பிடிச்சாறேன்...'' எனப் பறந்தவரிடம்,

''ஹய்யோ! அவசரப்பட்டு அவங்களைக் கோட்டை வி..விவிவிட்டுடக் கூடாது! நீங்க இந்தப் பக்கம் போகும் போது, அதோ அந்த சை... சைசைசைசை... சைடுல ஒரு வழியிருக்கே... அதில போய்ட்டா? பாருங்க... வ...வவவ... வண்டி வேற கொண்டு வந்து வச்சிருக்காங்க... ஒரு நிமிஷம் ஏறிப் பறந்துடுவானுங்க!'' என்று நிஜத்தைக் கூறி அடக்கினாள் விதுபாலா.

''ஹோ... ஆமால்ல... இப்ப என்னம்மா செய்றது?'' என அவர் கையைப் பிசைய,

''நா இந்தப் பக்கப் படி வழியா மேலே போய்... கதவு நேரா நி... நிநி.. நின்னுக்கிறேன்... நீங்க அந்தப் பக்கம் ஒரு படிக்கட்டு இ..இஇஇ..இருக்கில்ல... அதில வாங்க... அவங்க ஓடிடக் கூடாதுண்ணா!'' எனச் செய்ய வேண் டியதை விளக்கியவள்.

''அண்ணா... அவங்களோட வ...வ...வ.. வண்டியை சத்தமில்லாம நகட்டி, அந்தத் தெருவுக்குள்ள மறைவா நி... நிநிநி.. நிநிப்பாட்டுங்க...'' என்றாள் சட்டென உதித்த யோசனையாய்.

அதை அச்சுப் பிசகாமல் அவர் செய்த ஐந்து நிமிட நேரமும், விதுவுக்கு ''திக்... திக்'' என்று அடித்துக் கொண்டது.

''ஐயோ... அவனுங்க வந்திடக் கூடாதே!'' என்று துடித்த மனம், இஸ்திரி கடைக்காரர் வண்டியை நிறுத்தி விட்டு, கூடவே இரு ஆண்களைக் கூட்டி வரவும் சற்றே நிம்மதி பெற்றது.

''அந்தக் கடை ஆளுங்கம்மா... எதுக்கும் துணையா இருக்கட்டும்...'' என இருவரையும் கைகாட்டியதோடு நில்லாமல்,

''அந்த ஸ்டேஷனரி கடைக்கார பாய்... போலீஸ்க்குச் சொல்றேன்னு சொல்லியிருக்காரு... ஏட்டு அவருக்குத் தெரிஞ்சவராம்'' எனக் கூடுதல் தகவல் கொடுத்தவரை நன்றியோடு பார்த்தவள், அடுத்ததை வேகமாய் திட்ட மிட்டாள்.

''வாங்க... வாங்க... போவோம்'' என்ற விது,



''ஒருத்தர் என் கூட வாங்க... இ..இஇ... இன்னொருத் தர் அண்ணனோட போ... போபோபோபோ... போங்க...'' என வ்ந்தவர்களை அணிகளாய் பிரித்தாள்.

பதட்டத்தில் அதிகமாய் திக்குவது விதுவுக்குப் புரிந்தது.

''ம்ஹூம்! விது! பதறக்கூடாது! பதறிக் காரியத்தைக் கெடுத்துடாத! தைரியம்! தைரியம்! தைரியம்!'' என்று மனதினுள் நூறு முறைக்கும் மேல் சொல்லிக் கொண்டு, வேகமாய் படியேறினாள்.

அவர்களைச் சோதிக்கவென, அந்த ஏமாற்றுப் பேர்வழிகள் பத்து நிமிடத்திற்கும் மேலாய் வெளியே வரவில்லை.

''பின்பக்கமா வேற வழி இருக்கோ?'' என வந்தவன் வேறு சந்தேகத்தைக் கிளப்பினான்.

''ம்ஹூம்!'' என அவனிடம் மறுத்தபோதும், ''ஒரு வேளை இருக்குமோ?'' என சந்தேகிக்கத் தொடங்கியது!

''வாங்கடா! லூசுங்களா!'' என்று அவள் பொறுமை இழக்கும்போதே, கதவின் தாழ்கள் நீக்கப்பட, அனை வரும் உஷாராகி நின்றனர்!

உடம்பெல்லாம் கண்ணாக, கதவுத் துவாரத்தையே விது பார்த்திருக்க, கதவு திறந்தது!

''திக்! திக்! திக்!'' என்று அடித்துக் கொண்ட நெஞ் சத்தை அடக்கி,

''ஏய்...'' என்ற கூவலுடன் அவர்கள் மீது பாய்ந்து விட் டாள் விது! அவ்வளவு வெறி!

கூடவே, உடன் வந்தவனும் பாய, அங்கே ரணகளம் ஆகியது!

அந்த மோசடி நிறுவனக்காரன் ஒருவன், கையில் கிடைத்த ஒரு பொருளை எடுத்து, வந்தவர்கள் மேல் எறிய,

அதில் ஓர் பேனா ஸ்டாண்ட், விதுவைத் தாக்கிச் சென்றது.

அவர்கள் எறிந்ததை விடவும், எறிந்த பொருளால் ஏகக் கோபம் உண்டானது விதுவுக்கு!

''இதையெல்லாம் வச்சு சீன் போட்டுத் தானேடா எல்லாரையும் ஏமாத்தினீங்க!'' என்ற வெறி வர, தன் பிடிக்குள் இருந்த ஒருவனை மிதி மிதி என்று மிதித்து விட்டாள்.

''உங்களுக்கெல்லாம் பேனா ஸ்டாண்ட் ஒரு கேடு!'' என்று சொல்லிச் சொல்லி அவள் அடிக்க, அவளை அவர்களிடமிருந்து பிரித்து எடுப்பது தான் கஷ்டமாய் போனது!

விதுவிடம் மற்றவர்கள் கவனமாய் இருந்த நேரம், ஒருவன் ஓட்டம் எடுக்க, ஒரே உதறலில் தன்னைப் பிடித்தவர்களை உதறியவள்,

''அவனைப் பிடிங்க!'' என்ற மற்றவர்களை நோக்கிக் கத்தியதோடு நில்லாமல், தானும் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினாள்.

அவனும் மள்ளாள கண்டனாய், நாலு கால் பாய்ச்சலில் படியில் இறங்க, விதுவும் தன் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி, அவனை விரட்டினாள்.

படிகளைக் கடந்து, ஓர் நிமிடம் வண்டிக்காக சுற்றும் முற்றும் பார்த்தவன், அதைக் காணாமல், ரோட்டில் ஓடினான்.



''டேய்... மரியாதையா நில்லுடா! நில்லு!'' என்று கத்திக் கொண்டே விதுவும் ஓடினாள்.

ம்ஹூம்! அவன் நிற்கவில்லை!

''நில்லு! டேய் நில்லு!'' என்று கத்திய விதுவும் நிற்கவில்லை.

வெறி! வெறி! வெறி! அவனைப் பிடித்து விடும் வெறி!

சட்டென மூளைக்குள் ஏதோ மின்ன, ஓடியபடியே தன் கால் செருப்பைக் கழற்றி, அவனைக் குறி பார்த்தவள், தன் பலம் முழுதையும் அதை எறிவதில் காட்டி, அதைத் தூக்கி வீசினாள்.

அவளது குறி சரியாக அவனது நடு மண்டையைப் பதம் பார்க்க, அவன் ''ஆ... ஆ... ஆ'' என்று கத்திய அடுத்த நொடி, விதுவின் பிடியில் இருந்தான்!

அதற்குள், அந்தத் தெருவில் கடை வைத்திருக்கும் நபர்களும் கூடிவிட, காவல்காரர்களும் வந்து சேர்ந்தனர்!

அதன் பின்னர் நடந்தது, எல்லாமே மின்னல் வேகம் தான்!

அவர்கள் இருவரும் கைது செய்யப்பட, காவல் நிலையத்தார் உட்பட தெருவாசிகள், கடைக்காரர்கள்... ஏன் பத்திரிகைக்காரர்கள் கூட, விதுவின் புகழைப் பாடித் தள்ளினர்!

(முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் வரும் அளவிற்கு, நாட்டில் இது பெரிய விஷயம் இல்லை என்றாலும், மாநிலப் பத்திரிகையில் ஐந்தாம் பக்கத்திலும், அந்த

பகுதிக்கான சிறு பத்திரிகையில் முதல் பக்கத்திலும், விதுபாலா, இஸ்திரிக்கடைக்காரர், உதவிக்கு வந்த இரு நபர்கள் ஆகியோரின் தைரியம் பாராட்டப் பட்டிருந்தது!

அதிலும், இஸ்திரிக்கடைக்காரரும் அந்த நபர்களும் "ஒரு பொண்ணே இவ்வளவு தைரியமா செயல்படும் போது, எங்களாலான உதவியைச் செய்யலாமேன்னு தான் செஞ்சோம்! இப்படிப்பட்ட ஏமாற்றுக்காரர்களுக்கு உரிய தண்டனை கிடைச்சா தான், மோசடி பண்ணனும்னு நினைக்கிறவங்க பயப்படுவாங்க!" என்றனர்.

விதுவிடம் அவர்கள் கேட்க, "இவங்களோட மோசடி வேலையால ஏமாந்த ஆயிரக்கணக்கான பேர்ல நானும் ஒருத்தி! ஐயோ ஏமாந்துட்டோமேங்கிற வெறில தான் அவங்களைப் பிடிச்சே ஆகணும்ன்னு பிடிச்சிட்டேன்! ஒரு வேளை, நான் ஏமாறாம இருந்திருந்தா இந்தத் தைரியம் வந்திருக்குமான்னு தெரியல. சோ... என்னைப் புகழ்றதில ஒரு பாயிண்ட்டே இல்லை" என்று தன்னடக் கத்தின் சிகரமாய் பேட்டிக் கொடுத்தாள்.

டோக்கியோவிலிருந்து வந்திறங்கிய கணவன், "ஹே! அவுட்ரைட் ஃபிகர் ஆகிட்டே போல! சூப்பர்டா பப்லு!" என்று அவளைத் தூக்கித் தட்டாமாலை சுற்றி இறக்கிய போது,

"இந்தப் பெருமை எல்லாமே உ..உஉங்களைத் தான் சேரும், ஜி!" என்று அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு, ஊஞ்சலாடிய சிட்டுக் குருவி,

"நான் முன்னாடி மாதிரி இருந்திருந்தா... இந்நேரம் அவங்களைப் பார்த்த நிமிஷத்திலையோ... பி...பிபிடிச்ச நிமிஷத்திலையோ... வாய் திக்கி, உடம்பு பதறி, தைரி



யமே முழுசா வடிஞ்சு, அப்படியே ஒ...ஒஒஒ..ஒடுங்கிப் போயிருபபேன்..."

"எனக்கு என்ன தேவை... என தைரியத்தை வளர்க்க என்ன செ...செசெசெ.. செய்யணும்ன்னு யோசிச்சு யோசிச்சு... நீங்களும் அ...அஅஅம்மா அப்பாவும் செஞ்சது தான் என்னை அவங்களைத் துரத்த வச்சது! விடாமப் பிடிக்கவும் வச்சது!" என்றவள்,

அவனை அழுந்த முத்தமிட்டு, "நீங்க வேலைக்குப் போ... போன்னு சொன்னப்போ... எ.. எனக்குக் கொஞ்சம் யோசனையாவே இ..இ..இருந்துச்சு! ஆனா... இப்போ! என்ன வந்தாலும் பேஸ் பண்ணிடலாம்ன்னு தைரியம் வந்திடுச்சு!" என்றாள் உணர்ந்து!

அவளது வார்த்தைகளில் படிப்படியாய் குறைந்து வந்த தடுமாற்றமே, தன்னிடம் அவள் முழுதாய் தொலைந்து விட்டதை உணர்த்தியது, மணாளனுக்கு!

நெருங்கி நின்றவளை, மேலும் இறுக்கிக் கொண்டு "தைரியம் வந்திடுச்சு சரி... ஆனா.. கை மீறிப் போற மாதிரி இருந்தா என்னைக் கூப்பிடணும் என்னடா?" என்றான் அவனும் அவள் நெற்றியில் முத்தம் வைத்து, அவளது பாதுகாப்பிற்குரியவனாய்!

"நான் செய்யும் காரியம் யாவிலும் கை கொடுக்க நீங்க இருக்கும்போது, எனக்கென்ன பயம்!" எனத் தன் தைரியத்தை அவனது பாதுகாப்பின் கூட்டிற்குள் அடக்கி னாள், மெல்ல மெல்ல தன் கூட்டிலிருந்து வெளிக் கொண்டு வரப்பட்ட மெல்லிசைப் பாவை! இப்போது, விதுபாலாவிற்குத் திக்கவில்லை!

# 22

✱ ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் ✱

''பாப்பா குட்டிக்கு மம்மம் ஊட்டப் போறோமா? சோறு மம்மம்மா? கிச்சன் உம்மாச்சியோட மம்மம்மா?'' என்று தன் கையிலிருந்த பேத்தியைக், கொஞ்சிக் கொண்டிருந்தார் ரமணிம்மா.

தாயுடன் சேர்ந்து, அண்ணன் மகளையும் அணைத்துக் கொண்ட பாலமுருகன்,

''சும்மா வாயாலேயே வடை சுடாம... நிஜமாலுமே சோறைக் கண்ணில காமிங்கன்னு சொல்லப் போகுது, எங்க செல்லக்குட்டி! இல்லடா?'' என்றான் அண்ணன் மகள் நித்திலாவின் கன்னம் கிள்ளி.

''ச்சு! புள்ளையைக் கிள்ளாதடா... வலிக்கும்ல!'' என்ற ரமணிம்மா, தனக்கே காயம் பட்டது போல் துடித்துப் போனார்.

''அவன் போறான்... லூசு! நாளைக்கு... நாம குஜு... குஜுன்னு ட்ரைன்ல போய்... கிச்சன் உமாச்சி கும்பிட்டு... அப்புறம் மம்மம் சாப்பிடலாம்... பாட்டியும் பாப்பாவும் புத்சு டிரஸ் போட்டுக்கலாம்!'' என்று பேத்தியுடன் அவர் ஐக்கியம் ஆகிவிட,

பாலமுருகன் தான் வேறு வழியில்லாமல் அங்கிருந்து நகர வேண்டியதாய் போயிற்று!



முகத்தில் விரிந்த புன்னகை மாறாமல் இருந்தாலும், போலியான தோள் குலுக்கலுடன் அவன் நகர, செல்வா வாய் விட்டுச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு ''நீயும் பல்பு வாங்கினியா? வாங்கி னியா?'' என்பது போலிருக்க,

''இதெல்லாம் வாழ்க்கையில சாதாரணமப்பா!'' என்பது போலிருந்தது பாலாவின் அடுத்த ரியாக்ஷன்!

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஓரக்கத்திகள் இருவரும் எப்போதும் போல் மனம் நிறைந்து சிரித்தனர்! ஆம், எப்போதும் போல் தான்! செல்வா - பத்மாவின் மக ளான நித்திலாவைக் கொஞ்சும் போர்வையில், செல்வா - பாலா இருவரது மூக்கும், ஓர் நாளைக்கு இரண்டு முறை என்ற மேனியில், ரமணி வெஸ் ரமணியால் உடைக்கப்படும்! பிள்ளைகள் இல்லாமல் பேத்தி எப்படி வந்தாளாம் என்ற நொடிப்பெல்லாம் அங்கே செல்லு படியே ஆகாது! அந்தளவுக்கு, பெண் குழந்தை இல்லாத அத்தம்பதியரின் ஏக்கத்தை... பாசத்தை... பிரியத்தை... பேத்தியான நித்திலா பூர்த்தி செய்தாள்!

மகன்கள் இருவர் இருக்கின்றனர் என்ற எண்ணமே இருவருக்கும் மறந்து விட்டதோ என்று கூடச் சில சமயம் தோன்றுமளவிற்கு, ''நித்தியம்மா... நித்திக் குட்டி... பட்டுக்குட்டி... குட்டன்ஸ்... பாப்பின்ஸ்... பாப்பா...'' என்று குழந்தையுடனே தங்கள் நேரத்தைக் கழித்தனர், இருவரும்.

''அம்மா... வர வர... எங்களுக்கு எதுவுமே செய்ய மாட்டேங்கிறீங்க... செல்வாக்கு இது... எனக்கு அதுன்னு பார்த்துப் பார்த்துச் சமைக்கிறது கூட மறந்து போச்சா?!

இதெல்லாம் ரூ மச் சொல்லிட்டேன்!'' என்று பாலா எச்சரிக்கை செய்தால்,

''நான் ஏன்டா சமையல் செய்யணும்? அதான் உங்களுக்குன்னு ஒரு பொண்டாட்டி வந்துட்டா இல்ல... அவ பாத்துப்பா! வயசான காலத்தில... அக்கடான்னு என் பேத்தியைக கொஞ்ச விடுங்கடா! எருமை மாடு வயசாகுது... இன்னும் இந்தப் பச்சப்புள்ளையோட மல்லுக்கு வரான்... பாரு பாப்பா! மக்குப் பையன்!'' என்று மகனிடம் ஆரம்பித்து, பேத்தியிடம் முடிப்பார் ரமணிம்மா.

''வொய் ப்ளட்... சேம் ப்ளட்!'' என்று அண்ணனும் தம்பியும் ஹை-பை கொடுப்பதைத் தவிர வேறெதும் செய்ய முடியாததால், பாட்டியும் பேத்தியும் தங்கள் ராஜ்யத்தை செவ்வனே செயல்படுத்தினர்! தாத்தாவின் துணையுடன் தான்!

அந்த செங்கோல் ஆட்சியின் ஓர் ஆணையாய் தான், ரமணி வெஸ் ரமணியின் குடும்பம் குருவாயூருக்குப் பயணப்பட்டது!

''அன்னப்பிரசனம்'' என்றழைக்கப்படும் சோறூட்டல் நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் முடித்துக் கொண்டு, தரிசனத்திற்காக குருவாயூரப்பன் சந்நிதிக்கு எதிரே வந்தனர் அனைவரும்.

கோவில் உள்பிரகாரம் தாண்டி, வெளிப்பிரகாரம் வரையிலும் நீண்டிருந்த வரிசையைக் கண்டு, அனைவரும் மலைத்து நின்ற வேளையில், ''அன்னப்பிரசனம் டிக்கெட் வச்சிருந்தா... குழந்தையோட அப்பாவும் அம்மாவும் குழந்தையைக் கூட்டிட்டுப் போய், சாமி தரிசனம்



செய்ய, தனி வரிசை இருக்கு! பொது வரிசையில நிற்க வேண்டாம்!'' என்றனர், தேவஸ்தான ஆட்கள்.

நிம்மதிப் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றிய வேளையில், ''யார் குழந்தையுடன் போவது?'' என்பதில் பெற்றோருக்கும் செல்வாவுக்கும் சண்டை வந்தது.

''நீங்களும் அப்பாவும் பாப்பாவோட போங்கம்மா!'' என செல்வா சொல்ல,

''நீயும் பத்மாவும் போறதுதான் முறை! நீங்க தானே அப்பா - அம்மா!'' என்று அவனது கருத்தை மறுத்தார் ரமணிதரன்.

''உங்களால அந்த லைன்ல நின்னு வர முடியாதுப்பா. இருக்கக் கூட்டத்தைப் பார்த்தா... ஒரு மணி நேரத்துக்கு மேல நிக்கணும் போல! நீங்க நித்தி கூடப் போங்க!'' என்று பத்மாவும் உந்த,

''அதெப்படி?'' என்று தயங்கி நின்றனர் தாத்தாவும் - பாட்டியும்.

முடிவாக ''எங்களை விடவும் அவளை நீங்க தான் ஓவியமா பார்த்துக்கிறீங்க! அவளுமே, நீங்கன்னா பாசமா இருக்கா... அப்படியிருக்கும்போது, குருவாயூரப்பனே உங்களோட அவ... அவரைத் தரிசனம் பண்றதைத் தான் விரும்புவார்! சொன்னா கேளுங்க! போங்க!'' என்று பத்மா உறுதியாய் நிற்கவும், பாலாவின் கையிலிருந்த நித்திலா ''ம்ம்ம்ம்ம்...'' என ரமணிம்மாவிடம் தாவவும் சரியாக இருந்தது!

''என் செல்லமே!'' என்று பேத்தியைக் கையில் வாங்கிக் கொண்ட ரமணிம்மா, கண்ணில் லேசான ஆனந்தக்

கண்ணீருடன், மருமகளின் கன்னம் தட்டிவிட்டு, அந்தத் தனி வரிசையில் சென்றார்.

"போதும்! போதும்! பாசமலர் சீனை பாக் அப் பண்ணுங்க! எல்லாருக்கும்... ஆனந்தக் கண்ணீர் காதை அடைக்குது இல்ல!" என்று பாலா, சூழ்நிலையை இலகுவாக்க,

"போடா வெட்டிப் பயலே!" என மகனுக்குப் பழிப்புக் காட்டிவிட்டு,

"நாம... கிச்சன் உம்மாச்சிகிட்ட சித்தப்பாக்கும் கேர்ள் பாப்பா பிறக்கணும்ன்னு வேண்டுறதா இருந்தோம்ல... இப்போ அது கான்செல்! ரெண்டு பாப்பா... ரெண்டும் பாய் பாப்பா பார்சல் பண்ணுங்க உம்மாச்சி சொல்லிடலாம்!! ரெண்டுமே அவனைப் போட்டுப் படுத்தி எடுக்கணும்ன்னு வேண்டலாம்... இந்த அப்பாவும் சித்தப்பாவும் பாட்டியைப் படுத்தின மாதிரி அவன் பசங்க அவனைப் படுத்தணும் சரியா? அப்படியே வேண்டலாமா?" என வழக்கம் போல், பேத்தியிடம் உரையாடினார் ரமணிம்மா.

"பெரிய ரிவன்ஜ்!" என்று பாலா உதட்டைப் பிதுக்க,

"ஹான்... ரமணிம்மா! நா... பாவம்ல..! உங்க அ... அஅஅள வுக்குப் பொறுமை எல்லாம் நமக்குக் கிடையாதுப்பா!" என மூக்கால் அழுதாள் நம் நாயகி.

"அடிங்க!" என்று பாலாவும்,

"உனக்காக இன்னொரு வாட்டி யோசிக்கிறோம்! என்ன பாப்பா தங்கச்சியா? தம்பியா?" என்று ரமணிம் மாவும்,

பொக்கை வாயைத் திறந்து நித்திலாவும் பதில் கொடுக்க, அங்கே சிரிப்பலை எழுந்து ஆர்ப்பரித்தது!



அதன் முடிவில், பெரியவர் இருவரும் குழந்தையுடன் தனி வரிசையில் சென்றுவிட, இளைய தலைமுறை நால்வரும் வெளியே நின்றனர்.

என்ன செய்யலாம்? பொது வரிசையில் வரலாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, சற்று தூரம் சென்று ஏதோ விசாரித்து வந்த பத்மா,

"ஹே விது! லேடீஸ் கியூ தனியா இருக்கு விது! நாம அதில வரலாம்!" என்றாள் சந்தோசம் மிகவுற.

"ஹான்! ஆமாக்கா! போலாம்!" என்று விது நகர,

"ஏய் நில்லு! அதென்ன நீ மட்டும் லேடீஸ் கியூல போறது? அதெல்லாம் முடியாது! நீயும் ஜெனரல் கியூலேயே வா!" என்றான் பாலா, மனைவியின் கை பிடித்து இழுத்து.

"ஹ்ம்ம்... அதில போனா சீக்கிரம் சாமி பார்த்துடலாம்... ஜெனரல் கியூல போனா ஒரு மணி நேரம் நிக்கணும்!" என்று பாவம் போல் கெஞ்சியவளிடம்,

"அப்ப... நா மட்டும் ஒரு மணி நேரம் நிக்கலாம்... நீ நிக்க மாட்டே? அதெல்லாம் முடியாது! என்னோட வா!" என்று அடம் பிடித்தான் கணவன்.

"ப்ளீஸ்... நான் பாவமில்ல... எனக்குக் கால் எல்லாம் வலிக்குது... அதில வந்தா இன்னும் வலிக்கும்..."

"எனக்கும் தான் வலிக்குது... நீ மட்டும் என்ன ஸ்பெஷல்? மத்த விஷயத்தில எல்லாம் என்னமா வாய் பேசுறே? ஆம்பிளைங்களை விட பொம்பளைங்களுக் குத் தான் உடம்பு வலிமை ஜாஸ்தி... உயிர் போற பிரசவ வலியையே தாங்கிக்கிற பொண்ணை... இதைச் செய் யாதே... அதைச் செய்யாதே... இதெல்லாம் ஆம்பிளை

செய்யற வேலைன்னு ஒதுக்கி வைக்கிறாங்கன்னு மைக் பிடிக்காத குன்றயா என்கிட்டே எத்தனை வாட்டி வாய் பேசி இருக்கே? இப்ப மட்டும் என்ன, சொகுசு வேண்டிக் கிடக்கு? வா என்னோட!'' என்றான் கணவன், சிரிப்பும் உண்மையுமாக.

இவர்களது வாய்ச்சண்டை நடந்து கொண்டிருக்கும் போதே, தரிசனத்திற்குச் சென்ற பெரியவர்கள் வெளியே வந்திருந்தனர்.

''செல்வா... இன்னொரு அன்னப்பிரசனம் டிக்கெட் வாங்கிட்டு வந்து, நீயும் பத்மாவும் போங்க!'' என ரமணிதரன் சொல்ல,

''அட ஆமாடா! ரெண்டா வாங்கிட்டு வந்துடுறேன்! நாங்க வந்ததும், நீயும் விதுவும் பாப்பாவைக் கூட்டிட்டுப் போங்க!'' என்றான் செல்வா.

''சரி'' என்று தலையாட்டத் தொடங்கிய பாலா, கண்ணைக் கசக்கிக் கொண்டு ரமணிம்மாவின் தோளில் அசந்து விழுந்த நித்திலாவைக் கண்டதும்,

''இல்ல செல்வா! நீயும் அண்ணியும் போங்க! நானும் விதுவும் அந்த ஜெனரல் கியூல வரோம்!'' என்று விட்டு, விதுவை அழைத்துக் கொண்டு சென்று விட்டான்.

விதுவுக்குமே, செல்வாவும் பத்மாவும் குழந்தையுடன் சென்றுவிட்டால், அவள் மட்டுமாய் மகளிர் வரிசையில் வர, பாலா மட்டும் தனித்து பொது வரிசையில் வர வேண்டுமே என்றிந்தது!

ஆதலால், மறுத்தேதும் பேசாமல் கணவனின் கைப் பற்றிச் சென்றாள்.



வேகமாய் நகர்ந்த வரிசையைக் காட்டிலும், வம்பும் கேலியுமாய் உடன் வந்த கணவன், பொழுதை ரம்மிய மாக்கினான்.

வெளிப்பிரகார வரிசை முடிந்து உள் பிரகார வரிசைக் குள் அவர்கள் நுழைய இன்னும் பத்து நபர் தூரமே இருந்த வேளையில், பின்னிருந்த நபர்களைத் தள்ளிக் கொண்டு, ஓர் சிறுவன் அவர்களிடம் வந்தான்.

பின்னிருந்த அனைவரையும் முணுமுணுக்க வைத்து விட்டு, ஏன் இப்படித் தள்ளுகிறான் என்று விதுவும் பாலாவும் திரும்பிப் பார்க்கையில்,

''விதுபாலா மேடம்! என்னைத் தெரியுதா? விஷ்வா! விஸ்வநாதன்!''

''பெங்களூர்ல ஸ்டாமரிங் கிளாஸ் வந்தேனே?''

''ஜூன் பேட்ச் மேடம்!''

''நீங்க தானே ட்ரைன் பண்ணீங்க?'' - இடைவிடாத சந்தோஷத்துடன் அவன் பேசிக் கொண்டே போக,

''ஹே விஷ்வா! நல்லா... ஞாபகம் இருக்குடா! எப்படி... இருக்கே?'' என்றாள் விது. திக்கு வாய்க்கான பேச்சுப் பயிற்சி முகாமில் இப்போது, விதுவும் ஓர் பயிற்சியாளர். அதற்காக, அவள் வேலைக்குப் போகாமல் இல்லை. இது வேலையைத் தாண்டிய, ஓர் சிறு தொண்டு!

''ஒரு நார்மல் பெர்சன் ட்ரைனிங் கொடுக்கிறதை விட, திக்கு வாயால பாதிக்கப்பட்ட ஒருத்தர் கொடுக்கிற ட்ரைனிங் தான் பெட்டரா இருக்கும், விது! பேச்சுத் திக்குற பிரச்சனை இருந்து, அதனால அதிகமா பாதிக்கப் பட்டு, அந்தப் பிரச்சனையிலிருந்து மீண்டு வந்த உனக்

குத் தான், அவங்களோட மனநிலை புரியும்! அவங்களுக்கு எங்க எங்க எல்லாம் பிரச்சனை வரும்னு தெரியும்! அதை எப்படி ஹேண்டில் பண்ணனும்... பண்ணக்கூடாதுன்னு தெரியும்! பண்ணு விது!'' என்ற கணவனின் வார்த்தைகள் தான், இந்த சமூக நல உதவிக்கு வித்தாகிப் போனது!

தன்னை ஊக்குவித்தக் கணவனிடம் திரும்பி, ''பாலா... நான் சொல்லியிருக்கேன்ல... விஷ்வா! ரொம்ப சேட்டை பண்ணுவான்னு...'' என்று விவரம் கூறினாள்.

தானும் அறிவேன் என்பதற்கு ஆதாரமாய் ''ஒரு வாட்டி, கொசு பத்திப் பேசச் சொன்னதுக்கு, ''நாம பண்ணின தப்புக்கு நமக்கு நாமே தண்டனை கொடுத்துக்க, கடவுள் கண்டு பிடிச்ச கருவி தான் கொசு''ன்னு சொன்னவன்... இவன் தானே?'' என்று பாலாவும் சிரித்துக் கொண்டே கேட்க,

''இவனே தான்!'' என்று விது சிரிக்க,

விஷ்வா வெட்கத்தில் நெளிந்தான்.

''இங்க என்ன கண்ணா பண்றே? அம்மா - அப்பா கூட வந்தியா?''

''ஆமா... மேடம்! அதோ அங்க இருக்காங்க... நா உங்களைப் பார்த்திட்டுப்... பேசணும்ன்னு எல்லாரையும் தள்ளிட்டு வந்துட்டேன்...'' என்று சந்தோஷமாய் சொன்னவன்,

''எனக்கு இப்ப... எல்லாம் பேச்சுத்... திக்குறதே இல்ல தெரியுமா? அதனால... நெறைய நெறைய... பிரண்ட்ஸ்!''



''அப்புறம்... நா... எங்க ஸ்கூல்ல நடந்த பட்டிமன்றத்தில... கலந்துக்கிட்டேன் மிஸ். எல்லாரும் நல்லா... பேசினேன்னு சொன்னாங்க... பெஸ்ட் பெர்ஃபாமன்ஸ் அவார்ட் கொடுத்தாங்க தெரியுமா?'' என அவன் பெருமையாய் கூற,

''வெரி குட்! வெரி குட்!'' என்று விது அவனைத் தட்டிக் கொடுக்கும்போதே,

''விஷ்வா.. இங்க வா! எல்லாரும் திட்டுறாங்க பாரு... சாமி கும்பிட்டதும் உங்க மேடம் கிட்டப் பேசலாம்!'' என அவனது தந்தை தூரத்தில் இருந்து குரல் கொடுக்க,

''பை மிஸ்! பை சார்!'' என்று சிட்டாய் பறந்தான் விஷ்வா.

அவன் போவதையே பார்த்திருந்த விதுவிற்கு, முதல் நாள் பயிற்சிக்கு வந்த அவனது முகம் நிழலாடியது!

தன்னுள்ளே ஒடுங்கிப் போய், தன்னால் எதுவும் முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையுடன், ''எ... எஎஎ... என்னை எ...எஎஎல்லாலாலாலாலாரும்... தி... திக்கு.. வாய்ன்னு கே... கே.. கேலி ப்...பபபப...பண்றாங்க'' என அவன் அழுதது, பசுமையாய் நினைவில் நின்றது!

கூடவே, ''நா... ஊ...ஊஊ... ஊஊஊமையா இ...இ...இருந்திருக்க்க்க்க்க்க்லாம்'' என அவன் நொந்ததும்!

அப்படிப்பட்டப் பையனை, இவ்வளவு சந்தோஷமாய், நம்பிக்கை நட்சத்திரமாய், வெற்றிக் கனியைச் சுவைத்தவனாய், முகம் கொள்ளா ஆர்வத்துடன் பார்த்ததில், விதுக்கு ஏக சந்தோசம்!

முகம் முழுதும் பூரிப்புடன் அவள் கணவன் புறம் திரும்ப, ''பார்த்தியா? நீ மட்டும் லேடீஸ் கியூல போயி ருந்தா... இந்தப் பெருமை... பூரிப்பு... எல்லாம் கிடைச் சிருக்குமா? எல்லாத்துக்கும் இந்த அய்யா தான் காரணமாக் கும்!'' என்றான் தன் வெற்றுடம்பில் இல்லாத காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு!

அவனது பாவனையைச் சிரிப்புடன் பார்த்திருந்த விதுவின் பார்வை, சிரிப்பிலிருந்து மையலுக்கு மாறி நிற்க,

''நீங்க சொன்னாலும்... சொல்லலைனாலும்... நீங்க தான் என்னோட... பெருமைக்குக் காரணம்!'' என்றன உதடுகள், அவனுடன் தனக்கிருக்கும் நெருக்கத்தைக் குரலில் நிலைநாட்டி!

இறைவனின் கோவில் என்ற இடம், பொருள், ஏவலை மறந்து, அவனும் தன் காதல் மனைவியின் தோள் சுற்றி கரம் போட்டு, ''எந்நாளும் உன்னோடு தான்!'' என்றான் அச்செய்கையால்!

அந்த நேரம், குருவாயூரப்பனான கிருஷ்ணனின் சந்நிதியில் உச்சிக் காலப் பூஜையாகி, ஆலயமணி ஓங்கி ஒலித்தது!